# ஆன்மபோதம்

## (ஞானத்தை தேடி!)



ப்ரக்ஞன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஆன்மபோதம் |
| தெளிவுரை | : | ப்ரக்ஞுன் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | **2020** |
| வெளியீடு | : | பராபரம் |
| பக்கங்கள் | : | **400** |
| விலை | : | அக விழிப்பு |


பதிப்பாளர் : ஓம் கிராபிக்ஸ்

கோயமுத்தூர்.

# ஆன்மபோதம்

## (ஞானத்தை தேடி!)

### ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது

(பகவான் ஸ்ரீ ரமணரின் தமிழ் வெண்பா
பாடல்களுடன் இங்கு விளக்கப்பட்டுள்ளது.)

தெளிவுரை

## ப்ரக்ஞன்

# ஆன்மபோதம்

## (ஞானத்தை தேடி!)

**(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)**

ஒருவன் ஆத்மஞானத்தை அடைய வேண்டுமென்றால், அதற்கு வேதங்கள்தான் இறுதி நிலையில் இருக்கின்றதென்று அறிந்து, அதற்கான சாஸ்திரங்களான "**பிரஸ்தானத் த்ரயம்**" என்று கூறப்படுகின்ற பகவத்கீதை, பிரம்மசூத்திரம், மற்றும் உபநிஷதங்கள் என இவைகள் மூன்றும் அவனுக்கு வழி காட்டக்கூடிய மிக அரிய நூல்கள் என ஆன்றோர்கள் பலரும் பரிந்துரைக்கின்றனர்.

இதற்கும் முன்பாக "**பிரகரண கிரந்தங்கள்**" என்னும் முதல் நிலையில் பகவான் ஸ்ரீஆதிசங்கரர் இயற்றிய ஆத்ம போதம், தத்வபோதம் போன்ற நூல்கள் நாம் எளிதில் ஞானத்தை அடைய மேலும் உதவி செய்கின்றன.

சாதாரண மக்கள் புரிந்துகொள்வதற்கு இவைகள் மூன்றையும் ஆராய்ச்சி நூல்கள் (Thesis or Reference book), பாட நூல்கள் (Text books), வழிகாட்டி அல்லது கையேடு (Guide or Monograph) என்று மூன்று நிலைகளில் இருப்பதாக ஒப்பிட்டுச் சொல்லலாம்.

அனைவருக்கும் புரியும்படியாக இன்னும் கொஞ்சம் விபரமாக உதாரணத்துடன் விளக்க வேண்டுமென்றால், இரு கண்ணாடிகள் பதிக்கப்பட்ட ஒரு அறையில் நாம் சென்று நின்றதும், அங்கே இருமைகளால் பல கண்ணாடிகள் உண்டாகி, அதில் ஒவ்வொரு கண்ணாடியிலும் நம் ஒரேபிம்பம் பல பிம்பங்களாக காட்சிக்கு கிடைப்பதைப்பார்த்து, அது! எப்படி **மாயத்தோற்றம்** என்பதை நம் புத்தி சக்தியினால் புரிந்துக் கொண்டு, அதை இரசிக்கின்றோமோ?...



அதுப்போன்று, இன்று நாம் கண்டு இரசிக்கின்ற இந்த மொத்த பிரபஞ்சத்தின் பல்வேறு தோற்றப்பாகுபாட்டில் காணுகின்ற காட்சிப்பதிவுகள் எல்லாமே அந்த ஒன்றேயாகிய "**ஆன்மா**" என்பதின் அறிவுப்பிரகாசம் ஒன்று மட்டுமே என்றும், அது மனதின் இருமைகளால் பலவாறாகப்பரிணமித்து வெளிப்பட்டு, வந்து போகின்ற பல்வேறு "**மாயா**" பிம்பங்கள் என்பதனை விளக்கி, அவ்வாறு *காணுகின்றவனும் காணப்படும் பொருட்களும் ஒன்றே!* என்பதனை நம் மனதின் மேம்பட்ட புத்திசக்தியினால் அறிந்துக்கொள்வதே ஆன்மாவை அறிகின்ற **ஆன்மீகம்** ஆகும்.

மேலும், வேதத்தில் "**பிரம்மம் ஒன்றே**" சத்தியம் என்றும், இந்த "**ஜகத் மித்யா**" என்றும் கூறியிருப்பதால், வேதத்தின் சாரமாக அதன் அடுத்த நிலையான "**பிரஸ்தானத் த்ரயம்**" என்ற பகவத்கீதை, பிரம்மசூத்திரம், உபநிஷதங்கள் போன்றவைகளில் அதை விளக்கி "பிரம்மம் என்பது எங்கும், எப்போதும் இருக்கும் ஆன்மா.

அது நீரில் நனையாது, நெருப்பில் எரியாது, வெயிலில் உலராது. அதை வெட்ட முடியாது, அதைப் பிரிக்க முடியாது. அது பிறப்பதோ, இறப்பதோ இல்லை. அதனால் அது என்றும் அழியாதது. அது இருப்பதால்தான் நாம் எல்லோரும் இப்போது இருக்கிறோம். நம் கண்ணுக்கு வெவ்வேறாகத் தெரிவது உடல்களே... மேலே சொல்லப்பட்ட குணங்கள் உடலுக்கு இல்லாததால் உடல் ஆன்மா அல்ல. ஒவ்வொரு உடலின் உள்ளும் இருந்து அதை இயக்கிக் கொண்டிருப்பதுதான் ஆன்மா.

ஒவ்வொரு உடலின் உள்ளும் என்று சொன்னாலும், உடல்கள் வெவ்வேறு போல் ஆன்மா வெவ்வேறு அல்ல, அது ஒன்றேதான். ஆகவே இயக்கும் சக்தி ஒன்றேயாதலால் நாம் அனைவரும் ஒன்றே" என்று இப்படி எளிதாக விளக்கிக்கூறுகின்றது.

அதற்கும் அடுத்த நிலையில் இருக்கும் அந்நூல்களின் மூலக் கருத்துக்களையே மையமாகக்கொண்டு அனைவரும் இன்னும் எளிதாகப் புரிந்துக்கொள்ளும் வகையில் அநேக வேதாந்த நூல்களை "**பிரகரண கிரந்தங்கள்**" என்கிறோம்.

அதில், இவையெல்லாவற்றையும் எளிதில் விளக்க வேண்டியதினால், தினசரி வாழ்வில் பலருக்கும் மிகவும் பயனுள்ள பல உதாரணங்களை எடுத்துக் கையாளப் படுகின்றது.

இருளை நீக்கும் ஒளி, கயிற்றில் தெரியும் பாம்பு, சூரியனை மறைக்கும் மேகம் என்ற உதாரணங்கள் எல்லாமே இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டதுதான். ஒளி வந்தவுடன் இருள் தானாக விலகுவதுபோல, பிரம்மத்தை உணர்ந்தவனுக்கு அதைப் பற்றிய அறியாமை தானாக விலகுகின்றது.

அதாவது, பாம்பு என்ற எண்ணம் இருட்டு இருக்கும் வரையில்தான். அங்கு ஒளி வந்ததும் அது கயிறு என்று தெரிகிறது. எங்கோ, எப்போதோ பார்த்த பாம்பு என்ற

எண்ணத்தை இங்கு, இப்போது இருக்கும் வேறு ஒரு பொருளின்மீது ஏற்றி வைத்துக்கொண்டு, அங்கே ஒளி வரும் வரை பார்ப்பவனுக்கு அது பாம்புதான்.

இப்படியாகப் பலவாறாக இருப்பதைப் பார்க்கும் இருமைகளுடன் கூடிய அறியாமைகள் இருக்கும்வரை, எல்லாம் ஒன்றாய் இருக்கும் பிரம்மத்தை உணரமுடியாது.

எப்போதும் இருக்கும் சூரியனை மேகம் மறைப்பதால் சூரியன் இல்லை என்று சொல்வது எப்படித் தவறோ? அதுப்போன்று, பிரம்மத்தைப் பற்றி அறியாததால் பிரம்மம் இல்லை என்று சொல்வது தவறு.

மேகம் மறைந்தவுடன் தானே ஒளிரும் சூரியன் தானாகவே தெரிவதுப்போல, நாம் ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களினால், நம் சுயஅறிவை மறைத்துக் கொண்டுள்ள அறியாமை எண்ணங்களையெல்லாம் சுட்டிக்காட்டி, அவைகளை மனதில் இருந்து நீக்கப்பட்டவுடன், தானே தானாய் உள்ள பிரம்மம் பிரகாசத்துடன் ஒளிர ஆரம்பிக்கின்றது.

இப்படியெல்லாம் உதாரணங்களை வைத்துக்கொண்டு மேல்நிலை உண்மைகளை “**பிரகரண கிரந்தங்கள்**” விளக்கிக் கூறுகின்றது.

இப்படியான உண்மைகளும், உதாரணங்களும் எந்த நிலையில் கூறப்பட்டிருந்தாலும், அந்த நிலைகளில் மேலிருந்து கீழே இறங்கி வர, வர விபரங்களும், விளக்கங்களும் மிகுதியாகத் தேவைப்படுகின்றது.

அதாவது, எந்த நிலையிலும் இருப்பது **இருப்பு** ஒன்று மட்டும்தான். ஆனால், அதன் விளக்கங்கள்தான் அளவிலும், விபரங்களிலும் அதிக வித்தியாசங்களுடன் காணப்படுகின்றன என்பதை எளிதாக புரிந்துக்கொள்ளும் போதுதான், மனம் இருமைகளைக் கடந்து, அந்த ஏக ஆன்மாவை (அறிவை) தானாகவே அறிந்துக் கொள்கிறது.

அவ்வாறு மனம் தன் நிலை உணர்ந்து, உண்மை அறிவை தன்னில் தானாய் உணரும்போது மட்டும்தான் மனிதன் புனிதனாக மாற முடிகின்றது.

## <u>மங்கலம்</u>

**ஆன்மாவின் போதம் அருள் ஆசானாம் சங்கரன் அவ்**
**வான்மாவுக்கு அந்நியன் ஆவனோ – ஆன்மாவாய்**
**என்னகத்தே இருந்தின்று தமிழ் சொல்வானும்**
**அன்னவன் அன்றி மற்று யார். -** பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி

ஆதி சங்கரரின் "**ஆத்ம போதம்**" என்ற நூலை பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி தமிழில் மொழிப் பெயர்த்து "**ஆன்ம போதம்**" என்று வெண்பா வடிவில் எழுத நேர்ந்தபோது, மேற்கண்ட வெண்பாவை மங்கலச் செய்யுளாகத் தொடுத்துக் கொடுக்கிறார்.

இனி நாம் சங்கராரின் ஆத்ம போதம் என்ற சமஸ்கிருத செய்யுளுடன் ஸ்ரீஇரமண மகரிஷியின் தமிழ் செய்யுள்களையும் இத்துடன் சேர்த்துப்பார்ப்பது தமிழ் படிக்கும் நம் ஒவ்வொருவருக்கும் படித்துப் புரிந்துக்கொள்ளும் பெரும் பாக்கியமாகும்.

இச்செய்யுளில் "ஆத்ம போதத்தை நமக்கு அருளிய ஆதி சங்கரர் ஆன்மாவின் வடிவே அல்லாமல் வேறு என்னவாய் இருந்து நமக்கு அதை அருளினார்? இன்று அந்த ஆன்மாவே என்னகத்தில் இல்லாது போனால், அதைத் தமிழில் சொல்வதும் அதுவன்றி வேறு யார்?" என்று பகவான் ஸ்ரீரமணர் கேட்கிறார்.

மிகவும், ஆழமாகக் கூர்ந்து யோசிக்க வேண்டிய கேள்விக் கணைகளை நம்மைப்பார்த்து பகவான் ஸ்ரீரமணர் தொடுத்திருக்கிறார்.

எப்போதும் எல்லாமுமாய் இருப்பது ஆன்மாவே என்று தெரிந்தும் புரியாதவர்கள், முன்பு சம்ஸ்க்ருதத்தில் எழுதிய ஸ்ரீசங்கரர்தான் இப்போது, தமிழிலும் பகவான் ஸ்ரீரமணராக

இயற்றிக் கொண்டிருக்கிறார் என்றும் கொள்ளலாம், அல்லது ஸ்ரீரமணரே முன்பு ஸ்ரீசங்கரராய் இருந்து (அதாவது ஆன்மாவாய் இருந்து) முன்னதைத் தந்தார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆன்மாவே எல்லாம் என்றிருப்போருக்கு அன்றும், இன்றும், என்றும் ஆன்மாவே தானாகவும் இருக்கிறது. அத்துடன், தன்னைப் பற்றிச் சொல்லாமலும் சொல்கிறது என்று புரியும்.

அதாவது ஆன்மா இல்லாது வேறு என்னதான் இருக்கிறது? என்பதே இங்கு அனைவரும் காண வேண்டிய அரிய உண்மை.

ஒரு நாள் பகவான் ஸ்ரீஇரமணமகரிஷி வேங்கடரத்தினத்தைக் கூப்பிட்டு, ஸ்ரீசங்கரர் நாகரி லிபியில் எழுதியுள்ள "**ஆத்ம போத**"த்தைக் கொண்டுவரச் சொன்னார்.

அதை அடிக்கடி புரட்டிப் பார்த்து வந்தார். பிறகு ஒரு காகிதத்தில் இரண்டு பாட்டுக்களை தமிழில் வெண்பாவாக எழுதினார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த குர்ரம் சுப்பராமையா என்னும் ஆந்திர பக்தர் (ஸ்ரீரமணர் '**கீதா சாரம்**' எழுதுவதற்குத் தூண்டுகோலாய் இருந்தவர்தான்) பகவானை நோக்கி, "என்ன,

பகவான் ஏதோ புஸ்தகத்தைத் திறப்பதும், படிப்பதும், மூடுவதும், எழுதுவதுமாக இருக்கிறதே! அது என்ன புஸ்தகம்?” என்று கேட்டார்.

அப்போது பகவான் தான் எழுதிய ‘**ஆன்ம போதம்**’ சுலோகத்தின் தமிழ் அனுவாதமான இரண்டு பாடல்களை அவரிடம் காட்டினார். அதைப் பார்த்த அவர், “இப்படியே மீதி சுலோகங்களையும் எழுதினால் நன்றாயிருக்குமே” என்றார்.

பகவான் அதற்கு ***“சரி சரி, அதெல்லாம் எதற்கு?”*** என்று சொல்லி தட்டிக்கழித்து விட்டார். அதெல்லாம் எதற்கு? என்று சொல்லளவிலே தட்டிக்கழித்தாரே ஒழிய, உள்ளே ஏதோவொன்று தூண்டிக்கொண்டே இருந்திருக்க வேண்டும்.

இரண்டு நாட்களில் இன்னும் சில பாடல்கள் எழுதி வெங்கடரத்தினத்திடம் காட்டி “நாம் எதற்கு எழுத வேண்டு மென்று சும்மாயிருந்தால் இது நம்மை விடாதுபோல் இருக்கிறது. ஒன்றுக்குப் பின் ஒன்றாக எதிரே வந்து நிற்கிறது. என்ன செய்கிறது!” என்று சொன்னார்.

மேலும், சில பாடல்கள் எழுதியபிறகு, பக்தர் வெங்கட ரத்தினத்தை பார்த்து “இனிமேல் இது நம்மை விடாது ஓய்! புஸ்தகம் தைச்சுக் கொண்டு வாரும்!” என்று சொல்லி தான் எழுதிய மங்கல வெண்பாவையும் அவரிடம் காட்டினார்.

பிறகு சில நாட்களுக்குள்ளாகவே நூல் முழுவதும் 69 சுலோகங்களும் தமிழ் வெண்பாக்களாக எழுதி முடிக்கப் பட்டன.

பிறகு, அங்கிருந்தவர்களைப் பார்த்து "நாற்பது வருஷங் களுக்கு முன்னால் முதல் சாமானாக இங்கு வந்து சேர்ந்த, அந்த சின்ன மலையாள நோட்டுப் புஸ்தகத்தில் இது இருக்கிறது. அப்போ, அதற்கு தமிழில் எழுத வேண்டுமென்ற எண்ணமே உண்டாகவில்லை" என்று கூறினார்.

"**எதற்கும் காலம் வரவேண்டாமா**?" என்று ஒரு பக்தர் சொன்னார்.

அதற்கு பகவான் "ஆமாமாம்! இப்போ இது ஒன்று எழுதியதும், இன்னொன்று தோன்றிக்கொண்டே வருகிறது. முன்னே எப்பவோ படித்த மாதிரியும் இருக்கிறது. இதற்கு முன் யாரும் இதை எழுதவில்லையே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் பகவான் ஸ்ரீ இரமணர்.

"**வெண்பாக்களாக இதுவரை யாரும் எழுதவில்லை**"

என்று எதிரில் இருந்த முருகனார் கூறிவிட்டு, மேலும் சொன்னார்; "பகவானுக்கு ஒன்றன் பின் ஒன்று தோன்றுவதில் என்ன ஆச்சரியம்! ஒவ்வொரு கல்பத்திலும் வேதங்கள் பிரம்மாவிற்கு

எதிரில் தோன்றுமென்பதுதானே புராண வரலாறு. இதுவும் அதைப் போன்றதுதான்!" என்று கூறினார்.

அதற்கு பகவான் சிரித்துக்கொண்டே, "அது சரிதான்! ஜயதேவர் கதையில் வருவதுபோல, யாராவது வந்து நான்தான் எழுதினேனென்று சண்டைக்கு வருவார்களோ என்னவோ!" என்று சொல்லி முடித்தார்.

இப்படி முஸ்லீம் அன்பர் ஒருவரால் உந்தப்பட்ட ஒரு இரசமான பின்னணியுடன் இந்த "**ஆன்ம போதம்**" அழகான தமிழில் வெண்பாக்களாக உருவெடுத்தது.

பகவான் எழுதிய ஒவ்வொரு நூலுக்கும் பின்னணியில் காரணம் இருக்கிறது. பகவான் தானாக எழுதியவை மிகக் குறைவு. அந்த சம்பவங்களெல்லாம் யாரும் எழுதி வைக்காததினால் நமக்குத் தெரியவில்லை. ஏதோ சிலவற்றிற்கு மட்டுமே அவை எழுதப்பட்ட காரணங்கள் நமக்கு கிடைத் திருக்கின்றன.

## <u>நூல்:</u>

இந்த நூலில் பகவான் ஸ்ரீ சங்கரர் எழுதிய மூல சம்ஸ்க்ருத சுலோகத்தை முதலில் கொடுத்துவிட்டு, அதன் கீழேயே அந்த சுலோகத்தினை படிக்க ஏதுவாக தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு பகவான் ஸ்ரீரமணரின் மொழி பெயர்ப்பான தமிழ் வெண்பாவும் இங்கு கொடுக்கப்படுகின்றது.

தமிழ்ச் சொற்களும், மூலத்தில்போல் அல்லாது, படிப்பதற்கு எளிதாக இருக்கும் வண்ணம் முடிந்தவரை சொற்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எடுத்த எடுப்பிலேயே பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு நமக்குப் பல விஷயங்களைத் தெளிவுபடுத்துகிறார். இது அக்காலத்திலேயே சொல்லப்பட்ட முறை, இக்காலம் மட்டுமன்றி எக்காலத்திற்கும் பொருத்தமானது.

ஒன்றைச் சொல்லும் போதும், எழுதும் போதும் என்ன சொல்கிறோம், எப்படிச் சொல்கிறோம், எவருக்காகச் சொல்கிறோம், ஏன் சொல்கிறோம்? என்று விவரமாக முதலில் சொல்லி விட்டால் எல்லோருக்கும் நல்லதுதானே?

இந்த இலக்கணப்படி என்ன சொல்கிறோம்? என்பதில் சொல்லப்போகிற தகவல்களின் குறிப்பு கிடைக்கிறது, எப்படிச் சொல்கிறோம் என்பதில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வரும் வாதங்களின் தொகுப்பு கிடைக்கிறது.

எவருக்கு என்பதில் கேட்கப்போகிறவரின் தகுதிகள் என்னவாக இருந்தால், சொல்லப்போவது நன்கு விளங்கும் என்றும் தெரிகிறது. அத்துடன் அவர் இந்த செய்யுள்களின் வாயிலாகச் சொல்வதைக் கேட்பதால், கேட்பவருக்கு என்ன பயன்? என்று மிகவும் தெளிவாகிறது.

முதல் ஸ்லோகத்திலேயே இந்தப் படைப்பின் தலைப்பு “**ஆன்ம போதம்**” என்று குறிப்பிட்டு, இதைப்படிப்பவர்களுக்கு வேண்டிய தகுதிகளையும், அதாவது யார் படிக்கலாம்? என்றும், அவர்கள் படித்தால் என்ன பயன் விளையும்? மேலும், ஏன் படிக்க வேண்டும்? என்றும் விவரமாகச் சொல்கிறார்.

தகுதிகளைப்பற்றி நாம் மேலும் விவரமாக ஆராயலாம்.

இதைப் படிப்பவர்களுக்கு ஆன்மாவைப் பற்றிய ஞானம் (போதம்) கிடைக்கும் என்பது இதன் பயன் என்பதை அந்தத் தலைப்பிலேயே கொடுத்துள்ளார்.

மேலே இருக்கும் முதல் செய்யுளில் சொல்லப் பட்டிருக்கும் தகுதிகளைப் படித்துவிட்டு வாசகர்கள் தனக்குத் தானே எடை போட்டுக்கொண்டு, தான் இதைப் படிக்கும் தகுதி வாய்ந்தவர்களா, இல்லையா? என்று குழம்ப வேண்டாம்.

ஒரு வேளை அந்தத் தகுதிகள் தொடக்கத்தில் இல்லை என்றாலும் கூட, மேலும் படிக்கப்படிக்க அந்தத் தகுதிகளை எப்படிப் பெறுவது?, எப்போது பெறுவது? என்று தன்னை அறியாமலேயே ஒவ்வொருவரின் மனதிலும் உருவாகும்.

அத்துடன் இந்த நூலைப் படித்து முடித்த ஆழமான புரிதலினால், பிறவிப்பயன் உண்டாகும்.

# ஆன்மபோதம்

तपोभिः क्षीणपापानां शान्तानां वीतरागिणाम् ।
मुमुक्षूणामपेक्ष्योऽयमात्मबोधो विधीयते ॥ १॥

தபோபி4: க்ஷீணபாபானாம்’ ஸா2ந்தானாம்’ வீதராகி3ணாம்’ |
முமுக்ஷூணாமபேக்ஷ்யோ ऽயமாத்மபோ3தோ4 விதீ4யதே ||

தவங்களினால் பாவம் தவிர்ந்தவராய் சாந்தி
அவிர்ந்தவராய் ஆசை அறுந்தாராய் – பவமுக்தி
ஆதரம் ஆர்ந்தாருக்கு அடையத் தகும் ஆன்ம
போதமாம் ஈது புகல் – **ஸ்ரீரமணர்.**

(சில தவங்கள் செய்ததின் விளைவாய் மேலும், பல பாவங்கள் செய்வதைத் தவிர்த்தவர்களாகவும், மனத்தில் அமைதி அடைந்தவர்களாகவும், உலக விஷயங்களில் ஆசைகள் இல்லாதவர்களாகவும், பிறப்பிறப்புச் சுழல்களில் இருந்து விடுபட விரும்புவோர்களாகவும் இருப்போர்களுக்கு என்று இந்த **ஆன்ம போதம்** சொல்லப்படுகிறது.)

எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒரு கட்டம் வரும். அதுதான் அவன் ஏதேனும் ஒரு மரண சம்பவத்தைச்

சந்திக்கும் கட்டம். இது பகவான் ஸ்ரீரமணர் போன்ற ஞானிகளுக்கும் வந்திருக்கிறது. தெருவில் போகும் ஒருவனை இடித்துத் தள்ளியிருக்கக் கூடிய வாகனத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியவனுக்கும் வந்திருக்கிறது. வாழ்வில் ஒன்றை மிகவும் எதிர்பார்த்து அது கிடைக்காது அலுத்துப் போய் இறந்து போகலாமா? என்று எண்ணியவனுக்கும் வந்திருக்கிறது. அல்லது தான் மிகவும் நேசித்தவர் இறந்ததும் அவரது உயிரற்ற உடலைப் பார்க்கும் போதும் அது வந்திருக்கிறது.

இந்த எண்ணம் வருவதற்கு இதுதான் தகுதி என்று எதுவும் கிடையாது. அப்படி வரும்போது மரணத்தைப் பற்றிய அவனுக்குள் உதிக்கும் எண்ணங்கள்தான் அவரவர்க்கு ஏற்ப வகை வகையாய் மாறுகின்றன.

எல்லோருக்கும் ஆரம்பம் பிறப்பு என்றாலும், அவனை மிகவும் சிந்திக்க வைப்பது அவனுக்கு ஒரு நாள் வரக்கூடிய அவனது இறப்புதான்.

ஏனென்றால், வாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்து, நல்லதாக வேண்டியது அனைத்தையும் பெற்றவனுக்கும் மரணம் வருகிறது. அதேப்போல, வாழ்க்கையை வாழத் தெரியாது தவித்து, இருப்பதையும் இழந்து, இன்னும் என்ன செய்வது? என்றும் தெரியாது, இறப்பது ஒன்றுதான் தனக்கு இனிமேல் விடுதலை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவனுக்கும் கூட மரணம் வருகிறது.

ஆக அனைவருமே மரணத்தை வாழ்க்கையின் உறுதியான ஒரு முடிவு என்றே பார்க்கின்றனர். ஆனால் இறப்பைப் பற்றித் தீவிரமாக யோசிப்பவனுக்குத்தான் அது பிறப்பின் மறுபக்கம் என்று தெரிகிறது.

அதாவது பிறந்தால் இறப்பது நிச்சயம் என்றும், அப்போதுதான் ஏன் பிறந்தோம்? என்ற எண்ணமும் வருகிறது.

அப்படி யோசிப்பவனுக்குத்தான் பிறப்பதால் நிச்சயம் வரும் இறப்பு என்ற ஒரு பிறப்பிறப்புச் சுழலில் சிக்காமல் இருப்பது என்றால் என்ன? என்ற எண்ணமும் கூடவே வருகிறது. அப்படி ஒரு சாகா நிலை இருக்குமானால் அதை எப்படி அடைவது? என்ற உந்துதல் இருப்பவனையே **முமுக்ஷு** என்று கூறுகிறார்கள்.

அதாவது இறக்காமல் இருப்பதற்கு பிறக்காமல் இருக்க வேண்டும். அது எப்படி என்று யோசிப்பவன்தான் முமுக்ஷு என்ற சாதகன்.

ஒருவன் இறந்துவிட்டால் அவன் இயற்கை எய்தினான் என்று சொல்கிறோம். தன்னைச் சுற்று முற்றும் பார்த்து இயற்கையில் என்ன நடக்கிறது? என்று கூர்ந்து பார்ப்பவனுக்கு இதன் உண்மை புரியும்.



சுற்றியுள்ள மனிதர்கள் தன்னைப்போலவே விதவிதமாய் எண்ணுபவர்கள் ஆதலால், அவர்கள் தங்களது செயலால் தங்கள் சுற்றத்தை மாற்றி, அதைத் தங்களுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளமுடிகிறது. அதைச் செயற்கை என்று சொல்லி, அதைச் செய்வதுதான் அவனது இயற்கை என்று தெரிந்து கொள்கிறோம்.

அதுமட்டும் அல்லாமல் ஒவ்வொருவனும் வெவ்வேறு மாதிரியாக இருப்பவர்கள் என்பதும் அவனுக்குத் தெரிகிறது.

மனிதனைப் போலவே தன் இன விருத்தி என்று ஒரு சில விஷயங்களில் மற்ற ஜீவராசிகள் ஈடுபட்டாலும், மனிதனளவு ஒரு குடும்பம், சமூகம், தேசம், உலகம் என்ற விதவிதமான கட்டுக்கோப்பான வெளிப் பார்வைகள் இல்லாது,

பொதுவாக ‘**கண்டதே காட்சி கொண்டதே கோலம்**!’ என்று அவைகள் வாழ்வதையும் அவன் பார்க்கிறான்.

ஒரு சில மிருகங்கள் கூட்டாக வேட்டையாடினாலும், வேறு பல விஷயங்களில் சேர்ந்து இருந்தாலும், அவனது பார்வை போல பொதுவாக, அவைகளுக்கு இல்லை என்பதால் மட்டுமே அவைகளை ஒதுக்கிவிட முடியாது.

அவைகளில் சிலவற்றிற்கு அவனை விடவும் கூர்மையான பார்வையோ, மோப்பமோ, இருளில் காணும் சக்தியோ, அதிர்வுகளை உணர்வதோ அல்லது அதுபோன்ற வேறு சில இந்திரியாதி விஷயங்களிலோ அவனை விடவும் அவைகளுக்குத் தேர்ச்சி இருக்கின்றன என்றும் அவன் தெரிந்து வைத்திருக்கிறான்.

ஆனாலும் அவைகள் அப்படி இருப்பது அவனுக்குத் தெரியும் என்பது அவைகளுக்குத் தெரியுமா? என்பதில் அவனுக்கு எப்போதுமே ஒரு சந்தேகம் உண்டு. ஆனால் அவைகளுக்கோ ஒன்று மட்டும் நனறாகத் தெரியும், அப்படித் தெரிவதாலேயே அவைகள் தங்கள் தினப்படி வாழ்க்கையை நடத்துகின்றன.

ஆம்! அதுதான் “**மரணம்**”.

அதாவது, வந்தவைகள் எல்லாம் ஒரு நாள் இல்லாமல் போகின்றன. ஆனால் என்றும் இருக்கின்ற "**இருப்பு**" இல்லாமல் போவதே இல்லை. இந்த இருப்பை அறிவதில்தான் மனிதன் அவைகளினின்றும் வித்தியாசப்படுகிறான்.

அதாவது ஒன்றை அறிவது மட்டுமல்லாது, அந்த ஒன்றைப் பற்றிய "**ஞானம்**" என்பதில் மனிதன் மற்ற ஜீவராசிகளிடம் இருந்தும் வித்தியாசப்படுகிறான்.

மேலும், மனிதன் மற்ற ஜீவராசிகளைத்தவிர தன் சுற்றத்தில் தாவர வகைகளையும் காண்கிறான். மற்றவைகள் போன்று தாவரங்களுக்கும் வளர்ச்சி இருந்தாலும், அவைகள் இருக்கும் இடத்தைவிட்டு நகர்வதில்லை.

இந்த அசல வகை உயிர்களும் விதையிலிருந்தோ அல்லது வேறு வழியிலோ முளைத்து பூ மலர்ந்து, காய், கனி என்று வளர்ந்து, மறுபடியும் அதில் உள்ள விதைகள் மூலமோ, வேறு முறையிலோ இன்னுமொரு தாவரம் அந்த இனத்தில் வளர்கிறது. இப்படியாகத் தன் இனவிருத்தியை இவைகள் செய்கின்றன.

இப்படி தானும் தன்னைச் சுற்றியுள்ள அனைத்து ஜீவராசிகளும் பிறந்து, வளர்ந்து, இறந்து போகும் காட்சியை, இந்த இயற்கையில் நடப்பதாகப் பார்க்கிறான். இந்தச் சூழலில் தன் மரணத்தையும் இயற்கை எய்துவதாகக் கருதுகிறான்.

அவ்வாறு, பிறக்கும் எந்த ஜீவராசிகளுக்குமே அவைகளின் பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையில் அவைகள் வாழ்வதற்கு உணவு இன்றியமையாததாக இருக்கிறது.

எந்த உணவை எப்படிச் சாப்பிடுவது? என்ற விஷயத்தில் மனிதன் மற்றவைகளைவிட மாறுபடுகிறான்.

தாவரம் அது இருக்கும் இடத்தில் என்னென்ன கிடைக்கிறதோ? அதை எடுத்துக்கொண்டு, அது தவிர மற்றதற்கு வெளி உதவியைச் சார்ந்து இருக்கிறது.

மற்ற நகரும் பிராணிகளோ அதன் இரையைத் தேடிப் பெறுகின்றன. அவற்றில் சில தன் இனத்தவரையே கொன்று தின்னவும் செய்கின்றன.

சில பிராணிகள் அப்படிச் செய்யாது காய்கனிகளையே சாப்பிட்டாலும், அவைகள் அடுத்த வேலைக்குத் தேவையான உணவைப் பக்குவப்படுத்தாமல், பறித்து அப்படியே பச்சையாகச் சாப்பிடுகின்றன.

மனிதர்களில் பலர் மாமிசம் உண்டாலும், அதைப் பக்குவப்படுத்தி உண்கின்றனர். அதன் காரணமாக அனேக நோய்களுக்கும் ஆளாகின்றனர். அதில் சிலர் மாமிச உணவைவிட காய்கறி உணவே சிறந்தது. அத்துடன் அத்தகைய காய்கறி உணவுகள் மிருக உணர்வுகளைத்

தூண்டாது, தூய்மையான சத்வ எண்ணங்களைக் கொடுக்கிறது என்பதையும் அறிந்திருக்கின்றனர்.

அந்தத் தூய எண்ணங்களே மேலும், பல நல்ல செயல்களுக்கும் ஆதாரமாய் அமைகின்றது என்பதையும், அதனால் அச்செயல்கள் மூலம் அவன் சார்ந்திருக்கும் சமூகத்திற்கும் மிக்க பயனுள்ளவனாய் வாழ முடிகின்றது என்பதையும் அறிந்திருக்கிறான்.

அதன்காரணமாக, மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு மேலும் உதவலாம் என்று அவனுக்குத் தெரிந்திருக்கிறது.

இப்படியாக மனிதன் யோசிக்க முடிவதால், அவன் ஒருவனால் மட்டுமே பிறந்ததன் காரணம் இறப்பதற்கு மட்டும் அல்ல!, அதற்கும் மேல் ஒன்று இருக்கலாம்... என்று தீர்மானிக்க முடிகிறது.

அப்படித் தீர்மானித்தவன் தான் காணும் உலகம் தன் இந்திரியங்களால் உணரப்பட்டது, அந்த இந்திரியங்கள் உடலுடன் சம்பந்தம் கொண்டவை. அந்த உடலுக்குத்தான் பிறப்பும், இறப்பும் இருக்கிறது.

தான் அந்த உடல் மட்டும்தானா? என்ற கேள்வியுடன் தனது ஆராய்ச்சியைத் தொடங்குகிறான்.

மற்றவர்கள் காண்பதுதான் நம் உடல், அதைத் தவிர அவர்கள் காணாதபடி நமக்கு மனம், புத்தி என்று இன்னும் சில இருக்கின்றன என்று உணர்கிறான்.

அதாவது, உலகத்தில் காணக்கூடியது, காண முடியாதது என்றும் இருக்கின்றன என்று தெளிந்த அவன், மனம் என்பது நமது எண்ணங்களின் தொகுப்பு, **“நான்”** என்ற அகந்தையே நமது எண்ணங்களால் வளரும் உணர்ச்சிகளின் தொகுப்பு என்று அறிகிறான்.

அது தன் இந்திரியங்கள் மூலம் முன்பு பெறப்பட்டது என்றும், அவைகளின் தொகுப்பைத் தவிர தற்போது வரும் இந்திரியங்களின் தகவலுமே அவனது உலகப் பார்வைகளாக உருவாகின்றன என்று தெளிகிறான்.

இவைகள் யாவும் நமது என்று சொன்னாலும், அவைகள் எப்போதும் காணப்படுவதோ, உணரப்படுவதோ இல்லை. அவைகள் யாவும் நம் விழிப்பு நிலையில் மட்டும் தான் இருக்கின்றன.

ஆனாலும், விழித்திருப்பது தவிர நமக்கு ஆழ்ந்த உறக்கமும், கனவும் என இருவேறு நிலைகளும் உள்ளன.

அவைகளில் நமது அனுபவம் வேறு மாதிரி இருக்கின்றன. ஆனாலும், நாம் நாமாக எப்போதும்

இருக்கிறோம் என்றால் நமது உண்மை நிலை என்ன? என்று அறிய ஆவல் கொள்பவனைத்தான் **முமுக்ஷு** என்கின்றோம்.



அந்த அறிவைப் பெற முயல்பவன் இந்த ஆன்ம போதம் சொல்லப்போவதைக் கேட்பதற்குத் தகுதியுள்ளவன் ஆகிறான்.

அந்த வேட்கை தீவிரமாக இருக்க வேண்டும் என்றால் அவன் எப்படிப்பட்டவனாக இருந்ததால் அந்த நிலைக்கு வந்திருப்பான் என்றும் பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு கூறியிருக்கிறார்.

தன்னைத் தானே அறிவது என்பது ஒரு தீவிர முயற்சி என்பதால், அந்த நிலையை அடைவதற்கு ஒருவன் சில நிலைகளைத் தாண்டி வந்திருக்க வேண்டும்.

எப்போது ஒருவன் பிறப்பையும், இறப்பையும் தன் உடலோடு தொடர்புகொண்டு பார்க்கிறானோ, அப்போதே அவனுக்கு உடல் இருக்கிறது என்று உணரப்படுகின்ற விழிப்பு நிலையில்தான் உலகமும் தெரிகிறது என்ற உண்மையும் புரிகிறது.

அத்தகைய உடல் இருப்பதே தெரியாத அவனது கனவு மற்றும் உறக்க நிலைகளிலும் அவனுக்குச் சில அனுபவங்கள் இருப்பதாலும், அந்தக் கனவைக் காணும் அவனுக்கே வேறோர் உடலும், அதனுடன் வேறோர் உலகமும் காணப்படுவதால் அவனுக்கு விழித்தவுடன் காணப்படும் உலகைப் பற்றிய சந்தேகம் வளர்கிறது.

எப்போதும் இருக்கும் உண்மையான நிலையைத் தேடுபவனுக்கு வந்து, வந்து போகும் இந்த உலகங்கள் எப்படி உண்மையாய் இருக்கும்? என்ற எண்ணம் தீவிரமாக வளரும்போது, அவனுக்கு உலக விஷயங்களில் ஆசைகள் குறைகின்றன. அதை “**வீதராகிணாம்**” என்ற சொல்லால் பகவான் ஸ்ரீசங்கரர் குறிப்பிடுகிறார்.

ஆசை குறைகின்றது என்றால், அதனை விரக்தி என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். அவைகளின் மீது இருக்கும் ஈர்ப்பு வெகுவாகக் குறைகிறது என்று கொள்ளலாம். தினப்படி வாழ்வின் அத்தியாவசியத் தேவைக்கு மேல் அநாவசியமான ஈடுபாடு தவிர்க்கப்படுகிறது என்று சொல்லலாம்.

எப்போது உலகியல் விஷயங்களில் ஈடுபாடு குறைகிறதோ, அப்போதே அவைகள் கிடைக்காததால் தனக்கு இதற்கு முன்பு இருந்து வந்த ஓர் ஏக்கமும், பிறருக்குக் கிடைத்து விட்டதால் வந்த பொறாமை, கோபம் முதலானவைகளும் போய்விடுகின்றன என்பதையும் ஏற்க வேண்டும்.

இவைகள் தவிர மனமும் உண்மை நிலை ஒன்றைத் தேடி ஒரு வைராக்கியத்தோடு இருப்பதால், இவைகள் எல்லாம் ஒருமுகமாகச் சேர்ந்து மனத்தளவில் ஒரு அமைதியைக் கொடுத்திருக்கிறது. இதை “**ஷாந்தானாம்**” என்ற சொல்லால் ஸ்ரீ சங்கரர் குறிப்பிடுகிறார்.

உலக விஷயங்களிலும் முன்பு போல் நாட்டமில்லை, மனமும் அடங்கியிருக்கிறது எனும்போது தனக்கும், பிறருக்கும் வேண்டிய வேலையை மட்டும் செய்வதால், அங்கே நல்ல காரியங்களைத் தவிர வேறு எதுவும் நடைபெற்றிருக்க முடியாது.

தான், பிறர் என்ற பாகுபாடு இருந்தால்தானே? தனக்கென ஒன்றும், பிறர்க்கு மற்றொன்றும் என்று செயல்கள் வளர்ந்து, அதனால் பாவங்கள் செய்யத் தூண்டியிருக்கும்.

இப்போதுதான் அப்படி இல்லையே, அதனால் அவர்கள் பாவச் செயல்களை ஒழித்தவர்கள் ஆகிறார்கள். இந்தநிலையை "**க்ஷீணபாபானாம்**" என்ற சொல் குறிப்பிடுகிறது.

இந்த மாதிரி நிலைமையை அடைந்திருப்போர் ஸ்ரீமத் பகவத்கீதை சொல்கிறபடி தன் சரீரத்தாலும், வாக்காலும், மனத்தாலும் ஒன்றுபட்டு தவம் செய்திருக்க வேண்டும்.

அப்படி அவைகள் மூன்றும் நடந்திருக்கவில்லை என்றால் **நான்** என்ற அகந்தை ஓங்கியும், அதனால் இருமைகளான **நான் - மற்றொருவர்** என்ற பாகுபாடும், அதை ஒட்டிய பாவச் செயல்களும் நடந்துகொண்டிருக்கும்.

சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் வரைய வேண்டும் என்பது போல், உலகின் நிலையற்ற தன்மையையும் அதனால், என்றும் உள்ள உண்மையையும் அறிவதற்கு உடலே முதல் காரணம் என்று மட்டும் அல்லாமல் கருவியாகவும் ஆகிறது.

முதலில் உடல் அளவில் உலக விவகாரங்களில் ஈடுபட்டு பல அனுபவங்களையும் பெற்று, அப்புறமாக சில

சந்தேகங்கள் வரவும், அதைப் பலரிடம் கேட்டும், பேசியும், படித்தும், தெளிந்தும் ஒரு நிலைக்கு வரும்போது, மேற் கொண்டு கேட்டவைகளில் மனதை ஒருமுகப்படுத்தி மேலே செல்வதற்கு என்று, ஒன்றன்பின் ஒன்றாக நமது பயிற்சி தொடங்குவதற்கு உடலும், அதைச் சார்ந்த மனமும் கருவிகளாக உள்ளன.

நம்மை விடப் படித்த சான்றோர்கள், நல்வழி காட்டும் குருமார்கள், தினப்படி நாம் காணும் ஆசிரியர்கள், வேதம் ஓதும் அந்தணர்கள் என்று நம் வாழ்வில் இவர்கள் போல் வரும் பலப்பல பெரியோர்களிடம் நாம் காட்டும் மரியாதை, அடக்கம் என்பது தவிர, உடலைக் கட்டுப்படுத்தும் சில வழிமுறைகளான தூய்மையாய் இருத்தல், விரதம் காத்தல், சாத்விக உணவருந்தல் என்பதனால் கொல்லாமை, புலனடக்கம் என்று இந்த ஆறு வகையானவைகளை “**சரீரத் தவம்**” என்ற முதல் படியில் கூறப்படுகின்றது.

மற்றவரைப் புண்படுத்தாமல் பேசுதல், உண்மையே பேசுதல், அனைவரும் மகிழும்படி பேசுவது, தவிர நல்ல ஆன்மிகத் தேடலைத் தூண்டியும், வளர்க்கவும் உதவும் நூல்களைப் படித்தல் என்பவை எல்லாம் "**வாக் தவம்**" என்ற இரண்டாம் படியில் வருகின்றன.

தன்னைச் சுற்றியுள்ள அனைத்து ஜீவராசிகளிடமும் அன்பாய் இருத்தல், அமைதியோடு இருந்து தன் வாழ்க்கை மூலம் அனைவருக்கும் வழி காட்டுதல், எதற்குத் தேவையோ

அதை மட்டும் பேசி, பொதுவாக மௌனம் காத்தல் என்று இந்த ஆறு வகையான இதய சுத்தியுடன் இருப்பது "**மானச தவம்**" என்ற மனதளவில் கடைப்பிடிக்கப்படும் தவமாக அடுத்தப் படியில் வருகிறது.

அதேசமயம், இத்தகைய தவங்கள் செய்வதாலேயே ஒருவனுக்கு ஆன்மாவைப் பற்றிய அறிவு வளர்ந்துவிடாது.

இவைகள் எல்லாம் ஆன்மாவைப் பற்றிய அறிவை வளரவிடாது தடுக்கின்ற, நமது முந்தைய பாவச் செயல்களால் நாமே வளர்த்துவிட்டுள்ள பல்வேறு அறியாமை திரைகளை அகற்ற உதவும் அவ்வளவே!.

இதனால் பாவச் செயல்கள் குறைந்து மனம் ஓர் அமைதி நிலைக்கு வந்து, அதனால் உலகச் செயல்களில் தேவைக்கு மேல் அதிகமான நாட்டம் நமக்கு இல்லாதபடி குறைந்து, **பிறப்பு - இறப்பு** என்றால் என்ன? என்று நம்மை சிந்திக்க வைக்கும். இத்தகைய தொடர் நிகழ்வுகளால் மட்டுமே ஆன்மாவைப் பற்றிய ஆழமான சிந்தனை பலப்படும்.

என்றும் உள்ள ஆன்மாவை உணர்வது என்பது வெறும் புற அறிவு பூர்வமானது என்றிருந்தால், இக்கட்டுரையின் தொடக்கத்தில் எடுத்து வைத்த வாதங்களைப் படித்ததுமே நாம் ஆன்மாவை உணர்ந்திருக்க வேண்டும்.

ஆனால் படிப்பது, சிந்திப்பது என்பதெல்லாமே நமது மனம், புத்தி இவைகளின் மூலம் நடப்பதாலும், என்றும் உள்ள ஆன்மாவை திரை போட்டு நாமே மறைத்து வைத்திருப்பதாலும், அத்திரையை அகற்ற முயற்சி செய்வதே இந்தச் சிந்தனையின் முதல் பயன் என்பதாலும், நம்முடைய புற அறிவு கொண்டு ஆன்மாவை உணரமுடியாது, ஆனால், அந்த புத்தி சக்தியினால் நம் அறியாமையை அறிந்துக் கொள்ள முடியும் என்பதையும் அவசியம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆகவே, நாம் ஆன்மாவைப் பற்றிய போதத்தில் தற்பொழுது முதல் படியில் இருக்கிறோம்.

बोधोऽन्यसाधनेभ्यो हि साक्षान्मोक्षैकसाधनम् ।
पाकस्य वह्निवज्ज्ञानं विना मोक्षो न सिध्यति ॥ २॥

போ3தோ4ऽந்யஸாத4னேப்4யோ ஹி
ஸாக்ஷான்மோகைக்ஷகஸாத4னம் |
பாகஸ்ய வஹ்னிவஜ்ஜ்ஞானம்' வினா மோக்ஷோ ந ஸித்4யதி ||

**அறிவொன்றே நேர்முக்தி சாதன மாகும்**
**பிற சாதனங்களின் பேறாம் – அறிவின்றி**
**ஆகாது முக்தியுறல் அக்கினியின்றிப் பாகம்**
**ஆகாதவாறு என்று அறி – ஸ்ரீ ரமணர்**

(எப்படி மற்ற எல்லாப் பொருட்கள் இருந்தாலும் நெருப்பு இல்லாமல் சமையல் செய்யமுடியாதோ? அப்படியே ஞானம் இல்லாது ஒருவனுக்கு முக்தி சித்திக்காது. ஏனென்றால் மற்ற வழிகள் எல்லாவற்றையும் விட தன்னைப்பற்றிய ஞானம் ஒன்றுதான் முக்தி அடைய நேர்வழி ஆகும்.)

இந்தச் செய்யுளில், பகவான் ஸ்ரீரமணர் "**அறிவு**" என்ற சொல்லை பேரறிவை உணர்த்தும் ஞானம் என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்துகிறார்.

முன்பகுதியில் '**அறிவு**' என்பதை நமது மூளையால் அலசப்பட்டு நமக்கு வரும் "knowledge" என்ற சொல்லால் புரிந்து கொள்ளலாம்.

இந்தச் செய்யுளை அலசுவதற்கு முன்னால், நாம் சிறிது பின்னோக்கி பகவான் ஸ்ரீஆதிசங்கரர் காலத்துக்குச் செல்ல வேண்டும். அவரது காலத்தில் பற்பல சித்தாந்தக் கருத்துகள் பரவியிருந்தன.

அவற்றில் ஒன்று **பூர்வ மீமாம்ச வாதம்**. அதன்படி வேதத்தின் நோக்கம் ஒருவன் செய்யவேண்டிய கர்மங்களை விவரமாகக் கூறுவதே.

அந்த முறைப்படி செய்யப்படும் எந்த விதமான யாகம், யக்ஞம் போன்ற கர்மத்திற்கும் பலன்கள் உண்டு.

ஆதலால் அதற்கென்றே உண்டான சில யக்ஞங்களைச் செய்து ஒருவன் முக்தி நிலையையும் அடையலாம் என்பதே அன்றைய அவர்களுடைய நிலை.

அத்தகையவர்களுக்கு கர்மம் வெறும் ஜடம், அதற்குப் பலன் தருவது கர்மபல தாதாவாகிய இறைவன் என்பதை வாதங்கள் செய்து நிரூபித்து, அவர்களில் சிலரை, பாரதம் முழுதும் சுற்றிவந்து, தான் பரப்பிக் கொண்டிருந்த அத்வைத மார்கத்திற்குக் கொண்டு வந்தவர் பகவான் ஸ்ரீசங்கரர்.



அப்படி மாறி வந்தவர்களில் ஒருவரான மண்டல மிஸ்ரர் என்பவர்தான் **சுரேஸ்வராச்சார்யார்** என்று பெயர் மாறி பகவான் ஸ்ரீசங்கரரின் பிரதம சீடர்களில் ஒருவராகி, சிருங்கேரி சங்கர மடத்தின் முதல் ஆச்சாரியராக நியமிக்கப்பட்டார்.

பகவான் ஸ்ரீரமணர் இயற்றிய "**உபதேச உந்தியார்**" நூலில் இதே போன்ற நிகழ்ச்சிகளாக தாருக வனத்தில் இருந்த கர்ம காண்டிகளுக்கு "**வினைப்பயன் வித்தாய் விளிவுற்று வினைக்கடல் வீழ்த்திடும், வீடு தரல் இல்லை**" என்று பரமசிவனே மகா விஷ்ணுவுடன் அங்கு வந்து அறிவுரை கூறுவதாக வரும். இறைவனை நினைத்துச் செய்யப்படும் செயல்கள் யாவும் நம் கருத்தைத் திருத்திக் கதி வழி காண்பிக்கும்.

ஆக, கர்ம யோகம் வழி காட்டும் என்பது சரி!தான். அதுபோன்றே, மற்ற யோகங்களும் ஒவ்வொரு விதத்தில் நம்மை மனத்தூய்மை அடையவைத்து முக்தியை நோக்கி அழைத்துச் செல்லும்.

**பூஜை, ஜெபம், தியானம்** முறையே இறைவனிடமுள்ள பக்தியால் உடலாலும், வாக்காலும், உள்ளத்தாலும் செய்யப்படும் **கர்மமே** என்றும் அதில் கூறுவார்.

அதில் முன்னது ஸ்தூலமாகவும், பின்னது நுண்ணிய தாவும் இருப்பதால், நுண்ணியதாக இருப்பதே மற்றதைவிட மிக உயர்ந்தது என்பார். அதற்குக்காரணம், நாம் இவைகளினின்றும் மிகவும் நுண்ணியதான எண்ணத்தையும் தாண்டி, உள்ளதை அடைந்து அந்தப் பேரறிவை உணர வேண்டும் என்பதே.

அப்படிச் கூறக்கூடிய ஞான வழி ஒன்றே நமது தவறான எண்ணத்தைச் சரி செய்து, நமக்கு முக்தி அளிக்கும் என்றும் அதில் விவரமாகக் கூறுவார். அதுவே யோகங்களில் எல்லாம் சிறந்த மகா யோகம் என்று பகவான் ஸ்ரீரமணரும் ஓர் இடத்தில் குறிப்பிடுவார்.

நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில் வரும் "**திருவுந்தியார்**" பாடலைப் போன்று எழுதப்பட்டதுதான் பகவான் ஸ்ரீரமணரின் "**உபதேச உந்தியார்**"

நூலும் எனலாம். அதன் ஒவ்வொரு பாடலிலும் கடைசியில் வரும் “**உந்தீபற**” என்ற சொல்லினால்தான், அந்த நூல் “**உந்தியார்**” என்ற வகையிலும் வருகிறது.

இந்தச் சொல்லை, ஒரு பாடலின் இலக்கணப்படி அதன் அசை அளவைச் சீர் செய்யவரும் சொற்றொடர்கள் **என்னோ, கொல்லோ** போன்றுவரும், இன்னுமொரு அசைச்சொல் என்பார்கள்.

வேறு சிலரோ இந்த ஈரசைச்சொல்லை “**உந்தி**” என்றும் “**பற**” என்றும் இரண்டாகப்பிரித்து பொருள் கொள்வார்கள்.

அதன்படி **முமுக்ஷு** ஒருவன் அந்த அளவுக்கு விவேகம் கொண்டு, வேகத்தோடு “**உந்து**”வதால் அடையும் திறன் கொண்டு, அவன் “**பற**”க்கும் நிலைக்கு வரவேண்டும் என்றும் பொருள் கொள்வார்கள்.

ஓர் ஆகாய விமானம் தரையில் வேகமாகச் சென்று உந்திக்கொண்டு பறக்கும் நிலையை அடைவது போன்றதுதான் இதுவும்.

இதுவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது.

ஏனென்றால், தரை வழியாக ஓர் இடத்தை அடைவதை விட ஆகாய மார்க்கமாக அந்த இடத்தை அடைவது ஒரு நேர்கோட்டில் செல்வதாகவும் இருக்கிறது. அதேசமயம் தரையில் இருக்கும் **மலை, ஆறு** போன்ற பல தடைகளையும் தாண்டுவதாகவும் அமைகிறது. அத்துடன் விரைவாகவும் இருக்கின்றது.

அதேப்போன்று, இங்கும் இந்த ஞான மார்க்கத்தில் சென்றால் **உடல், மனம்** இவைகளினால் வரும் தடைகளையும் தாண்டி, **நேராகவும், விரைவாகவும்** முக்தி நிலையை அடைய முடிகிறது.

இது அர்ஜுனன் பறவையைக் குறிபார்த்து அம்பெய்தும் போது, அதன் கண் மட்டும்தான் தெரிகிறது, வேறெதுவும் தெரியவில்லை! என்பதுபோன்று, மன ஒருமித்ததாகவும் இருக்கின்றது.

முக்தியடைய வெவ்வேறு வழிகள் சொல்லப்பட்டு இருப்பதன் காரணமே, ஒவ்வொருவரும் அந்த இலக்கை நோக்கிச் செல்வதில், பலவாறான நிலைகளில் ஒருவருக்கு ஒருவர் மாறுபடுகின்றார்கள் என்பதே.

அதற்குக்காரணம், அவர்கள் மனப்போக்கு என்றே கூறப்படவேண்டும். அவர்களது மனம் அந்த ஒன்றிலே

திருப்தியை அடையாமல், இன்னும், இன்னும் என்று எதையோ தேடுகின்றது.

அவ்வாறு தான் தேடுகின்ற பொருள் எதுவோ, அதுவாகவேதான் “**நான் இருக்கின்றேன்**” என்பதை அகவழியில் ஏற்கக்கூடிய பக்குவமான மனநிலை உண்டாகமல், புறவழியில் தனக்கு வேறாக எதையோ ஆர்வத்துடன் தேடி அலை பாய்கின்றது. அதற்குக்காரணம் மனித மனம் எப்பொழுதுமே புறத்திலேயே அதிக நாட்டம் கொண்டதாக காணப்படுகின்றது.

அதை அவ்வளவு எளிதாக அகத்திலே திருப்புதல் என்பது சாத்தியமாகாது. அதற்கான படிநிலைகளில் அந்த மனம் படிப்படியாக பயணித்தால் மட்டுமே சாத்தியமாகும்.

அதற்கு ஆன்ம ஞான விசயங்களை மனம் முதலில் கேட்கத் தொடங்க வேண்டும். அப்பொழுது மட்டுமே, அந்த மனம் அந்த அறிவை அறியக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டாகின்றன. அதற்கான கல்வி முறையும் கட்டாயம் அந்த மனதிற்கு போதிக்கப்பட வேண்டும்.

பலருக்கும் தன் வாழ்க்கையின் பயனைப் பற்றியோ, அல்லது அதன் காரணத்தைப் பற்றியோ யோசனை வருவதில்லை. எல்லோருக்கும் வாழ வேண்டும் என்றும், வாழ்க்கையில் சுகமாய் இருக்க வேண்டும் என்ற ஆவல் மட்டுமே நிச்சயமாக இருக்கிறது.

ஆனால் எதைச் செய்தால் அந்த உண்மையான சுகம் கிடைக்கிறது என்பதில் ஒவ்வொருவரும் வேறுபடுகிறார்கள்.

குறிப்பிட்டுச்சொல்லாமல், பொதுவாகச்சொல்வதென்றால், பலரும் உலகை ஒட்டியும் அதன் பலப்பல விஷயங்களிலும், புறத்திலேயே கவனம் செலுத்தி சிலவற்றை அடைவதிலும், வேறு சிலவற்றை ஒதுக்குவதிலும் இன்பம் காண்கிறார்கள்.

அப்படி அவர்கள் செல்லும்போது விரும்பியதைத் தான் அடையாத போதும், அதேசமயம் மற்றவர்கள் அதை அடையும் போதும் அவர்கள் **துன்பம்** அனுபவிக்கிறார்கள்.

அதேசமயம், தான் விரும்பியதைப் பெற்றாலும், அவைகளை இன்பத்துடன் சில நாட்கள் அனுபவித்தாலும், நாளடைவில் அவர்களுக்கு அந்தப் பொருள்கள் மேல் இருந்த ஆர்வம் குறையவே செய்கின்றது. அத்துடன் அவைகளுக்குப் பதிலாக வேறு புதிய பொருள்களின் மீது அவர்களது நாட்டம் திரும்புகின்றது.

இப்படியாக அவர்கள் **நாடுதல் - இன்பம் - தவிர்த்தல்** என்ற ஒரு சக்கரச் சுழற்சியில் வாழ்நாளைக் கழிக்கின்றார்கள்.

ஒன்றன்பின் ஒன்றாகப் பொருளும் மாறி, அதன் மேல் உள்ள ஆசையும் மாறி ஒரு விதமாக ஓயும்போதும், அல்லது என்னதான் முயற்சி செய்தும், நாம் ஆசைப்பட்டது

கிடைக்காமலோ, அல்லது கிடைத்தும் அதை அனுபவிக்க முடியாமலோ போவதினால், **விரக்தி** வந்து விடும்போது மட்டும்தான் ஒருவனுக்கு இந்த உலகின் மீதும் அதன் பொருள்களின் மீதும் உள்ள கண்ணோட்டம் மாறுகின்றன.

எது செய்கிறதோ இல்லையோ? ஆனால், காலம் இந்த நிலைக்கு ஒருவனை வெகு விரைவாகத் தள்ளிக்கொண்டு வரும். இன்னும் சிலருக்கு இந்தக் கால அளவு குறைவாகவும், வேறு சிலருக்கு இது அதிகமாகவும் இருக்கலாமே தவிர, கடைசியில் ஒருவன் இந்நிலைக்கு வந்தே ஆக வேண்டும்.


அப்போதும் ஒருவனது மனோநிலையைப் பொருத்தே அவன் எப்படி மாறுவான்? அடுத்து என்ன செய்வான்?... என்பதும் இருக்கிறது.

ஏனென்றால், எந்த நிலையிலும் மனிதன் மனதினால் கட்டுப்பட்டவன்தான். அதாவது, அவனது மிஞ்சியிருக்கும் ஆசாபாசங்களைப் பொருத்தே, அவன் மேலே வரப்போவதும், கீழே இறங்கப்போவதும் அமையும்.

அப்படிப் பல நிலைகளைக் கடந்து வந்த **முமுக்ஷு,** தான் செய்த தவங்களின் பலனாய் அவனுக்குக் கிடைத்த பல வழிகளில், சரியான ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதன்படி சென்று கொண்டிருக்கும்போது, முன்பு அவன் காணாத பல

புதிய அனுபவங்களையும், புதிய சூழ்நிலைகளையும் எதிர் கொள்கிறான்.

கண்களுக்குத் தெரியாத சூக்ஷுமமான மிக நுண்ணியதான அணுவும், கண்களுக்குத் தெரிகின்ற ஸ்தூலமான மிகப்பிரமாண்ட சூரியனும் உண்டாகக் **காரணம்** எதுவோ, அதுவே **காரியம் (விளைவு)** நடைபெறுவதற்கு காரணமாக உள்ளது.



இதை அறிந்துக் கொண்டதினால், அவன் உலகக் காரியங்களில் ஈடுபட்ட போதும் **காரணம் - விளைவு** என்று முன்பு நடந்தது போலவே, இப்போதும் நடக்கிறது என்றும், ஆனால், விளைவுகள் வெறும் ஸ்தூலமாக இல்லாமல், மேலும் நுண்ணியதாக (சூக்ஷுமமாக) அமைகின்றன என்றும் உணர்கின்றான்.

அதாவது எதைக் கொடுக்கிறானோ? அல்லது எதை விதைக்கின்றானோ? அதற்கேற்றாற்போல் ஒன்றைப்பெறுகிறான்.

அவ்வாறு, கொடுப்பதால் மட்டும் பெறுவது என்ற நிலை இல்லாமல், **எப்போதும் இருப்பது என்பது என்ன?** என்று அவன் ஆராய முயற்சிக்கும்போது, அவன் ஏதும் கொடுக்காமலும் அதனால், எதுவும் பெறாமலும், ஆனால் அந்த நிலையை அனுபவித்துக்கொண்டு, அப்படியே **சும்மா இருப்பது!** என்றால் என்ன? என்ற அந்த நிலைக்கு அவன் தயாராகிறான்.

இப்படியாகப் பல விதங்களிலும் உலகக் காரியங்களில் ஈடுபட்ட அவன், தன் அனுபவங்களால் உந்தப்பட்டு, பின் தான் கண்ட பல வழிகளிலும் வாழ்வின் உண்மையை உணரத் துடித்து, இறுதியில் **தன் இருப்பு** என்னும் அனுபவத்தைக் காணும் நிலைக்கு அவன் தள்ளப்படுகிறான்.

அத்தகைய முமுக்ஷுவுக்குப் பல வழிகள் உள்ளன. அவைகளை ஒவ்வொன்றாக இனி பார்ப்போம்.

பலரும் செல்லும் பக்தி வழியின் முக்கிய அம்சம் இறைவனிடம் சரண் அடைவது. இது வெறும் சொல்லளவிலே மட்டும் இல்லாது மனத்தளவில் ஆழமாக இருந்தால்தான், அது பரிபூரண சரணாகதி ஆகும்.

அப்படி இருந்தால் சரணடைந்தவன் நான் தான் இறைவனிடம் சரணடைந்துவிட்டேனே, எனக்கு இது நடக்கவில்லையே!, அது கிடைக்கவில்லையே! என்று நினைக்கவும் மாட்டான், அப்படிக்கூறவும் மாட்டான். அப்படிச் சரணடையும்போது மட்டும்தான் மனம் **பூரண அமைதி** கொள்ளும்.

அப்போது, அந்த அமைதியை அனுபவித்துக் கொண்டிருப்பவன் யார்? என்று கேட்டால் அவனால் என்ன கூறமுடியும்? நான் என்று சொல்வானா? அல்லது இறைவன் என்பானா? அல்லது இறைவன் தன்னுள் இருப்பதால் என்பானா?

அப்படியே எதுவும் சொன்னாலும் முன்பு இறைவன் அவனுள் இல்லாது போயிருந்தானா? இல்லாது போய் இருந்தால் அப்போது அவன் என்னவாய் இருந்தான்? என்ற கேள்விகளுக்கு என்ன பதில் வரும்…?

ஆக, ஒரு உண்மையை அனைவரும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அதாவது, பக்தி வழி மன அமைதியைக் கொடுக்கும் என்பதோடு சரி!. ஆனால், அமைதியாய் இருக்கும் அவன் யார்? என்பதற்கு அங்கு பதில் இல்லை.

பக்தி வழியில் வரும் பெரும்பாலானோரின் செயலாக பூஜையையும், ஜெபத்தையும் எடுத்துக்கொண்டு, பகவான்

ஸ்ரீரமணர் அவைகள் முறையே உடலாலும், வாக்காலும் செய்யப்படும் **கர்மம்** (செயல்) என்பார்.

அடுத்ததாக, நாம் இறைவனிடம் ஒன்றாவதையே சிலர் **யோகம்** என்பார்கள். அல்லது நமது மனம் செல்லும் வழிகளைக்கட்டுப்படுத்த நமது புத்தியை ஒருமைப்படுத்துவது என்று சொல்லலாம்.

ராஜ யோகத்தில் பெரும்பாலும் இது மனதை உள்முகமாகச் செலுத்தி, அதை அமைதிப்படுத்த ஏதேனும் சில பயிற்சிகளை உடலளவில் செய்வார்கள்.

நமது உடல் ஸ்தூலம் என்றால், அந்த உடலுடனேயே முதலிலிருந்து இறுதிவரை இருப்பது சுவாசம் என்பதால், அதுதான் நாம் உயிருடன் இருப்பதைப் பிறர் அறிய உதவும் காணக்கூடிய பொருள்.

அது உடலைவிட நுண்ணியதானது. அதைப் பயிற்சிகள் மூலம் கட்டுப்படுத்தினால் நாம் காணமுடியாத நமது நுண்ணிய தேகமும் வசப்படும். அதன் மூலம் தூலமாய் இல்லாது நுண்ணிய வடிவில் இருக்கும் இறைவனுடன் நாம் ஐக்கியம் ஆகலாம் என்று பல தியான முறைகளையும் அவர்கள் சொல்வார்கள்.

அப்படித் தியானிப்பதாலும் மற்ற பல பயிற்சிகளாலும் மனமும் அமைதி அடையலாம், தூலமாய் விளங்கும் உலகின் மீதும் பற்றுதல் இல்லாது அதன் விஷயங்களிலிருந்தும் விலகியிருக்கலாம்.

ஆனால், அப்படி விலகியிருப்பவன் யார்? அமைதியை அனுபவிப்பவன் யார்? என்று கேட்டால் பதில் இருக்காது.

இந்த யோகத்தின் அங்கமாய் விளங்கும் தியானத்தை பகவான் ஸ்ரீரமணர் உள்ளத்தால் செய்யப்படும் **கர்மம்** (செயல்) என்பார்.

மேலே சொல்லப்பட்ட முறைகள் எல்லாமே பகவான் ஸ்ரீரமணரைப் பொருத்தவரை வித, விதமான கர்ம யோகங்கள்தான்.

இவைகள் தவிர, செய்யப்படும் எந்தச் செயலும் இறைவனுக்காக என்றும், இறைவன் நமக்குக் கொடுத்த சக்தியால் என்றும் கருதிச் செய்வதையே குறிப்பாக கர்ம யோகம் என்கிறார்கள்.

மேலே கூறியதுப்போன்று, இதுவும் நிச்சயம் கதி வழி காட்டும். மன அமைதியையும் கொடுக்கும். ஆனாலும் நாம் செய்யும் கர்மத்தோடு பந்தப்பட்டது போல, அதாவது

கட்டுண்டது போல, '**நாம் செய்கிறோம்**' என்கிற நினைப்பு நமக்குச் சிறிதாவது இருக்கலாம்.

அதிலிருந்தும் கர்மத்திற்கு உண்டான விளைவுகளை எதிர்பார்ப்பதில் இருந்தும், நமக்கு விடுதலை கிடைக்குமா? என்றால், அது நாம் செய்யும் கர்மத்தால் (செயலால்) இல்லை என்பதே பதில்.

விடுதலை அல்லது முக்தி வேண்டுமானால், அதற்கு உரிய மனோநிலையும், அறிவும் வேண்டும்.

வெறும் கர்மத்தால் (செயலால்) அது ஆவது இல்லை.

மேலும், கர்மத்தில் ஈடுபடுவதால், அதன் நேரடி விளைவாக ஆன்மாவைப் பற்றித் தெளியலாமா? என்றால் அதுவும் இல்லை.

சாஸ்திரங்கள் கூறுகின்றபடி கர்மங்கள், அதன் விளைவுகளையும், முறைகளையும் பொருத்து நான்கு வகைகளில் இருக்கின்றன.

ஒரு கர்மத்தைச் செய்வதால், அதன் விளைவாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் கிடைப்பதை நாம் பெறலாம். இது '**ஆப்ய கர்மம்**' எனப்படுகிறது.

அதாவது, ஒரு பலசரக்குக் கடைக்குச் சென்று அரிசி வாங்குவதையும், ஒரு பள்ளிக்குச்சென்று கல்வி பயில்வதையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஆன்மா ஒரு குறிப்பிட்ட இடத்தில் என்று இல்லாததால் ஆன்மாவை அவ்வாறு அடைய முடியாது.

கர்மம் செய்வதால் இப்போது இல்லாவிட்டாலும் வேறொரு காலத்தில் கிடைக்கும் என்பது **'உத்பாத்ய கர்மம்'** எனப்படுகிறது.

ஆன்மா இப்போது இல்லாது, வேறொரு சமயத்தில் கிடைக்கும் என்பதும் கிடையாது. ஏனென்றால், ஆன்மா எங்கும், எப்போதும் இருப்பது.

மூன்றாவது வகையான கர்மம், ஒரு வடிவத்தில் இல்லாவிட்டால் உரு மாற்றி வேறொரு வடிவத்தில் காணலாம் என்பது **'விகார்ய கர்மம்'** எனப்படுகிறது.

இது பாலைத் தயிராக மாற்றிக் காட்டுவது போலத்தான்.

ஆன்மாவை அப்படி மாற்றுவதற்கு முன்பு ஓர் உருவம், பின்பு வேறொன்று என்று அதற்குக் கிடையாது என்பதால் ஆன்மாவை அப்படியும் அறிய முடியாது.

நாலாவதாக ஒரு பொருளின் மேல் உள்ள அசுத்தத்தை நீக்கினால், அந்தப் பொருளை நன்கு காணலாம். அதற்கு ‘**சம்ஸ்கார்ய கர்மம்**’ என்று கூறப்படுகின்றது.

ஆன்மாவில் **அசுத்தம்** என்று ஏதும் கிடையாது.

ஆன்மாவை மறைக்கும் உபாதிகளை நீக்கவேண்டும் என்பதற்கு மட்டும்தான் எல்லா பயிற்சிகளும், முயற்சிகளும் ஆகும். ஆனால், அதுப்போன்ற எந்தச்செயல்கள் செய்தும் நாம் ஆன்மாவை உணர முடியாது.

எந்த விதமான யோக முறைகளைப் பின்பற்றினாலும் அதைச் செய்வதில் மனம் ஈடுபடுவதால், அந்த மனத்திற்கு அதனால் தற்காலிகமான சாந்தி உண்டாகும். ஆக, அனைத்து வழிமுறைகளும் நன்மை தருபவையே.

ஆனால், ஆன்மாவைப்பற்றி முழுமையாக உணர்ந்து, முக்தி நிலை உண்டாக வேண்டுமானால், அதற்கு **ஞானம்** ஒன்றே நேரடியான சாதனம் ஆகும்.

சமையல் செய்வதற்கு பாத்திரம், அடுப்பு, பல வகைச் சாமான்கள், தண்ணீர் என்று எல்லாம் வேண்டும் என்பது போன்று, மேலே சொன்ன வழிகள் எல்லாமே சித்த சுத்திக்குப் பயன் தரும் என்கிறார் பகவான் ஸ்ரீசங்கரர்.

இங்கு, முக்கியமாக என்ன இல்லை? என்றால், அடுப்பை உபயோகிக்க வேண்டும் என்றால் நெருப்பு வேண்டுமல்லவா, அது இல்லாதுபோனால் மற்றவைகள் இருந்தும் என்ன பயன்?

அதேப்போல, மன அமைதி, உலகில் பற்றில்லாமை, நுண்ணிய அறிவு என்ற மற்றதெல்லாம் இருந்தும் அமைதி கொள்பவன் யார்? பற்றில்லாதிருப்பவன் யார்? அறிவுடன் இருப்பவன் யார்? என்ற அந்தத் தேடல் இல்லாதுபோனால் மற்றவை இருந்தும் பயன் இல்லை! என்கிறார்.

ஆகவே, **அந்தத் தேடலின் மூலம் நமக்கு சித்திக்கும் ஞானம் ஒன்று இல்லாது போனால்,** மற்றவைகளினால் பயனில்லை என்று ஆகிறது.

சாத்திரங்களில் பலவிதமான கர்மங்கள் சொல்லப் பட்டுள்ளன. முறைப்படி செய்தால் ஒவ்வொன்றுக்கும் அற்புதமான பலன்கள் கிடைக்கும் என்பதும் உண்மை.

அஷ்டமா சித்திகளும் இந்த வகையைச் சேர்ந்த வைகள்தான்.

அதாவது, செய்யப்படும் கர்மத்திற்கு அதன் விளைவு என்று ஒன்றிருக்கிறது, அவைகளை அனுபவிப்பவன் என்றும் ஒருவன் இருக்கிறான்.

கர்மங்களைத் தொடர்ந்து செய்துக்கொண்டு அதற்கான பலன்களையும் தொடர்ந்து அனுபவிப்பவன் என்ற நிலைதான் அவனுக்கு மிஞ்சுமே தவிர, அதனால் அவனுடைய முக்திக்கு வேண்டிய அறிவு கிடைக்காது.

கர்மங்கள் செய்து கொண்டிருப்பதால் அவைகளைச் செய்பவனுக்கு, தான் செய்கிறோம் என்ற கர்வம் தலைக் கேறவும் வாய்ப்பு இருக்கிறது. அது தூலமாகவும் இருக்கலாம், நுண்ணியதாகவும் மாறலாம்.

தூலமாக இருக்கும்போது, அவனது அகந்தை வெளிப் படையாக மற்றவர்களை விரட்டுவது, உதாசீனமாகப் பார்ப்பது என்று இவ்வாறாகத் தெரியும்.

நுண்ணியதாக மாறும்போது, இவ்வளவு செய்திருக்கி றேனே அதற்கு இதுதானா பலன்? என்று புலம்புவதாகவோ? இவ்வளவு என்னிடம் வாங்கிக் கொண்டார்களே அதற்கு அவர்கள் செய்யும் கைம்மாறு இதுதானா? என்று அரற்று வதாகவோ ஆகிவிடும்.

அதனால் கர்மம் செய்பவன் எந்த மனநிலையில் செய்ய வேண்டும் என்ற விதி இருக்கிறது. அதன்படி செய்பவனுக்கே ஞானம் பிறக்க வாய்ப்பு இருக்கிறது.

अविरोधितया कर्म नाविद्यां विनिवर्तयेत् ।
विद्याऽविद्यां निहन्त्येव तेजस्तिमिरसङ्घवत् ॥ ३॥

**அவிரோதி$^4$தயா கர்ம நாவித்$^4$யாம்’ வினிவர்தயேத் |**
**வித்$^4$யாவித்$^4$யாம்’ நிஹந்த்யேவ தேஜஸ்திமிரஸங்க$^4$வத ||**

**அறியாமைக்குப் பகை அன்று அதனால் கன்மம்**
**அறியாமை தன்னை அகற்றாது – அறிவே**
**அழிக்கும் அறியாமை ஒளி அந்தகாரக் கும்பு**
**ஒழிக்குமாறு என்றே உணர் – ஸ்ரீ ரமணர்**

(அஞ்ஞானம் போக வேண்டுமென்று செய்யப்படும் கர்மங்கள் (செயல்கள்) எல்லாம் அஞ்ஞானத்திற்கு எதிராகச் செயல்படாததால், அவைகள் அஞ்ஞானத்தை நீக்குவதில்லை.

ஞானம் ஒன்றே அஞ்ஞானத்திற்கு எதிராகச் செயல்படக் கூடியதால், அது ஒன்றே “**ஞானம் எனக்கு இல்லை**!” என்ற அறியாமையைப் போக்கும். காரிருளை நீக்குவதற்கு எப்படி ஒளி தேவைப்படுகிறதோ? அப்படியே அஞ்ஞானத்தை நீக்குவதற்கு **ஞானம்** தேவைப்படுகிறது.)

கும்மிருட்டைப் போக்குவதற்கு ஒளி தேவைப்படுவது போல தனக்கு ஞானம் இல்லை என்ற அறியாமையைப் போக்குவதற்கு உண்டாகவேண்டியதே **ஆன்ம அறிவு**, அதைக்

கர்மத்தால் செய்யமுடியாது என்று இதைச் சுருக்கமாகச் சொல்லாம்.

கர்மங்களைப்பற்றி விலாவாரியாககூறும் சாஸ்திரங்களில் எல்லாம் ஞானம் பெறுவதற்கு என்று ஒரு கர்மமும் ஏன்? கூறப்படவில்லை என்றால், அதன்காரணமே அப்படிச் செய்ய முடியாத செயல் என்பதால்தான் அவ்வாறு கர்ம காண்டத்தில் ஞானத்தைப் பற்று ஒரு கர்மமும் கூறப்படவில்லை.

எந்தக்கர்மமும் ஒருவனுடைய மனத்தில் உண்டாகும் எண்ணத்தின் வெளிப்பாடாக, புறத்தில் ஈடுபாட்டால்தான் முடியும். ஆனால், ஆத்ம ஞானத்தின் முதல்படியே மனத்தைப் பற்றி விசாரிப்பதும், அகத்தில் உதிக்கும் எண்ணங்களை ஆராய்வதும் ஆகும்.

அதனால், கர்மம் செய்வதின் மூலம் அறிவது என்பது மனதைக்கொண்டே மனத்தைப்பற்றி விசாரிப்பது என்பதால், அது ஒரு திருடன் திருடனைப் பிடிப்பது போன்றது.

அது முடியுமா?

அது நாடகத்தில் வேண்டுமானால் நடக்கும். ஆனால், நடைமுறை வாழ்க்கையில் ஒருபோதும் நடப்பதில்லை

கர்மம் என்பது ஒரு செயலில் ஒரு குறிக்கோளோடு ஈடுபடுவது. அது வேலை செய்யாது சோம்பேறித்தனமாக இருக்கும் தமஸ் நிலைக்கு எதிரானது. ஆகவே கர்மம் தமஸ் நிலைக்கு எதிரி. எனவே, கர்மம் தொடங்கியதும் தமஸ் நிலை முடிவடைகிறது என்று கூறலாம். ஆனால் கர்மம் செய்வதால் **ஞானம்** வரும் என்று எப்படிக்கூற முடியும்?

அவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானது. மேலும், எல்லாவித கர்மங்களுக்கும் ஒரு தொடக்கமும் ஒரு முடிவும் உண்டு.

ஒரு தொடக்கமும் முடிவும் இருக்கிற வாழ்க்கையின் பயன் என்ன? என்று கேள்வி கேட்டு, அதன் தொடர்பாக தனது வெவ்வேறு நிலைகளையும் அலசிப்பார்த்துவிட்டு, அவைகள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக "**நான் இருக்கிறேன்**" என்ற ஒரு தொடர் உணர்வு உண்டாவதென்ன என்ற தேடலில் இருக்கும் முமுக்ஷுவிற்கு ஒரு தொடக்கமும், முடிவும் உள்ள கர்மம் எப்படி ஒரு தொடக்கமோ, முடிவோ இல்லாத ஞானத்தைப் பற்றி அறிய உதவும்?

நெருப்பை அணைப்பதற்கு தண்ணீரை உபயோகப் படுத்த வேண்டும். ஏனென்றால், அவைகள் ஒன்றுக்கொன்று எதிரி. அங்கு தண்ணீருக்குப் பதிலாக மண்ணெண்ணையோ, பெட்ரோலோ உபயோகப்படுத்தினால் என்னவாகும்? என்று கூறவும் வேண்டுமா?

அதேப்போன்று, அறியாமையைப் போக்க கர்மம் என்றால், நாம் முன்னே பார்த்தவாறு, செய்யும் செயலில் அகந்தை வேறு விதமாக வளர்ந்து, இருக்கும் பிரச்சினைகளை மேலும் வளர்க்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இருளும் வெளிச்சமும் ஒன்றுக்கொன்று முரணானவை. அதனால், இருட்டைப் போக்குவதற்கு ஒளி வந்தால் போதும். இருட்டைப் போக்க இருட்டால் முடியாது.



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்வதுப்போல, “உன்னுடைய இதயம் என்னும் குகையில் அஞ்ஞானம் என்னும் அந்தகாரம் சூழ்ந்துள்ளது. ஞானம் என்னும் வெளிச்சத்தை ஏற்றிவை.

அஞ்ஞானம் தானே அகன்று விடும்" என்றபடி கூறுவதுதான் சரியான வழி.

இருளுக்கு என்று ஒரு தனி இருப்பு கிடையாது. எங்காவது இருட்டைக் கொண்டுவர வேண்டுமென்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த இடத்திற்கு வரும் ஒளியை மறைக்கும் செயலைச் செய்வது ஒன்றே அந்த வழி.

ஆக, ஒளி தானே தானாக இருக்க முடியும். ஆனால், இருள் அப்படியல்ல. அதனால் ஓரிடத்தில் ஒளி வரவேண்டும் என்றால் அந்த இடத்தில் இருக்கும் மறைப்புகளையும், திரைகளையும் விலக்க வேண்டும் என்பதுதான் ஒருவன் செய்ய வேண்டியது.

அப்படி ஒளி வந்ததும் இருள் எங்கே போயிற்று?

எங்கேயும் போகவில்லை. இருள் என்று ஒன்று இருந்தால்தானே அது எங்கேயாவது போவதற்கு! அதனால் இருள் என்பதை மாயை என்பார்கள்.

இருட்டையே பார்த்துக்கொண்டு இருப்பவன் இருள் உண்மையாகவே இருக்கிறது என்றுதான் சொல்வான். கொஞ்சம் யோசித்தால்தானே அதன் உண்மை புலப்படும்.

உண்மையில் நடந்தது என்னவென்றால், ஒளி இல்லாத இடத்திற்கு ஒளி வந்தது என்று சொல்வதுதானே பொருத்தம்?

அதுப்போலத்தான் **அறிவு - அறியாமை** என்ற இரட்டையின் குணமும்.

ஆன்மாவைப் பற்றிய ஞானம் என்பது மட்டுமல்ல. எந்த வகையான உலகியல் அறிவைப் பொருத்தும் அறியாமை என்பதற்கு ஒரு தனியான இருப்பு கிடையாது.

அறிவு இல்லாமல் இருப்பதுதான் "**அறியாமை**" எனும் நிலை. அறியாமையை அகற்றுவதுதான் அறிவைப் புகட்டுவது என்றாகிறது.

ஆனாலும், மற்ற உலகியல் அறிவுக்கும் ஆன்மாவைப் பற்றிய அறிவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் என்னவென்றால், முன்னது தன்னை விட்டு மற்றவைகளைப் பற்றி அறிவது, பின்னதோ அறிவுறும் தன்னைப் பற்றியே அறிவது.

எப்படி ஒருவன் தானே திருடனாகவும் தானே போலீசாகவும் இருக்கமுடியும் என்பதுதானே உங்கள் சந்தேகம்?

மேலும் படித்துப் புரிந்துகொள்ளலாம்.

परिच्छिन्न इवाज्ञानात्तन्नाशे सति केवलः ।
स्वयं प्रकाशते ह्यात्मा मेघापायेंऽशुमानिव ॥ ४॥

**பரிச்சி$^{2}$ன்ன இவாஜ்ஞானாத்தன்னாஸே$^{2}$ ஸதி கேவல: |**
**ஸ்வயம் ப்ரகாஸ$^{2}$தே ஹ்யாத்மா மேகா$^{4}$பாயேம்’ऽஸு$^{2}$மானிவ ||**

**அறியாமையால் மறைவானது போல் ஆன்மா**
**அறவே அஃது ஏகமதாகி – நிறைவாய்**
**இலகுமே தானாய் இரியவே மேகம்**
**இலகும் ஆதித்தன் எனவே – ஸ்ரீ ரமணர்**

(எங்குமிருக்கும் ஆன்மாவைப்பற்றிய அறியாமையால் ஏதோ ஒரு எல்லைக்குள் அடக்கப்பட்டது போன்று, அது மறைந்து கிடக்கின்றது. அந்த அறியாமை அழிந்ததும், மேகத்தால் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சூரியன் மேகம் கலைந்ததும் எப்படி பளிச்சென்று தெரியுமோ? அப்படியே, இருக்கின்ற ஒன்றேயான ஆன்மா பரிபூரணமாகப் பிரகாசிக்கும்.)

ஏதோ ஒன்று புதியதாக அடையப்பட வேண்டியது எனில், அது முன்னதாக இல்லாது இருந்தது என்றாகிறது. அதிலே, நம் உடல் அப்படிப்பட்டதுதான். முன்பு இல்லாது இருந்தது, பின்பு, இல்லாது போகப் போகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் வந்து போகின்றது.

ஆனால், ஆன்மா அப்படிப்பட்டதாக எப்படி இருக்க முடியும்?

நாம் இருக்கும் ஒன்றைத்தானே தேடுகிறோம். ஏனென்றால், நாம் முன்பு பார்த்த நமது வெவ்வேறு நிலைகளெல்லாம் வந்து, வந்து போய்க் கொண்டிருந்தனவாக உணர்ந்தோம். அதனால், அவைகள் அனைத்துக்கும் ஆதாரமாய் இருக்கும் ஒன்றைத் தேடுகிறோம் என்றுதானே அர்த்தம். அந்த ஆதாரமே இல்லையென்றால், நாம் இருப்பது எவ்வாறு?!

நமது ஆழ்ந்த உறக்க நிலையில் நாம் இருப்பதை உணராதபோதும், நாம் இருந்திருக்கிறோம். அது மட்டுமல்ல! அதை அனுபவித்தும் இருக்கிறோம். இல்லையென்றால், நாம் உறக்கத்திலிருந்து விழித்தபின்பு சுகமாக உறங்கினோம் என்று கூறமுடியாது. எப்போதும், எந்த நிலையிலும் நாம் இருக்கிறோம் என்பதனால், என்றும் மாறாத ஒருநிலை இருந்தாக வேண்டும்.

அதனால், இல்லாத ஒன்றை நாம் புதிதாகத் தேட வில்லை. இருக்கின்ற அதை எப்படி உணர்வது? என்று தெரியாததால்தான் தேடுகிறோம்.

இதைத்தான் நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. அதாவது, அதைப்பற்றி நமக்குத் தெரியாமல் இருப்பதைத்தான் “**அறியாமை**” என்கிறோம்.

அதாவது, இருக்கின்ற அனைத்துக்கும் ஆதாரமானதும், அதேசமயம், சாஸ்வதமானதும் ஆகிய ஒன்று நிச்சயம் இருந்தாக வேண்டும் என்பது நம் அனுமானம்.

ஏனென்றால், **அது இல்லையென்றால்! நாமும் இல்லை!** என்றாகிவிடும். நமது மற்ற நிலைகளை எல்லாம் கடந்தும், அவைகளை எல்லாம் உள்ளடக்கியும் இருக்கும் ஒன்று, ஏதோ காரணங்களால், நம் புத்திக்குத் தெரியாதபடி மறைந்து இருக்கிறது என்று மட்டும் நமக்குத் தோன்றுகிறது.

அது என்ன? ஏன்? எப்படி? என்று கேட்பது இருக்கட்டும்.

எல்லாவற்றையும் உள்ளடக்கியதால் பரந்து, விரிந்து இருக்க வேண்டிய அது, மறைந்து இருப்பதால் ஒரு எல்லைக்கு உட்பட்டு, குறுக்கப்பட்டு இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. அவ்வாறு, அதை மறைக்கும் தடைகளை நீக்கி விட்டால், இருப்பது தானாகத் தெரியும் என்பதுதானே சரி?

எவ்வாறு, சூரியனை மறைத்துக் கொண்டிருக்கும் மேகங்கள் விலகியவுடன், அந்த சூரியன் பளீரென்று

பிரகாசமாகத் தெரிகிறதோ? அதேப்போன்று, அறியாமையால் மறைந்து இருப்பதுப்போன்று, தோன்றும் அந்த ஆன்மாவை மறைத்திருக்கும் திரைகளை விலக்கி விட்டால், அந்த ஆன்மாவும் தானாகவே, பளீரென்று பிரகாசமாக ஒளிரும்.

காணப்படும் எல்லா நிலைகளுக்குமே ஆன்மாதான் காரணம் என்பதினால், அது சூரியன் போன்று பிரகாசமாக எல்லாவற்றையும் பளீரென்று ஒளிர வைக்கவேண்டும்.

எவ்வாறு? சூரியன் உதித்ததுமே, தானாகவே மலர்கள் மலர ஆரம்பித்து விடுகின்றன. அவ்வாறே, சகல உயிரினங்களும் அவையவைகளின் வேலைகளில் தானாகவே ஈடுபடுகின்றன. அதுப்போன்று, ஆன்மாவின் சந்நிதானத்தில் தான் அனைத்து வேலைகளும் நடக்கின்றன.

ஆனாலும், இவைகளெல்லாம் உலகில் நடக்கவேண்டும் என்பதற்காக சூரியன் உதிப்பதில்லை. அதேப்போன்று, நடக்கும் வேலைகளுக்கும், ஆன்மாவுக்கும் எந்த சம்பந்தமும் இருப்பதில்லை.

இப்போது நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில், மறைக்கும் திரைகள் என்னென்ன? என்பதும், முமுக்ஷு எடுக்கும் பயிற்சிகள் எல்லாம் அந்தத் திரைகளை அகற்றுவதற்கே என்பதும்தான்.

अज्ञानकलुषं जीवं ज्ञानाभ्यासाद्विनिर्मलम् ।
कृत्वा ज्ञानं स्वयं नश्येज्जलं कतकरेणुवत् ॥ ५॥

அஞ்ஞான கலுஷம்' ஜீவம்' ஜ்ஞானாப்[4]யாஸாத்[3]வினிர்மலம் |
க்ரு'த்வா ஜ்ஞானம்' ஸ்வயம் நஸ்[2]யேஜ்ஜலம்' கதகரேணுவத் ||

அறியாமையாம் கலக்கம் ஆரும் உயிர் தூய்தாம்
அறிவுப் பயிற்சியினால் அவ்வறிவும்
அகற்றி அறியாமை அழியுமே நீர்மாசு
அகற்றும் தேற்றாம் பொடி ஒப்பாய் – **ஸ்ரீ ரமணர்**

(கலங்கிய மாசு படிந்த நீரில் தேற்றாங் கொட்டையின் பொடியைப் போட்டால், அது எவ்வாறு நீரைத் தெளிவாக்கி, அந்த நீரின் அடியில் தானும் வண்டலுடன், வண்டலாகத் தங்கி மறைகிறதோ, அதுப்போன்று, அறியாமையில் கலங்கியிருக்கும் சீவனுக்கு, ஞானத்தை அடைய அவன் செய்யும் பயிற்சிகள் மூலம், அறியாமையைப்போக்கி ஞானத்தைக் கொடுத்து, பின்பு அந்த ஞானமும் தானே அழியும்.)

முதலில் சாதகனுக்குத் தன் உடலின் மேல் ஒரு அபிமானம் இருக்கும். அந்நிலையில் அவனுக்கு ஆன்மா என்ற ஒன்று இருக்கிறது என்பதை அறிவு பூர்வமாக மட்டுமே தெரிந்து வைத்திருப்பான். அதனால் அவன் தன் உடலுக்கு வரும் நன்மை, தீமைகள் எல்லாம் ஆன்மாவுக்கும் வருகிறது என்று தவறாக நினைக்கிறான்.

ஆன்மா எதுவும் செய்வதும் இல்லை! செயலால் வரும் விளைவுகளை அனுபவிப்பதும் இல்லை! என்று அவனுக்குத் தெரியாததால், உடலையும் ஆன்மாவையும் பிணைத்து ஒன்றாகக் கருதுகின்றான். அதுதான் இங்கு கலங்கிய நீர் என்று கூறப்படுகிறது. இது அறியாமையால் வந்த விளைவு.

அறியாமையால் விளைந்தது என்றாலும், அறியாமை போகும்வரை அதைப்போக்க முயற்சிகளும், பயிற்சிகளும் தேவைப்படுகின்றது. ஆனால், அந்த முயற்சிகள் சிரவண, மனன, நிதித்யாசன முறைகளில் செய்யப்படும் போது மட்டுமே, அவனது மனம் ஆன்ம ஞான விசயங்களை கேட்டல், சிந்தித்தல், தியானித்தல் மூலம் தன் மூலத்திற்கு திரும்ப முடியும்.

அதிலே, அவன் தக்க சத்குருவிடம் ஆன்மாவைப் பற்றி விவரமாகக்கேட்டு சிரணம் என்ற முதல் படியில் **கேட்டல்** என்பது தினசரி பயிற்சியாக அவனிடம் உண்டாகி, மற்ற **சிந்தித்தல், தியானித்தல்** என்ற இரண்டு படிகளையும், அவன் தன் முயற்சியால் விடாப்பிடியாகத் தாண்ட வேண்டும்.

எப்போதும் குருவின் அருள் சாதகனுக்கு உண்டு என்பதால், அவனுடைய தனிப்பட்ட முயற்சிகளின் போதும் அவரது அருள் இருக்கும். முன்னது தூல வடிவில் இருந்தால், பின்னவை இரண்டும் நுண்ணிய வடிவில் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

பகவான் ஸ்ரீரமணர் கூறுகிறபடி புலியின் வாயில் அகப்பட்ட இரை எப்படி தப்ப முடியாதோ? அப்படியே, குருவின் அருட் பார்வையில் வந்த சீடனும் முக்தி நிலையை அடையாது மீள முடியாது.

வேதங்களே நமக்குப் பிரமாணங்கள் என்பதால், வேதத்தில் உள்ள மகா வாக்கியங்களே, ஏதோவொரு வடிவில் நமக்கு குருவின் மந்திரமாக உபதேசிக்கப்பட்டிருக்கும்.

இதிலே, இருக்கும் ஆன்மா ஒன்றேயானாலும், ஒவ்வொரு மகாவாக்கியமும் வெவ்வேறு பார்வைகளில் கூறப்பட்டவை. அதனால், நாம் அவைகளையே எடுத்துக் கொள்வோம்.

ரிக் வேதம், ஐதரேய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள லக்ஷண வாக்கியமான "**ப்ரக்ஞானம் ப்ரஹ்ம**" என்பது, "**உணர்வே பிரம்மம்**" என்ற இலக்கண வடிவில் கூறப்பட்டுள்ளது.

யஜுர் வேதம், தைத்திரீய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள அனுபவ வாக்கியமான "**அஹம் ப்ரஹ்மாஸ்மி**" என்பது "**நான் பிரம்மமாய் இருக்கிறேன்**" என்ற அனுபவம் வாயிலாகக் கூறப்பட்டுள்ளது. சாம வேதம், சாந்தோக்கிய உபநிஷத்தில் உபதேச வாக்கியமான "**தத்வமஸி**" என்பது "**நீ அதுவாக இருக்கிறாய்**" என்ற உபதேச வழியில் கூறப்பட்டிருக்கிறது.

அதர்வண வேதம், மாண்டூக்ய உபநிஷத்தில் சாக்ஷாத்கார வாக்கியமான "**அயம் ஆத்மா ப்ரஹ்ம**" என்பது "**இந்த ஆத்மன் பிரம்மம்**" என்ற யுக்திக்குப் பின் வரும் அனுபவ முறையில் கூறப்பட்டிருக்கிறது.

இப்படியாக ஏதோவொரு முறையில் சத்குருவினால் வழங்கப்படும் மந்திர உபதேசத்தைக்கேட்டு, அதன் பொருளையும், விளக்கங்களையும் அவரிடமே அறிந்துக் கொண்டு, பின்பு அதை மனதில் நன்கு அசைப்போட்டு, தேவையானால், மேலும் விளக்கங்களைக் கேட்டுப்பெற வேண்டும்.

அவ்வாறு விளக்கங்கள் கிடைத்த பின்பும் தன் அறிவால் அலசி, ஆராய்ந்து, அவைகளை நன்கு உள்வாங்கிக் கொண்டு, அதை வெறும் புற அறிவால் மட்டும் புரிந்துக் கொள்வதை விடுத்து, அதன் அகத்தன்மையை (உண்மைத் தன்மையை) உணர்வதற்கு அதன் பொருளை மனதால் நன்கு தியானித்து, அந்தப் பொருளாகவே இருக்க முயல்வதுதான் சாதகனின் முயற்சிகள். இதற்கு மேல், "**அவனருளாலே அவன் தாள் வணங்கும் நிலை**" தானே வரும்.

கலங்கிய மாசு படிந்த நீரில் தேற்றாங்கொட்டையின் பொடியைப் போட்டால் அது எப்படி நீரைத் தெளிவாக்கியபின் தானும் நீரின் அடியில் வண்டலுடன் தங்கி மறைகிறதோ, அதுப்போன்று, அறியாமையில் கலங்கி இருக்கும் சீவனுக்கு,

ஞானத்தை நாடி அவன் செய்யும் பயிற்சிகள் மூலம், அவனது அறியாமையைப் போக்கி ஞானத்தைக் கொடுத்து, பின்பு அந்த ஞானமும் தானே அழியும்.

இதிலே, மேலேயுள்ள அர்த்தத்தைக் கொடுக்கும் ஸ்லோகத்தைப் பற்றிப் பேசும்போது, நான்கு வகையான மகா வாக்கியங்களின் அடிப்படையில், ஏதோ ஒரு மந்திரத்தை குரு சொல்லக்கேட்டு சாதகன் தன் முயற்சியை ஆரம்பிக்கிறான்.

அதில் "**தத்வமஸி**" என்று குரு கூற, "**அஹம் ப்ரஹ்மாஸ்மி**" என்று சிஷ்யன் உணர, பிரம்மத்தைப்பற்றிக் கூறப்படும் இந்த நான்கு மகா வாக்கியங்களிலிருந்தே நாம் சாதகர்களின் வகைகளைப் பற்றியும் அறிந்துக் கொள்ளலாம்.

சிலருக்கு வேதவாக்கு என்று சொன்னால்போதும், அதை அவர்கள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு முன்னேறுவார்கள்.

**"ப்ரக்ஞாநாம் ப்ரஹ்ம": 'உணர்வே இறைவன்'**

அவர்களுக்கு, இதுதான் இலக்கணம் என்று சொன்னால் போதும். ஆனால், இன்னும் சிலருக்கு இதுதான் எங்களது அனுபவம்: அது, "**அஹம் ப்ரஹ்மாஸ்மி**" – '**நான் பிரம்மமாய்**

**இருக்கிறேன்**'. ஆகவே, முடிந்தால் நீங்களும் அதைச் செய்துப் பார்த்து அனுபவிக்கலாம் என கூற வேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்டவர்கள் அனுபவத்தில் கூறப்படுவதை மட்டுமே நம்புபவர்கள் என்பதால், அவர்களுக்கு அதுப் போன்று கூறப்படுகிறது.

மற்றொரு சாரருக்கு தன்னுடைய முன்னோர்களும், பெரியோர்களும் அவர்கள் வாயால் ஒன்றைச் சொன்னால் போதும், அதை பின்பற்றலாம் என்ற அளவு அதீத நம்பிக்கை இருக்கும்: அவர்களுக்கு "**தத் த்வமஸி**" - '**நீ அதுவாக இருக்கிறாய்**' என்று உபதேசம் போன்று கூறினால்போதும்.

வேறு சிலருக்கோ எதையும் ஏன்?, எப்படி? என்று ஆராய்ந்து கேட்ட பின்பும், அதைக் கடைப்பிடித்தவர்களின் அனுபவமும் என்ன? என்று தெரிந்துக்கொள்ளக்கூடிய ஆர்வம் இருக்கின்றது.

அவர்கள், தங்கள் அறிவினால் முதலில் தெளிந்து, பின் அதன் செய்முறையின் விளைவுகளையும் தெரிந்துகொள்ள ஆசைப்படுபவர்கள்:

அத்தகையவர்களுக்கு "**அயம் ஆத்மா ப்ரஹ்ம**" – '**இந்த ஆத்மன் பிரம்மம்**' என்று, அவர்களுடைய புத்திக்கு

ஏற்றவாறும் கூறி, அதுவே செய்தும் காட்டப்பட்டு இருக்கிறது என்ற விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

ஆக, இருக்கும் ஒன்றேயான ஆன்மாவைப்பற்றி இவ்வாறாக நால்வகை மனிதர்களுக்கு, நான்கு விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இல்லையென்றால், அதற்குத் தேவைதான் என்ன?

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் ஒன்று இருக்கிறது. மனிதர்களிலே, அவரவர்கள் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களுக்கும், செய்கின்ற செயல்களுக்கும் ஏற்றார்ப்போல, அவர்களது புரிதல்கள் வெவ்வேறாகத் தெரிகின்றன.

அவ்வாறு, வெவ்வேறு விதமான புரிதல்களுக்கு காரணமான மனத்திறன் கொண்டவர்கள் உண்டாக்கிக் கொண்ட திரைகளை நீக்குவதற்குத்தான், விதவிதமான பயிற்சிகளும், முயற்சிகளும் அவரவர் வழிகளில் தேவைப்படுகின்றன.

அதேப்போன்று, மக்களில் பலரும் பல்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டு, அவர்களது பக்குவத்தில் பலவாறான நிலைகளில் இருப்பதால், இந்து சமயத்தில் விதவிதமான கடவுளர்களும் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை தீர்மானமாகச் சொல்லலாம்.

பகவான் ஸ்ரீரமணர் தன்னிடம் வருகின்ற பக்தர்களுக்கு அவர்களது ஒவ்வொருவரின் வழிபடும் முறைகளையும், அனுபவங்களையும், சந்தேகங்களையும் கேட்டு, அவர்களுக்கு ஏற்றவாறு அவர்கள் செல்லும் வழியிலேயே சென்று, அதற்கேற்றவாறு பதிலைக் கூறுவார்.

அத்துடன், குறிப்பாக தன்னை உணர வேண்டும் என்ற ஆவலில் அதற்கான உபதேசம் கேட்பவர்களுக்கு பகவான் ஸ்ரீரமணர் "**நான் யார்?**" என்று ஒவ்வொருவரும் தன்னுள் ஆழ்ந்து, தானே தன்னைக் காண வேண்டிய முறையைப் பற்றி போதிப்பார்.

அதாவது, ஒருவர் செல்லும் பாதையைப்பற்றி அவருக்குக் குழப்பம் எதுவும் வராதவாறு, நமது சொல்லும், செயலும் அமைய வேண்டும். ஆக, எல்லாப் பாதைகளும் கடைசியில் ஆன்மாவைப் பற்றிய அறிவுக்குத்தான் அழைத்துச் செல்லும்.

இதிலே, செய்யும் முயற்சியும், பயிற்சியும், அத்துடன் சாதகனது தீவிரமும்தான் மிக முக்கியமே தவிர, மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம்தான்.

சாதகனுக்கு முதலில் கலக்கம் வரும், பின்பு அவனுக்கு வரும் குழப்பத்திலும் ஒரு முதிர்ச்சி தென்பட்டு தன்னைப் பற்றிய உண்மை நிலையை அறிந்துகொள்ள ஓர் ஆவலும்

வரும். அப்போதுதான் அவனது தீவிரத்தைப் பொருத்து மேலும், அவனுக்கு வேண்டியன எல்லாம் அமையும்.

தீவிரம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இங்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லும் கதை ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

பகவான் நாராயணனை தரிப்பதற்காக நாரத மகரிஷி சென்றுக் கொண்டிருந்த வழியில் கடும் தவம் செய்துக் கொண்டிருக்கும் இரண்டு முனிவர்களைப் பார்க்க நேரிட்டது. அவர்கள் இருவரும் தங்களுக்கு எப்போது முக்தி கிட்டும் என்பதை அறிய ஆவலாய் இருந்ததால், அதனை பகவான் நாராயணனிடம் கேட்டுச் சொல்லுமாறு நாரத முனிவரை வேண்டிக் கொண்டார்கள்.

அதற்கு, நாரதர் முனிவரும் அடியேன் பகவான் நாராயணனைப் பார்த்துவிட்டு திரும்பி வரும்போது, கட்டாயம் சொல்கிறேன் என்று கூறினார்.

சில நாட்கள் கழித்து அதே வழியாக நாரத முனிவர் திரும்பினார். அப்போது, அவர்களில் ஒருவரைப் பார்த்து உங்களுக்கு இன்னும் மூன்று பிறவிகள் பாக்கி இருக்கின்றன என்றார். அதைக்கேட்ட அவர் திகைத்து, “இன்னும் மூன்று இருக்கிறதா?” என்று சொல்லி வருத்தப்பட்டார்.

அடுத்து, நாரத முனிவர் இரண்டாவதாக உள்ளவரிடம் ஒரு மரத்தைக்காட்டி அதில் இருக்கும் இலைகளின் எண்ணிக்கைகள் எவ்வளவு இருக்கின்றதோ, அந்த அளவுக்கு அவருக்குப் பிறவிகள் இருக்கின்றன என்றார்.

இதைக்கேட்ட அவர் “பரவாயில்லையே! அதற்கப்புறம் நிச்சயமாக எனக்கு முக்தி இருக்கிறதே” என்று மிகவும் மகிழ்ந்தார்.

அதைக்கேட்ட நாரத முனிவர் உங்களுக்குத்தான் மனம் நல்ல பக்குவமடைந்த நிலையில் இருக்கிறது. அதனால், முக்தி என்பது பல பிறவிகள் கடந்து அடையப்படுவதல்ல! அது அப்போதே, அக்கணமே மனதின் பக்க்குவத்தால் உண்டாவது. ஆகவே, உங்களுக்கு இப்போதே **முக்தி** என்று அருளினார்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது?

மனதின் தீவிரமும், அது தரும் நம்பிக்கையும், அத்துடன் எல்லாவற்றையும் இறைவனிடம் விட்டுவிடும் மனப்பான்மையும், இறைவன் யார் என்று அறிவதும்தான் மிக மிக முக்கியம் என்பது தெரின்றது அல்லவா?.

எனவே, அனைவரும் ஒன்றைப் புரிந்துக்கொள்ள வேண்டும். அதாவது, சீவனுடைய கலக்கம் எதனால் வந்திருக்கிறது என்றால், தன்னுடைய உண்மை நிலையை அறியாது, **பிறப்பு - இறப்பு, சுகம் - துக்கம்** போன்ற

இரட்டைகளை உடலுடனும், மனதுடனும் சம்பந்தப்படுத்தாது, உணர்வாகிய ஆன்மாவுடன் (தன்னுடனும்) ஐக்கியப்படுத்திக் கொள்வதே ஆகும்.

அதன் காரணமாக, ஒவ்வொருவருக்கும் தனித்தனியான ஆன்மா இருப்பதாக பாவித்துக் கொள்கிறார்கள். அதனை தனியான சீவான்மா என்றும் அழைத்துக் கொள்கிறார்கள்.

அந்த அறியாமையோடு இருப்பவனை நிர்மலம் ஆக்குவதுதான் **ஞானம்** பெறுவதன் முக்கிய குறிக்கோள்.

அதற்குத்தான் ஆன்ம சாதனையாக அந்த சாதகன் "**தத்வமஸி**" மந்திரோபாசனை பெறுவதும், அந்த உபதேசம் ஒன்றிலேயே மனத்தை நிறுத்தி, அதனால், உண்டாகிய மனத் தெளிவினால், ஞானத்தை அடைந்து, '**அஹம் பிரம்மாஸ்மி**' என்று எப்பொழுதும் தியானித்தல் ஒன்றே! அதுவாக மாறுவதற்கான மார்க்கம் எனலாம்.

வேறு எந்த வழியைப் பின்பற்றி வந்தாலும், இறுதியில் அவன் ஆன்மாவைப் பற்றி அறிந்துக்கொள்ள இந்த மனதை பக்குவமாக்கும் விசார வழிக்கு வந்தால் மட்டுமே, அவனது மனதின் **விருத்தி ஞானம்** அழிந்து, அவனது உண்மை நிலையான மனம்கடந்த **சொரூப ஞானம்** பற்றி அறிவிக்கின்றது.

கேள்வி கேட்டு, முயற்சி செய்யும் விருத்தி ஞானம் வேறு, தான் இருக்கும் இருப்பை தானாய் அறியும் சொரூப ஞானம் வேறு. பின்னதுதான் ஆன்ம ஞானம்.

அந்த நிலையில் சதா சர்வ காலமும் இருக்கும் சொரூப ஞானம் அவனுக்கு வந்ததும், அவனது '**விருத்தி ஞானம்**' அழிந்து போகிறது. இதைத்தான் தேற்றாங்கொட்டைப் பொடி எப்படி நீரை சுத்தமாக்கி, அத்துடன் தானும் அழிகிறதோ அதைப்போன்று, '**விருத்தி ஞானம்**' அழிகிறது என்று இந்த ஸ்லோகத்தில் சொல்கிறார்.

தான் யார்? என்பதைத் தான்தான் அறிய வேண்டும். இன்னொருவர் நமக்குச் சொல்வது என்பது, நம் புத்தி வரைதான் செல்லும். ஆனால், தான் என்ற இருப்போ அதையும் கடந்தது, அது புத்திக்கும் ஆதாரமானது.

அதனால், ஒருவன் எல்லாவற்றையும் அறிந்தபின் கேட்டதைத் தன்னில் உணர வேண்டும். ஏன் எனில், இது உணர்வு சம்பந்தமானது. அந்த "**உணர்வே இறைவன்**" என்பதினால், அது மனதைக் கடந்தால் மட்டுமே சாத்தியமாகின்றது. அங்குதான் பயிற்சிகள் தேவைப்படுகின்றன.

அதற்கு நம்மிடம் இருக்கும் ஒரே சாதனம் நமது மனம் மட்டும்தான் என்பதினால், அந்த மனதைப்பற்றி மேலும் அறிவதற்கானப் பாதை என்பது, **ஆன்ம ஞானம்** அடைவது

ஒன்றேயாகும். மனம் என்பதோ ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் ஒட்டுமொத்த தொகுப்பு. மனதின் இயல்பே, குரங்குபோன்று ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவிக்கொண்டே இருப்பது. அதனால், அந்த மனதை ஒரே ஒரு எண்ணத்தில் ஈடுபடுத்தி அதைப் பழக்கப்படுத்த வேண்டும்.

அதற்குத்தான் மந்திரங்களில் ஒன்றான சத்குரு உபதேசமாகிய "**தத்வமஸி**" என்பதை எடுத்துக்கொண்டு, அது ஏன் அவ்வாறு கூறப்பட்டது? என்பதை சதா சிந்தனை செய்து, அதற்கான தியானித்தல் ஒன்றே, தன்(இறைவ)னை உணரும் உன்னத வழி எனலாம்.


அதற்காக, ஏதோ ஒரு மந்திரம் என்பதைவிட, மகா வாக்கியங்களில் ஒன்றாகவோ, அல்லது அவை சம்பந்தப்பட்ட ஒன்றாகவோ, இருப்பது ஆன்மாவைப் பற்றி அறிய விரும்பும் சாதகனான முமுக்ஷுவிற்கு நல்லதுதானே!.

இதுவரைப் பல எண்ணங்களாக எழுந்த மனம் மந்திரத் தியானப் பயிற்சியினால் ஒரு முகமாகக் குவிந்து, எடுத்துக் கொண்ட ஒரே எண்ணத்தில் இலயிக்கிறது. இதைத்தான் **மனோ லயம்** என்பார்கள்.

எண்ணம் பலவோ அல்லது ஒன்றோ? ஆனால், மனம் மனம்தானே. அது எப்படி மனத்தை மனத்தால் அறியமுடியும்?

என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றினால் அது நியாயமான கேள்விதான். அது எவ்வாறு என்று விளக்குவதற்கு வேதாந்திகள் ஒரு உதாரணம் சொல்வார்கள்.

அந்த வகையிலே பகவான் ஸ்ரீரமணரும் '**பிணம் சுடு தடி போல்**' என்ற அந்த உவமையை "**உள்ளது நாற்பது**" என்ற தமது நூலில் சேர்த்திருக்கிறார்.



பல கட்டைகள் அடுக்கப்பட்டு, நெருப்பில் இடப்பட்ட பிணம் ஒன்றை சுட்டு எரிப்பதற்கு என்று அதற்கான கழி (தடி அல்லது கட்டை) ஒன்றை உபயோகப்படுத்துவார்கள். அதை வைத்துக்கொண்டு, அவ்வப்போது சிதையை கிண்டிக் கிளறிக்கொண்டே இருப்பார்கள். அப்படிச் செய்வதன் மூலம் சாம்பல் கீழே இறங்கி, கட்டைகள் நன்கு எரிந்து, உயிரற்ற உடலும் சீராக வேகும்.

கடைசியில் பிணம் நன்கு சுடுவதற்குத் துணையாக இருந்த கழியையும் (கட்டையையும்) அந்த சிதையிலேயே (எரிகின்ற நெருப்பிலேயே) போட்டுவிடுவார்கள். இப்படியாக, மற்ற கட்டைகளோடு பிணத்தை நன்கு எரியவிட்ட கட்டையும் சேர்ந்து, தானும் எரிந்து சாம்பலோடு, சாம்பலாக மாறிவிடும்.

இவ்வாறு, மனதின் மூலத்தை அறிவிக்க உதவிய மனம் தானும் அழிந்து, அந்த அறிவோடு ஒன்றாகக் கலந்து போவதை **மனோ நாசம்** என்பார்கள்.

இருக்கும் ஒன்றைப் பலப்பலவாகக் காட்டிய மனம் நாசமடைவதால், எப்போதும் உள்ள '**ஆன்மா (அறிவு) ஒன்று மட்டுமே**' அங்கு இருப்பதை உணரலாம்.

இதனைத் தாயுமானவர் அவர்களின் பாடலிலும் காணலாம்.

சினம் இறக்க கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்,
மனமிறக்க கல்லாற்கு வாயேன் பராபரமே!

அங்கு மனம் அழிந்து அறிவு (உணர்வு) ஒன்று மட்டுமே உள்ளதால், அந்த உணர்வே நமது "**இருப்பு**" என்றாகிறது. அது, எப்போதும், இப்போதும் இருப்பதை நாம் உணராததுதான் "**அறியாமை**" என்று இங்கு கூறப்படுகிறது.

संसारः स्वप्नतुल्यो हि रागद्वेषादिसङ्कुलः ।
स्वकाले सत्यवद्भाति प्रबोधे सत्यसद्भवेत् ॥ ६॥

ஸம்'ஸார: ஸ்வப்னதுல்யோ ஹி ராக$^{3}$த்$^{3}$வேஷாதி$^{3}$ ஸங்குல: |
ஸ்வகாலே ஸத்யவத்$^{3}$பா$^{4}$தி ப்ரபோ$^{3}$தே$^{4}$ ஸத்யஸத்$^{3}$ப$^{4}$வேத ||

விருப்பு வெறுப்பு ஆதி விகார சம்சாரத்து
இருப்பும் கனாவுக்கு இணை அஃது – உருப்படும்
போது மெய் போலப் பொலியுமே போதம் உதி
போது அதுவும் பொய்யாகிப் போம். – ஸ்ரீ ரமணர்

(நம்மிடம் வெளிப்படுகின்ற விருப்பு, வெறுப்பு முதலான குணங்களால் மாறுபட்டுக் காண்கின்ற இந்த சம்சாரத்தில் நாம் காணுவதெல்லாம் நம் கனவுக்கு நிகரானது.

கனவு காணும்போது, அவைகள் எல்லாமே உண்மைப் போன்று தோன்றினாலும், அவைகள் எல்லாமே பொய் என்பதை நாம் பின்பு உணர்வதுப்போன்று, அறியாமை அகன்று ஆன்மாவைப் பற்றி நாம் அறிந்ததும், சம்சாரத்தில் காணுவதையும் பொய் என்று உணர்வோம்.)

உலகம் எப்போதும் அதனுடைய தன்மையில் தானாக இயற்கையாக இருக்கிறது. அதைப்பார்க்கும் நாம்தான் நமது கண்ணோட்டத்தினால், அதை வெவ்வேறு மாதிரியாகப்

பார்க்கிறோம். நமது விருப்பங்களுக்கும், வெறுப்புகளுக்கும் தகுந்தாற்போல் அதை மாறுபட்டதாகக் காண்கிறோம்.

அதனாலேயே, ஒவ்வொருவருக்கும் உலகம் வெவ் வேறாகத் தெரிகிறது. உலகில் இருப்பதை அது இருக்கிறபடியே பார்ப்பவனுக்கு எந்த வித விகாரமும் தெரியாது. அப்போது அவன் மிகவும் அமைதியோடு இருப்பான்.

உலகில் பல பொருட்கள் இருக்கின்றன. பல விதமான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஒவ்வொன்றையும் பற்றி நாம் நினைப்பதுதான் நமது எண்ணங்கள். நமக்கு அவைகள் பிடித்திருந்தால் அவைகள் நல்லதாகவும், பிடிக்காதிருந்தால் அவைகள் கெட்டதாகவும் நாம் நினைப்பதும் நமது எண்ணங்களே.

உலகத்தில் இருப்பதை நம் விருப்பும், வெறுப்பும் எப்படி மாற்றுகின்றன? என்று இப்போது புரிகிறதா?

நாம் இன்னும் என்னவென்ன செய்கிறோம்? என்று பாருங்கள்.

நமக்குப்பிடித்த பொருள் என்றால், அவைகளை அடையவும், பின்பு அனுபவிக்கவும் ஆசைப்படுகிறோம். அதைப்பற்றியே அடிக்கடி எண்ணுகிறோம். உலகில் நம் ஈடுபாடு இப்படித்தான் ஆரம்பிக்கின்றன.

அடைவது என்பதால், முதலில் அதன்மேல் ஆசையும், அடைந்தபின்பு, அதன்மேல் நமக்கு ஆளுமையும் தோன்றுகிறது. இங்குதான், அஹங்காரம் வேர் விட்டு வளர்கிறது.

ஆக, நம் ஈடுபாடு அந்த பொருளின்மீது அதிக ஆர்வத்தை நமக்கு உண்டாக்கினாலும், ஒரு கட்டத்தில் அந்தப் பொருளால் நமக்கு வெறுப்பு உண்டானால், உலகம் நம்மை படாதபாடு படுத்துவதாக நாம் கூறுவோம்.

அதாவது, உண்மை நிலையை நாம் புரிந்து கொள்ள வில்லை என்பதோடு, நம் அஹங்காரமும் மிக நுண்ணியதாக மாறி விட்டது என்றாகிறது.

நமது பார்வையையும், எண்ணங்களையும் சரிசெய்ய வேண்டியது நமது முதல் கடமை என்று நமக்கு இதிலிருந்து தெரிகிறது.

எல்லோருமே நடப்பதைத் தங்கள் தங்கள் விருப்பு, வெறுப்புகளை வைத்துக்கொண்டு பார்க்கின்றனர். உலகத்தைத் திருத்துவதைவிடத் தன்னைத் திருத்திக்கொள்வதே மேலானது.

அது மட்டுமே, அவனுக்கு அமைதியைக் கொடுக்கும்.

உலகம் அப்படித்தான் இருக்கும் என்ற தெளிவு ஒருவனுக்கு மிகவும் அவசியம். ஆக, சமூக வேலைகளில் மூழ்கியுள்ளவனுக்கும் இந்த வார்த்தைகள் நிச்சயமாகப் பொருந்தும்.

தினப்படி பலரிடம் தொடர்பு கொள்ள வேண்டியவனுக்கு அது எப்படி முடியும்? என்றால், ஒருவன் அந்த மாதிரி வேலையையோ, சேவையையோ தேர்ந்தெடுத்துச் செய்கிறான் என்றால், மற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்துச் செய்வதை அவன் இயல்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் அர்த்தம்.

வேறு மாதிரி அவைகள் இருந்திருக்கவேண்டும்!? என்று அவன் எதிர்பார்ப்பதுதான் தவறு. அதுவே, அதை இயல்பு, (அது அப்படித்தான்) என எடுத்துக் கொண்டால், அவன் உண்மையில் அமைதியாக இருக்க முடியும்.

அதற்காக, இயற்கை எப்படி இருக்கிறதோ? அதை அப்படியே விட்டுவிட வேண்டும் என்று கூறுவதாக அர்த்தம் செய்துக் கொள்ளக்கூடாது.

இயற்கையில் ஒன்று எப்படி இருக்கிறதோ? அது நம் எண்ணத்தில் வெளிப்படும்போது, அவ்வாறு இல்லாமல் வேறு விளைவுகளைத் தோற்றுவித்தால், அதற்குக்காரணம் நமது எண்ணங்கள்தான் நம்மை அப்படிச் செய்ய வைக்கின்றன.

அதற்காக, அப்படிச் செய்யாமல் அதை தவிற்கப் பார்ப்பது, உள்ளத்தில் ஒன்றும், வெளியே வேறொன்றுமான நமது சோம்பேறித்தனமான அல்லது கோழைத்தனமான நிலை என்று ஆகிவிடும்.

மாற்றம் செய்ய வேண்டும் என்று விரும்புபவன் அதற்கேற்றவாறு எதையாவது செய்ய முற்படும்போது, அதன் விளைவுகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்ற மனநிலையோடு, வருவதை அப்படியே ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

விளைவு! நாம் விரும்புவது போல்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பதுதான் தவறு.

ஒன்றைச் செய்ததற்கும், அவ்வாறு செய்ததினால் வரும் விளைவுகளுக்கும் அவனே பொறுப்பு ஏற்பவனாய் இருக்கும் போது, அவன் மேலும் செல்ல வேண்டிய வழி இன்னும் நன்கு அவனுக்குத் தெளிவாகத் தெரியவரும்.

மனத்தில் ஒன்றும், வெளியில் ஒன்றுமாக இருக்கின்ற மனிதனுக்கு அவன் வாழ்நாள் முழுவதும் வாழ்க்கை என்பதே பிரச்சனை நிறைந்ததாக ஆகிவிடும்.

ஒன்றை நாம் ஏன் செய்தோம்? என்றால், அதைச் செய்வதற்குரிய எண்ணங்கள் நம்மிடம் இருந்துதான் நமக்கு

வெளிவந்தன என்பதை ஏற்பவனே உண்மையில் பொறுப்பு உள்ளவன் ஆகிறான்.

ஒன்றைச் செய்துவிட்டு, புகழ் வந்தால் நமக்கு, அதுவே பழி வந்தால் பிறருக்கு என்று இருப்பவன் சமுதாயத்தில் பொறுப்பற்றவன் என்பது மட்டுமல்ல, அவனது வாழ்க்கை அவனுக்கு மட்டும் முதலில் சொகுசாக இருப்பதுபோலத் தோன்றினாலும், நாளடைவில் அந்த வாழ்க்கையே அவனுக்கு நரகமாக மாறிவிடும்.

பரிணாம வளர்ச்சியில் மற்ற சீவராசிகளைவிட மனிதன் முன்னேறி, தன் சுற்றுச்சூழலை மேம்படுத்துபவன் என்பது உண்மையானால், அவன் எப்படி விலங்குகள் போலவே இருக்க முடியும்?

பிரம்ம சூத்திரத்தின் உரையில் பகவான் ஸ்ரீஆதிசங்கரர் கூறுவதுப்போன்று, பொதுவாக மனிதர்களும் மற்ற விலங்குகள் போன்றே, விருப்பு - வெறுப்புகளின் அடிப்படையில் இருந்தால், அவர்கள் வாழ்க்கையும் இன்பமும், துன்பமும் கூடிய இருமைகள் நிறைந்த வாழ்க்கையாக அமைகின்றது.

தடி ஒன்றை எடுத்துக்கொண்டு தன்னை நோக்கி ஒருவன் ஓடி வருகிறான் என்றால், அங்கிருந்து ஓடிவிடப் பார்க்கும் ஒரு பசு, அதுவே, அவன் தடிக்குப் பதிலாக புல்லை

எடுத்துக்கொண்டு வருகிறான் என்றால், அவனை நோக்கி இந்த பசு தானாகவே ஓடி வருகிறது?

இப்படித்தான் இன்றைய மனிதர்களும் தான் விரும்புவதை நோக்கி ஓடிக்கொண்டும், வெறுப்பதை விட்டு விலகியும் இருக்கிறார்கள். ஆக, மனிதனும், விலங்களைப் போன்றே மனதளவிலே கீழ் நோக்கித்தான் போக விரும்பு கின்றனர். ஆனால், விலங்குகளின் இந்தக் குணத்திலிருந்து மனிதன் மீள வேண்டாமா? என்று கேட்கிறார்.

அப்படி விலங்குகளின் கீழானத்தன்மையிலிருந்து மீண்டு வருவதற்காகத்தானே மனிதப்பிறவி கிடைத்துள்ளது. மனிதன் அதைக்கொண்டு, உயர்ந்த தன்மைகளை வளர்த்தால்தானே, எல்லாவற்றையும் சமமாகக்காணும் தெய்வீகத் தன்மையை அடைய முடியும்.

வாழ்க்கை என்பதை ஆனந்தமாக அனுபவிக்கத்தானே பிறந்திருக்கோம். அதில் **இன்பம் - துன்பம்** என்ற இருமைகள் இல்லாதிருந்தால், வாழ்க்கை எப்படி? சுவாரசியமாக இருக்கும் என்பதே பலரது கேள்வி.

அவர்களுக்கு ஒரே பதில்தான் இருக்கிறது.

இன்பம் அடைந்தால் மகிழ்வதும், துன்பம் நீங்கினால் மகிழ்வதும் தானே நமது இயல்பு என்றால், எப்போதும் மகிழ்வுடன் இருப்பதே நமது குறிக்கோள் என்றாகிறது.

ஆனால் அந்த மகிழ்ச்சியை உலகில் நமக்கு விரும்பிய பொருட்களை அடைவதற்கும், வெறுக்கும் பொருட்களைத் தவிர்ப்பதற்கும் உண்டான செயல்களின் விளைவாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

உண்மை என்னவெனில், நாம் **விருப்பு - வெறுப்பு** அற்ற நிலையைத்தேடி, இருமைகளைக் கடந்து, அனைத்தையும் சமமாகப் பார்க்கும் பக்குவத்தை அடைந்தால் நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

இது உங்களுக்குச் சரி! என்று தோன்றினால் நீங்களும் இந்த வழியைத் தேர்ந்தெடுக்கலாம். இல்லையென்றால், உங்களுக்கு பிடித்த வழியிலேயே போய்க் கொள்ளுங்கள் என்பதுதான் அவர்களுக்கான பதில்.

நமது **விருப்பு - வெறுப்பு** முதலான குணங்களால் மனம் மாறுபட்டுக் காணுகின்ற, இந்த சம்சாரத்தில் நாம் காண்பதெல்லாம் நம் கனவுக்கு நிகரானது.

கனவு காணும்போது அவைகள் எல்லாமே உண்மை போலத் தோன்றினாலும், அவைகள் எல்லாமே பொய்

என்பதை நாம் அப்போது உணர்வதில்லை, விழிப்பு நிலைக்கு வந்த பின்பு உணர்வதுப்போன்று, அறியாமை என்ற உறக்கம் அகன்று விழிப்பு என்ற ஆன்மாவைப் பற்றி நாம் அறிந்ததும் சம்சாரத்தில் காணுவதைப் பொய் என்பதையும் உணர்வோம்.

விருப்பு - வெறுப்புக்களை நீக்குவது பெரும் பாடாக இருக்குமே! என்று கவலைப்பட வேண்டாம்.

அது ஒரு பெரிய விஷயமே இல்லை.

நாம் தினந்தோறும் ஒன்றை அனுபவித்துக்கொண்டும், ஆனால் அதைப்பற்றி அறியாமலும் இருக்கிறோம்! என்று கூறினால் ஆச்சரியமாக இருக்கிறதா?

ஆம்!, நாம் தினம் தினம் அனுபவிக்கும் நம் ஆனந்த நிலையைச் சற்று விவரமாக அணுகினால் நம் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு இருக்கிறது.

அதாவது, இந்த உலகம் என்று நாம் காண்பது எல்லாமே, நம் உடலில் உள்ள **கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு** மற்றும் **தோல்** என்ற **ஐந்து கர்மேந்திரியங்கள்** மூலமாகவும், அவைகள் வழியாகப் பெறப்படும் தகவல்களின் அடிப்படையிலும், அதன்காரணமாக நாம் வளர்க்கும் எண்ணங்கள் மூலமாகவும், நம் மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட ஓர் உருவகம்தான் இந்த உலகம்.

இந்திரியங்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் தகவல்கள் எப்படி இருந்தாலும், இறுதியில் அவைகளைப் பற்றிய நமது எண்ணங்கள் முன்னதைவிட வலிமை வாய்ந்தனவாக இருக்கின்றன.

தற்போது வரும் தகவல்களுடன், முன்பு அவைகள் தொடர்பாக உள்ள தகவல்களும், மேலும் அவைகள் பற்றிய எண்ணங்களும் சேர்ந்து ஒரு தொகுப்பாக, ஒரு வடிவத்தை வடிவமைத்துக்கொண்டு, நம் மனதில் பதிவதுதான், அந்த எண்ணங்களின் வலிமைக்குக் காரணம்.

அதாவது உள்ளதைவிட நாம் பார்க்கும் பார்வையின் கோணமும் (அஹங்காரம்) இதில் சேர்ந்திருக்கிறது. இவைகள் எல்லாமே நமது **விழிப்பு (ஜாக்ரத் அவஸ்தை)** நிலையில் நடக்கின்றன. அதனால் அதை "**ஜாக்ரதா அஹங்காரம்**" என்று கூறலாம்.

ஆனால், விழிப்புநிலை ஒன்றுமட்டும் நமது நிலை அல்ல. அதுதவிர, கிட்டத்தட்ட அதேப்போன்ற காட்சிகளும், எண்ணங்களும், மனமும் நாம் உறங்கும்போதும் நம் கனவில் கற்பனையான் (ஸ்வப்னம்) வருகின்றன.

அப்போது, நாம் உறங்கிக் கொண்டிருந்தாலும் நம்மைப் போலவே ஒருவரை நாம் கனவில் உருவாக்கி, அவருக்கும்

ஒரு கனவு மனதை உண்டாக்கி, அதன்மூலம் இன்ன பிற அனுபவங்களும் இருப்பதாக நாம் உணர்கிறோம்.

அப்போது நாம் காண்பது நமக்கு மட்டுமே உண்டான ஒரு தனியான கனவு உலகமே. அந்தக் கனவு நீடிக்கும்வரை நாம்தான் கனவு காண்கிறோம் என்ற உணர்வும் நமக்கு இருக்காது. அந்த உணர்வு ஒரு வேளை கனவு கலையும்போது வரலாம்.

நம் கனவின் அனுபவங்கள் பல மாதங்களோ, அல்லது பல வருடங்களோ போன்ற நீண்ட காலம் சம்பந்தப்பட்டதாய் இருந்தாலும், உண்மையில் அவைகள் சில நொடிப் பொழுதே நீடிக்கிறது.

ஆனாலும் அந்தக் குறுகிய கால அளவை, நாம் கனவு காணும்போது உணர்வதில்லை.

மேலும், விழிப்புநிலை அனுபவங்கள் தொடர்பாக சில கனவு அனுபவங்கள் இருக்கலாம். ஆனால், அதற்கும் மேலாக, சிறிதும் சம்பந்தமே இல்லாமல் பல காட்சிகள்கூட அமையும்.

விழிப்புநிலை அனுபவங்களைப் போன்றே, கனவுநிலை அனுபவங்களும், நாம் உருவாக்கிக்கொண்டுள்ள நம் கனவு

உருவத்தைச்சுற்றி அமைவதால் அதை “**ஸ்வப்ன அஹங்காரம்**” என்று கூறலாம்.

நமது மூன்றாவதான **ஆழ்ந்த உறக்கநிலை (சுஷுப்தி)** அனுபவத்தில் நமக்கு ஒன்றுமே தெரிவதில்லை. நமக்கு இந்த உடல் இருக்கிறது என்றோ? அல்லது இந்த உலகம் இருக்கிறது என்றோ? எதுவும் தெரிவதில்லை.

ஆனாலும், ஆழ்ந்த உறக்கத்திற்குப்பின் விழிப்பு நிலையில் நான் நிம்மதியாக நன்கு உறங்கினேன் என்று கூறுகிறோம். அந்த ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு அமைதியான நிலையை அனுபவித்திருப்போம்.

இந்த உடல், இந்த உலகம் போன்றவைகளின் அனுபவங்கள் இல்லாதபோதும் நாம் ஓர் அமைதியை, அதாவது நிம்மதியை அனுபவித்தோம் என்றால், அதை **அனுபவிப்பவன்** என, ஒருவன் இருந்திருக்கிறான் என்றுதானே அர்த்தம்?

இல்லையென்றால், நாம் விழித்தபின் நான் நன்றாக உறங்கினேன் என்று நம்மால் கூற முடியாது அல்லவா?

மேலே கூறிய அந்த இரண்டு அஹங்காரங்களும் உண்டாகாத ஒரு அனுபவம் ஆழ்ந்த உறக்கநிலையில் உண்டாகிறது என்றால், நம் உடலையும், உலகையும் அறியாத ஒன்று இருக்கிறது என்றுதானே அர்த்தம்?

அந்த ஒன்றைப் பற்றிய உணர்வு இல்லாதபோதும் நாம் ஆனந்தமாக உறங்கியிருக்கிறோம். அந்த ஒன்று நமக்கு வெளியிலிருந்து வந்திருக்க முடியாது. மற்ற அனுபவங்கள் போன்றே, இதுவும் நம் உள்ளிருந்து வந்ததுதான்.

ஏனென்றால், அந்த ஆழ்ந்த உறக்க அனுபவத்தை நம்மால் மட்டும்தான் உணர முடிகிறது. நம்மைப் போலவே மற்றவரும் உணரும்போது, அது மற்றவர் மட்டும் உணர்வதுதான்.

ஆகையால், அந்த அமைதியான ஆனந்த நிலையில் நாம் எப்போதும் இருக்க முடிந்தால் நாம் அமைதியாகவும், ஆனந்தமாகவும் எப்போதும் இருப்போம் என்று கூறலாம் அல்லவா?

அங்கு "**நான்**" என்ற நினைப்பாகிய அஹங்காரம் ஏதும் இல்லாது, அனுபவம் ஒன்றே இருப்பதால் அந்த நிலையை "**சுஷுப்தி அனுபவம்**" என்று கூறலாம்.

கண்களுக்குத் தெரிகின்ற தூலமாகவோ, கண்களுக்குத் தெரியாத நுண்ணியதாகவோ இந்த உடல் மற்றும் உலக அனுபவங்கள் இருக்கும்போது, அதற்கேற்ப அஹங்காரங்கள் வருகின்றன.

அத்தகைய அஹங்காரங்கள் இல்லாதபோதும், இந்த உடலும், உலகமும் தெரியாதபோதும், ஓர் ஆனந்தநிலையை நாம் அனுபவிக்கிறோம். நாம் அனுபவிக்கும் கனவுநிலையே உறக்க நிலையில்தான் வருகின்றன. அதாவது, உறக்கம் இல்லையென்றால் கனவும் இல்லை என்றாகிறது.

விழிப்புநிலையிலும், கனவுநிலையிலும் நமக்கு ஏற்படும் அனுபவங்கள் ஒரே மாதிரி இருக்கின்றன. அதாவது, விழிப்பு நிலையில் உள்ள உலக அனுபவங்கள் போன்றே கனவு நிலையிலும் பல அனுபவங்கள் இருக்கின்றன. ஆனாலும், கனவு கலைந்து விழிப்பு நிலை வந்ததும், கனவு அனுபவங்கள் உண்மையல்ல! என்று நம்மால் உணரப்படுகிறது.

“**சொப்பன அஹங்காரத்தில்**” விளைந்த அனுபவங்கள் பொய் என்று கனவு காணும்போது தோன்றாது. அதுப்போன்று, “**ஜாக்ரத அஹங்காரத்தில்**” விளையும் அனுபவங்கள் பொய் என்று விழிப்பு நிலையிலும் தோன்ற வாய்ப்புகள் இல்லை.

நமது “**சுஷுப்தி அனுபவத்தில்**” (ஆழ்ந்த உறக்கத்தில்) விளைந்த அறியாமையுடன் கூடிய ஆனந்த அனுபவம் எப்போது நமக்கு அறிவுடன்கூடி, நமது நாலாவது (“**துரியம்**”) நிலையில் உணரப்படுகிறதோ, அப்போது நமது விழிப்புநிலை அனுபவங்களும் கனவுநிலை அனுபவங்களைப் போன்றே **பொய்** என்று உணரப்படும்.

தூங்காமல் தூங்கி சுகம் அனுபவிக்கும் அந்த ஆனந்த நிலையை (நான்காவது நிலையை) **நனவுத் துயில்** என்றும் கூறலாம். இந்த நான்காவது நிலையாகிய **துரிய நிலை** என்பது, அறியாமையில் இருந்த மனம் தன்னை அந்த அறிவாகவே உணர்ந்துக் கொண்ட அதி உன்னத நிலை என்று கூறலாம்.

மற்ற மூன்று நிலைகளும் வந்து போகும் நிலைகளாக இருக்கும் பொய்யான நிலைகள் என்பதினால், அதைப் போன்றே இந்த நான்காவது நிலையும் பொய்யானது என்று கருதி விடக்கூடாது என்பதினால், இதை மற்ற மூன்றுக்கும் அப்பாலாக **(அதீதமாக)** இருக்கும் "**துரியாதீத**" நிலை என்றும் கூறுவர்.

ஆனால், **இருப்பது ஒன்றே!** ஆதலால், இந்த நான்காவது நிலை ஒன்றே உண்மையாய் உள்ளது. அதனால், துரியமும் துரியாதீதமும் ஒரே நிலைதான் என்று பகவான் ஸ்ரீஇரமணர் கூறுவார்.

இந்த வாதத்தில் நாம் காணவேண்டிய அம்சங்கள் பல உள்ளன.

ஒவ்வொருவருக்குமே இருக்கும் **துரியநிலை** அவரவர் அனுபவம் என்றாலும், அங்கு "**நான்**" என்ற அகங்காரமும் "**எனது**" என்ற மமகாரமும் இல்லை, அத்துடன் இந்த உலகமும் இல்லை, அங்கு **ஆனந்த அனுபவம்** ஒன்றே உள்ளது.

அது அனைவரிடமும் உள்ளதால், எந்த வித பேதமும் எவரிடத்தும் இல்லை.

எப்போது பேதங்கள் காணப்படுகின்றனவோ, அப்போது நாம் அந்த நிலையில் இல்லை! என்பதும், உலகம் தெரிகிறது என்றும், அந்த நிலைக்கு ஏற்ப நமது அஹங்காரம் வெளிப்பட்டு, செயல்கள் அமைய வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

ஆக, உறக்கத்தில் இருந்து விழித்துக் கொள்வதை விழிப்பு என்றாலும், உண்மையான விழிப்பு என்பது அந்த அறிவாக நம்மை நாம் அறியும்போது, அதன்பிறகு உண்டாகின்ற செயல்கள் நம்மை அஹங்கார, மமகாரங்கள் இல்லாத அந்த ஆனந்த நிலைக்கு எடுத்துச் செல்லுமாறும் அமையும். ஏனென்றால், அது ஒன்றே உண்மையான நிலை.

இரண்டாவதாக, முன்பே நாம் பார்த்ததுப் போன்று, பிறந்தது எதுவும் இறக்க வேண்டும். அதனால், முன்பு இல்லாதிருந்து இப்போது புதிதாக வருவதும்கூட ஒருகாலத்தில் இல்லாது போகும்.

இதன்காரணமாக, ஆழ்ந்த உறக்கம், கனவு மற்றும் விழிப்பு நிலைகளில் உண்டாகின்ற அனுபவங்களும், ஆனந்தமும் வந்து போகக்கூடியதாக அமைகின்றன.

ஆனால், ஆனந்தத்தை நாம் அறிவோடு உணரும்போது மட்டுமே, நமது உண்மை நிலையான துரிய நிலையும் நிலையாக இருந்துக்கொண்டு, நித்தமும் நிம்மதியையும் ஆனந்தத்தையும், நமக்கு அளிக்கும்.

ஆனால், இப்போது உள்ள நிலையில் அதை நாம் அறியாம முடியாமல், அவ்வப்போது வந்து போகின்ற ஆனந்தமாக அனுபவித்துக்கொண்டும் இருக்கிறோம்.

ஆனந்தத்தை ஆழ்ந்த உறக்கத்தில் அனுபவிப்பது போன்றே, விழிப்பு நிலையிலும் அதைப் பல சமயங்களில் அனுபவிக்கிறோம்.

உதாரணத்திற்கு, தீவிரமாகவும் ஆசையுடனும் நாம் எடுத்த ஒரு வேலையை முடித்த அந்த நொடியே, அல்லது நாம் ஆசைப்பட்ட பொருள் கிடைத்த அந்த விநாடியே, அந்த இடத்தை அடுத்த ஆசையோ, அல்லது எண்ணமோ நிரப்புவதற்கு முன்பாக நமக்கு ஒரு மகிழ்ச்சியும், அமைதியும் வருகிறதே, அதுவும் நமது துரியநிலை அனுபவம்தான்.

அந்தப் பொழுதை நீட்டிக்க செய்ய முன்றாலும், நாம் நமது தற்போது உள்ள நிலையை இடைவிடாது உணர்வோம்.

மூன்றாவதாக, துரியநிலை எப்போதும் உள்ளதே. ஆனால், அதை அறிய முடியாமல், நமது முந்தைய செயல்களின் விளைவாக உண்டாக்கிக் கொண்ட திரைகள்தான்,

நம்முடைய அறியாமைகளாக மாறி, அந்த நிலையை உணர முடியாமல் செய்கின்றன.

ஏனென்றால், **துரிய நிலைதான் நமது இயல்பான நிலை.**

நாம் அதை அறியாவிட்டாலும் அது எப்போதும் இருந்தாக வேண்டும்.

அப்படிப்பார்த்தால், அதை உணராதவர்களும் அந்த நிலையில்தான் எப்போதுமே இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதை அறியாததால்தான் மற்ற வேறு, வேறு நிலைகளில் இருப்பதாக நினைக்கிறார்கள்.

அதனால்தான், ஒரு சாதகன் செய்யும் முயற்சிகள் எதுவுமே, அவனிடமுள்ள அறியாமை திரைகளை அகற்றவே அன்றி, புதிதான ஒரு நிலையை அடைவதற்கல்ல.

ஏனென்றால், இப்போது இல்லாத ஒன்று புதிதாக வர வேண்டியது என்றால், அதுவும் ஒரு நாள் இல்லாமல் போகவும் செய்யும்.

ஆகவே, அது எப்படி என்றும் உள்ளதாக இருக்க முடியும்? எனவே, நாம் ஒவ்வொருவரும் ஆன்ம சொரூபமே. ஞானிகள் அதை அறிந்திருக்கிறார்கள், மற்றவர்கள் அதை அறியவில்லை என்பதே உண்மை.

இதனாலேயே ஞானிகள் **ஆன்ம சொரூபம்** ஒன்றையே அனைத்திலும் பார்ப்பதால், அவர்களுக்கு எல்லோரும் ஞானிகளாகவே தெரிவார்கள். அதுவே, ஆன்மாவைப் பார்க்காமல் மற்ற இலக்ஷணங்களைப் பார்ப்பவர்களுக்குத்தான் பேதங்கள் எல்லாம் தெரியும்.

ஆக, அந்த அறியாமைகள் மறைவதற்குத்தான் நமது செயல்களும், எண்ணங்களும் தூய்மையானதாகவும், பரிபூரணமானதாகவும் அமைய வேண்டும்.

இவைகள் தவிர ஒருவனுக்கு மயக்கத்தினாலோ, கோமாவினாலோ (coma) கூட தன்னை அறியாத ஒரு அமைதி நிலை வருகிறதே! அதை எப்படிப் புரிந்துகொள்வது? என்றால், கோமாவும், மயக்கமும் நமது இயல்பான நிலைகள் அல்ல.

நரம்பு மண்டலத்தில் உள்ள நரம்புகளின் பிசகினாலோ, வேறு ஏதேனும் தடைகளினாலோ (blockers) இரத்த ஓட்டம் தடைபட்டு இந்த நிலைகள் செயற்கையாக வருகின்றன. தடைகள் நீங்கியதும் அவர்கள் சாதாரண நிலைக்கு வருகிறார்கள். அப்படிப் பார்த்தாலும் அறியாமையைப் பொருத்தவரை இந்த இரு நிலைகளுக்கும் உறக்க நிலைக்கும் வித்தியாசமில்லை.



அறிவுடன் கூடிய ஆழ்ந்த அமைதி என்பது, **முக்தி நிலையில்** மட்டுமே உண்டு என்றால், அதை அடைவதற்கு உணர்வு பரிபூரணமாய் இருக்கும் நிலையில் விசாரம் செய்யாமல் மூலிகைகளின் உதவியினாலும், கஞ்சா போன்ற புகை அடிப்பதினாலும், மருந்துகள் உட்கொள்ளுவதினாலும் ஒருவன் **பரவச நிலை** அடைந்து விடலாம் என்று நினைப்பது, அவனை அவனே ஏமாற்றிக்கொள்ளும் ஏமாற்று வேலையே. இதைத்தான் '**அறியாமை**' என்று கூறப்படுகின்றது.

அதனால், உடலும் கெட்டுவிடும், மனமும் தறிகெட்டு இங்கும், அங்கும் கண்டபடி ஓடும். உடலைக் கருவியாக வைத்துக்கொண்டு, தன் மனத்தின் தன்மையை விசாரிக்க வேண்டியவன் அவைகளை தன் வசம் இல்லாதவாறு செய்துக் கொண்டு என்னதான் சாதிக்க முடியும்?

तावत्सत्यं जगद्भाति शुक्तिकारजतं यथा ।
यावन्न ज्ञायते ब्रह्म सर्वाधिष्ठानमद्वयम् ॥ ७॥

தாவத்சத்யம் ஜகத்பாதி ஷுக்திகாரஜதம் யதா |
யாவத்ன க்ஞாயதே ப்ரஹ்ம சர்வாதிஷ்டானமத்வயம் ||

எவ்வளவு காலம் எவைக்கும் அதிட்டானமாம்
அவ்வியயமாம் பிரமம் ஆய்ந்து அறிதல் – ஒவ்விடாது அத்துணைக்
காலம் அகிலமும் மெய்யாய்த் தோன்றும்
சுத்தி வெள்ளி போலத் துணி – **ஸ்ரீ ரமணர்**

(எல்லாவற்றுக்கும் ஆதாரமாய் உள்ள அழிவற்ற பிரம்மத்தை எத்தனை காலம் ஒருவன் விசாரித்து அறிந்து கொள்ளவில்லையோ, அத்தனை காலத்திற்கும் கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைப்போல, இந்த உலகங்கள் எல்லாமும் உண்மையாகவே உள்ளது போலத் தெரியும் என்பது நிச்சயம்.)

இதற்கு முந்தைய செய்யுளில் நமது விழிப்புநிலை அனுபவங்களும் கனவில் வருவதைப் போலவே பொய்யானது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியானால், நாம் உலகில் விதவிதமாகக் காண்பவைகள் எல்லாம் என்ன?

கனவில் நாம் அப்போது காண்பதோடு சரி. அவைகளெல்லாம் அதற்கப்புறம் வருவதில்லை. ஆனால், நனவில் அவையெல்லாம் வேண்டாம் என்றாலும் நம் கண்கள் முன்னே அவைகள் தெரிவது மட்டும் அல்லாது, நின்று நிதானமாக எப்போதும் இருக்கின்றன.

அத்துடன், அவைகளை எல்லாம் மற்ற புலன்களைக் கொண்டும் அறிகின்றோமே. அதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று எவருக்குமே கேட்கத் தோன்றினால் அதுவும் நியாயம் தானே?

அதனால் பொய்த்தோற்றம் என்று கூறுவதோடு நிற்காமல், மேலும் அப்படிக்காணப்படுவது என்ன? என்பதைப் பற்றி விளக்கமாக இந்தச் செய்யுளில் கூறுகிறார்.

முன்பு சொல்லப்பட்ட உண்மையை ஓர் உவமானத்தால் இங்கு விளக்குகிறார்.

தூரத்தே இருந்து பார்க்கும் ஒருவனுக்கு பளபள என்று வெள்ளிச் சாமான் போல ஒரு பொருள் தெரிகிறது. பக்கத்தில் சென்று அதைப் பார்க்கும்போது அது ஒரு கிளிஞ்சல்தான் வெள்ளியல்ல என்றும், அதன் மேல் சூரிய ஒளி பட்டதால் வெள்ளி போலத் தெரிந்தது என்று அவன் உணர்கிறான்.

அப்படியானால், அவன் பார்த்தது வெள்ளியா? அல்லது கிளிஞ்சலா?

அவன் வெள்ளி என்று சொன்னால் இல்லையே கிளிஞ்சல்தானே இருக்கிறது என்றும், கிளிஞ்சல் என்று சொன்னால் இல்லையே வெள்ளியைத்தானே பார்த்தோம் என்றும் கூறலாம்.

இதற்கு அவனது பதில் எப்படி இருக்கும்?



“இல்லை, தூரத்திலிருந்து பார்த்ததும் முதலில் அதை வெள்ளி என்று நினைத்தேன், ஆனால், அருகே சென்று பார்த்ததில் அது கிளிஞ்சல் என்றும் தெரிந்துகொண்டேன்” என்றுதானே கூறுவான்.

அதாவது, இருப்பது ஒரே பொருளான கிளிஞ்சல்தான் தூரத்திலிருந்து பார்க்கும்போது அது வெள்ளியாகவும், அருகிலிருந்து பார்க்கும்போது அது கிளிஞ்சலாகவும் தெரிந்தது என்றுதானே அதற்கு அர்த்தம்.

ஆக, இருந்த ஒரேபொருள் இரண்டாகக் காணப்பட்டது.

அது பார்ப்பவனின் கண்ணோட்டத்தைப் பொருத்து ஒரு கோணத்தில் வெள்ளியாகவும், மற்றொரு கோணத்தில் கிளிஞ்சலாகவும் தெரிந்தது. ஆனால், உண்மையில் இருந்தது ஒன்றே.

இதில் அந்தக் கிளிஞ்சலின் மேல்பட்ட சூரிய ஒளி வேறு கோணத்திலிருந்து வந்திருந்தால், அது வெள்ளியாகத் தெரியாமலும் போயிருக்கலாம் என்பதும் உண்மை.

வெள்ளியாக அவனுக்குத் தெரிந்துக்கொண்டு இருந்தவரை அது வெள்ளியாகத்தான் இருந்தது. அப்போது கிளிஞ்சல் என்று தெரியவில்லை என்பதும் உண்மை.

உள்ள உண்மையை அவன் தெரிந்துக் கொள்ள, ஒன்று ஒளி வேறு கோணத்திலிருந்து வந்திருக்கவேண்டும், அல்லது அவன் செய்ததுபோல முயற்சி எடுத்து, அதன் அருகில் வந்து அது என்ன? என்று பார்க்க வேண்டும்.

முன்னதை நாம் **விதி** என்றும், பின்னதை **மதி** என்றும் கூறலாம். எடுத்த முயற்சியை மதி என்று சொன்னாலும், பார்க்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியதை விதி என்றுதானே கூறமுடியும்?

இந்த **விதி** - **மதி** விவாதம் இருக்கட்டும். நாம் அங்கு நடந்ததை மேலும் அலசலாம்.

"**அத்வயம்**" என்றால், இரண்டற்ற ஒன்று என்றும், "**சர்வ அதிஷ்டானம்**" என்றால், எல்லாவற்றுக்குமே ஆதாரமாக இருப்பது என்றும், இந்த ஸ்லோகத்தில் வந்துள்ள இரண்டு சொற்களுமே பிரம்மத்தின் தன்மையைக் குறிக்கின்றன.

ஏன் இரண்டு சொற்கள் கூறப்பட்டிருக்கின்றன என்று பார்ப்போம். வீடு கட்டும் முன்பாக, அதற்கு ஆதாரமாக அடிக்கல் நாட்டி, அடித்தளம் போடுவார்கள்.

வீடு கட்டியதும் அடித்தளம் தெரியாது வீடு மட்டுமே தெரிந்தாலும், அவைகள் இரண்டும் இரண்டு பொருட்களாக இருக்கின்றன.

கிளிஞ்சல் என்னும் ஆதாரத்தில் (அதிஷ்டானத்தில்) வெள்ளியானது கற்பனையாக (ஆரோபிதமாக) தெரிந்தாலும், இறுதியில் கிளிஞ்சல் என்றும், அந்த இடத்தில் வெள்ளி இல்லா

விட்டாலும் வெள்ளி என்றும் இரண்டு பொருட்கள் உலகில் இருக்கின்றன.

ஆனால், பிரம்மம் **சர்வ அதிஷ்டானம்** என்று கூறப்படுவதால், அது ஒன்றே இருப்பது. மற்றதாகத் தெரிவது எல்லாமே கற்பனைதான் என்று அறிய வேண்டும்.

இங்கு இரண்டாவது என்று சொல்வதற்கு வேறு என்று எதுவும் கிடையாது.

எப்படி ஒன்றேயான கிளிஞ்சல் தூரத்திலிருந்தும், அருகிலிருந்தும் வெவ்வேறாகத் தெரிந்ததோ? அதேப்போன்று, எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் இருக்கும் ஒன்றேயான பிரம்மமே காண்பவன் பார்வையில் பலவித பொருட்களாகி வெவ்வேறாகத் தெரிகின்றன.

அது ஏன்? அப்படித் தெரிகின்றன என்று கேட்டால், கிளிஞ்சல் எப்படி வெள்ளியாகத் தோன்றியதோ அப்படி என்றுதான் சொல்ல முடியும்.

காண்பவன் தன் பார்வையை சரி செய்தால், உள்ளதை உள்ளபடி காண முடியும் என்பதால் அதைச் செய்யவேண்டும்.

ஒன்று விதி மூலம் அவனது பார்வை சரி செய்யப் படலாம், இல்லையேல் இந்த உண்மைகளை விவரமாக

அறிந்துக் கொண்ட அவன் ஞானத்தைத் தேடி தான் செய்யும் விசாரம் என்ற பயிற்சியின் மூலம் உள்ள உண்மையை உணரலாம். அதைச் செய்யாத வரை பொய் எனக் கூறப்பட்ட இந்த உலகத்தை, அதற்கு ஆதாரமான பிரம்மத்தை உணராததால், உண்மை என்று நம்பிக் கொண்டிருத்தல் ஒன்றே முடியும்.

பிரம்மத்தைப்பற்றிய அறிவு பிறந்தவுடன், அறியாமை நீங்கி, தான் காணும் உலகின் தன்மையை உள்ளபடி உணர முடியும். ஆக, அறியாமையிலிருந்து அறிவுக்கு வருவது என்பது, கனவிலிருந்து நனவுக்கு வருவது போன்றது.

இன்னுமொரு உவமானத்தாலும் இந்த நிலைமையை விளக்க முடியும்.



ஒரு திரையரங்கில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருப் பவர்களுடைய நிலைகளை கவனியுங்கள். படத்தில் வரும் காட்சிகளில் மூழ்கி அங்கு நடப்பவைகளை எல்லாம் பார்த்து, அப்படியே உண்மை போன்று நம்புவான், காட்சிகளுக்கு ஏற்ப வரும் **இன்ப - துன்ப** உணர்ச்சிகளில் உடனடியாகப் பங்கு கொள்வான். அந்த நிலையில் அவனுக்குத் திரையில் நடப்பதெல்லாம் உண்மைக் காட்சிகளே.

படம் முடிந்த பின்புதான் அவன் தன் உண்மை நிலையை உணர முடியும். ஆனால், ஆரம்பத்திலிருந்தே படத்தை ஒரு பொழுது போக்காகப் பார்க்கும் மனநிலையில் உள்ளவன், வெறும் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருப்பானே தவிர, அந்தக் காட்சியில் வரும் நிகழ்ச்சிகளோடு ஒன்றிப்போக மாட்டான். அதாவது, ஒன்றுமற்ற வெள்ளைத்திரை ஒன்று உள்ளது. அதற்கு அசைவுகள் ஏதும் கிடையாது.

ஆனால், அதன்மீது ப்ரொஜெக்டரில் இருந்து வெளிப் படுகின்ற படம் ஓடுகின்றது, அது வெள்ளைத் திரையில் பிம்பிக்கின்றது. அதிலேயே அனைத்து காட்சிகளுமே காணப்படுகின்றது.

அதாவது, சண்டை, சோகம், காதல், கோபம், அன்பு, மகிழ்ச்சி என பலவாறான தோற்ற மாயைகள் அந்த திரையில் பிம்பிக்கின்றது. ஆனால், அவைகளால் அந்த திரை ஒருபொழுதும் பாதிக்கப்படாது.

மேலும், அந்த அனுபவங்கள் எதுவுமே அந்த ஒன்றுமற்ற கலங்கமற்ற திரையினுடைய சொந்த அனுபவங்கள் கிடையாது. அந்த கலங்கமற்ற வெள்ளைத் திரை எதனாலும் பாதிக்கப்படாதது. தூய்மையானது. தன்னில் தானாய் இருப்பு கொண்டுள்ளது. அது இருப்பதினால்தான் அதன் மீது படம் ஓடுகின்றது. இதுவரை கூறப்பட்டது, ஒரு திரையரங்கத்தில் உள்ள ஜடமான வெள்ளைத் திரையைப் பற்றியதாகும். இனி, ஆன்மா என்றொரு வெள்ளைத்திரை உள்ளது. அதற்கு அசைவுகள் ஏதும் கிடையாது.

ஆனால் அதற்கு அறிவு உண்டு. அதன் வயிலாகவே, அதன்மீது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் என்ற பிலிம் ரோல்கள் வாயிலாக, மனம் என்ற ப்ரொஜக்டரில் இருந்து படங்கள் (எண்ணங்கள்) வெளிப்படுகின்றது.

அந்த ஆன்மா என்ற கலங்கமற்ற, தூய்மையான வெள்ளைத்திரையின் மீது அந்த படங்கள் ஓடுகின்றது, அதிலே காட்சிகள் விரிகின்றது. சண்டை, சோகம், காதல், அன்பு, மகிழ்ச்சி என பலவாறான தோற்ற மாயைகள் அந்த வெள்ளைத் திரையில் பிம்பிக்கின்றது. ஆனால், அவைகளால் அந்த வெள்ளைத் திரை ஒருபொழுதும் பாதிக்கப்படாது. மேலும், அந்த அனுபவங்கள் எதுவுமே அந்த ஒன்றுமற்ற கலங்கமற்ற திரையினுடைய சொந்த அனுபவங்கள் கிடையாது.

அந்த கலங்கமற்ற வெள்ளை நிறமுடைய ஆன்மத் திரையோ எதனாலும் பாதிக்கப்படாதது, தூய்மையானது. அது

தன்னில் தானாய் இருப்பு கொண்டது. அது இருப்பதினால்தான் அதன் மீது மனம் என்ற எண்ணங்கள் படமாக ஓடுகின்றது

ஆனால், இந்த ஆன்மத் திரை அறிவுடையது, உணர்வுடையது. ஆதலால், இதற்கு வேறாக எதுவுமே அங்கு திரையிடப்பட முடியாது. அனைத்தையும் அது சாக்ஷியாகப் பார்த்துக் கொண்டே இருக்கின்றது. அனைத்து அனுபவங்களும் அந்த ஆன்ம திரைக்கு உண்டாவதுப் போன்று காணப்படுகின்றது. ஆனால், அதற்கு உண்டாகும் அனுபவங்கள் அனைத்துமே அதன் மீது ஏற்றிவைக்கப்பட்ட ப்ரொஜெக்டரில் இருந்து (மனதில்) வெளிப்படுகின்ற படங்களைச் சார்ந்தது.

ஆனால், அந்த படங்கள் அந்த ஆன்மாவை (திரையை) பாதிக்காது.

அதுப்போன்று, பிரம்மம் இல்லையேல்! எதுவும் இல்லை! என்று உணர்பவனுக்கு, உலகக் காட்சிகள் எதுவும் உண்மையல்ல.

**கிளிஞ்சல் - வெள்ளி** உபமானம் கொண்டும், திரைப்படத் திரையைக் கொண்டும், “**அத்வயம்**” ஆன பிரம்மத்திற்கு விளக்கம் கொடுக்கும் போது இருபொருள் - ஒருபொருள் பற்றியும் விளக்க வேண்டியதாயிற்று. அதனால், இன்னும் பல உவமானங்கள் காணலாம்.

उपादानेऽखिलाधारे जगन्ति परमेश्वरे ।
सर्गस्थितिलयान् यान्ति बुद्बुदानीव वारिणि ॥ ८॥

உபாதானேகிலாதாரே ஜகந்தி பரமேஸ்வரே |
சர்கஸ்திதிலயான் யாந்தி புத்புதாநிவ வாரிணி ||

முதற் காரணமாய் முழுதின் ஆதாரம்
அதுவாம் பரேசன் அகத்தே – உததி
உதிகுமிழிகள் போல் உலகங்கள் எல்லாம்
உதித்து இருந்து ஓயும் உணர் – **ஸ்ரீ ரமணர்**

(கடலின் மேற்பரப்பிலே தோன்றி மறையும் நீர்க் குமிழிகள் போன்று, முழுமுதல் காரணமாகவும், அனைத்திற்கும் ஆதாரமாகவும் விளங்கும் பரமேஸ்வரனிடத்தில், அனைத்து உலகங்களும் உதித்து, நிலைபெற்று, இறுதியில் அழிந்தும் போகும் என்பதை நன்றாக உணர்ந்துகொள்.)

எந்த ஒரு பொருளுக்கும், செயலுக்கும் அவை ஏற்பட பல காரணங்கள் இருக்கும்.

ஒரு குயவன் பானையைச் செய்யும்போது, அதற்குப் பல விதமான பொருட்கள் தேவை என்றாலும், அவைகளுள் மண் மூலப் பொருளாய் உள்ளதால், அது முதற்காரணம் ஆகிய **உபாதான காரணம்** எனப்படுகிறது.

பானையைச் செய்யும் குயவனின் புத்தியிலேயே அதை உருவாக்கப்போகும் திட்டம் உள்ளதால், குயவனை **நிமித்த காரணம்** என்று கூறப்படுகின்றது. அதாவது, பானை செய்யும் நிமித்தம் அவன் தேவைப்படுகிறான்.

அப்படிப் பார்க்கும்போது, நீர்க்குமிழி ஒன்று வெளியே கிளம்புவதற்கு தண்ணீர்தான் முதல் காரணமாக அமைகிறது. அவ்வாறு வெளிப்பட்ட அந்த நீர்க் குமிழியின் வாழ்க்கைச் சக்கரத்தை வைத்துக்கொண்டு இங்கு மேலும் விளக்கப் படுகின்றது.

நீரின் மேற்பரப்பில் புறப்பட்டு எழும் நீர்க்குமிழியை அது கிளம்பும் நீரை விட்டுவிட்டுத் தனியே பார்க்க முடியுமா?

எவ்வாறு, அது நீரிலிருந்தே புறப்பட்டு, அந்த நீரிலேயே சில நொடிகள் இருந்து, பின்பு அது வெடித்துச் சிதறும்போது, அதே நீரிலேயே கலக்கிறதோ?

அதுப்போன்று, இந்த பிரபஞ்சமும், அதில் உள்ள அனைத்தும் முழு முதற்காரணமான பரமேஸ்வரனிடத்தில் இருந்து புறப்பட்டு, அவனுடனேயே இருப்பதை அறியாத போதும், இந்த மொத்த பிரபஞ்சமும் அவனுடனேயே இருந்து, மறையும் போதும் அவனுடனேயேதான் கலக்கின்றன.

அதாவது, நீர்க் குமிழியைப் பொருத்தவரை, முன்பு நாம் பார்த்த சத்தியமாக இருக்கும் அதிஷ்டானப் பொருளும், கற்பிதமாகத் தோன்றும் ஆரோபிதப் பொருளும் என்னவென்று பார்த்தால், நீரிலேயே பிறந்து, நீரிலேயே வளர்ந்து, நீரிலேயே மறைந்தும் போவதால், அத்தனைக்கும் ஆதாரமாக இருக்கும் போது, அந்த நீரே அதிஷ்டானமாகவும் நீர்க்குமிழியாகப் பார்க்கப்படும் போதும் நீரையும், குமிழியையும் பிரிக்க முடியாததால் நீரே ஆரோபிதமாகவும் ஆகின்றது.

ஆக நீர்தான் எல்லாமாக இருப்பதால், இங்கு அதுவே உள்ள பொருள் என்றும் ஆகிறது.

அவ்வாறே, ஒரு சிலந்திப்பூச்சி எந்த விதமான வெளி பொருட்களின் துணையும் இன்றி, தானே தன்னிடத்திலிருந்தே வலையை உருவாக்கி, மீண்டும் தான் கட்டிய அந்த வலையை தன்னுள்ளேயே இழுத்துக் கொள்கிறதோ? அதைப்போன்றே, பல உலகங்களும், அதில் உள்ள பொருட்களும், இறைவ னிடத்தே உருவாகி, இறைவனால் இருந்துக்கொண்டு, மறையும் போதும் இறைவனிடமே சென்று அடைவதால், என்றும் உள்ள இறைவனாகிய பரமேஸ்வரனே அனைத்துக்கும் முதல் காரணம் மட்டும் அல்லாது நிமித்த காரணமாகவும் ஆகிறது என்பதை நன்கு உணர்வாயாக!.

இந்த மூன்று தொழில்களான **தோன்றல் - இருத்தல் - அழிதல்** ஆகிய எல்லாவற்றிற்குமே முழுமுதற்காரணமாக இறைவனே இருப்பினும், மூன்றிலும் ஒன்றைக் குறிப்பாகச்

சொல்வதற்காக, மூன்று பெயர்களைப் பயன்படுத்துவதற்கு "**தடஸ்த லக்ஷணம்**" என்று பெயர்.

ஒரு மாணவன் பாடங்களை கேட்டு, அதைப்படித்து, அத்துடன் அதை எழுதி, அதன் வாயிலாக ஒன்றை அறிய முயலும்போது, குறிப்பாக அவன் செய்கின்ற மூன்று காரியங்களாக செயலைச் சொல்வதற்காக '**கேட்கும் மாணவன்**', '**படிக்கும் மாணவன்**', '**எழுதும் மாணவன்**' என்று ஒரே மாணவனைக் குறிப்பிடுவது போலத்தான் அதுவும் ஆகின்றது.




அதுப்போன்று, **ஆக்கல் - காத்தல் - அழித்தல்** என்ற மூன்று தொழில்களிலும் ஒரே பரமேஸ்வரன் காரணமாய் இருந்தாலும், தடஸ்த லக்ஷணத்தின் படி **பிரம்மன் - திருமால் - ருத்ரன்** என்று மூன்று முழுமுதற் கடவுளர்களைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

सच्चिदात्मन्यनुस्यूते नित्ये विष्णौ प्रकल्पिताः ।
व्यक्तयो विविधाः सर्वा हाटके कटकादिवत् ॥ ९॥

சச்சிதாத்மன்யனுஸ்யுதே நித்யே விஷ்ணோ பிரகல்பிதாஹா |வ்யக்தயோ விவிதாஹா சர்வா ஹாடகே கடகாதிவத் ||

சச்சிதானந்தன் சகலத்தும் உள் உள்ளான்
இச்சனாம் விஷ்ணு நிலைதன்னில் – சொச்சமாம்
பொன்னில் கடகாதி போலும் பல் தோற்றமெலாம்
அந்நியன் அன்று என்று அறி – **ஸ்ரீ ரமணர்**

(வளையல், காப்பு, மோதிரம் என்று கற்பனைத் திறனால் பலப்பலவாக உருவாகும் ஆபரணங்கள் எல்லாமே தங்கம்தானே அன்றி வேறல்ல.

அதுப்போன்று, சச்சிதானந்த வடிவாகி, பரந்து வியாபித்து அனைத்தின் உள்ளும் சக்தியாக நிலை கொள்வதாலேயே, உலகில் உள்ளவைகள் அனைத்தும் பலவிதமாகத் தோன்றினாலும், அவைகள் அனைத்தின் ஆதாரமாய் விளங்கும் பிரம்மத்திற்கு அந்நியன் ஆகாது என்று அறிந்து கொள்.)

இதற்கு முந்தைய ஸ்லோகத்தில் பிரம்மத்தின் “**தடஸ்த லக்ஷணம்**” கூறப்பட்டது என்றால், இந்தப் பாடலில் அதன் “**சொரூப லக்ஷணம்**” விளக்கப்படுகிறது.

உண்மையில் இருப்பது ஒன்றானாலும், அதுவே பலப்பலவாகக் காட்சியளிக்கிறது என்பதை, எல்லோரும் தெரிந்து வைத்திருக்கும் உவமானம் கொண்டு விளக்குகிறார்.

நாம் முன்பு வேண்டியபடி தட்டான் (நகை செய்யும் ஆசாரி) ஒருவன் நம் வீட்டிற்கு வந்து, “**அம்மா, நீங்கள் கேட்டிருந்தபடி வளையலும், மோதிரமும் செய்துக் கொண்டு வந்திருக்கிறேன்**” என்று கூறுவானா?, அல்லது தங்கத்தை எடுத்து வந்திருப்பதாகக் கூறுவானா?

அவன் கொண்டு வந்திருப்பதின் மதிப்பை நிர்ணயிப்பதே அந்தத் தங்கம்தான் என்றாலும், கூறப்படுவது என்னவோ குறிப்பிட்ட வடிவங்களில் செய்யப்பட்ட அந்த நகைகளைப் பற்றித்தான்.

காரணம், நாம் பேசுவதும், மனத்தில் இருத்திக் கொள்வதும் பொதுவாக, நாம் காணுவதைப் பற்றித்தான் என்றாலும், அதற்கு ஆதாரமாய் இருப்பது தங்கம்தான், அதனால், அதற்கு மதிப்பு கிடைப்பதும் தங்கத்தினால்தான்.

ஆக, ஒன்றைக்கண்டால் அதன் மதிப்பு எதனால் வருகிறது? என்றும், அதற்கு ஆதாரமாய் என்ன இருக்கிறது? என்றும் பார்ப்பதே அறிவுடையவனின் செயல்.

எந்தப் பொருளுக்கும் ஐந்து அம்சங்கள் கூறப்படும் என்று "**திருக் - த்ருசிய விவேகம்**" என்ற கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அவையாவன:**

1. **(அஸ்தி) இருப்பு** - அது எப்படி இருக்கிறது?

2. **(பாதி) பிரகாசம்** - அது என்ன மாதிரி ஒளி தருகிறது?

3. **(ப்ரியம்) இன்பம்** - அது என்ன வகையான இன்பத்தைத் தருகிறது?

4. **(நாமம்) பெயர்** - அது என்ன பெயரால் குறிப்பிடப்படுகிறது?

5. **(ரூபம்) உருவம்** - அது என்ன வடிவத்துடன் காணப்படுகிறது?

இந்த ஐந்து அம்சங்களும் மிகவும் அவசியமானதாக உள்ளது.

பிரம்மம் எப்போதும் இருப்பதால் அதை "**சத்**" என்றும், அது தானே அறிவாய் இருந்து அனைத்தையும் உணர வைப்பதால் அதை "**சித்**" என்றும், உணர்வாக உள்ள அது எப்போதும் உள்ளதால், அதற்கு வேறாக வேறு எதையும் தேடாமல், சதா சர்வ காலமும் ஆனந்தத்தை அளிப்பதால் அதை "**ஆனந்தம்**" என்றும் கூறப்படுகிறது.

அது எல்லா உயிர்களின் உள்ளும் பரவி வியாபித்து உள்ளதாலும், அதற்கு மேல் வேறு ஒன்றும் இல்லை என்பதாலும், மேலே கூறப்பட்ட ஐந்தில், முதல் மூன்றும் பிரம்மத்தின் லக்ஷணங்கள் என்பதினால், அது எந்தப் பெயரிலும், உருவத்திலும் உணர்வாக உள்ளதினாலே அது பிரம்மம் என்றும் அறிய வேண்டும்.

உலகத்தில் உள்ள பொருட்களைப்பார்த்து, அவைகளை உணரச் செய்வதற்கு ஒருவன் தேவை. அவன் இருப்பதற்கும் முழுமுதற் காரணமே பிரம்மம் என்பதால், கடைசி இரண்டு லக்ஷணங்களும் பிரம்மத்தைப் பற்றி வர்ணிக்காது.

அதேசமயம், அவைகள் இரண்டும் பிரம்மத்தின் உதவியால் பார்க்கப்படும் மற்றப் பொருட்களின் லக்ஷணங்களை அறிய உதவும் என்பதினால், பிரம்மம்

இல்லையென்றால் அவைகளை அறிய முடியாது என்பதால் பிரம்மத்தைப் பொறுத்தவரை **நாமமும், ரூபமும்** “**மாயை**” எனப்படுகின்றன.

தங்கம் என்ற மூலப் பொருள் இருப்பதினால்தான், அதனைக்கொண்டு அனைத்து வகையான ஆபரணங்கள் எல்லாம் செய்து, அவைகளுக்கு ஒரு உருவமும் கொடுத்து, ஒரு பெயரும் வைக்க முடிகின்றது.

தங்கத்தை உருக்கி, வளைத்து கைகளில் அணிவதுப் போன்று, செய்யப்பட்டால், அதற்கு வளையல் என்ற பெயரும், மெலிதாகத் தட்டி, நீட்டி கம்பி போன்று வடிவமைத்து, அதில் வெவ்வேறு மணிகள் கோர்த்தது போன்று செய்து அதற்கு சங்கிலி அல்லது ‘**மணிமாலை**’ என்ற பெயரும் கொடுக்க முடிகிறது.

தங்கமே இல்லையென்றால், அந்த **உருவமும், பெயரும்** எப்படி இருக்க முடியாதோ? அதுப்போன்று, ஒருவன் இல்லை என்றால், அங்கு பார்ப்பதற்கோ, அனுபவிப்பதற்கோ உலகமும் இல்லை!, அதில் உள்ள பொருட்களும் இல்லை! என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அந்த ஒருவன் இருப்பதற்கு மூல காரணமாய் இருப்பது **பிரம்மம்** என்றால், அந்தப் பிரம்மம் இல்லாதபோது, இந்த உலகமே இல்லை என்றாகிறது.

அதனால், பிரம்மமே **சத்யம்**, பார்க்கப்படும் பொருட்கள் எல்லாம் "**மாயை**" என்றாகிறது.



பார்ப்பதற்கு வளையலோ, சங்கிலியோ, மோதிரமோ, அல்லது கம்மலோ அவைகள் அனைத்தும் தோற்றத்தில் எப்படி இருந்தாலும், அவைகள் உருவாவதற்கு ஆதாரமாக அந்தத் தங்கம் மட்டுமே இருப்பதினாலே, அவைகள் தங்கத்தையன்றி வேறாக இருக்க முடியாது! என்று எளிதாகக் கூறலாம்.

அதுப்போன்று, இந்த உலகமும் அதைச் சார்ந்த அத்தனை அனுபவங்களும் பிரம்மம் இல்லாது உணர முடியாத காரணத்தினால், அவைகளும் பிரம்மத்திற்கு வேறாக இருக்க முடியாது என்றுதான் கூற வேண்டும்.

ஆக, நாம, ரூபங்கள் நோக்கத்தில் அவைகளைப் பார்க்கும்போது, இந்த உலகம் உண்மையாகத் தெரிகின்றது. அதுவே, அந்த நாம, ரூபங்களுக்கு ஆதாரமான பிரம்மத்தை மட்டும் பார்த்தால், இந்த உலகம் உண்மையல்ல.

இதன் அடிப்படையிலேதான் இந்த உலகம் உண்மையல்ல! என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, ஒட்டு மொத்தமாக இந்த உலகத்தை “**மாயை**” என்று விலக்கிவிட முடியாது. அதாவது, அறிவால் மட்டுமே இந்த உலகத்தை உண்மையல்ல என்று உணர வேண்டும்.

இதைத்தான் சாஸ்திரம் “**ப்ரம்மம் சத்யம்**! **ஜகத் மித்யா**!” என்று உபதேசிக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு சாதகனும் இதன் பொருளை நன்கு உணரவேண்டியது மிகவும் அவசியம்.

यथाकाशो हृषीकेशो नानोपाधिगतो विभुः ।
तद्भेदाद्भिन्नवद्भाति तन्नाशे केवलो भवेत् ॥ १०॥

யதாகாஷோ ஹ்ருஷிகேஷோ நநோபாதிகதோ விபுஹு |
தத்பேதாத்பின்னவத்பாதி தன்னாஷே கேவலோ பவேத் ||

விண்ணிலே போல விளங்கு ஈசனில் தோன்றும்
எண்ணில் உபாதி இசைந்த விபு – அண்ணலும் அப்பேத
உபாதிகளால் பின்னன் போல்வான் அவை
போதலும் பூன்றப் பொருள் – **ஸ்ரீ ரமணர்.**

(எங்கும் பரந்து, விரிந்து நிறைந்து இருக்கும் ஒரே ஆகாயம் தோற்றங்களினால் பிளவுபட்டது போன்றுக் காணப்படுகின்றது.

அதுப்போன்று, எங்கும் நிறைந்திருக்கும் ஈசன், தன்னில் தோன்றும் எண்ணிலடங்காத உடல்களை அடைந்து, அவைகளுடன் எப்போதும் ஒன்றாய் உள்ளவன் பலப்பலவாகப் பார்வைக்குத் தோற்றம் அளித்து, அந்த உடல்களின் மறைவுக்குப் பின்னும் பூரணப் பொருளாக விளங்குவான்.)

ஒரு பொருளானது பல்வேறு பொருள்களின் சேர்க்கையால், அது வேறு ஒரு உருவத்தை அடைந்து, அதன் வாயிலாக வேறு மாதிரியாகக் காணப்படுவதை "**உபாதி**" என்பார்கள்.

(உதாரணம்:– களிமண்ணால் செய்யப்பட்ட பானைகள் அல்லது பஞ்ச பூதங்களால் உண்டான உடல்கள்)

அத்தகைய அந்த பொருள்களின் சேர்க்கையால் மூலப் பொருள் மறைக்கப்பட்டு, அவை வேறாகத் தோன்றுவதை தடுத்து, அதை **உள்ளது உள்ளபடியே** பார்ப்பதற்கு, அதனுடன் சேர்ந்திருக்கும் மற்ற பொருள்களை நீக்க வேண்டும்.

கிளிஞ்சலில் வெள்ளி தோன்றியதை தடுக்க அதன் மேல்படும் ஒளியை அகற்ற வேண்டும். அவ்வாறே, சூரியனை மேகம் மறைத்துக் கொண்டிருந்தால், அந்த மேகம் விலக வேண்டும். அப்போது மட்டும்தான் அந்த மூலப் பொருளின் உண்மை சொரூபத்தை அறிய முடியும்.

இந்த ஸ்லோகத்தில் பரந்து, விரிந்து இருக்கும் ஆகாயம் ஓர் எல்லைக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்ற வித்தியாசத்தைக் காட்டி, அந்த ஆகாயத்தின் (பிரம்மத்தின்) தன்மையை விளக்குகிறார்.

ஆகாயம் என்று இங்கு கூறப்படுவது, நம் தலை மேல் நாம் காணும் நீல நிறத்தில் உள்ள **வெறு வெளி** என்று மட்டும் கொள்ளாது, நம்மைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் அல்லது இந்த பூமி போன்ற பல கோள்களைச் சூழ்ந்திருக்கும் வெற்று இடத்தையும் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

நம் முன்னால் ஒரு குடமோ அல்லது ஒரு பானையோ வைக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் பானையைச் சுற்றிலும் உள்ள ஆகாயத்திற்கும், பானையின் உள்ளே உள்ள ஆகாயத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்?!

சுற்றிலும் உள்ள ஆகாயம் எங்கும் பரந்து விரிந்திருக்க, பானையின் உள்ளே உள்ள ஆகாயம் மட்டும் பானையின் உருவத்தில் இருக்கிறது என்று கூறலாமா?



அதாவது, ஆகாயம் துண்டாடப்பட்டு உள்ளிருப்பது அதன் ஒரு பின்னம் என்று கூறலாமா?

அப்படியென்றால், நாம் இப்போது அந்த பானையை உடைத்து விட்டால், அதன் உள்ளே உள்ள ஆகாயம் வெளியே உள்ளதுடன் ஒன்றாகக் கலந்து ஒன்றாகிவிட்டது என்று கருதலாமா?

யோசித்துப் பாருங்கள்...!

எங்கும், எதிலும், பரந்து விரிந்து உள்ள ஆகாயம் இப்படி ஒரு பானையின் சேர்க்கையினால் துண்டாடப்பட்டது போலத் தெரிவது எதனால்? என்று உண்மையில் ஒரு சாதகன் யோசிக்க வேண்டும்.

நாம் ஒரு வானளாவிய கட்டிடத்தை கட்டுவதனால் வெளியின் அளவு குறைந்துவிடாது. ஒரு பொருளின் இருப்போ, இல்லாமையோ வானவெளியை எந்தவிதத்திலும் பாதிப்பது இல்லை.

இந்த பேரண்டத்தின் இருப்போ, மறைவோ ஆகாயத்தை (பரமனை) எவ்விதத்திலும் பாதிப்பது இல்லை.

விண்வெளிக்கு (வெட்டவெளிக்கு) ஒரு எல்லை கிடையாது. அதுப்போன்று, பரமனுக்கும் ஒரு எல்லை கிடையாது. அவ்வாறே, விண்வெளிக்கு ஒப்பாக வேறு ஒரு பொருள் கிடையாது. ஆக, பரமனுக்கு ஒப்பாக வேறு ஒரு பொருள் கிடையாது.

பூவிலிருந்து வரும் மணமோ, தொழிற்சாலைகளிலிருந்து வரும் மாசுடன் கூடிய புகை மண்டலமோ ஆகாயத்தை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை.

அதுப்போன்று, நல்லவைகள், கெட்டவைகள் என்ற இருமைகளில் எந்தவித பேதமில்லாமல் அனைத்துக்கும் ஆதாரமாயிருப்பது பரமன்.

அதாவது, பானைக்குள் இருக்கும் ஆகாயத்திற்கும், பானைக்கு வெளியே இருக்கும் ஆகாயத்திற்கும் எந்த வித வித்தியாசமும் கிடையாது.

ஆயினும், பானையை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் சென்றால் பானைக்குள் இருக்கும் ஆகாயமும், பானையுடன் சேர்ந்து நகர்ந்து செல்வதுப்போன்று தோன்றுகிறது. ஆயினும் உண்மையில் ஆகாயம் அப்படி நகர்வது இல்லை என்று நமக்கு தெரியும்.

அதுப்போன்று, விண்வெளியிலுள்ள அனைத்து கோள்களும், நட்சத்திரங்களும் தொடர்ந்து அங்கும், இங்கும் நகர்ந்தாலும் ஆகாயம் மாற்றமில்லாமல் இருக்கிறது.

அதுப்போன்று, பரமனும் மாற்றத்திற்கு அப்பாற் பட்டவன்.

மேல், கீழ் மற்றும் கிழக்கு, மேற்கு போன்ற வார்த்தைகள் எல்லாம் சூரியனைச் சுற்றும் இந்த பூமியை மையமாக வைத்துக் கொண்டு கையாளப்படுகின்றது. அதுவே, விண்வெளியில் (வெட்டவெளியில்) அப்படி எதை மையமாக வைத்து திசைகளையும், மேல், கீழ் என்ற நியதியையும் உண்டாக்க முடியும்?... எனவே, ஆகாயம் எந்த பாகுபாடும், பகுதிகளும் அற்று எப்பொழுதும் ஒன்றாயான முழுமையாக இருக்கிறது.

அதுப்போன்று, பரமனும் முழுமையானவன்.

உண்மையில், அந்த ஆகாயம் எப்போதும் இருப்பது போன்றுதான் இருக்கிறது. அந்த பானையின் உள்ளும், வெளியும் இருப்பதும் அதே ஆகாயம்தான்.

ஆனால், அந்த பானை என்ற உபாதியின் மூலம் அங்கு இரண்டு ஆகாயமாகத் தெரிவதும், பானை என்ற உபாதி உடைந்ததும் அந்த ஆகாயம் ஒன்றாகச் சேர்வதுப் போன்று தெரிவதும், நம் மனதில் ஏற்பட்டுள்ள தோற்றங்களே.

இந்த உவமானத்தை வைத்துக்கொண்டு **ஜீவ - ஈஸ்வரத்** தத்துவத்தை இங்கு விளக்குகிறார்.

பிரம்மத்தின் மகா சக்தியாகிய ஈஸ்வரன் எப்போதும் உள்ளது உள்ளபடியேதான் இருக்கிறது.

ஆனால், அந்த ஈஸ்வரனாகிய மாயா சக்தியின் மூலம் வெளிப்பட்ட சீவராசிகளாகிய நாம்தான் அவ்வப்போது, அந்த ஈஸ்வரன் இடத்திலேயே தோன்றி, வளர்ந்து அவரிடமே நீர்க்குமிழிகள் போன்று மறைகின்றோமே தவிர, அதனால், ஈஸ்வரனுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என்கிறார். அத்துடன் அந்த ப்ரம்மம் இதில் சம்பந்தப்படாமல் சாட்சியாக இருந்துக் கொண்டுள்ளது என்றும் கூறுகின்றார்.

ஆனாலும், அப்படித் தோன்றும் நாம்தான் குடத்திற்கு உள்ளே இருக்கும் ஆகாயம் போன்று, ஒரு தனித்துவம் இருப்பதாக நினைக்கிறோமே தவிர, உண்மையில் அப்போதும் நாம் ஈஸ்வரன்தான் என்று இங்கு அர்த்தம் கொள்ள முடிகிறது.

அதை உணரமுடிந்தால், அந்தப் பரம்பொருளாகிய பரப்பிரம்மத்தின் மாயா சக்தியாகிய ஈஸ்வரனாகவே நாம் இப்போது இருக்கின்றோம், இதிலே, அந்த ஏக ஈஸ்வரனில் இருந்து ஏதோ தனித்து விடப்பட்டவர்கள் போன்று தவிக்க மாட்டோம். அத்துடன், அந்த ஈஸ்வர சக்திக்கும் ஆதாரமான ஆதிபகவன் இருப்பதினாலேதான் இண்ட உடலும், உலகமும் உண்டாகின்றன என்றும் உணர்ந்துக் கொள்வோம்.

**இதுவே முக்தி நிலை.**

இது வெறும் அறிவுபூர்வமாய் மட்டும் நின்று விடாது அனுபவத்தில் வரவேண்டும்.

தனித்து விடப்பட்டதாக நினைக்கும் குட ஆகாசமாகிய நம் ஒவ்வொருவரின் அறியாமை நிலையை நாம் அவசியம் அறிய வேண்டும். அத்துடன், ஒவ்வொருவரும் தன்னைச் சுற்றியுள்ளோரையும் தன்னிலிருந்து தனித்துப் பார்க்காமல், அந்த ஈசனாக பார்க்கும் மனோபாவம் வளர வேண்டும்.

அத்தகைய மனோபாவம் வளர, வளர தானும் அந்த பரப்பிரம்மத்தின் மாயா சக்தியாகிய **ஈஸ்வரனே** என்ற ஏகாந்த அனுபவம் தன்னாலே வாய்க்கும் என்று ஆன்றோர்கள் அருளியிருக்கின்றனர். அத்துடன், அந்த ஈஸ்வரன் என்பவனும் பரப்பிரம்மத்தின் மாயா சக்தியாகிய மகா சக்தி (ஈஸ்வரி) என்பதினால், அதையும் அந்த பரப்பிரம்மத்திற்கு வேறாக, அதனிடமிருந்து பிரிக்க முடியாது என்பதையும் அவசியம் உணர வேண்டும் என்கின்றனர்.

எங்கும் நிறைந்திருக்கும் ஆகாயம் போன்று என்று கூறி விட்டு, அந்த ஈசனைக் குறிக்க **ஹ்ருஷிகேசன்** என்று கூறுதிலிருந்து இன்னுமொரு அம்சமும் வெளிப்படுகிறது.

**ஹ்ருஷிகேசன்** என்பதற்கு "**புலன்களை வென்றவன்**" எனப் பொருள் கொள்வதால், புலன்களை அடக்கி, ஆண்டு அவைகளின் தலைவனாக இருப்பவனே, எங்கும், எதிலும் நிறைந்து இருக்கும் தன்மை கொண்டவனாகவும் இருக்க முடியும் என்பதும் உறுதியாகின்றது.

ஆகவே, புலன்களின் வழிச் செல்பவன், அவைகள் அளிக்கும் குறுகிய கண்ணோட்டத்திலேயே நின்றுக் கொண்டு, தன்னை தனியன் என்று கருதிக் கொள்கிறான். அதுவே, புலன்களை அடக்கி ஆளும் பயிற்சிகளையும், அதற்கான பாடங்களையும் பயில்கின்றவன், அவனது தனிமையை நீக்கி, எங்கும் நிறையச் செய்யும் ஏகாந்த வழியில் பயணிக்கிறான்.

ஆக, எப்போது ஒருவனது தனிமை நீங்குகிறதோ? அப்போதே அவன் தான் பரிபூரணமாக இருப்பதை அறிந்து, அவனது உள்ளொளி சுடர் பிரகாசமாக எரிவதைக் கண்டு, ஏகத்தில் யாதுமாகி நிற்கிறான்.

அதாவது, ஒருவன் தன் ஐம்புலன்கள் காட்டும் அறியாமை வழியில் சென்றால், அதன்காரணமாக விளையும் அகங்காரம் அவனைப் பொருத்தவரை '**தான்தான்**' எல்லாம் என்று தன்னை பெரிதாக நினைத்துக் கொள்ளச் செய்து, தன்னைக் குடம் அளவில் மட்டும் குறுக்கிக் கொள்கிறான்.

அதுவே, அந்த குடத்திற்குள் இருக்கும் ஆகாயம் போன்று நான் இருக்கிறேன் என்று தன்னை பெருக்கிக் கொள்பவன் இந்த புலன்களைக் கடந்து, எல்லாமே தான் என்று அகன்று, விரிந்து எல்லா இடத்திலும் ஈஸ்வரனாகவே நிறைகிறான்.

உபாதிகள் என்பது, இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டும் மாயை அல்லது கற்பனை என்பதினால், அந்த

உபாதிகள் உண்மையற்றவை என்றாலும், அவைகள் எந்த விதமாகவெல்லாம் நம் சுய உருவத்தை மறைத்து விதவிதமான அறியாமையை வளர்க்கின்றன என்றும் இனி காணலாம்.

அவைகள் ஒருவனை எந்த அளவிற்கு பாதித்துள்ளன என்றும் பார்த்து, அதற்குத் தக்கபடி ஒவ்வொருவனது பயிற்சியும், முயற்சியும் இருக்க வேண்டும் என்பதால், இனி இதன் விவரங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

नानोपाधिवशादेव जातिवर्णाश्रमादयः /
आत्मन्यारोपितास्तोये रसवर्णादि भेदवत् // ११//

நாநோபாதிவஷாதேவா ஜாதிவர்ணாஷ்ரமாதயஹ |
ஆத்மன்யாரோபிதாஸ்தோயே ரஸவர்ணாதிபேதவத் ||

பலவாம் உபாதிகள் பற்றியே நாமம்
குலம் ஆசிரமம் முதல் கொள்கை – சலத்தில்
சுவை நிறம் ஆதிபோல் சுத்த ஆன்மாவில்
அவை கற்பிதமாம் அறி – **ஸ்ரீ ரமணர்**

(பலவிதமான உடல்கள் உண்டாவதற்குக் காரணமாகிய பஞ்சபூதங்களின் சேர்க்கையால் கிடைத்த உபாதிகளைப் பொருத்தே பெயர், இனம், சாதி, குலம், வாழ்வியல் முறை முதலான நடைமுறைக் கொள்கைகள் உண்டாகின்றன.)

சுத்தமான நீரில் **இனிப்பு, கரிப்பு, துவர்ப்பு** என்ற பலவிதமான சுவைகளும், **சிவப்பு, மஞ்சள், கருப்பு** முதலான நிறங்களும் காணப்படுவதுப் போன்று, உடல்களைப் பற்றிய விதவிதமான உபாதிகளைப் பொருத்து, பரிசுத்தமான ஆன்மாவைப் பற்றுவதாகக் கற்பனையால் அறியப்படுகின்றன.

**நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்** என்ற பஞ்ச பூதங்களில் நிலமாகிய மண் ஒன்றுக்குத்தான் வேறு, வேறு மாதிரியான நிறங்களும், மணங்களும் கொண்ட குணங்கள்

எல்லாம் உண்டு. மற்ற பூதங்களில் நீருக்கும், காற்றிற்கும் அதனோடு மற்றவைகள் கலப்பதால் வரும் குணங்கள்தான் உண்டு.அவ்வாறே, நெருப்பும், ஆகாயமும் அவைகளுக்கே உண்டான இயற்கைக் குணத்தோடு இருப்பவைகள்.

நீர் அது இருக்கும் மண்ணுக்குத் தகுந்தாற்போல் **இனிப்பு, கரிப்பு, துவர்ப்பு** போன்ற சுவைகளையும், **சிவப்பு, மஞ்சள், கருப்பு** போன்ற நிறங்களையும் தழுவிக்கொண்டு விளங்கும்.

அதுப்போன்று, உடல் பிறந்து, வளர்ந்து வரும் சூழ்நிலைகளைப் பொருத்து மாறி, மாறி வருகின்ற நிலைகளை அதனோடு விட்டுவிடாமல், உடல் இருக்கக் காரணமாக உள்ள ஆன்மாவுடன் தொடர்புபடுத்தி, அந்த நிலைகளை எல்லாம் ஆன்மாவைச் சார்ந்தவைகளாகக் கருதுக்கொண்டு கலக்கம் அடைகிறார்கள் என்று பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு கூற வருகின்றார்.

ஒவ்வொருவரையும் தனித்தனியே குறிப்பிடுவதற்காக, என்று அவர்களது பெயர்கள் அமைகின்றன. அந்தப் பெயர்கள் அவர்களது உடலுக்கா அல்லது மனத்திற்கா…?

பெயரைக்கூறி ஒருவரைக் கூப்பிடும்போது அவருடைய மனம்தான் அதை அடையாளம் கண்டு, அவரது உடல் ஒத்துழைத்து திரும்பிப் பார்க்கிறது. அதேப்போல தூரத்தில் அவர் வருவதைப் பார்த்து விட்டால், அவர் பெயரைக்கூறி அவர் வந்து கொண்டிருக்கிறார் என்போம். அப்போதும், அவர்

உடலைத்தான் குறிப்பிடுகிறோம். ஆனால் நாம் அவரைப் பற்றிப் பேசும்போது மட்டும் அவரது உடலைப் பற்றிப் பேசுவதில்லையே...?! அவரது எண்ணங்களை, மற்றும் அவரது மனதைப்பற்றிப் பேசுகிறோம்.

அதாவது, ஒருவரைப் பற்றிய ஒட்டுமொத்தமான உருவகத்துக்குத்தான் அந்தப் பெயர் என்பது சரிதானே?

அவ்வாறே, சாதி அல்லது குலம் எனும்போது, ஒருவர் பிறந்த பிரிவைத்தான் இக்காலத்தில் குறிப்பிடுகிறோம். பொதுவாக **மனித சாதி, மிருக சாதி, தாவர சாதி** என்ற வகையில்தான் சாதிகள் என்னும் சொல்லே ஆரம்பத்தில் இருந்திருக்கின்றன.

பின்பு, மனிதர்களுள் வெவ்வேறு தொழில்கள் செய்யும் சமூகத்தினரின் வகையினரைக் குறிப்பிடப் பயன்படுத்திய வர்ணம் என்ற சொல்லிற்குப் பதிலாக, இப்போது சாதிகள் என்ற சொல் பழக்கமாகி, அதுவே, தற்போது புழக்கத்தில் உள்ளது. அதனால், சிலரை உயர்ந்த சாதி என்ற நிலையில் மேல் தரத்தினர் என்றும், வேறு சிலரைக் கீழ் தரத்தினர் என்றும் கூறப்படும் அளவுக்கு அந்தச் சொல் பழக்கத்தில் வந்து விட்டது.

இதனை ஔவையார் அருளிச் செய்த நல்வழி என்பதிலும் காணலாம்.

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி”

அவ்வை பிராட்டியாரும் தமது பாடலின் மூலம் சுட்டிக் காட்டுகின்றார்.

அதாவது, ஔவையார் சாதி என்று குறிப்பிடும் பொழுது, மனிதர்கள் பிறப்பால் உருவாக்கிக் கொள்ளும் சாதியையோ அல்லது பாலின (ஆண், பெண்) அடிப்படையில் உருவாகும் சாதியையோ இங்கு குறிப்பிடவில்லை!

மாறாக, மற்றவர்களுக்கு வாரி வழங்கக்கூடிய தகுதியுடைய வள்ளல்களை (அவர்கள் பிறப்பால் எக்குலத்தவர் மற்றும் எவ்வினத்தவர் ஆயினும்) அவர்களே பெரியோர்கள். அதாவது, உயர்வானவர்கள் என்கின்றார்.

அதுவே, மற்றவர்களுக்கு உதவி செய்ய மனம் இல்லதவர்களை அவர்கள் எந்த இனத்தில் அல்லது குலத்தில் பிறந்திருந்தாலும், அவர்களை இழிவான குலத்தில் பிறந்தவர்கள் என்றே சுட்டிக் காட்டுகின்றார்.

பகவான் ஸ்ரீ சங்கரரின் இந்தச் செய்யுளில் **குலம்** என்று கூறப்படுவது, பிறந்த ஒருவர் எந்தத் தொழில் செய்யும்

வம்சத்தில் பிறந்திருக்கிறார் என்று குறிப்பிடவே பயன் படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது, பிறந்த அவரது உடலை வைத்துக் கொண்டுதான், அவரைப்பற்றி நாம் கணிக்கிறோம் என்று கூறப்பட்டிருக்கிறது.




வர்ணம் அல்லது ஆசிரமம் என்று கூறப்பட்டிருப்பது, ஒருவனது வாழும் முறையைப் பற்றியதாக மட்டுமே வருகிறது. அதை விடுத்து, பிறப்பால் உயர்வு, தாழ்வு என்பதை எல்லாம் மனம் கெட்டு, மதி கெட்டவர்களால் உண்டாக்கப்பட்டது.

நம் பண்டைய வாழ்வியல் நெறிமுறையில், வழக்கத்தில் உள்ள கல்வி முறையில் அவர்கள் கல்வி கற்கும்போது பிரம்மத்தைப் பற்றியே அறிவதற்குண்டான சகல கட்டுப் பாடுகளுடன் கூடிய ஒழுக்க நெறிகளை பயிற்றுவிப்பதற்கான ஒரு பிரம்மச்சரிய வாழ்வியல் முறையும், பின் மனையாளுடன் மகிழ்ந்து இருந்து நல்வாழ்க்கை வாழுகின்ற இல்லற தர்மமும் தேவைப்படுகின்றது.

அத்துடன், தன் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் கடமையுடன் பணியாற்றியபின், அதுவரை தேவையாயிருந்த அனைத்து சுக, போகங்களையும் குறைத்துக்கொண்டு தான் பிறந்ததன் பயனைப் பற்றிச்சிந்திக்கும் ஒரு வானப்பிரஸ்தம் என்ற வாழ்வியல் முறையும், இறுதியில் இவ்வுலகச் சுகங்களை எல்லாம் மனதின் சுகங்கள் என்று அறிந்து, அவைகளை முற்றிலும் மனதால் துறந்துவிட்டு வாழுகின்ற வாழ்வியல் நெறிமுறையை சந்நியாச வாழ்க்கை என்றும் வகுத்துக் கொடுத்தனர்.

இவ்வாறு, ஒருவன் கடைத்தேறுவதற்குத் தேவையான அத்தனை அம்சங்களையும் கொண்ட வாழ்வியல் நெறி முறைகளை நம் முன்னோர்கள் வகுத்து வைத்திருந்தனர்.

ஆனால், இடையில் வந்த சில கலாச்சார சீர்கேடுகளில் சிக்குண்ட மனித சமுதாயம் அவைகளை சாதிகள் என்ற முறையில் மனித மனதில் ஏற்றி வைத்துவிட்டு, அதன் வாயிலாக ஆதாயம் பார்க்கின்றன.

இதில் எந்த முறைகளைப் பார்த்தாலும், ஒருவன் உடலுடன் பிறந்திருப்பதால் அவனது உடலை வைத்துக் கொண்டு அவன் ஆற்றும் கடமைகளால் நுண்ணறிவு பெற்று, அவன் எப்படி முன்னேறுவது? என்றுதான் எல்லாமே அன்று போதிக்கப்பட்டன.

ஆகவே, அனைத்து வாழ்வியல் நெறி முறைகளும் உடலையே பிரதானமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டன. பெயர், குலம், வாழ்வியல் நெறிமுறை இவைகள் எல்லாமே உடல் சம்பந்தப்பட்ட சரீரத் தர்மங்கள் ஆகின்றன. இவைகளை ஆத்மாவின் தர்மங்கள் என நினைத்து மனம் மயங்கக்கூடாது என்பதைத்தான் எல்லா மகான்களும் உபதேசிக்கின்றனர்.

ஆக, மனிதனாகப் பிறந்தவன் மனதை விசாரித்து, விவேகத்துடன் அனைத்தையும் சரியாகச் செய்தால், அவனது வாழ்க்கை இன்பம் இருப்பதாக மாறும். அதுவே, சரியாகச் செய்யவில்லை என்றால், இப்போது ஏற்பட்டுள்ள உபாதிகள் ஆகிய உடலைப் போன்றே மீண்டும், மீண்டும் புதிய உபாதிகள் உண்டாகக் காரணமாக அவைகள் அமைகின்றன.

எனவே, சரீர அபிமானங்கள் எப்படி இருந்தாலும், அவைகள் ஆன்மாவை ஒருபொழுதும் பற்றுவதில்லை என்பதை தீர்க்கமாக அறிந்து கொள்ள வேண்டும். இதை நன்கு உணர்வதற்கு நாம் பகவான் ஸ்ரீசங்கரர் வாழ்க்கையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியை அலசிப்பார்க்கலாம்.



புனிதமான கங்கையில் குளித்துவிட்டு ஆச்சாரியார் ஸ்ரீசங்கரர் தன் சீடர்களுடன் நடந்து வரும்போது, எதிரே ஒரு புலையன் நான்கு நாய்களைப் பிடித்துக்கொண்டு வருகிறான். அவனது அழுக்கானத் தோற்றமும், அவனிடம் காணப்பட்ட கெட்ட வாடையும் கண்டு, சீடர்கள் அவனை அவர் மேல் படாதவாறு ஒதுங்கச் சொல்ல, அப்போது அவன் பகவான் ஸ்ரீசங்கரரைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கிறான்.

“யதிகளில் சிறந்தோரே, அன்ன மயத்தாலான இந்த சரீரத்தை அன்னமயமான இன்னுமொரு சரீரத்திடமிருந்து விலகச் சொல்கிறீர்களா? அல்லது ஒரு சைதன்ய சொரூபத்தில் இருந்து, இன்னொரு சைதன்ய சொரூபத்தை அகலும்படிச் சொல்கிறீர்களா? மேலும், கங்கை நதியில் பிரதிபலிக்கும் சந்திரனின் பிம்பம்,

சண்டாளனின் குடிசையின் பக்கத்தில் இருக்கும் குளத்தில் பிரதிபலிக்கும் சந்திரனின் பிம்பத்திலிருந்து வேறாகுமோ?

பொன் குடத்தின் உள்ளே இருக்கும் ஆகாசம் மண் குடத்தில் உள்ளதிலிருந்து வேறுபடுமோ? எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சத்திய ஆனந்த போதத்தில் திளைத்திருக்கும் உம்மிடம் "இவன் மேலோன், அவன் கீழோன்" என்ற இருமைகளுடன் கூடிய பெரும் மயக்கம் எப்படித் தோன்ற முடியும்?". என்று கேட்கிறான்

இதைக்கேட்ட ஆச்சாரியார் ஸ்ரீ சங்கரர் தன்னுடைய சீடர்களின் மனம் ஆன்மாவின் உன்னத நிலையை மறந்து உடலின் தூய்மைப் பற்றிய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி பாமரத் தன்மை அடைந்ததை உணர்கிறார்.

அதனை அகற்ற விரும்பிய அந்த ஆச்சாரியர் சீடர்களுக்கு உரைக்கும்படி, "பரம்பொருளின் உண்மைத் தன்மையை உணர்ந்து, உறுதியான போதத்துடன் இருப்பவர் சண்டாளர் ஆயினும், அந்தணர் ஆயினும் அவரை என் குருவெனப் போற்றுகின்றேன்" என்று ஈற்றடி வருமாறு தமது "**மனீஷா பஞ்சகம்**" என்ற நூலின் வாயிலாக ஐந்து ஸ்லோகங்களின் மூலம் அனைவருக்கும் பாடம் புகட்டுகிறார். ஆகவே, இந்த **உடல் - ஆன்மா** பற்றிய குழப்பம் வராதவாறு எப்போதும் நம்மை நாமே கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

पंचीकृतमहाभूतसंभवं कर्मसंचितम् ।
शरीरं सुखदुःखानां भोगायतनमुच्यते ॥ १२॥

பங்க்சீக்ருதமஹாபூதசம்பவம் கர்மஸஞ்சிதம் |
ஷரீரம் சுகதுக்கானாம் போகாயதனமுச்யதே ||

கலந்த பெரும் ஐம்பூதம் காரியம் ஆகும்
கலந்த வினை சார்ந்த கலமாம் – கலக்கும்
இடர் இன்ப போகம் எவையும் புசித்தற்கு
இடம் இவ்வுடல் என்றிரு – **ஸ்ரீ ரமணர்**

(ஐந்து பெரும் பூதங்களின் சேர்க்கையினால் உண்டான உடலைக் கொண்டு, முற்பிறவியில் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளின் கலப்பினால் அடையப்பட்ட ஸ்தூல சரீரம், இன்ப, துன்பங்கள், சுக, போகங்கள் போன்றவைகளையும் அனுபவிப்பதற்காக இவ்விடம் இந்த உடலாக வந்துள்ளது என்று கூறப்படுகிறது.)

அதிலே, ஜாதி, வர்ணம், மொழி, கலாச்சாரம், சமயங்கள் என எல்லாமே வேற்றுமைகளாக இந்த உடல் என்ற உபாதியின் மூலம் தோன்றுவதாக முந்தைய செய்யுளில் கூறப்பட்டது. அந்த உபாதிகள் (உடல்கள்) ஸ்தூலம், சூட்சுமம், காரணம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

அவற்றில் முதலாவதான **ஸ்தூல உபாதி** பற்றி இந்தச் செய்யுளில் கூறப்படுகிறது.

ஆன்மாவை மறைக்கும் ஸ்தூல உபாதியில் மிகவும் முதன்மையானது, நாம் எடுத்திருக்கும் இந்த பஞ்சபூத உடலாகிய ஸ்தூல உடலோடு நம்மை நாம் ஐக்கியப்படுத்திக் கொள்வதுதான்.

ஏனென்றால், இந்த உடல்தான் நம்மை இந்த உலகுக்கு அறிமுகப்படுத்துகிறது, நம்மையும் அப்படியே நினைக்கவும் வைக்கிறது.

ஆக, இந்த உலகமும் பௌதீகம், இந்த உடலும் பௌதீகம் என்பதால், நாம் காண்பது எல்லாமே பாஞ்ச பௌதீகம் என்ற ஐந்து பூதங்களால் உருவானது என்று கூறப்படுகிறது.

இந்த ஐந்துமே மிகவும் ஸ்தூலமான மண் அல்லது நிலத்திலிருந்து ஆரம்பித்து, படிப்படியாய் ஸ்தூலம் குறைந்து சூக்ஷமம் அதிகமாகி மிகவும் நுண்மையான ஆகாயத்தில் போய் முடியும்.

இந்த ஐந்தின் கலவைகளாக இந்த ஸ்தூல உடலும், உலகமும் கருதப்படுகின்றன. அப்படிப்பட்ட, நம்முடைய ஸ்தூல உடலும், சூக்ஷும மனமும் கலந்து, முன்பு உண்டான

எண்ணங்கள் வாயிலாக, ஏராளமான செயல்கள் செய்து ஸ்தூலமாகவும், நுண்மையாகவும் பல விளைவுகள் நிகழ்ந்திருக்கும்.

அதையெல்லாம், அனுபவித்து அந்த உடல் இறுதியில் மரணம் அடையும் போது ஸ்தூலங்கள் எல்லாம் உடலோடு முடிந்து, சூக்ஷுமமான நுண்ணிய விளைவுகளை தன்னகத்தே மனம் போன்ற நுண்ணிய வடிவில் சித்தப்பதிவுகளாக எடுத்துக்கொண்டு, காரண தேகத்தில் இன்னமும் மீதியிருக்கும் நுண்ணிய வினைப் பயன்களை அனுபவிக்க இன்னும் ஒரு உடலைத் தேடி மறுபிறவி எடுக்கிறது என்பதுதான் இங்கு கூறப்படும் தத்துவம்.

உடல் என்று ஒன்று ஸ்தூல வடிவில் இருந்தால்தான் எல்லாவித அனுபவங்களும் நிகழும் என்பதை நாம் இங்கு புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆசை என்ற ஒன்று இருக்கும்போது, அது எண்ணங்கள் என்ற வடிவிலேயே சூக்ஷமமாக இருக்கும். அதைப்பூர்த்தி செய்யவும், அவைகளை ஆண்டு அனுபவம் செய்யவும் ஸ்தூல வடிவில் உடல் தேவைப்படுகிறது.

நாம் முன்பு செய்த செயல்கள் மற்றும் இப்போது செய்யும் செயல்களுக்கும் உண்டான கர்ம (செயல்)

விளைவுகளை அனுபவிப்பதற்கு உடல் தேவைப்படுகிறது. இதைத்தான் "**கர்மா**" என்றும் கூறுகிறோம்.

அதாவது, அனுபவிக்க என்று எந்த செயல் விளைவுகளும் இல்லாது போனால், அங்கு எண்ணங்களால் ஆன **மனம்** போன்ற ஒரு நுண்ணிய பொருளும் இல்லை, அதனால், உடல் என்ற ஸ்தூலப் பொருளும் தேவையில்லை என்று ஆகிறது.

அப்போது, பிறப்பும் அதனால் உண்டாகும் இறப்பும் இல்லாது போவதால், ஆன்மிகத் தேடல் என்பதற்கு அங்கு அவசியம் இல்லாது போகிறது.

ஆகவே, உடல் வந்துவிட்டால் அதற்குத் தேவை இருக்கிறது என்று புரிந்துக்கொண்டு, அந்த உடலைப் பயன் படுத்தி நாம் நமது உன்னத ஆன்மிகப் பாதையில் முன்னேறப் பார்க்க வேண்டும்.

மாறாக, உடல் இருக்கும்போது நமது ஐம்புலன்கள் மூலம் சுக, துக்கங்களை அனுபவிப்பதே வாழ்க்கை என்று இருந்து விட்டால், இந்த **பிறப்பு - இறப்பு** சுழல் தொடர்ந்துக் கொண்டே இருக்கும்.

ஆன்மிகப் பாதையில் பயணிப்பது என்பது, நம்மிடம் உள்ள அறியாமைகளை அகற்றி, நமது ஐம்புலன்களைக்

கட்டுப்படுத்தி அந்தப் புலன்களை இயக்கும் மூலத்தை அறிந்து, மனதை அந்த மகத்தான அறிவுடன் இணைப்பதே இன்பம் என்பதை உணர்ந்து, அனைத்து சீவராசிகளுக்கும் உள்ள ஒற்றுமை உணர்வையும் அறிவதே ஆகும்.

அதனால், உடல் ஒன்று தோன்றுகிறது என்றால் அது எதேச்சையாக ஏற்பட்டதில்லை. சூக்ஷ்ம வடிவில் உள்ள எண்ணங்களே ஒட்டுமொத்த தொகுப்பாகிய சூக்ஷும மனதின் பரிணாமமே ஸ்தூலமாகிய ஒரு உடலைத் தழுவி ஒரு சீவனாகப் பிறக்கிறது.

அதை "**சீவாத்மா**" என்றும் அழைக்கிறோம்.


பிறந்த அது உடலைத் தன்னுடையது என்று அபிமானித்துக் கொண்டு செயல்படும்வரை, அந்த செயல் விளைவுகள் அந்த ஸ்தூல உடலைப் பாதித்து, அந்த ஸ்தூல உடலுக்கு ஆதாரமான நுண்ணிய மனதை, காமம், க்ரோதம், லோபம், மோகம் போன்ற நுண்ணிய வடிவிலும் பாதிக்கும். அப்படிப் பாதிக்கப்பட்ட மனம் மேலும், மேலும் வருகின்ற இந்த பிறவிச் சுழற்சியில் கொண்டு சேர்க்கும்.

ஆக உடல் என்பது, நல்லதும், கெட்டதும் நடக்க இருக்கின்ற விளைநிலம். இதிலே மனம் என்பது நல்லதும், கெட்டதும் இந்த உடல் செய்வதற்கான விதை என்பதினால், விவேகி மட்டுமே இந்த விதையை நன்கு கவனித்து, அதன்

விளைச்சல் முழுமையடைந்து, அது முழுபயன் கொடுக்கும் வகையில் கொண்டு செல்வான்.

இந்த உடலையே பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் **க்ஷேத்ரம்** என்பார். ஷேத்ரம் என்றால் களம் அல்லது இடம் என்று பொருள். இதிலே, போர்புரிபவர்கள் இரண்டு பிரிவினர்கள். அவர்களில் ஒரு பிரிவினர் நல்லவர்கள். மற்றொரு பிரிவினர் கெட்டவர்கள். இந்த போரில் வெல்லப்போவது யார்...?

இதைப்பற்றி, இன்னும் ஒரு சுவாரஸ்யமான புரிதலின் மூலம் அறிந்துக் கொள்ள முயலலாம்.




அதாவது, இந்த **உடல்** என்ற தேரில் ஒருவன் (ஆன்மா) பயணம் செய்கிறான். தேரோட்டி (புத்தி) ஒருவன் உள்ளான். அவன் அந்த தேரை சரியாக செலுத்த வேண்டி, குதிரைகளின் கடிவாளத்தைக் (மனதை) கெட்டியாகப் பிடித்திருக்கிறான். அந்த தேரிலே, ஐந்து குதிரைகள் (ஐம்புலன்கள்) இழுக்கின்றன.

தேர் செல்லும் பாதைகள் (உலகியல் விஷய சுகங்கள்) பலவாறாக உள்ளது. ஆக, இது உடல் என்ற தேர்ப் பயணம்.

இந்த தேரின் பயணம் உலகப் பொருட்களாகிய சாலை வழியாகத்தான் சென்றாக வேண்டும். அதாவது உலக சுகங்களில் இருந்தும், உலகியல் பொருட்களிலிருந்தும் விலக முடியாது. ஆகவே, நாம் எதைச் செய்ய வேண்டுமானாலும் இந்த உலகப் பொருட்கள் மற்றும் உலக விஷய, சுகங்கள் ஆகியவற்றில் வாழ்ந்தபடியேதான் சாதிக்க வேண்டும்.

அத்துடன், பயணத்தின் வேகமும், நாம் சேரவேண்டிய இலக்கும், அந்த தேரிலே பூட்டப்பட்ட குதிரைகளைப் பொறுத்துத்தான் அமைகிறது. மேலும், குதிரையின் வேகம் கடிவாளத்தால் கட்டுப்படுகிறது. ஆக, கடிவாளத்தின் இயக்கம் தேரோட்டியைப் பொறுத்தது. எனவே, பயணத்தின் வெற்றியோ தோல்வியோ அது தேரோட்டியால் மட்டுமே நிர்ணயிக்கப் படுகிறது.

அதைவிடுத்து, குதிரைகளுடன் (புலன்களுடன்) போராடுவதாலோ, கடிவாளத்தைக் கட்டி வைப்பதாலோ எந்தப் பயனும் இல்லை.

தேரோட்டி (புத்தி) திறமைசாலியாக இருந்தால் மட்டுமே, இந்தப்பயணம் இனிமையாகவும், இன்னல்கள் இன்றியும் அமையும்.

அதுவே, தேரோட்டி தூங்கிக் கொண்டிருந்தால், நம் பயணம் என்னவாகும்?

உண்மையில், நம் நடைமுறை வாழ்க்கையில் என்ன நடக்கின்றது…? யோசித்துப் பாருங்கள்!

புலன்கள் தங்கள் போக்கில் போகின்றன. மனம் கட்டவிழ்ந்து பல திசைகளில் பரவிக் கிடக்கிறது. அதுவும் இன்றைய இணையதளமும், செல்போன் வருகையும் நம்மை படாதபாடு படுத்துகின்றது.

அத்துடன், இன்னும் நம் புத்தி விழிப்புறவில்லை. எல்லாவற்றிலும் குழப்பம், குறைகள், மற்றும் தோல்விகள் என இலக்கை அடைய முடியாதவாறு பல தடைகள் (Speed Breakers) உள்ளன. எனவே, இங்கு விழிக்க வேண்டியது தேரோட்டி மட்டும்தான். ஆக, தேரோட்டியாகிய புத்தியை எழுப்புவதே இப்போது நாம் செய்ய வேண்டியது ஆகும்.

அதைவிடுத்து, மனதையடக்க முயற்சிப்பதோ, மூச்சை பிடித்துக் கொண்டிருப்பதோ, ஆசனங்கள் போடுவதோ, ஆலயங்கள் செல்வதோ என எது செய்தாலும், பலன் வராது.

**இந்தப் பயணமும் இப்போது முடியாது.**

அதாவது, பயணமாக புறத்தில் நாம் காணும் க்ஷேத்ர தரிசனங்கள் (புனித யாத்ரையில் பல கோவில்களுக்கு செல்வது) எல்லாம், இறுதியில், தானாகிய க்ஷேத்திரத்தை (உடலை) கண்டு கொள்வது மட்டும்தான்.

அந்த உடலைக்கொண்டு, மனதில் எழும் ஏராளமான கெட்ட எண்ணங்களாகிய நூற்றுக்கணக்கான கௌரவர்களும், நல்ல எண்ணங்கள் என்ற ஒரு சில பஞ்ச பாண்டவர்களும், அத்துடன், புத்தி சக்தியாகிய ஸ்ரீகிருஷ்ணர் என்பவரின் துணைக்கொண்டு, மனதில் எழும் தீய எண்ணங்களாகிய நூற்றுக்கணக்கான கௌரவர்களை, சில நல்ல எண்ணங்களாகிய பாண்டவர்கள் வெல்வதே "**மஹாபாரதம்**" என்ற கதையின் உண்மையான தாத்பர்யம் ஆகும்.

ஆனால், நாம் அந்தகதையில் கூறப்பட்ட உண்மை தாத்பர்யத்தை விட்டு, விட்டு வெறும் கற்பனை கதா பாத்திரங்களில் வடிவமைக்கப்பட்ட கதைகளில் சிக்கி கொண்டு சிந்திக்க மறுக்கிறோம்.

எனவே, மனிதன் மனதைக்கொண்டு, மகத்தான அந்த அறிவை (இறைவனை) உணர்வதற்குத்தான் இந்த உடல் ஒரு கருவியாகத் தேவைப்படுகிறது.

पंचप्राणमनोबुद्धिदशेन्द्रियसमन्वितम् ।
अपंचीकृतभूतोत्थं सूक्ष्माङ्गं भोगसाधनम् ॥ १३॥

பஞ்சப்ராண மனோ புத்தி தஷேந்த்ரிய ஸமன்விதம் |
அபங்க்சீக்ருதபூதோத்தம் சூக்ஷ்மாங்கம் போகசாதனம் ||

வாயுக்கள் ஐந்து மனம் புத்தி ஈரைந்தாய்
ஏயும் கருவிகள் ஏய்ந்த நுண் – காயம்
கலவாத நுண்பூத காரியமாம் போகத்து
உலவாத சாதனமாம் ஓர் – **ஸ்ரீ ரமணர்**

(நுண்ணிய வடிவில் உள்ள ஐம்பூதங்களில் இருந்து உண்டான ஐந்து பிராண வாயுக்கள், மனம், புத்தி, ஞானேந்திரியங்கள் ஐந்தும் மற்றும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் என மொத்தம் 17 தத்துவங்கள் அடங்கியதை "**சூக்ஷும சரீரம்**" என்கின்றோம்.)

நம்முடைய கர்மவினையின்படி இந்த **சூக்ஷும சரீரம்** செயல்படும். அதாவது, மனமானது (சூக்ஷும சரீரம்) ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு விதமாக, அவரவர்களது கர்ம வினைக்கு ஏற்ப மாறுபடுகின்றது. அதன்காரணமாக, இந்த உடல் என்ற ஸ்தூல கருவியின் மூலம் சுக, துக்கங்களை அனுபவிக்கின்றது.

முந்தைய ஸ்லோகத்தில் உபாதிகளான கண்களுக்குத் தெரிகின்ற **ஸ்தூல சரீரம்** பற்றிப் பேசப்பட்டது என்றால், இங்கு கண்களுக்குத் தெரியாத **சூக்ஷ்ம சரீரம்** பற்றிப் பேசப்படுகிறது.

ஐம்பெரும்பூதங்களும் கலப்பதற்கு முன்னால் இருக்கும் நுண்ணிய வடிவில் பதினேழு பகுதிகளாக இருப்பதை **சூக்ஷ்ம சரீரம்** என்றும் விவரிக்கப்படுகிறது.

உடலின் பல பகுதிகளில் உள்ள வாயுக்களை **பிராண, அபான, சமான, வ்யான, உதான** என்ற ஐந்து அமைப்புகளோடு, உடன்பாடு - எதிர்மறை எண்ணங்களோடு சந்தேகத்துடன் இருக்கும் மனம், உறுதியாக இருக்கும் புத்தி இவ்விரண்டும் கூடி ஏழு பிரிவுகளும், ஞான இந்திரியங்களான ஐம்புலன்களின் சூக்ஷ்ம சக்தியான ஐந்தும், கர்ம இந்திரியங்களான வாய், கால், கை, பாயு (கழிவுக்கு), உபஸ்தம் (வம்ச விருத்திக்கு) என்ற ஐந்தும், ஆக எல்லாமாகச் சேர்ந்து பதினேழு ஆகின்றன.

நமது ஸ்தூல உடலில் சூக்ஷமமாக முதலில் நாம் காண்பது நமது சுவாச அமைப்பே ஆகும். அதற்குண்டான மூச்சு விடும் அமைப்பு **(பிராண)**, உடலிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய கழிவு அமைப்பு **(அபான),** நாம் கொள்ளும் உணவை சக்தியாக மாற்ற உதவும் ஜீரண அமைப்பு **(சமான),** மாற்றப்பட்ட சக்தியை உடலின் பல பாகங்களுக்கும் பரவலாகக் கொண்டு செல்லக்கூடிய இரத்த மற்றும் திரவ ஓட்ட அமைப்பு **(வ்யான),** அத்துடன், தும்மல், வாந்தி போன்றவைகள் மூலம் உடலுக்குத் தகாதவைகளை வெளியேற்றி உடலைக் காக்கவேண்டிய தற்காப்பு அமைப்பு **(உதான)** போன்றவைகளே முதலில் கூறப்பட்ட “**பஞ்ச ப்ராணன்**” என்ற வாயு அமைப்புகள் எனலாம்.

நாம் வெளியே காணும் ஐம்புலன்கள் சம்பந்தப்பட்ட கர்ம உறுப்புகள் அவையவைகளின் வேலையைச் சரியாகச் செய்வதற்கு, அதற்குத் தேவையான சக்தியை ஞான இந்திரியங்கள் மூலம் பெறப்படுகின்றது. அதாவது, நமது உடலில் செயல் உறுப்புகள் இருந்தாலும் அவைகள் சரியாக வேலை செய்ய வேண்டும் அல்லவா? இல்லை என்றால், கண் இருக்கும் ஆனால், பார்வை இருக்காது, காது இருக்கும் ஆனால், ஒன்றும் கேட்காது என்றபடிதானே அமையும்.

ஆகவே, இத்தகைய நுண்ணிய சரீரம் சரியாக வேலை செய்தால்தான் ஐம்புலன்கள் வழியே நாம் இந்த உலகைக்காண முடியும். இவைகள் மூலம் நாம் உலகை அறிவதால் இவைகளை "**ஞானேந்திரியங்கள்**" எனப்படுகின்றன.

ஐம்புலன்கள் மூலம் நமக்கு உலக விவரங்கள் கிடைப்பதுப் போன்று, நாம் இந்த உலகுக்கு அளிப்பதற்கு என்று மேலே கூறப்பட்ட ஐந்து **கர்மேந்திரியங்கள்** உள்ளன.

உலகில் நாம் செய்யக்கூடிய செயல்கள் எல்லாமே, இந்த ஐந்து கர்ம இந்திரியங்கள் மூலமாகவே நடைப் பெறுகின்றன. ஆக, இந்த பத்து இந்திரியங்கள் மூலமாக நாம் பெறுவதனாலோ, தருவதனாலோ வருகின்ற **சுக - துக்கங்களே** நம் வாழ்க்கையின் அனுபவங்களாக ஆகின்றன.

உலகத்தில் உள்ளவைகளை எல்லாம் அனுபவித்து, அதிலே எப்போதும் போகமாக இன்பத்தில் திளைக்கவே நாம் எல்லோரும் பிறந்திருக்கிறோம் என்று எண்ணியே அனைவரும் வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர்.

ஆனால், அந்த இன்பமோ நீடிப்பதில்லை, மேலும், இதுவரை இன்பமாய் இருந்தது, சில சமயங்களில் துன்பமாய் மாறுவதையும் அறியமுடிகின்றது.

அத்தகைய அனுபவங்கள் தான் ஒருசிலருக்கு இந்த புலன்களைக்கொண்டு **போகம்** அடைவதைவிட்டு, புலன்களைக் கட்டுப்படுத்தி **யோகம்** அடையும் வழிகளை பற்றிய ஆவலை உண்டாக்குகின்றது.

அத்தகைய ஆவலின் மூலம் அவன் அறிந்துக்கொண்ட ஆன்மீகப் பாதையில், சிறிது சிறிதாக மனத்தைக் கொண்டே மனதில் ஏற்றிக்கொண்ட ஏராளமான விசய, சுகங்களின் விபரங்கள் அறிந்து, விவேகத்துடன் அவைகளைப்பற்றி விசாரித்து, அலைப்பாய்கின்ற மனத்தை ஒருமுகப்படுத்திப் பயிற்சிகளைச் செய்வதே, இந்த உடல் என்ற உபாதிகளை நீக்கி ஆனந்தம் அடையும் ஒரே வழி.

ஸ்தூல மற்றும் நுண்ணிய சரீரங்களாகிய உபாதிகளைப் பற்றி, மேலேயுள்ள இரண்டு ஸ்லோகங்களில் பார்த்தோம்.

ஆக, மூன்று உபாதிகளான ஸ்தூல, சூக்ஷூம, மற்றும் காரண சரீரங்களில், நாம் காண்பது தவிர பிறரும் காணும்படி உள்ளது **ஸ்தூல உபாதி**. பிறர் காணவோ அல்லது அறியவோ முடியாதபடி, நாம் மட்டுமே உணரக்கூடியதாக உள்ளது **சூக்ஷ்ம உபாதி** எனப்படுகின்றது.

அடுத்த ஸ்லோகத்தில் வரும் மூன்றாவது உபாதியான காரண சரீரமாகிய "**அவித்யா**" எனப்படுவது நாமும், பிறரும் அறியாதபடி உள்ளது.

ஸ்தூல மற்றும் நுண்ணிய சரீரங்களாகிய உபாதிகளைப் பற்றி, முன் இரண்டு ஸ்லோகங்களில் கூறிவிட்டு, இங்கு மூன்றாவதான காரண சரீரத்தையும் கூறி, இந்த மூன்றாலும் பாதிக்கப்படாமலும், இம்மூன்றையும் கடந்து இருக்கும் **ஆன்மா** பற்றியும் இங்கு கூறுகிறார்.

அதாவது, ஒருவனுக்கு ஆன்மா என்பதைப்பற்றி அறிவதற்கும், அப்படி அறிந்தாலும், அதை உணர்வதற்குமான தடைகளாக உள்ளது எவைகள் என்றும், அவைகளில் தன்னை எது பாதிக்கிறது? என்றும் சாதகன் அறிந்து, அதற்கேற்ற பயிற்சிகளில் அவன் அவசியம் ஈடுபடவேண்டும் என்றால், அதற்கு அவனது சூக்ஷூம சரீரமாகிய மனதை மட்டுமே விசாரிக்க வேண்டும் என்பதே இங்கு கூறப்படுவது ஆகும்.

अनाद्यविद्याऽनिर्वाच्या कारणोपाधिरुच्यते ।
उपाधित्रितयादन्यमात्मानमवधारयेत् ॥ १४॥

அனாத்யாவித்யாநிர்வாச்யா காரணோபாதிருச்யதே |
உபாதித்ரிதயாதன்யமாத்மானமவதாரயேத் ||

ஆதியற்று இற்றென்று அறையொணா அஞ்ஞானம்
ஓதுவர் ஆதி உபாதியாய் – ஓதும்
உபாதிகளாம் மூன்றுடல்களின் வேறாய்
உபாதியில் ஆன்மாவை ஓர் – **ஸ்ரீ ரமணர்**

(இது எப்பொழுது தோன்றியது என்று தெரியாத, எந்த வார்த்தைகளாலும் விவரிக்கவும் முடியாத, அறியாமையாகிய உபாதியை **காரண சரீரம்** என்று கூறப்படுகின்றது. அதாவது, மூன்று சரீரங்கள் என்று கூறப்படும் ஸ்தூல, சூக்ஷ்ம மற்றும் காரண உபாதிகளுக்கும் வேறாக உபாதியற்ற ஆன்மாவை உணர்ந்திடுவாய்.)

"**அவித்யா**" என்கிற "**அஞ்ஞானம்**" பற்றி மேலே கூறப்பட்டிருப்பதைப் பற்றித் தெரிந்துக் கொள்ளும் முன்பாக, நமக்குப் புரிவதற்காக ஒரு பொருளைப் பற்றிய அறிவை அடைவதுப் பற்றி பார்க்கலாம்.

இதுவரை அந்தப்பொருளை பார்த்ததில்ல. அதைப்பற்றி கேள்விப்பட்டதில்லை என்ற நிலையில், நமக்கு அந்தப்

பொருளைப் பற்றிய அறிவு இல்லாததால், அந்தப் பொருள் இல்லாமலா போய்விட்டது?

ஆனால், நம்மைப் பொருத்தவரை அந்தப் பொருள் இல்லை என்பது மட்டும்தான் சரியான நிலை. அந்தப் பொருளைப் பற்றிய அறிவை நாம் பெறும் போது, அந்த அறிவை எப்போது பெற்றோம்?, எப்படிப் பெற்றோம்? என்பதை விவரிக்கவும் முடியும்.

ஆனால், அதைப்பற்றி அறியாதிருந்தோமே, அந்த அறியாமை எப்போது வந்தது? என்பதையோ அதைப்பற்றிய விவரங்களையோ நம்மால் கொடுக்க முடியாது.

ஆதேசமயம், என்ன கூறமுடியும்? என்றால், அந்தப் பொருளைப் பற்றிய அறிவு வந்ததும், அதைப் பற்றிய அறியாமை போயிற்று என்றுகூறி, அதுவரை அறியாமை இருந்தது என்றும் மட்டுமே அதைப்பற்றி கூற முடியும்.

ஆக, அறியாமை எப்போது தொடங்கியது? என்று கூற முடியாவிட்டாலும், அறியாமையைப் போக்க முடியும் என்பது புரிகின்றதல்லவா? எனவே, இதுப்போன்றுதான் ஆன்மாவை பற்றி பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு கூற வருகிறார்.

ஆன்மாவைப் பற்றிய காரண சரீரமான “**அவித்யா**” பற்றி அவர் விவரிக்கும்போது, “**அநாதி**” என்ற சொல்லைப்

பயன்படுத்தி, ஆன்மாவைப்பற்றி அது எப்போது தொடங்கியது என்பதை தெரிந்துக்கொள்ள முடியாது என்பதையும், மேலும் அதை "**அநிர்வசனீயம்**" என்ற வார்த்தையின் மூலம், அது எப்படி இருக்கும்? என்று வார்த்தைகளால் விவரிக்க முடியாது என்பதையும் கூறுகிறார்.

இதையே பகவான் ஸ்ரீரமணரும் அதை "**அஞ்ஞானம்**" என்று மொழிப்பெயர்த்து "**ஆதியற்று**" என்று சொல்லி அதன் '**தொடக்கமில்லாத**' தன்மையையும், "**இற்றென்று அறையொணா**" என்பதனால், '**இதுவென்று சொல்லமுடியாத**' அதன் தன்மையையும் விளக்குகிறார்.

அப்படிக் கூறப்பட்டதனால் இந்தக் **காரண சரீரம்** ஆதி உபாதியாய் இருக்கிறது. அதனால், இந்த உபாதி எல்லாவற்றிலும் மிக நுண்ணியதாய் இருப்பதினால், அது இருப்பவருக்கும் தெரிவதில்லை, மற்றவர்க்கும் தெரிவதில்லை.

இதைப்பற்றி இரண்டு கோணங்களில் நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.

முதலாவதாக, ஸ்தூல தேகம் இல்லாதபோது அது மனம் போன்ற நுண்ணிய தேகமாய் இருக்கிறது என்றும், அந்த நுண்ணிய தேகத்தின் விதை போன்ற மூலமாய் இந்த காரண சரீரம் இருக்கிறதென்றும் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இரண்டாவதாக, உண்மையில் இருக்கும் ஒன்றேயான ஆன்மாவை ஸ்தூல உபாதியான “**நான் உடலே**” என்ற அபிமானமும், சூக்ஷ்ம உபாதியான “**நான், எனது**” என்பன போன்ற மனத்தளவிலான எண்ணங்களும், காரண உபாதியான “**ஆன்மாவைப் பற்றிய அறியாமை**” என்பதும் ஆன்மாவை அறியும் தடைகளாக இருக்கும் உபாதிகள் என்று இதனைப் புரிந்து கொள்ளலாம்.

முன்னது, **பிறப்பு - இறப்பு** உண்டாவதற்கான காரண, காரியங்களையும், அவை தொடர்பான நிலைகளையும் அலசுவதாக இருக்கிறது.

பின்னது, ஆன்மாவை நாடும் சாதகன் ஒருவன் செய்ய வேண்டியது என்ன? என்பதைக் காட்டுவதாக அமைகிறது.

நாம் இந்த இரண்டாம் கோணத்தைத் தேர்ந்தெடுத்து மேற்கொண்டு பயணிப்போம்.

ஆன்மாவைப் பற்றிய அறியாமை என்பது தானும், தான் காணும் உலகமுமே உண்மை என நினைத்து, அதற்கு ஆதாரமாக ஆன்மா ஒன்று உண்டு! என்பதைத் தெரியாமல் இருப்பது.

அல்லது தெரிந்தாலும், அதை மறுப்பது! என்பதே அத்தகையவர்களது நிலை. நாம் இதுவரை பார்த்த மூன்று

விதமான உபாதிகளும் அவர்களுக்கு இருக்கின்றன என்றுதான் அதற்கு அர்த்தம்.

ஆன்மாவைப் பற்றித் தெரியாமல் இருப்பவர்களுக்கு அதைப்பற்றிக்கூறி, அவர்கள் தினமும் அடையும் **விழிப்பு - உறக்கம் - கனவு** நிலைகளை அவர்களே அலசும்படிக்கூறி அவர்களுக்கு மேலும் புரிய வைக்கலாம்.

ஆனால், அப்படி விளக்கங்கள் அளித்தும், ஆன்மாவை மறுப்பவர்களுக்கு எதைக்கூறி விளங்க வைக்க முடியும்?

அவர்கள் மறுப்பது விழிப்பு நிலையில்தான். அந்த **விழிப்பு** நிலை ஒன்று மட்டும்தான் அவர்களது நிலையா? மேலும், அவர்களது மற்ற இரண்டு நிலைகளுக்கும் அவர்கள் பதில் என்ன? என்றுதான் கேட்க முடியும்.

அவர்களது ஒரே ஒரு நிலையை மட்டும் வைத்துக் கொண்டு, உலகின் உண்மையை எப்படி நிலை நிறுத்த முடியும்? என்றுதான் கேட்க முடியும்.

ஆன்மாவைப் பற்றித் தெரியாத பலரும் விழிப்பு நிலையில் இருந்துக்கொண்டு, விவேகத்தை வைத்துக்கொண்டு, தன்னை அறிவதற்குப் பதிலாக, தனக்கு வேறாக உள்ள இந்த உலகத்தை அறிய ஆவல் கொள்கிறார்கள். அனைவருமே, அந்த அறியாமை

நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குக் காலம்தான் கனிந்து வழிகாட்ட வேண்டும்.

அந்தக் கால இடைவெளியில் அவர்கள் செய்யும் நற்காரியங்கள் அவர்களுக்குக் கை கொடுக்கும். இதுதான் சாதகன் ஆவதற்கு முன் ஒருவனுடைய காரண சரீர நிலை.

காரண சரீரத்தை விதைப்போன்றது என்று முன்பே கூறினோம் அல்லவா? ஆக, **பிறப்பு - இறப்பு** கோணத்திலிருந்தும் இதனை நாம் அலசலாம்.

ஒரு விதை முளைப்பதற்கும் காலம் கனிந்து அதற்கேற்ற சூழ்நிலைகள் உருவாக வேண்டும். எல்லா விதைகளுமே துளிர்த்து முளைப்பதில்லை; முளைக்கும் எல்லாமே வளர்வதில்லை, வளரும் எல்லாமே பூப்பது இல்லை, பூக்கும் எல்லாமே காய்ப்பதில்லை, காய்க்கும் எல்லாமே கனிகள் ஆவதில்லை.

இதேப்போன்றுதான் ஆன்மாவைப் பற்றி அறிவதற்கும் காலம் கனிந்து அதற்கேற்ற சூழ்நிலைகள் உருவாக வேண்டும். ஆன்மாவைப் பற்றித் தெரிந்துக்கொள்ள முயற்சிக்கும் சாதகன் ஒருவனுக்கு, அவனது உடலும், உடல் சார்ந்த உலகமும் அவனுக்குத் ஸ்தூல சரீரமாகவும், அவனது மனோநிலைகள் அவனுக்கு சூக்ஷ்ம சரீரமாகவும் தடைகளாக நிற்கும்.

இங்கு முதலில் அவன் தன் மனதைக் கொண்டே விசாரம் செய்து, தான் உடலுக்கும் அப்பால் இருப்பதை தன் **விழிப்பு - உறக்க - கனவு** நிலைகளை அலசுவதன் மூலம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

உடலால் குடும்பத்திற்காக, ஊருக்காக, நாட்டுக்காக உழைப்பது எல்லாம் ஒருவனைத் தன்னையும் கடந்து, அனைவரிடமும் உள்ள இறைத்தன்மையை உணரச் செய்து அன்பு காட்டச் செய்யும்.

இதுப்போன்ற பல வழிகள் உண்டு. அத்தகைய வாழ்க்கை முறைகள் அவனுக்கு மனக் கட்டுப்பாட்டைக் கொடுத்து, உடலைக் கடந்த ஆன்மாவைப் பற்றி அறிவதை புத்தி அளவில் கொண்டுவிட்டு அத்துடன் நின்றுவிடும். அங்கு மனமும் முழு அளவில் அப்படியே இருக்கும்.

அதன்பின் ஏதேனும் ஒரு தியானத்தில் மனத்தை ஒருமுகப்படுத்தி, அதன் நிலையற்ற தன்மையை உணர்ந்து, இவையெல்லாம் நானல்ல என்றால், பின் தான் யார்? என்று விசாரத்தைத் தொடர்ந்து நடத்த, தன் உள்ளிருந்து வரும் ஆன்ம சக்தியால் மட்டுமே ஒருவன் தன் உள்ள நிலையை உணர முடியும்.

அதாவது, இங்கு “**நான் யார்?**” என்று கேட்கும் வரை விசாரம் புத்தி அளவில் இருக்கும்.

ஆனால், அதற்கு அந்த அறிவை வைத்துக்கொண்டே விடைத்தேட முயற்சிக்கக் கூடாது.

அப்படி அறிவின் தூண்டுதலால் வரும் விடைகளை மௌனமாகக் கவனித்துக்கொண்டே ஒவ்வொரு எண்ணமும் வரும்போது அதைத் தொடர முயற்சிக்காமல், அதைக் கவனித்துக் கொண்டே இருக்கப் பழகப் பழக, ஒருவன் தன் மனமும் இன்றி, தான் எப்போதும் உள்ள நிலையை அடையலாம் என்று அப்படி அடைந்தோர் கூறியிருக்கின்றனர்.

அந்த நிலையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் ஆனந்த நிலையையும், ஆனால் உறக்கத்தில் உணராத அதை அப்போதே உணர்ந்தும் அனுபவிக்கலாம் என்று அவர்கள் வாழ்ந்து காட்டிச் சென்றிருக்கின்றனர்.

அதனால் மூன்று சரீரங்களாகிய உபாதிகள் விலக, ஆன்மா தன்னில் தானே ஒளிவிட்டு நிற்பதை ஒருவன் தன் உணர்வினால் மட்டுமே அப்படி இருந்து அறிய முடியும்.

அந்த நிலையில் அறிவதற்கு என்று வேறாக இன்னொன்று ஏதும் இல்லை. **அறிவே அறிவாய் தன்னை அறிந்து நிற்கிறது** என்பார்கள் ஆன்மாவை உணர்ந்தவர்கள்.

पंचकोशादियोगेन तत्तन्मय इव स्थितः ।
शुद्धात्मा नीलवस्त्रादियोगेन स्फटिको यथा ॥ १५॥


பஞ்சகோஷாதியோகேன தத்தன்மய இவ ஸ்திதஹ |
ஷுத்தாத்மா நீலவஸ்த்ராதியோகேன ஸ்படிகோ யதா ||

கோசங்கள் ஐந்து முதற் கூட்டுறவால் ஆன்மாவும்
மாசிலதே ஆயினும் அவ்வமயம் – நேரே சருவும்
நீல படாதி கலப்பால் நிர்மலமாம் படிகம்
போலவே ஒட்டாப் பொருள் – **ஸ்ரீ ரமணர்**

(தன் எதிரில் உள்ள நீல நிற துணியின் வர்ணத்தை எடுத்துக் கொண்ட ஒரு நிர்மலமான ஸ்படிகம் அந்த நீல நிறத்தில் காட்சியாவதுப் போன்று, இயற்கையில் மாசு மருவற்று விளங்கி, எதிலும் ஒட்டாத ஆன்மாவானது அதை மறைக்கும் ஐந்து கோசங்களின் குணங்களோடு தோன்றுகிறது.)

ஆன்மாவுக்கு உபாதியாக **ஸ்தூல, சூக்ஷும** மற்றும் **காரண** உடல்கள் இருப்பதாகப் பார்த்தோம். அதுப்போன்று ஐந்து கோசங்கள் இந்த உடல்களுக்குக் காணப்படுகின்றன. அவைகள், **அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம்** மற்றும் **ஆனந்தமய கோசம்** போன்றவைகள்.

இங்கு கூறப்பட்டிருக்கும் அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞாயனமய, ஆனந்தமய என்ற ஐந்து கோசங்களும் அந்த மூன்று உடல்களின் விவரங்கள். '**கோசம்**' என்றால் உறை என்றும் அவைகளை ஒன்றுக்குள் ஒன்றாக இருப்பதாகவும் கொள்ள வேண்டும். அதாவது, இந்த உறைகளைக் கொண்டு ஆன்மாவின் மீது மூடப்பட்டுள்ளன. இந்த உறைகளை எல்லாம் விலக்கினால் தானாக விளங்குவது **ஆன்மா** என்று பொருள்.




நிர்மலமாய் விளங்கும் ஆன்மா இந்தக் கோசங்களால் மூடப்பட்டு, மறைக்கப்படுவதால் அவைகளின் குணங்களோடு காணப்படுகின்றன. வர்ணங்கள் (நிறங்கள்) எதுவுமில்லா ஒரு பளிங்கு கண்ணாடிக்கல் அருகே வைக்கப்பட்ட நீல நிற துணியின் வண்ணம் அந்த பளிங்குமீது ஏற்றி வைக்கப்பட்டு,

அந்த பளிங்கு அந்த வண்ணத்தோடு இருப்பதாகக் காட்டுவதை அதற்கு உவமையாகக் கூறுகிறார்.

நாம் சாப்பிடும் உணவால் உடல் உண்டாகி வளர்வதால், உடலாகிய ஸ்தூல தேகமே **அன்னமய கோசம்** எனப்படுகிறது. பஞ்சபிராணன்களும், பஞ்ச கர்மேந்திரியங்களும் சேர்ந்துள்ளது **பிராணமய கோசம்.** எனப்படுகின்றது. அவ்வாறே, பஞ்ச ஞானேந்திரியங்களும், மனமும் சேர்ந்தது **மனோமய கோசம்** எனப்படுகின்றது. புத்தியாகிய அறிவின் இருப்பிடம் **விஞ்ஞானமய கோசம்** ஆகும்.

இதிலே, இந்தக் கடைசி மூன்று கோசங்களும் சேர்ந்ததுதான் **சூக்ஷ்மசரீரம்** அல்லது **நுண்ணியசரீரம்** எனப்படுகின்றது. காரண சரீரமாகிய மூன்றாவது உடல்தான் **ஆனந்தமய கோசம்** எனப்படுகிறது. இந்த கோசங்கள் ஆன்மாவை மறைப்பதும் அல்லாமல், தானே ஆன்மாவாக இருப்பதாகவும் காட்டும் வலிமை கொண்டவைகள்.

அதனால், ஆன்மாவை உணர்ந்து விட்டேன் என்று யாராவது சொன்னால், அவன் அனேகமாக இந்த கோசங்கள் எதிலோ மாட்டிக் கொண்டுள்ளான் என்று எளிதாகக் கூறிவிடலாம். ஏனென்றால், ஆன்மாவைக் கண்டவருக்கு, அதை விண்டு உரைக்க முடியாது. அந்த ஆன்மாவிலேயே இலயித்து இருக்கத்தான் முடியும்.

वपुस्तुषादिभिः कोशैर्युक्तं युक्त्यवघाततः । (युक्त्याऽवघाततः)
आत्मानमन्तरं शुद्धं विविच्यात्तण्डुलं यथा ॥ १६॥

வபுஸ்துஷாதிபிஹி கோஷைர்யுக்தம் யுக்த்யவதாதஹ |
ஆத்மானமந்தரம் ஷுத்தம் விவிச்ச்யாத்தண்டுலம் யதா ||

உடல் பஞ்சகோச உமி ஆதியோடு உள்
சுடர் பரிசுத்த ஆன்மாவைத் – திடமான
உத்தியினால் குத்தி ஒழித்து அவற்றை அரிசி
ஒத்தறிய வேண்டும் உணர் – **ஸ்ரீ ரமணர்**

(உமியுடன் கூடிய நெல்லை பதமாக உலக்கையால் குத்தி அரிசியையும், உமியையும் தனித்தனியாகப் பிரித்து எடுப்பதுப் போன்று, பரிசுத்த ஆன்மாவை மறைக்கும் உடல் முதலான ஐந்துகோசங்களை திடமான சுருதி, யுக்திகளினாலும், சாஸ்திர விசாரங்களினாலும் பிரித்து நீக்கி, உள்ளே சுடர் விட்டு ஒளிரும் ஆன்மாவை உணர வேண்டும்.)

முந்தைய செய்யுளின் கருத்து இங்கு தொடர்கிறது.

ஐந்து வித்தியாசமான உறைகளால் ஆன்மா மூடப் பட்டிருப்பதால், எந்தெந்த உறைகள் ஒருவனுக்கு பலமாகவும், அழுத்தமாகவும் இருக்கின்றனவோ?... அவைகளுக்குத் தகுந்தபடி ஆன்மாவும் அவைகளைப் போன்றே தோன்றும் என்று பார்த்தோம்.

உதாரணமாக, **அன்னமயகோசம்** என்ற ஸ்தூல உடற்பற்று இருப்பின், அவனுக்கு தன்னுடைய உடல்தான் "**நான்**" என்ற அபிமானம் இருக்கும். ஒவ்வொருவருக்கும் இந்த நிலைமை வேறுபட்டாலும், அனைவருக்குமே மூடியுள்ள கோசங்களை நீக்குவதற்கு உண்டான வழிகளாக, வெவ்வேறு விதமான **யோகம், தியானப் பயிற்சிகள்** தேவைப்படுகின்றன.

அதேசமயம், ஆன்மா அவைகள் எதனாலும் பாதிக்கப் படவில்லை என்றாலும், ஒவ்வொருவரது முன் வினைகளின் பயன்களே, வெவ்வேறு கோசங்களாக இடையில் நின்று மறைப்பதால் அவைகளை எப்படி நீக்க வேண்டும்? என்று ஒரு உவமானத்துடன் இங்கு கூறப்படுகின்றது.



அந்தக் காலத்தில் கிராமப் புறங்களில் உள்ள வீடுகளில் தங்கள் வயலில் அறுவடை செய்த நெல்லில் தங்களது தேவைக்கு என தனக்கும், தன் சுற்றத்தார்க்கும் வேண்டிய

அளவு ஒதுக்கி எடுத்து வைத்துக்கொண்டு, அதை வெயிலில் காய வைத்து நெற்குதிரில் சேமித்து வைத்திருப்பார்கள்.

எப்போதெல்லாம் அரிசி தேவையோ, அப்போது அந்த அளவு நெல்லை மட்டும் குதிரில் இருந்து எடுத்து வந்து கைகள் கொள்ளும் அளவு உரல் ஒன்றில் இட்டு, நின்றுக் கொண்டு நீளத்தடி போன்ற உலக்கையை உயர்த்தி, உரல் மேல் உள்ள நெல்லைக் குத்துவார்கள். இது ஓர் பக்குவமாகவும், பதமாகவும் செய்யப்படும். வேகமாகவும், விறுவிறுப்பாகவும் உலக்கையை உரலில் போட்டால், உரலில் உள்ள நெல்மணிகள் பொடியாகி மாவாகி விடும். ஆகவே, அதை மிகவும் நேர்த்தியாகச் செய்வார்கள். அப்படிச் செய்வதை நெல் இடிப்பது என்று அழைப்பார்கள்.

ஆக, உலக்கையை பதமாகக் குத்தினால் நெல்லின் மேல் உறை மட்டும் தனியாகக் கழன்று, உமி தனியாகவும், அரிசி தனியாகவும் என சேதமாகாமல் முழுதாகவும் பிரியும். பின்பு அந்தக் கலவையை முறம் ஒன்றில் போட்டுப் புடைத்தால் கனமான அரிசி முறத்தில் தங்கி, மெலிதான உமி தனியாகக் காற்றில் பறந்து வெளியே வந்து விழும். இவ்வாறு மட்டுமே, அன்றைய காலங்களில் அரிசி நெல்லிலிருந்து பிரிக்கப்பட்டது.

இந்த ஸ்லோகத்தின் வாயிலாக அன்றைய உலக்கையில் நெல் குத்துவதை ஆத்ம விசாரத்திற்கு உவமானமாக பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அரிசிக்கோ உமி என்ற ஒரே ஒரு கவசம் மட்டும்தான் இருக்கிறது. ஆன்மாவுக்கோ நாம் பார்த்தபடி பல கோசங்கள் (கவசங்கள்) இருக்கின்றன. அவைகளில் யார் யாருக்கு? அது எவ்வளவு தடிமனாகவும், பலமாகவும் இருக்கலாம் என்பதுவும் தெரியாது. எனவே, உமியை மட்டுமே உறையாகக் கொண்ட அரிசிக்கே மேலே கூறியபடி அவ்வளவு பாடுபட வேண்டும் என்றால், ஆன்மாவைப் போர்த்தியுள்ள ஐந்து கவசங்களை அகற்ற எவ்வளவு சிரமங்கள் இருக்குமோ...? தெரியாது.

அதேசமயம், நெல்லை எவ்வளவு நேரம் உலக்கையால் குத்த வேண்டும்? என்று யாராவது கேட்டால், அரிசி கிடைக்கும்வரை என்றுதான் கூறமுடியும்.

ஆனால், ஆன்மாவுக்கு? என்று யாராவது கேட்டால் என்ன கூறமுடியும்?

ஆக, அவரவர்களுக்கு கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ள கோசங்களைப் பொருத்து, அதற்கேற்றவாறு விசாரத்தின் வீரியம் இருக்க வேண்டும் என்றும், ஆன்மாவை உணரும்வரை அவசியம் விசாரம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதுவும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஒருவனுக்கு நல்வழி காட்டும் ஸத்குரு என்பவர், அவனது எத்தனையோ நற்காரியங்களின் மூலம் அவனுக்கு கிடைக்கப் பெற்ற ஒரு வரம்தான்.

அத்தகைய ஸத்குருவின் உபதேசங்களைக் கேட்டு, அதை மனதில் உள்வாங்கி சிந்தித்து, அந்த உபதேசங்களுக்கு ஏற்ப தன் வாழ்க்கை முறையை வகுத்து, அதன் வழியில் நின்று, தன் மனதாலும், உடலாலும், வாக்காலும் செய்யப்படும் செய்கைகள் அனைத்தும் அந்த ஆன்மாவை உணர்வதற்கே என்ற வைராக்கியம் கொண்ட சாதகனுக்கே ஆன்மாவை உணரும் பாக்கியம் உண்டாகின்றது.

தேவைக்கு மேலாக வெளி விஷயங்களில் மனதைச் செலுத்தாது இருப்பதும், ஆன்மாவைத் தவிர வேறொன்றையும் நினையாது இருப்பதும் ஒன்றே சாதகன் ஸத் விஷயங்களில் சாதுக்களின் தொடர்பில் இருப்பதின் சாராம்சமாகும்.

முன்னது பயிற்சியின் போது நாம் கடைப்பிடிக்கும் வழி என்றால், பின்னது நாம் அந்த வழி நின்று உணரவேண்டிய உன்னத குறிக்கோள் எனலாம். எனவே, தினசரி வாழ்வில் ஆன்மாவை உணர முடியாதபடி பல நிகழ்ச்சிகள் நடந்தாலும், நம்பிக்கையை மட்டும் தளரவிடாது தொடர்ந்து விடாமுயற்சி செய்பவனுக்கே **ஞானம்** கைகூடுகின்றது.

பஞ்ச கோசங்களும் ஆன்மாவைப் போன்றே தோற்றம் அளித்தாலும், அவைகள் ஆன்மாவல்ல! என்றும், ஆன்மா மூன்று சரீரங்களையும் தாண்டியது, அத்துடன் அவைகளையும் உள்ளடக்கியது என்றும், அந்த ஆன்மா எங்கு இருக்கிறது? என்றும் இனிக் காணலாம்.

सदा सर्वगतोऽप्यात्मा न सर्वत्रावभासते ।
बुद्धावेवावभासेत स्वच्छेषु प्रतिबिम्बवत् ॥ १७॥

ஸதா சர்வகதோப்யாத்மா ந சர்த்ராவபாசதே |
புத்தாவேவாவபாசேத ஸ்வச்சேஷு பிரதிபிம்பவத் ||

எங்குமே என்றும் இருப்பினும் ஆன்மாவும்
எங்குமே ஆன்மா இலகிலை – துங்கமாம்
புத்தியிலேயே பொலியும் நிழல் சொச்சமாம்
வத்துவில் தோன்றும் வகை. – **ஸ்ரீ ரமணர்**

(ஆன்மாவானது எங்கும், எதிலும், எப்போதும் நிறைந்திருந்தாலும், அது அனைத்து இடத்திலும் பிரகாசிப்பது இல்லை. சுத்த ஸ்படிகம் போன்ற கலங்கமற்ற நிர்மலமான பொருட்களில் மட்டுமே பிரதிபிம்பம் பிரகாசமாகக் காட்சியளிப்பதைப் போன்று, கூர்மையான, நுண்ணிய, கலங்கமற்ற புத்தியிலேயே **ஆன்மா** பிரகாசிக்கின்றது.)

ஆன்மா எங்கும் உள்ளது. அது எல்லாவிடத்திலும், எல்லோரிடத்திலும் நிறைந்து இருக்கிறது என்றால், அதைப் பார்ப்பதற்கு ஏன் அவ்வளவு சிரமப்பட வேண்டும்? என்று யாராவது கேட்டால் அது நியாயமானதுதானே…!

அது ஏன்? அவ்வளவு எளிதாக எல்லோருக்கும் காணப்படவில்லை என்றால், அதைத்தேடி அறிந்துக்கொள்ள

முனைபவர்கள் அதைப்பற்றி சரியாகப் புரிந்துக் கொள்ள வில்லை! என்றுதான் கூறப்பட வேண்டும்.

ஆன்மா ஒருவனுக்கு வெளியே மட்டும் உள்ள பொருள் என்றால், அவனுக்கு வேறாக உள்ள அதைத் தேடிக்கண்டு பிடித்து அவனிடம் கொடுத்து விடலாம்.

ஆனால், அவ்வாறு கேள்வி கேட்கும் அவனுள்ளேயும் ஆன்மா இருப்பதை, அவன்தானே கண்டுபிடிக்க வேண்டும்?

அப்படியே முயன்று பார்த்தும், ஒருவனால் அதை அறிய முடியவில்லை என்றால், அவன் அதற்கு இன்னமும் தயாராகவில்லை என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

அதாவது, மற்ற பொருட்களைப் புறத்திலே தேடுவதுப் போன்று அவன் ஆன்மாவையும் அவனிடம் உள்ள புத்தி சக்தியினால் அறிவார்த்தமாகத் தேடிக் கொண்டிருக்கிறான் என்றுதான் அர்த்தம்.

ஒருவனது அறிவுக்கே ஒளி கொடுக்கும் ஆன்மாவை எப்படி அடைவது? அல்லது உணர்வது? என்று பார்க்க வேண்டும். சரி!, ஆன்மா எங்கும் நிறைந்து இருக்கிறது! என்றால், பிறகு ஏன் அது அனைவருக்கும் காணப்படவில்லை! அல்லது உணரப்படவில்லை! என்று தோன்றுகிறது அல்லவா?

அப்படித் தோன்றுவது யாருக்கு என்று தெரிகிறதா?

தெரியவில்லையே! என்று கூறி வைராக்கியம் இல்லாத மனிதர்கள் அந்த இடத்திலேயே நின்று விடுவார்கள். அவ்வாறு இல்லாமல், முயற்சியை மேலும் தொடர வேண்டும் என்ற ஆர்வம் உள்ள மனிதர்கள் மட்டுமே அந்த ஆன்மாவை அனுபவமாக அறிகிறார்கள்.

எவ்வாறு ஒரு கண்ணாடியின் மேல் அழுக்கு படர்ந்திருந்தால், அதில் பார்ப்பவனின் பிரதிபிம்பத்தை அவன் தெளிவாகப் பார்க்க முடியாதோ? அதுப்போன்று, மனதிலும், புத்தியிலும் கலங்கம் உள்ளவர்கள் அந்த ஆன்மாவை தெளிவாகப் பார்க்க முடியாது.

ஆக, ஒரு சாதகனின் தற்போதைய அறியாமை நிலைக்குக் காரணம் அவனிடம் உள்ள கலங்கமான மனநிலை அவனை ஆன்மாவை அறியவிடாமல் தடுக்கின்றது.

அதாவது, கண்ணாடியில் பார்ப்பவனின் பிரதிபிம்பம் தெரியாததால், அங்கு கண்ணாடியே இல்லை! என்று கூறமுடியுமா? அவன் அதன்மேல் உள்ள அழுக்கைத்தானே துடைக்க வேண்டும்? அதாவது, கண்ணாடியின் மேல் உள்ள அழுக்கைத் துடைப்பது ஒன்றுதான் அவனுக்கு எளிதான வழி.

அதைவிடுத்து, அங்கு கண்ணாடியே இல்லை என்று தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது அவனது அறியாமை என்றே கூறப்பட வேண்டும்.

உதாரணமாக, வெட்டி எடுக்கப்பட்டு கொண்டுவந்த ஒரு பளிங்குக்கல்லை எடுத்துக் கொள்ளுங்கள். அதன்மீது அழுக்குகள் படிந்து உள்ளதினால், அதிலும் பிரதிபிம்பம் அறவே தெரியாது.

ஆனால், அந்த அழுக்கை நீக்க வேண்டி, அதைத் தேய்க்கத் தேய்க்க அதன் பளபளப்பும் மெருகும் கூடிவரவே, அதன் எதிரே வைக்கப்படும் பொருளின் பிரதிபிம்பம் தற்போது தெளிவாகத் தெரியவரும். ஆயினும், அது நாம் முகம் பார்க்கும் கண்ணாடிப் போன்று இருக்காது என்பது வேறு விஷயம்.

வெறும் முகம் பார்க்கும் கண்ணாடி என்றால், அதில் உள்ள அழுக்கைத் துடைத்தால் மட்டும் போதும். அதுவே, பளிங்குக் கல்லை வெகு நேரம் மிகவும் அழுத்தித் தேய்த்து, அழுக்கு நீக்கி, சுத்தம் செய்து பளபளப்பாக மாற்ற படாதபாடு பட வேண்டியிருக்கிறது.

அதுப்போன்று, ஆன்மாவை மறைத்துக்கொண்டு, அதனை மூடியிருக்கும் கோசங்களைப் பொருத்து, வெவ்வேறு விதமான முயற்சியும் சாதகனிடத்தில் அமைய வேண்டும்.

அதாவது, ஆன்மா தன்னில் தானே பிரகாசிக்காது இருப்பதற்குக் காரணம், அதன்மீது மூடப்பட்ட கோசங்களே ஆகும்.

ஆன்மாவைப் பற்றிக் கேட்டறிவது என்பது வெறும் புத்தியளவிலே மட்டும்தான் என்று பார்த்தோம். அதாவது, இதை ஏட்டுச் சுரைக்காய் எனலாம். இது சமைத்து சாப்பிடும் கறிக்கு ஒப்பாகாது.

ஆனால், அதை உணர்வதற்கு நாம் எடுக்கும் **விசாரம், தியானம்** போன்ற முயற்சிகள் தொடக்கத்தில் "**நான்**" என்ற எண்ணத்தோடு ஆரம்பிக்கப்படுவதுதான் என்றாலும், அந்த நிலைப்பாடு என்பது, ஒரு புத்தகத்தின் படத்தில் பார்த்த சுரைக்காயை, உண்மையாகவே நிஜத்தில் காய்கறி கடையில் கண்டு கொள்வதற்குச் சமம்.

அதுப்போன்று, இந்த "**நான்**" என்பது, உடல், மனம் என்று ஸ்தூலத்திலிருந்து நுண்ணிய வடிவான சூக்ஷும அகங்காரமாக மாறிச் சென்று கொண்டிருக்கும்.

தியானத்தால் பக்குவப்பட்ட நிலையில், நிர்மலமான நுண்ணிய மனமானது தன்னுள் கிளம்பும் எண்ணங்களை கவனித்துக் கொண்டு இருக்கும்.

நம் கோசங்களுக்குத் தகுந்தாற்போல் அவ்வப்போது கிளம்பும் எண்ணங்களைத் தொடராமல், அந்த எண்ணங்களை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்தால், ஒரு நிலையில் கேள்வி எதுவும் கேட்காத, "**நான்**" என்ற தன்னிருப்பின் மீது மட்டுமே கவனம் கொண்டிருக்கும் நம் அறிவு மிகவும் நுண்ணியதாக மாறுகின்றது.

அப்படிப் பழகப் பழக, அந்த நுண்ணிய அறிவு எந்தவித முயற்சியும் செய்யாது, தனது இயல்பான நிலையிலே நிற்கும்போது, **ஆன்மா தன்னில்தானே பிரகாசிக்கும்** என்று இங்கு கூறவருகிறார் பகவான் ஸ்ரீசங்கரர்.

இதுமட்டுமே, நாம் படிக்கின்ற புத்தகத்தில் படமாக வரையப்பட்டுப் பார்த்த சுரைக்காயை, காய்கறிக்கடையில் நிஜத்தில் பார்த்துக் கண்டுகொண்டு விட்டாலும், அதை சமைத்துச் சாப்பிட்டால் மட்டுமே அதன் உண்மையான சுவையை அனுபவமாக உணர முடியும்.

அதுப்போன்று, ஆன்மாவைப் பற்றி கேட்பது என்பது, வெறும் புத்தி (மனம்) அளவிலே மட்டும் நின்றுவிடாமல், ஆன்மாவை உணர்வதற்காகச் செய்யப்படும் பலவாறான பயிற்சிகள் அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி, அந்த ஆன்ம அனுபவம் என்பது, **மனம், புத்தி** போன்றவைகளுக்கு அப்பாற்பட்டு, மிகவும் நுண்ணியதாக மாற்றப்பட்ட அறிவில் அந்த **ஆன்மா** (அறிவு) தன்னில் தானாய் பிரகாசிக்கத் தொடங்கும் என்று கூறப்படுகின்றது.

देहेन्द्रियमनोबुद्धिप्रकृतिभ्यो विलक्षणम् ।
तद्वृत्तिसाक्षिणं विद्यादात्मानं राजवत्सदा ॥ १८॥

தேஹேன்த்ரயமனோபுத்திப்ரக்ருதிப்யோ விலக்ஷணம் |
தத்வ்ருத்திசாக்ஷிணம் வித்யாதாத்மானம் ராஜவத்சதா ||

உடல்கருவி உள்ளமொடு புத்தி மாயை
விடவேறு அவற்றின் விருத்தி – யுடனே
எவைக்குமே சாட்சியாம் என்றும் ஆன்மாவை
அவைக்கு அரசன் போல அறி. – **ஸ்ரீ ரமணர்**

(ஸ்தூல தேகம், ஐந்து இந்திரியங்கள், அத்துடன் மனம், புத்தி போன்ற சூக்ஷும தேகம் மற்றும் காரண தேகமாகிய அஞ்ஞானம் முதலான இவைகளுக்கு வேறானதாகவும், மேலும், அவைகள் செய்யும் காரியத்தோடு சம்பந்தப்படாமல் அனைத்திற்குமே சாட்சியாக மட்டுமே இருக்கின்ற ஆன்மாவை எப்போதும் அவைகளுக்கு அரசனைப் போல அறிவாய்.)

"**நான்**" என்பது, இந்த இந்திரியங்கள் இருக்கும் பரு உடல் மட்டுமல்ல, அதற்கும் மேலானவன். அவைகளால், தெரியவரும், இந்த உலகத்தில் உள்ளவைகளைப் பற்றிய எனது எண்ணங்களின் தொகுப்பான மனதிற்கும் மேலானவன். '**நான்**', '**எனது**' போன்ற எல்லா எண்ணங்களையும் வகைப்படுத்தித், தொகுத்து அவைகளினின்றும் பல உருவகங்களை உருவாக்கிச் செயல்படும், எனது புத்தியாகிய அறிவுக்கும் மேலானவன்.

இவ்வாறு, “**நான்**” என்பவன் எப்படிப்பட்டவன் என்று இந்த பரு உடலாகிய ஸ்தூலத்திலிருந்து, சிறிது, சிறிதாக நுண்ணிய நிலையாகிய சூக்ஷுமத்திற்குச் செல்லச் செல்ல அங்கு ஓர் அமைதி உண்டாகிறது. அந்த அமைதியில் நான் ஆழ்ந்து இருக்கும்போது, ‘**நான் இருக்கிறேனா?**’ என்ற சந்தேகமா வரும். உண்மையில், அங்கும் **நான் மட்டுமே** இருப்பதால்தானே, அந்த அமைதி நிலையையும் என்னால் அனுபவிக்க முடிகிறது.

ஆக, அந்த அமைதி நிலையில் அனுபவமாகும் **நான்** என்பதும், அந்த அமைதி நிலையைவிட்டு, வந்த வழியிலேயே பின்னோக்கிச் சென்று, ஆர்பாட்டமான நிலையில் உள்ள **நான்** என்பதும் வேறு, வேறாக இருக்க முடியுமா? அந்த அமைதியில் இருக்கும் நான்தானே அப்போதும் இருப்பேன்?

ஆனால், இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், அமைதி நிலையில் இருக்கும் **நான்** என்னை யார்? என்று அறியக்கூடியவனாக அப்போது இருப்பேன். ஆனால், ஆர்பாட்ட நிலையில் இருக்கும் **நான்** என்னை யார்? என்று அறியமுடியாத நிலையில் அப்போது இருப்பேன். ஆக, எப்போதும் ‘**நான் இருப்பேன்**’ என்பது புரிகின்றதல்லவா?

இதிலே, அமைதியும், ஆர்ப்பாட்டமும் யாருக்கு உண்டாகின்றது? என்பதை உணரும் உண்மையான “**நான்**” சாட்சி மாத்திரமாகவே எப்போதும் இருக்கிறேன்.

எப்போது, நம்முடைய ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களால் எழுந்த புத்தி அடங்கி, உலகினைப் பற்றி அறிவிக்காது, நமது உண்மை இருப்பைப் பற்றி மட்டுமே அறிய வைக்கிறதோ? அப்போது உள்ள "**நான்**" எனும் உணர்வு, அப்போது மட்டும் அல்லாது, எப்போதும் உள்ள தனது இயல்பே! என்று உணர்ந்து, தனது எல்லா நிலைகளிலும் அப்படியே ஒருவன் இருப்பதுதான் இங்கு "**ஞானம் அடைவது**" அல்லது '**முக்தி பெறுவது**' என்று கூறுவார்கள்.



அந்த நிலையில் உள்ள ஒருவனுக்கு இந்த உலகம் என்று தனியாகத் தெரியாது. எல்லாம் தானே! என்று தன்னில் தானாய் உணரப்படும் உன்னத நிலைக்கு உயர்கின்றான்.

அதனால், அவன் உலக காரியங்களில் ஈடுபடும்போதும் தனக்கே எல்லாம் செய்துகொள்வது போலவே அவனால் உணரப்படும். அதுவே, ஆன்மீகத்தின் **அறுதி நிலை** என்று அறியப்பட வேண்டும்.

இந்த அறுதி நிலைக்கு இறுதியாக வந்தவன், இந்த உலகமும், உலகில் உள்ளவைகளும் பலவாறாகத் தெரிந்தாலும் அதை அவனுக்கு வேறாகப் பார்க்க மாட்டான். அவனே '**ஈஸ்வரன்**' என்றும் அழைக்கப்படுகின்றான்.

எப்போது, இந்த உலகம் என்ற ஒன்று தனியாகத் தெரிகிறதோ? அப்போது தன்னையும், தன்னைத் தவிர உலகில் உள்ள அனைத்தையும் வேறு வேறாகவேப் பார்க்கும் மனநிலை வளருகின்றது. அவர்களைத்தான் '**அஞ்ஞானிகள்**' என்றும் அழைக்கப்படுகின்றது.

ஆக, இங்கு நடக்கும் அனைத்தையும் வெறும் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் அரசனை (ஆன்மாவை), ஆழ்ந்த அமைதி நிலைக்கு ஒப்பாக இங்கு கூறப்படுகின்றது.

பொதுவாக, ஓர் அரசனின் கண்காணிப்பில்தான் அனைவரும் அனைத்து வேலைகளையும் செய்கின்றனர். அனால், அந்த அரசன் எந்த வேலையையும் செய்ய மாட்டான். அதுப்போன்று, உடல், மனம் இவைகளைக்கொண்டு

நடக்கும் உலக காரியங்கள் அனைத்திற்கும் ஆன்மா ஒரு சாட்சியாக மட்டுமே இருந்துக் கொண்டு எல்லாவற்றையும் கண்காணித்துக் கொண்டுள்ளது. ஆனால், ஆன்மா எதையும் செய்வதில்லை.

உதாரணமாக, நமது பழைய புகைப்படத்தை எடுத்துப் பார்த்தால், அந்தப் படம் எடுக்கப்பட்ட போது, நாம் இருந்த அந்த நிலையிலும், நம்மை நாம் உணர்ந்த மாதிரித் தானே இப்போதும் நம்மை நாம் உணர்கிறோம்?

இதிலே, நமது உடல் வளர்ந்தாலும், தேய்ந்தாலும் நம்மை நாமாகத்தானே உணர்கிறோம்? அந்த உணர்வில் எந்த மாற்றமும் இல்லையே? அப்படியானால்! நமக்கு வேறு மாதிரி இருப்பது எது? என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள்!

व्यापृतेष्विन्द्रियेष्वात्मा व्यापारीवाविवेकिनाम् ।
दृश्यतेऽभ्रेषु धावत्सु धावन्निव यथा शशी ॥ १९॥

வ்யாப்ருதேஷ்விந்த்ரயேஷ்வாத்மா வ்யாபாரிவாவிவேகினாம் |
த்ருஷ்யதேப்ரேஷு தாவஸ்து தாவன்னிவ யதா ஷஷி ||

கருவிகளின் தொழில் கண்ட அவிவேகி
கருத்தன் போன்று ஆன்மாவைக் காண்பான் – துரிதமாய் ஓடும்
மேகம் கண்டு உணர்விலி சந்திரனே
ஓடுகிறான் என்பதை ஒத்து. – **ஸ்ரீ ரமணர்**

(ஆகாயத்தில் வேகமாக ஓடும் மேகங்களைப் பார்த்த பகுத்தறிவில்லாத ஒருவன் ஆகாயத்தில் சந்திரனே வேகமாக நகர்ந்துப் போகிறது என்று கூறுவான். அதுப்போன்று, ஐந்து கர்ம இந்திரியங்களின் மூலம் செய்யப்படும் செயல்களைப் பார்த்து அதில் உள்ளதையும், இல்லாதையும் பிரித்துப் பார்த்து அறிய முடியாதவன் ஆன்மாவே செயலில் ஈடுபடுவதாகக் கூறுவான்.)

அதாவது, இந்த உலகில் நடக்கும் காரியங்களுக்கும் ஆன்மாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை! என்று இங்கு கூறப்படுகிறது.

உதாரணமாக, நாம் பயணம் செய்யும் ரயில் வண்டி வழியில், எதாவது, ஒரு ஸ்டேஷனில் நின்றுக் கொண்டிருக்கும்

போது, பக்கத்துத் தண்டவாளத்தில் உள்ள மற்றொரு ரயில் வண்டி எதிர்ப்புறமாக நகரும்போது, நமது ரயில் வண்டி புறப்படுவதுப் போன்றுத் தோன்றுவது நமது அனுபவம்தானே?



இது எதனால் உண்டாகின்றது..? அது, மனதின் **'தோற்றத் திரிபு'** எனப்படுகின்றது.

அதுப்போன்று, ஆகாயத்தில் உள்ள மேகக் கூட்டங்கள் நகரும்போது, அவைகளின் பின்னால் உள்ள சந்திரன் நகர்வதுப் போன்று நமக்குத் தெரிகின்றது. அதை நன்கு கவனித்துப் பார்ப்பவனுக்குத்தானே, உண்மையில் எது நிலை கொண்டுள்ளது?, எது நகர்கிறது? என்று தெரியும்.

அதுப்போன்று, இந்த உடல் வேறு, ஆன்மா வேறு என்று பிரித்துப் பார்த்து அறிய முடியாதவன், ஆன்மாவின் சந்நிதானத்தினால் சரீரத்தில் உள்ள கர்ம இந்திரியங்களால் நிகழும் நிகழ்ச்சிகளை எல்லாம், அந்த ஆன்மாவே ஈடுபட்டுச் செய்வதாக எண்ணிக் கொள்கிறான். அந்த அறியாமையினால், ஆன்மா சுவைக்கின்றது, ஆன்மா பார்க்கிறது என்று கற்பித்துக் கொள்கிறான். பொதுவாக, இந்த உலகில் உள்ள ஒவ்வொருவனுக்கும் ஏதாவது ஒரு வேலையைச் செய்ய வேண்டிய ஆர்வமோ, நிர்ப்பந்தமோ இருக்கின்றது என்பதினால், அவன் அந்த வேலையைச் செய்கிறான்.

ஆர்வமோ, நிர்ப்பந்தமோ எனக்கு இல்லை என்றும், அதை தன்னிச்சையாகத்தான் செய்கிறேன் என்றும் கூறி, ஒருவன் அந்த வேலையை நிறுத்திக் கொள்வேன் என்று கூறுகின்ற இச்சையும் ஒரு விதத்தில் அவனது ஆர்வமே ஆகும். ஆக, அவன் வேலையை நிறுத்தாது செய்வதும், நிறுத்துவேன் என்று நினைப்பதும், அவனது ஆவலின் நுண்ணிய வடிவமே ஆகும்.

ஏனென்றால், அவன் அந்த வேலையைச் செய்யாது இருந்தாலும், அந்த வேலையைப் பற்றியே சிந்தனை செய்துக் கொண்டிருப்பான். அதுவே, அவனால் அந்த வேலை செய்யப்பட்டால் அது ஸ்தூல வடிவிலே, அவனது நடைமுறை செயலாக இருக்கும். அதுவே, அவன் அந்த வேலையைப் பற்றி சிந்தனை மட்டுமே செய்துக் கொண்டிருந்தால், அது சூக்ஷும வடியில் நுண்ணியதாக இருக்கும்.

இதிலிருந்து, நாம் புரிந்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவெனில், ஒரு வேலை செயலாக நடைப்பெறாமல், அதைப்பற்றிய எண்ணங்கள் மட்டுமே எழுந்துக் கொண்டிருக்கிறது என்றாலும், அப்பொழுதும் அவனது **மனமும், புத்தியும்** வேலை செய்துக் கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

இப்படியாக, இந்த உலக விஷயங்கள் அனைத்தும் **மனம், புத்தி** அளவிலே நடந்து கொண்டிருந்தாலும், அந்த ஆன்மா இருப்பதாலேயே மனமும், புத்தியும் இயங்குவதால், இந்த உலகில் நடப்பதைப் பார்ப்பவர்கள் அந்த ஆன்மாவே அதில் சம்பந்தப்பட்டுள்ளதாக எண்ணிக் கொள்கின்றனர். அதை அவர்களது அறியாமை என்றே அறியப்படவேண்டும்.

ஆக, நடப்பவைகள் அனைத்துக்கும் அந்த ஆன்மா **'ஒரு சாட்சி'** மாத்திரமாகவே இருக்கிறது. ஒவ்வொருவரின் மனமும், புத்தியும் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களின் அடிப்படையில் வெவ்வேறாக இயங்கும் நிலையில், அனைத்து பேதங்களும் அறியப்படுகின்றன. அதனால், அங்கு ஒற்றுமையைக் காண்பது அரிது.

ஆனால், அனைத்துக்கும் ஆதாரமான ஒன்றேயாகிய ஆன்ம நிலையில் இருமைகளால் சூழப்பட்ட பேதங்கள் ஏதும் கிடையாது. அதனால், ஆன்மா அளவில் அனைவரும் ஒன்றே! என்பது, இங்கு உணர வேண்டிய மிக உன்னத விஷயமாகும்.

आत्मचैतन्यमाश्रित्य देहेन्द्रियमनोधियः ।
स्वक्रियार्थेषु वर्तन्ते सूर्यालोकं यथा जनाः । २०॥

ஆத்மசைதன்யமாஸ்ரிதய தேஹேந்த்ரியமனோதியஹ |
ஸ்வக்ரியார்தேஷு வர்தந்தே சூர்யாலோகம் யதா ஜனாஹா ||

ஞானவொளி ஆன்மாவை நண்ணி உடல் பொறிகள்
மானதம் புத்தியிவை மன்னு தமக்கு – ஆன தொழில் ஆற்றிடும்
ஆதித்தன் அவிர் ஒளியால் மக்கள் தொழில் ஆற்றுவது போலும் அறி.
– **ஸ்ரீ ரமணர்**

(சூரியனின் பிரகாசமான ஒளியினால், இந்த உலக மக்கள் அனைவரும் அவரவர்களுக்குண்டான தொழிலைச் செய்வதுப்போன்று, ஞானப் பிரகாசமான ஆன்ம ஒளியினால், **உடல், இந்திரியங்கள், மனம், புத்தி** போன்றவைகள் எல்லாம் தமக்குண்டான விஷய, சுகங்களில் பொருந்தி செயல்படுகின்றது என்று அறிவாயாக!)

ஆன்மாதான் எல்லாவற்றிற்கும் சாட்சி என்பதினால், அது இருப்பதினால் மட்டும்தான் மற்றதெல்லாம் இங்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதை விளக்குவதற்கு, ஓர் உவமானமாக எவ்வாறு, சூரியன் உதித்ததும் அனைவரும் தத்தமது தினப்படி வேலைகளைச் செய்யத் தொடங்குகிறார்கள்.

அத்துடன், பயிர்கள், பூச்சிகள், பறவைகள், மிருகங்கள் என எல்லாமே அதனதன் வேலைகளை செய்ய ஆரம்பித்து விடுகின்றன. இதை, இங்கு சுட்டிக்காட்டுகிறார் பகவான் ஸ்ரீ சங்கரர்.

அதாவது, இந்த உலகத்தில் உள்ள அனைத்து சீவர்களும் அதனதன் தொழில் செய்வதற்கும், அவைகளுக்கு உண்டான வேலைகள் நடப்பதும் சூரியன் உதித்தபின்தான் என்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது?

அதாவது, சூரியன் உதிப்பதற்கும், இங்கு பூமியில் அனைத்து வேலைகள் நடப்பதற்கும் சம்பந்தம் இருப்பதுப் போன்று காணப்பட்டாலும், உண்மையில், சூரியன் ஒன்றும் செய்வதில்லை. அது எப்போதும் போன்று, உள்ளது.

அதாவது, இங்கு எந்த வேலைகள் நடந்தாலும், நடக்காவிட்டாலும் அதனால், சூரியனுக்கு என்ன பாதிப்பு வந்தது?

ஒன்றுமில்லை! அல்லவா?

அதுப்போன்று, ஆன்மா இருப்பதால்தான் இந்த ஸ்தூல பரு உடலும், அதன் இந்திரியங்களும், மனமும், புத்தியும் இயங்குகின்றன என்றாலும், அவைகளின் இயக்கத்தால் அந்த ஆன்மா எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

உலகையே ஒளிர்விக்கும் சூரியன் இருப்பதினாலேதான், அதன் கண்காணிப்பில் இந்த உலக விவகாரங்கள் எல்லாம் ஒழுங்காக இயங்குகின்றன என்றாலும், அந்த **சூரியன்** இதில் எதிலும் சம்பந்தப்படாமல், அவைகள் அனைத்துக்கும் **சாட்சியாக மட்டுமே** பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

அதுப்போன்று, ஆன்மா இருப்பதினாலேதான், அதன் கண்காணிப்பில் எல்லா இந்திரியங்களும், மனம், புத்தி போன்றவைகளும் ஒழுங்காக இயங்குகின்றன என்றாலும், அந்த **ஆன்மா** இதில் எதிலும் சம்பந்தப்படாமல், அவைகள் அனைத்திற்கும் வெறும் **சாட்சியாக மட்டுமே** ஒளிர்ந்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆன்மா எந்த இயக்கத்திலும் பங்கு கொள்வதில்லை.

இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளில் எதனை எடுத்துக் கொண்டாலும், அவைகளில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் என்பது, அந்த ஆன்மா அவைகளில் பிரகாசிக்கும் உபாதிகளாகிய உடல்களைப் பொருத்து, ஒன்றுக் கொன்று வேற்றுமைகளுடன்தான் இருக்கும்.

எவ்வாறு, பூமியில் நடைப்பெறும் பல்வேறு விதமான செயல்களுக்கு சூரியன் காரணமாக இருப்பதில்லையோ?... அதுப்போன்று, இந்த உடல், இந்திரியங்கள், மனம் மற்றும் புத்தி போன்றவைகளின் வேறுபட்ட செயல்களுக்கு ஆன்மா காரணம் அல்ல. அதற்குக்காரணம், அவைகளின் புத்தி

சக்தியாகிய அதன் அறிவில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளே ஆகும்.

இந்த ஏற்றத்தாழ்வுகளுடன் கூடிய அறிவுப் பரிமாணங்கள் என்பது, ஆன்மா பிரகாசிக்கும் உடல்களைப் பொருத்து, ஒரு அறிவு தொடங்கி, ஆறு அறிவு வரை ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் காணப்படுகின்றன.

அதன்காரணமாக, மற்ற உயிரினங்களின் அறிவு வளர்ச்சி மேம்படாத காரணத்தினால், அவைகள் ஆன்மாவைப் பற்றி புரிந்துக் கொள்ளாது போனாலும், ஆறு அறிவு படைத்த மனிதனும் அதைப்பற்றி புரிந்துக் கொள்ளவில்லை என்றால், அவனிடம் **சமத்துவப் பார்வை** வளர வாய்ப்பே இல்லை.

அது வளர வேண்டும் என விரும்பும் ஒவ்வொருவரும் **ஆன்மா** ஒன்று இருப்பதை ஒத்துக்கொள்வதையும், அதுவே அனைத்தின் அடிப்படை உண்மை என்பதையும், அறிந்து, அதன் வாயிலாக அவைகளின் உணர்வை ஒத்துக் கொள்வதையும், மனித வளர்ச்சியின் பரிமாணங்களில் ஒன்று எனக் கொள்ளலாம்.

உலகியல்வாழ் உயிரினங்களில், இப்போது நாம் காணும் மனித இனம் தோன்றியது சுமார் இருபது, முப்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் என்றாலும், அவர்களின் பரிணாம வளர்ச்சி ஒரு அறிவு தாவரங்களில் தொடங்கி, ஆறு அறிவு

மனிதன் வரை படிப்படியாக பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தற்போதைய அளவிலும், திறமையிலும் வளர்வதற்கு ஏற்றபடி அறிவுப்படி நிலைகள் உண்டாகக் கூடிய அடிப்படை உடற்கூறுகள் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன.




ஒரு அறிவு தாவரங்களில் தொடங்கி, பறவைகள், மிருகங்கள் என, ஐந்து அறிவுகளுக்கு அப்பாற்பட்ட ஆறாம் அறிவாகிய **பகுத்தறிவு** கொண்ட மனிதன் மட்டுமே நன்மை, தீமைகளைப் பற்றி அறிந்துக் கொள்ளவும், அத்துடன், பேசும் தன்மைக்குண்டான பிரத்யேக புலன்களும், அதற்கான குரல் வளமும் கொண்டதான உடல் அமைப்பும் படிப்படியாகவே வளர்ந்து வந்திருக்கின்றன.

பேசும் திறமையும், சிந்திக்கும் ஆற்றலும், அத்துடன் மனித மூளையின் வளர்ச்சியுமே மற்ற சீவர்களில் இருந்து மனிதன் மாறுபட்ட திறன் உள்ளவனாகக் காணப்படக் காரணமாக அமைகின்றன.


மனிதனைப்போன்று, மற்ற சீவர்களில் ஒன்றிரண்டு மனித இனத்துடன் கூடவே வளர்ந்து வந்தாலும், இறுதியில் அவைகளினால் மேலும், வளர முடியாத சூழ் நிலையில் அழிந்தும் போய் விட்டன.

இந்தப் பரிணாம வளர்ச்சியைப் பார்க்கும்போது, மனித உடலுக்கே உண்டான பிரத்யேக மூளையும், அதனால் இயங்கும் இந்திரியங்களும், எந்த அளவிற்கு முக்கியமோ? அந்தளவிற்கு மனிதனிடம் காணப்படுகின்ற மனம் என்பதும் மற்ற சீவர்களில் இருந்து மாறுபட்டு, மகத்தான பகுத்தறியும் புத்தி சக்தியாக பரிணமித்திருப்பது, மனிதனுக்கே உண்டான ஒரு **தனித்துவமான திறன்** என்றே கூறலாம்.

இந்த மனதின் மேம்பட்ட புத்தி சக்தி அறிவுப் பரிமாணத்தின் உயர் நிலையாகிய மனித இனத்திற்கே உண்டான தனித்துவமான பகுத்தறியும் திறன் என்பதினால், மனிதன் மட்டுமே மகத்தான மனதைக் கொண்டு, பல அரிய கண்டு பிடிப்புகளை கண்டறிய முடிகின்றது.

ஆக, இனி வரக்கூடிய பரிணாம வளர்ச்சிக்கு, மனிதனையும் உள்ளடக்கிய, மற்ற சீவராசிகளுக்குமுள்ள பொதுவான ஒரு அம்சம் என்னவெனில், அவைகளிடம் காணப்படும் **அறிதல்** என்ற ஆற்றல் ஆகும்.

அந்த அறிதல் என்ற சக்தி, ஒரு அறிவில் தொடங்கி, ஆறு அறிவு வரைப் படிப்படியாக வளர்ந்து, பிரத்யேக பகுத்தறிவாகிய சிந்திக்கும் திறன் கொண்ட ஆற்றலினால், நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, அதற்கும் அப்பாற்பட்ட உயர் அறிவாகிய, ஏழாம் அறிவுப் பரிமாணத்திற்கு பயணிக்கக் கூடிய ஒரு அடிப்படை அமைப்பு தேவை! என்றும், அதுவே, அனைத்தையும் உள்ளடக்கிய **ஆன்மா** என்றும், என்றுதான் நாம் புரிந்துக் கொள்கிறோமோ? அன்றுதான் **அரிது, அரிது மானிடராகப் பிறத்தல் அரிது!** என்ற மகான்களின் மகத்தான உபதேசத்தின் உன்னதத்தை உணர்ந்த அறிஞர்கள் (ஞானிகள்) ஆகின்றோம்.



அதேசமயம், இந்த பிரபஞ்சத்தையும், தன்னைச் சுற்றியிருக்கும் அனைத்தையும் அறிந்துக்கொண்ட, அதே மனிதன் தான்தான் பரிணாம வளர்ச்சியின் ஏணியில் இறுதியாக

இருக்கிறேன் என்பதை உறுதியாகக்கூற முடியாத நிலையில் இன்று இருப்பதற்குக் காரணமும் உள்ளன.

அதற்குக்காரணம், அவன் ஆன்மாவை உணர்ந்து, ஆனந்தமாக வாழ்ந்து காட்டிச் சென்ற, பல ஆன்றோர்களைப் பற்றி அறிந்திருந்தாலும், அவனது அன்றாட அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட அறிவுப்பரிமாணத்தில், மேலும் பல படிகள் உயர்வதற்கான உண்மையான சாத்தியக்கூறுகள் உள்ளதை அவன் உணர்ந்திருந்தாலும், அவனது தற்போதைய உயரிய விஞ்ஞான கண்டு பிடிப்புகளினால், அவனது மெய்ஞ்ஞான அறிவுக்கு, அவனே உலை வைத்துக் கொண்டான் என்றுதான் கூறப்பட வேண்டும்.

பொதுவாக, சீவராசிகளின் **பரிணாம வளர்ச்சி** எனும் ஏணியின் உச்சியில், உயர் பிறப்பாகிய மனிதன் மட்டுமே இருப்பதினால், அந்த அறிவுப் பரிமாணத்தின் உயர்ந்த வளர்ச்சிக்கு ஆதாரமான அறிவு, அவனுக்கு எங்கிருந்து வந்தது? என்பதை சற்றே உற்று நோக்கினால், அது அந்த **ஆன்மா** பிரகாசிக்கும் உன்னத உபாதியாகிய பல உடல்களில், மிக உயர்ந்த உடலாகிய, இந்த மகத்தான மனித உடல் மட்டுமே என்பது புரிய வரும்.

அத்தகைய மகத்தான மனிதன் தன் நிலையை உணர்ந்ததினாலும், மேலும் அந்த வளர்ச்சிக்கு தன்னைப் போன்றே மற்றவர்களும் உயர வேண்டும் என்பதினாலும், அவனறிந்த உயரிய பாடங்களை இந்த உலகிற்கு உபதேசமாக

வழங்கி, இந்த மனித குலம் உயர்வதற்கான உன்னத கடமையாகவும் கருதுகிறான்.

அதனால் உந்தப்பட்டவன் அனைத்து சீவராசிகளையும் உள்ளடக்கிய ஒரு சமத்துவப் பார்வையை வளர்க்கும் **ஆன்மா** எனும் பேரறிவை மனித புத்தியில் மட்டுமே பிரகாசிக்க வைக்க முடியும் என்பதினால், அதை புத்தி சக்தி மேம்பட்ட மனிதனுக்கு மட்டுமே எடுத்துக்கூற வேண்டும் என்றும் பல வழிகளிலும் முயல்கிறான்.

ஆக, உலகில் மற்ற விஷயங்களை அறிவது சாதாரண அறிவென்றும், **பிறப்பின் பயனை உணர்வதே** பேரறிவு என்றும் தெளிவு பெற்றவன், அதனை அடைய ஆவல் கொள்ளும் போது மட்டுமே அவன் ஒரு **முமுக்ஷு** ஆகிறான்.

देहेन्द्रियगुणान्कर्माण्यमले सच्चिदात्मनि ।
अध्यस्यन्त्यविवेकेन गगने नीलतादिवत् ॥ २१॥

தேஹேந்த்ரியகுணான்கர்மாண்யமலே சச்சிதாத்மனி |
அத்யஸ்யந்த்யவிவேகேன ககனே நீலதாதிவத் ||

தேகம் பொறிகள் திகழ் குணங்கள் வினைகள்
ஆகுமிவை தூய சச்சிதான்மாவில் – மோகத்தால்
கற்பிப்பர் சுத்த ககனத்தில் நீலமுதல்
கற்பித்தல் போலக் கருது – **ஸ்ரீ ரமணர்**

(நிறமற்ற தூய்மையான ஆகாயத்தில் நீல நிறம் போன்ற வர்ணம் இருப்பதாக ஒருவன் கற்பனை செய்வதக் கொள்வது போன்று, தூய்மை நிறைந்த சச்சிதானந்த சொரூபமான ஆன்மாவின்மீது உடல், ஐம்பொறிகள், அதற்கான குணங்கள், நல்வினைகள், தீவினைகள் ஆகிய அனைத்தையும் ஏற்றி வைத்துக் கொண்டு, அவைகள் ஆன்மாவிற்கு இருப்பதுப் போன்று பகுத்தறிவில்லாத அவிவேகிகள் கற்பனை செய்துக் கொள்கிறார்கள் என்று தெரிந்துக்கொள்வாயாக.)

நமது எதார்த்தமான உண்மை நிலையை உணர்வதற்கு உடல் ஒரு கருவி என்று முன்னர் பார்த்தோம். அந்த உடல் இயங்கும் போது நாம் பிறந்தது, வளர்ந்தது, பார்ப்பது, கேட்பது போன்ற இயக்கங்களும், நம் வளர்ச்சியில் உள்ள இளமை, முதுமை போன்ற நமது நிலைகளும், ஆன்மாவைச் சார்ந்தது என்று ஆன்மாவைப் பற்றி அறியாத பாமரர்கள்

கருதுவார்கள். அதில் உள்ள தவறை ஓர் உவமை மூலம் இங்கு பகவான் ஸ்ரீசங்கரர் விளக்குகிறார்.

பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாயம் நிறம், குணம் போன்றவைகளை கொண்டிராத போதும், அதைப்பற்றி அறியாதவன் ஆகாயம் நீல நிறத்துடன் கூடியது என்று எப்படிக் கருதிக் கொள்கிறானோ? அதுப்போன்று, அவிவேகி குணமற்ற ஆன்மாவை குணத்தோடு சம்பந்தப்படுத்தித் தவறாக அறிகிறான். நம்மிடமிருந்து வெகு தொலைவில் இருப்பதால், நம் கண்களுக்கு அந்த ஆகாயம் நீல நிறமாகக் காணப்படுகிறது என்பதை விவேகி அறிவதுப் போன்று, உடலும், அதன் இந்திரியங்களும் இருப்பதற்கு மூலகாரணம் ஆன்மாவே என்பதை விவேகி மட்டுமே அறிகிறான்.

பால்யமும், இளமையும், முதுமையும் உடலைச் சார்ந்த நிலைகள் போன்று, பார்த்தல், கேட்டல், சுவைத்தல் போன்றவைகள் இந்திரியங்களைச் சார்ந்த தொழில்கள் என்பதினால், இவைகளை ஆன்மாவுடன் தொடர்பு கொண்டு பார்ப்பது ஆன்மாவைப் பற்றிய அறியாமை என்கிறார்.

இங்கு விவேகம் எனப்படுவது தேக, இந்திரியங்களின் குணங்களையும், ஆன்ம சொரூபத்தின் இலக்ஷணத்தையும் பிரித்து அறிவதே ஆகும். பகவான் ஸ்ரீரமணர் கூறுவதுபோல் “**உள்ளதை உள்ளபடி உள்ளத்தே உள்ளுவதே**” உண்மை என்று அறிய வேண்டும்.

अज्ञानान्मानसोपाधेः कर्तृत्वादीनि चात्मनि ।
कल्प्यन्तेऽम्बुगते चन्द्रे चलनादि यथाम्भसः । २२॥

அஞ்ஞானான்மானசோபாதே கர்த்ருத்வாதீனி சாத்மனி |
கல்ப்யந்தேம்புகதே சந்த்ரே சலனாதி யதாம் பஸஹ ||

மனமாம் உபாதி மருவு கர்த்தத்வ
இனமாய் அவற்றை அறிவின்மை – எனும்
மயலால் ஆன்மாவில் கற்பிப்பர் அப்பு அலைவை
நீர் தோன்றும் வான் மதியில் கற்பிக்குமாறு – **ஸ்ரீ ரமணர்**

(வானத்தில் அசையாது நிற்கும் நிலவு, நீரில் பிரதிபிம்பிக்கும்போது அந்தத்தண்ணீரின் அசைவுகளினால், அந்த நிலவு அசைவதைப் பார்த்து அந்த நிலவே அசைகின்றது என்று எண்ணுவதுப் போன்று, அசையாத ஆன்மாவின் பிரதிபிம்பமாகிய மனம் என்ற உபாதியினால் உண்டாகும் அசைவுகளைக்கொண்டு, "**நான் செய்கிறேன்**", "**நான் அனுபவிக்கிறேன்**" என்ற அறியாமை மயக்கத்தினால், அதை ஆன்மாவின் செயல் என்பதாக கற்பித்துக் கொள்கின்றனர்.)

முன்பும் இதேப்போன்று, வேறோர் உவமையை நாம் கண்டோம்.

சூரியன் உதிப்பதால், இந்த உலகில் பல காரியங்கள் நடந்தாலும், அவைகளின் பயன் அந்த சூரியனை அடையாது என்றும் கண்டோம்.

அதைப்போன்றே, இங்கு கிட்டத்தட்ட அசையாது நிற்கும் நிலவையும், நீரில் அதன் பிம்பத்தின் அசைவையும் எடுத்துக்கொண்டு ஆன்மாவின் சன்னிதானத்தில் காரியங்கள் இயற்றப்பட்டாலும், அந்த ஆன்மா அதற்கு பொறுப்பாகாது என்று விளக்குகிறார்.

ஒவ்வொருவனும் தான் **ஆன்ம சொரூபம்** என்பதை புத்தியினால் மட்டும் புரிந்துக்கொண்டு, தான் செய்யும் அனைத்து காரியங்களையும், அதனால் அடையும் அனைத்து அனுபவங்களையும், **"நான்செய்கிறேன்", "நான்அனுபவிக்கிறேன்"** என்று எண்ணுவதாலும், தான் ஆன்ம வடிவம் என்பதை தெரிந்துக் கொண்டதாலும், இயற்றப்படும் காரியங்களையும், அதனால் அடையப்பெறும் அனுபவங்களையும் தேக, இந்திரியங்கள் தொடர்பானவை என்று புரிந்துக் கொள்ளாமல், ஆன்மாவினுடையது என்று தவறாகவே கணிக்கிறான்.

ஆன்மாவிற்கு எந்தச் செயலும் கிடையாது என்பதால், இந்தக்கணிப்பு முற்றிலும் தவறானது என்பதை அசையா நிலவின் அசைவுகள் என்ற உவமையின் வாயிலாக பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு விளக்குகிறார்.

நிலத்தில் உள்ள நீர் காற்றின் மூலம் அசைவதால், அந்த தண்ணீரில் தோன்றும் நிலவு அசைவதுப்போன்று தெரிகிறதே தவிர, உண்மையில் அந்த நிலவு அசைவதில்லை.

அதுப்போன்று, உடலில் உள்ள தேக, இந்திரியங்கள் மனதின் மூலம் அசைவதால், அந்த மனதின் தோன்றும் அசைவுகள் ஆன்மாவினுடையது என்று கருதிக்கொள்கிறார்கள். நிலவு அசையவில்லை என்ற உண்மை புரிவதற்கு, அந்த நீரையே பார்த்துக் கொண்டிருக்கும் மனிதனின் தன் பார்வையை நிலவின் பக்கம் திருப்புதல் மிகவும் அவசியம். அப்போதுதான் அவனுடைய அந்த அறியாமை அகலும்.

அதுப்போன்று, ஆன்மா அசையவில்லை என்ற உண்மை புரிவதற்கு, மனதையே பார்த்துக் கொண்டிருக்கும் மனிதன் தன் (மனப்) பார்வையை ஆன்மா பக்கம் திருப்புதல் மிகவும் அவசியம்.



நிலவின் பிரதிபிம்பம் நீரில் தோன்றுவதுப்போன்று, ஆன்மாவின் சைதன்ய ஒளிக்கதிர்கள் நமது மனம் மூலம் நமக்குப் பிரகாசிக்கிறது.

அதாவது, ஆன்மாவே மனதை ஒளிர்விக்கிறது.

எப்படி? உடல் நமக்கு ஒரு ஸ்தூலக் கருவியோ, அதுப்போன்று, மனம் நமது சூக்ஷுமமான மிகவும் நுண்ணிய கருவியாகும். இந்த இரண்டும் இருப்பதினால்தான் நாம் ஆன்மாவை அறிய முயல்கிறோம். ஆனாலும் அவைகள் கருவிகள்தானே அன்றி அவைகளே முடிவானவை அல்ல.

எவ்வாறு, நீரின் குணங்களும், நிறங்களும் ஆகாயத்தில் இருக்கும் நிலவைப் பாதிக்காதோ, அதுப்போன்று, மனதின் விசேஷங்கள் அந்த ஆன்மாவைப் பாதிக்காது. அதாவது, நீரில் பிரதிபலிக்கும் நிலவின் பிம்பம், அந்த நீரினால் பாதிக்கப்படுவதுப் போன்று நமக்குத் தெரிகின்றது. அவ்வாறே, மனதில் பிரதிபலிக்கும் ஆன்மாவின் பிம்பம் அந்த மனதினால் பாதிக்கப்படுவதுப் போன்று நமக்குத் தெரிகின்றது.

அதாவது, மனதளவில் உருவாகும் எண்ணங்களும், அதன் செயல்களும் உடலின் வினைச்சக்கரச் சுழற்சியால் பாதிக்கப்படும். அப்படிப்பாதிக்கப்படுவது உண்மையில் மனமே அன்றி ஆன்மாவல்ல.

ஆக, இவ்விரண்டையும் பிரித்துப் பார்க்கத் தெரியாத மனிதர்களுக்கு, அவர்கள் மனதின் சலனங்களும் ஆன்மாவின் சலனங்களாகவே தோன்றும்.

ஆக, ஒரு வினையை ஆற்றுவதும் அதன் பலன்களை அனுபவிப்பதும் **மனம்** எனும் உபாதியே அன்றி, ஆன்மாவல்ல என்பதை அறியவும்.

அசையாத ஆன்மாவை அனுபவமாக உணர்வதற்கு தன் முழு கவனத்தையும் **மனம்** அந்த ஆன்மாவிடம் திருப்ப வேண்டும்.

रागेच्छासुखदुःखादि बुद्धौ सत्यां प्रवर्तते ।
सुषुप्तौ नास्ति तन्नाशे तस्माद्बुद्धेस्तु नात्मनः ॥ २३॥

ராகேச்சாசுகதுக்காதி புத்தௌ சத்யாம் ப்ரவர்த்ததே |
சுஷுப்தோ நாஸ்தி தன்னாஷே தஸ்மாத்புத்தேஸ்து நாத்மனஹ ||

விருப்பு ஆசை துன்பு இன்பு மேலும் இவை போல்வ
இருப்பவாம் புத்தி இருப்பால் – இருப்பில்லாத்
தூக்கத்தில் இன்று அதனால் சொந்தம் அவை புந்திக்கே ஓர்க்குக
ஆன்மாவிற்காகுமோ. – ஸ்ரீ ரமணர்

(விருப்பம், ஆசை, துன்பம், இன்பம் போன்ற இவைகளெல்லாமும் நமது புத்தியினால் உண்மையில் இருப்பன போன்று தோன்றுகின்றன. அந்த புத்தி செயல்படாது இருக்கும் நம் ஆழ் உறக்கத்தில் அவைகள் எதுவுமே தோன்றாததனால், அவைகள் புத்தியை (மனதை) மட்டுமே சார்ந்தவைகள் ஆகும். அவைகள் ஆன்மாவிற்கானது என்று கூறமுடியுமோ? என்பதை ஆராய்ந்து அறிக!)

ஒருவனது வாழ்க்கையில் உண்டாகும் அனுபவங்களைப் பார்த்தால், அவைகளில் சில, அவன் ஆசைப்பட்ட பொருட்களின் மேல் இருந்த அவனது விருப்பங்களால் விளைந்தவைகளாகவும், சிலவற்றின் மேல் அவனுக்கு இருந்த வெறுப்புகளால் விளைந்தவைகளாகவும் காணப்படும்.

இவ்வாறு, ஒருவனது மனதில் தோன்றும் **விருப்பு - வெறுப்பு** எண்ணங்களுக்கு ஏற்ப, அவைகள் அவனது உடல் மற்றும் மனதளவில் இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ அவனுக்கு கொடுத்திருக்கின்றன.

அதேசமயம், அத்தகைய மனமும் அதை இயக்கும் புத்தியும் எழும்பாத விழிப்பு மற்றும் கனவு நிலைக்கு அப்பாற்பட்ட ஒருவனுடைய ஆழ்ந்த உறக்கத்தில், அவனுக்கு **விருப்பு - வெறுப்பு** எதுவும் தோன்றுவதில்லை. ஆனால், அந்த உறக்கத்தில் இல்லாத விருப்பும், வெறுப்பும் ஒருவனது நனவு மற்றும் கனவு நிலைகளில்தான் தோன்றுகின்றன.

முழு நினைவோடு ஒருவன் விழித்துக் கொண்டுள்ள நனவு நிலையில், அவனது ஸ்தூல உடலும் அதன் சம்பந்தமான அனுபவங்களும் அவனுக்கு அமைகின்றன.

அவ்வாறே அவனது கனவு நிலையில் அவனுக்கு சூக்ஷுமமான நுண்ணிய உடலும், அதற்கேற்ற அனுபவங்களும் நேர்கின்றன.

அதாவது, சூக்ஷும உடலாகிய மனதின் மூலம் நாம் காணும் கனவு அனுபவங்கள், அந்த கனவு நிலை இருக்கும் வரையிலும் நனவு அனுபவங்களைப் போலவே நீடிக்கின்றன.

கனவு நீங்கியவுடன் அந்த கனவில் இருந்ததெல்லாம் இல்லாமல் போய்விடுகின்றன. ஆனால், நனவில் உள்ளவைகள் மீண்டும் நம் விழிப்பு நிலையில் தொடர்ந்து வருகின்றன. இந்த ஒரு வித்தியாசத்தைத் தவிர **நனவு - கனவு** அனுபவங்களில் வேற்றுமைகள் ஏதும் இல்லை.

ஆகையால், இவ்விரு அனுபவங்களுக்கும் ஏற்றவாறு அதற்கேற்ற உடலும், மனமும் அவைகளை இயக்கும் புத்தியும் தேவைப்படுகின்றன.

கனவிலிருந்து விடுபட்டு, நாம் நனவு நிலையாகிய விழிப்பு நிலைக்கு திரும்பியதும்தான் நாம் அதுவரை கண்டது நிலையற்ற ஒன்று என்றும், அவைகள் வெறும் கனவு என்றும் கண்டுகொள்கிறோம்.

அதேசமயம், அந்த **நனவு - கனவு** நிலைகளில்தான் நமது **விருப்பு - வெறுப்பு** காரணமாக, இன்பங்கள் மற்றும் துன்பங்கள் அடைகிறோம்.

ஆனால், உண்மையில் இந்த இன்ப, துன்பங்கள் யாருக்கு உண்டாகின்றன?. அந்த விருப்பும், வெறுப்பும் ஆன்மா சம்பந்தப்பட்டது என்றால், அந்த அனுபவங்கள் நமது ஆழ்ந்த உறக்க நிலை உட்பட எல்லா நிலைகளிலும் தோன்ற வேண்டும்.

ஆனால் அப்படி நிகழவில்லையே!

ஆழ்ந்த உறக்க நிலையில் மனமும், புத்தியும் செயல்படாத காரணத்தினால், அங்கு **இன்பம் - துன்பம்** இருப்பதில்லை.

ஆனால் ஆன்மாவோ எங்கேயும், எப்போதும் உள்ளது என்பதினால், நமது ஆழ்ந்த உறக்க நிலையில் நமக்கு உடலைப்பற்றிய உணர்வோ, மனமோ, புத்தியோ இல்லை என்றாலும், நாம் "**நன்கு உறங்கினோம்**" என்று, பிறகு கூறக்கூடிய அளவிற்கு ஓர் ஆனந்த அனுபவம் மட்டும் அப்போது இருக்கிறது.



அந்த அனுபவம் **நனவு - கனவு** நிலைகளில் உள்ளது போன்று, **விருப்பு - வெறுப்பு** காரணமாக அமைவதில்லை. ஆகையால், **விருப்பு - வெறுப்பு** குணங்களையும், **இன்ப - துன்ப**

நிலைகளையும் மனம் மற்றும் புத்தியுடன் மட்டுமே தொடர்பு படுத்திக் கூறமுடியுமே தவிர, அது, எங்கும், எப்போதும் இருக்கும் ஆன்மாவுடன் எப்படி சம்பந்தப்படுத்த முடியும்?

அவைகள் ஆன்மாவுடன் சம்பந்தப்பட்டது என்றால், ஆழ்ந்த உறக்கத்திலும் **இன்ப - துன்பங்கள்** நேர வேண்டும். ஆனால், ஆழ்ந்த உறக்கத்தில் நம்மை நாம் அறிய முடியாத ஆனந்த அனுபவம் ஒன்றே அமைகிறது.

ஆன்மா எப்போதும் உள்ளது என்றால், ஆழ்ந்த உறக்கத்தில் கிடைக்கும் அமைதியான அந்த ஆனந்த அனுபவம் நனவு நிலையிலும் இருக்க வேண்டும் என்றாகிறது. அப்படியென்றால் அதை நாம் ஏன் உணர்வதில்லை?

இதைத்தானே, நாம் ஆராய வேண்டும்.

प्रकाशोऽर्कस्य तोयस्य शैत्यमग्नेर्यथोष्णता ।
स्वभावः सच्चिदानन्दनित्यनिर्मलतात्मनः ॥ २४॥

பிரகாஷோர்கஸ்ய தோயஸ்ய ஷைத்யமக்னேர்யதோஷ்ணாதா |
ஸ்வபாவஹ சச்சிதானந்தநித்யநிர்மலதாத்மானஹ ||

அருக்கன் தனக்கொளி அப்புக்குத் தட்பம்
எரிக்கு உட்டணமும் இயல்பாய் – இருக்கையெனச்
சத்து சித்து ஆனந்தம் சார் நித்தம் சுத்தம் இயல்பு
ஆன்மாவுக்கு என்று ஓர் – **ஸ்ரீ ரமணர்**

(சூரியனுக்குப் பிரகாசமும், நீருக்குக் குளிர்ச்சியும், நெருப்புக்குச் சூடும், அதனதன் இயல்பாக அமைவதுப் போன்று, ஆன்மா சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் இருப்பதோடு நித்தியமாயும், நிர்மலமாயும் இருப்பதே அதன் இயல்பு என்பதை உணர்வாயாக!.)

இங்கு ஆன்மாவின் இலக்ஷணங்கள் கூறப்படுகின்றன.

“சத்” என்றால் **இருப்பு,** “சித்” என்றால் **அறிவு,** “**ஆனந்தம்**” என்றால் **பேரின்பம்** ஆகும்.

இவைகள் அனைத்தையும் கொண்டுள்ளது என்பது மட்டுமல்ல, அத்துடன், ஆன்மா இங்கு மட்டுமே உள்ளது.

அங்கு இல்லை! என்றில்லாது, அது, எங்கும், எப்போதும், இப்போதும் இருக்கிறது. அது அப்போது மட்டும் இருக்காது அல்லது இருக்கிறது என்றில்லாது, அது எங்கும், எப்போதும் உள்ளதால் அது நித்தியமாயும், சுத்தமாயும், எந்தவித கலப்பும் இல்லாததால் நிர்மலமாயும் இருப்பதுவே அதன் இயல்பு.

ஆதலால், இவைகளனைத்தையுமே ஆன்மாவிலிருந்து பிரித்து அறிய முடியாது.

எவ்வாறு, சூரியனிலிருந்து பிரகாசத்தையும், நீரிலிருந்து குளிர்ச்சி தன்மையையும், நெருப்பிலிருந்து உஷ்ணத்தையும், என அதனதனிடமிருந்து தனித்தனியே பிரித்து அறிய முடியாதோ, அதுப்போன்று, ஆன்மாவிடமிருந்தும் மேற்கூறிய அதன் தன்மைகளைப் பிரித்து அறியமுடியாது.

**ஆன்மா** என்பது குணமும், வடிவமும் இல்லாதது எனும்போது, அதற்கு இலக்ஷணங்களைக் கூறுவது முடியுமா? என்றால், இதில் இலக்ஷணங்கள் இரண்டு விதமாக உள்ளன என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். அவைகள், “**தடஸ்த இலக்ஷணம்**” மற்றும் “**ஸ்வரூப இலக்ஷணம்**” எனப்படுகின்றது.

உதாரணமாக, ராஜாராம் வீடு எங்கு உள்ளது? என்று ஒருவன் அந்த வீதியில் உள்ள ஒரு கடைக்காரரிடம் முகவரி விசாரிக்கும்போது, அந்த கடைக்காரரும், அதோ அங்கே

தெரிகின்றது பாருங்கள் அந்த காக்கா உட்கார்ந்து இருக்கின்ற வீடுதான் ராஜாராம் வீடு என்று காட்டிக் கொடுக்கின்றார்.

அந்த ஒருவனும், அந்த கடைக்காரர் கூறிய வீட்டைப் போய் பார்க்கையில், காகம் அங்கு இல்லை. அது பறந்து போய் வீட்டது. ஆனால், அது ராஜாராம் அவர்களின் வீடா? இல்லையா? என்று கேட்டால், நிச்சயமாக அது ராஜாராம் வீடுதான்.

இதுப்போன்று, நாம் தற்காலிகமாகப் புரிந்துக்கொள்ள அதன் **இலக்ஷணம்** பற்றி குறிப்பிட்டு கூறப்படுகின்றது. அதாவது, நாம் அதைப் புரிந்துக் கொள்ளும் வரை அந்த இலக்ஷணம் தற்காலிகமாக இருக்கும். அதற்குத்தான் "**தடஸ்த இலக்ஷணம்**" என்று பெயர்.

அவ்வாறே, **ஸ்வரூபலக்ஷணம்** என்பது, ஒருவனுடைய சொரூபத்தைச் சுட்டிக்காட்டுவது ஆகும். அதிலே, ஒருவன் நேற்று பார்ப்பதற்கு கருப்பாக இருந்தான். இன்று சிகப்பாக மாறிவிட்டான் என்பதெல்லாம் கிடையாது. அதுப்போன்று, நேற்று அவனுக்கு இரண்டு கண்கள் இருந்தன, இன்று ஒரு கண் மட்டுமே உள்ளது என்றெல்லாம் கிடையாது.

இத்தகைய இலக்ஷணங்கள் எப்போதும் இருப்பவைகள். அவற்றிற்கு "**ஸ்வரூப இலக்ஷணம்**" என்று பெயர்.

இந்த இரண்டு இலக்ஷணங்களும் ஒரு பொருளின் ஸ்வரூபத்தைத் தெரியப்படுத்தத்தான் இருக்கின்றன.

ஆக, ஆன்மாவிற்கு (அறிவிற்கு) ஸ்வரூபம் கிடையாது, செயல்கள் எதுவும் கிடையாது. ஆக, "**ஆன்ம மயம்**" என்ற ஸ்வரூப இலக்ஷணத்தை அப்படிப் பிரித்து அறியமுடியாது. அவ்வாறு, பிரித்தறிய முடியாத ஒன்றை அப்பொருளின் "**தர்மம்**" என்று குறிப்பிட்டுக் கூறப்படுகிறது.

அதாவது, நீரின் தர்மம் குளிர்ந்திருப்பதும், நெருப்பின் தர்மம் வெப்பமாயிருப்பதும் போன்று, சச்சிதானந்தமும், நித்யத்வ நிர்மலமும், ஆன்மாவிலிருந்து பிரித்து அறிய முடியாத தர்மங்கள் ஆகும். நீருக்குக் குளிர்விக்கும் குணத்தையும், நெருப்பிற்குச் சுடும் குணத்தையும், காற்றுக்கு சலித்துத் திரட்டும் குணத்தையும் யார் கற்பித்தார்கள்?

அவைகள் இயற்கையாகவே அதனதன் குணமாக இருப்பதுப் போன்று, மனத்திற்கு ஒரு பொருளைப் பற்றும் குணமும், பற்றிய பொருளை அனுமானிக்கும் குணம் புத்திக்கும், அனுமானித்த பொருளை **தனது** என்று அபிமானிக்கும் குணம் அகங்காரத்திற்கும், அவ்வாறு அபிமானித்த பொருளை சிந்திக்கும் குணம் சித்தத்திற்கும் இருப்பது இயற்கையாக நிகழ்வதே.

முதலில் ஒன்றை புரிந்துக்கொள்ள வேண்டும். அதாவது, '**பரம்பொருள்**' தன்மை '**இறைத்**' தன்மையானது '**சத்**' என்றும் '**சித்**' என்றும் கூறப்படுகின்ற '**பூரண இருப்பின் அறிவு**' என விளக்குகிறது சாஸ்திரம்.

இந்த '**சத்**' தன்மையையும் '**சித்**' தன்மையையும் ஒருவர் தனக்குள்ளே ஆழ்ந்து அனுபவிக்கும் ஆனந்த தருணத்தில், உணரப்பட வேண்டிய விசயமே தவிர, அந்த வார்த்தைகளுக்கு தனித்து ஒரு அர்த்தமோ அல்லது அதை ஒரு காட்சிக்குள் அடங்குகின்ற பொருளோ அல்ல! மேலும், இந்த பெயர்களும், அதன் தன்மைகளும் தனித்தனியாக கிடையாது. அது ஏகப்பொருளின் ஏகாந்த அனுபவம் ஆகும். அதை எண்ணற்ற மகான்கள், ஞானியர்கள் தங்களின் அனுபூதி நிலையில் கண்டெடுக்கப்பட்ட மிக பவித்ரமான உண்மைகள் ஆகும்.

ஆகவே '**சத்**' தன்மையும் '**சித்**' தன்மையும் பிரிந்து இருக்கும் விசயங்கள் அல்ல. அதாவது, அவைகள். தனித்தனி விஷயங்கள் இல்லை. அவை எப்போதும் சேர்ந்தே உள்ளன. அந்தத் தன்மைகளை உணரும் தருணம்தான் ஆனந்தம்.

**சத்,** **சித்** ஆகிய இரண்டும் இணைந்திருப்பதை உணர்வதே சச்சிதானந்தம். '**சத்-சித்-ஆனந்தம்**' என்பது ஒன்று சேர்ந்த தன்மையாக துலங்குவதே '**பரம்பொருள்**' நிலை. அதுவே, மெய்யான உள்ளமை, பிரஞ்ஞை உணர்வு, பேரானந்தம் எனப்படுகின்றது.

**குணம் - குறி** மற்றும் **நாமம் - ரூபம்** இவைகளால் ஆன இந்த பௌதீக பிரபஞ்சம் அந்த மெய்ப்பொருளிலேயே தோன்றி, அந்த மெய்ப்பொருளிலேயே இருந்து, அதே மெய்ப்பொருளிலேயே மறைந்து கொண்டிருக்கின்றது.

'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா சஹ' அதாவது, 'மனமும் வார்த்தைகளும் அதை சுட்டிக் குறிப்பிட்டு காட்ட முடியாமல் தாம் கிளம்பிய இடத்திற்கே திரும்புகின்றன' என்ற உபநிஷத வாக்கியம் கூறுகின்றது.

ஆக, "**நான்**" என்று நாம் அறிந்துக் கொண்டிருக்கும் இந்த உடலும், மனமும் '**நான்**' அல்ல. அப்படியானால், எண்ணங்கள் எங்கிருந்து வருகின்றன? அந்த எண்ணங்களை அடக்க, அடக்க அவைகள் மேலும், மேலும் வலுவாக எழுந்து ஒருவனை வதைக்கின்றது. ஆக, அந்த எண்ணங்களை யார் உணர்கிறார்கள்?

இவைகள் அனைத்துமே என்றும் இயல்பாக இருக்கும் அந்த ஆன்மாவின் சந்நிதானத்தில் நிகழும், அதன் பிரதி பிம்பமாகிய மனதின் நிகழ்வே என்றும், அந்த ஆன்மாவாகிய தன்னுடைய இருப்புக்கும், அதன் நிழலாகிய மனதின் நிகழ்வுக்கும் தொடர்பில்லை என்றும் அறிந்துக்கொண்டு, அந்த ஆன்மாவை (அறிவை) முன்னிறுத்தி, அஹங்காரமின்றி அமைதியாக இருக்கப் பழகினால் நமது **உள்ள நிலை உள்ளபடி** காலப்போக்கில் தெளிவாகும்.

आत्मनः सच्चिदंशश्च बुद्धेर्वृत्तिरिति द्वयम् ।
संयोज्य चाविवेकेन जानामीति प्रवर्तते ॥ २५॥

ஆத்மனஹ சச்சிதம்ஷச்ரவ புத்தேவ்ருத்திரிதி த்வயம் |
சம்யோஜ்ய சாவிவேகேன ஜானாமீதி ப்ரவர்த்ததே ||

சத்து சித்து என்னத்தகும் ஆன்ம அம்சமும்
புத்தி விருத்தி புகல் ஒன்றும் – ஒத்த
இரண்டோடு மூடத்தால் யான் அறிகின்றேன் என்று
ஒருத்தன் தொழில் படுவன் ஓர் – **ஸ்ரீ ரமணர்**

("**சத்**" எனப்படும் இருப்பும், "**சித்**" எனப்படும் அறிவும் நமக்குத் தெரிகின்ற ஆன்ம சைதன்ய வெளிப்பாடுகள். அவைகள் நம் புத்தியின் விருத்தியுடன் இணைந்துக்கொண்டு, அறியாமையினால் "**நான் அறிகின்றேன்**" என்று ஒருவன் எண்ணிக் கொண்டு செயல்படுகிறான் என்பதை அறிவாயாக.)

ஒருவன் எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும், அல்லது ஈடுபடா விட்டாலும் அவனது இருப்பைப் பற்றி எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

அதுப்போன்று, மனதின் அத்தனை எண்ணங்களுக்கும், அதனால் உண்டாகின்ற உடற் காரியங்களுக்கும் அந்த ஆன்ம சைதன்யமாகிய "**அறிவு**" இருப்பதினால்தான் இவைகள் எல்லாமே இருக்கின்றன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

அதிலே, நல்ல சிந்தனைகள் உண்டாவதும், தீய சிந்தனைகள் உண்டாவதும் அவனவன் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் உண்டாகிய புத்தி சக்தியுடன் கூடிய புற அறிவு அவனை நல்வழிகளில் அல்லது தீய வழிகளில் இயங்க வைப்பதை நாம் நன்கு அறிகிறோம்.

இவைகள் இரண்டுமே அவனது மனதின் மூலம் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் எழுச்சி என்றாலும், அதை அவனது புத்தி சக்தியினால் பகுத்தறிய தவறும் பட்சத்தில், அவைகளை "**நான் அறிகிறேன்,** "**நான் செய்கிறேன்**" என்ற அகங்கார, மமகார ஆளுமைகளால் ஆளக்கூடிய அவனவன் புத்தியில், அவன் இருப்பதாகவும், இயங்குவதாகவும் அறியப்படுவது அவனது அஞ்ஞானத்தினால்தான் ஆகும்.

ஆனால், உண்மையில் அந்த ஆன்ம சைதன்யம் இருப்பதினால்தான் இங்கு எல்லாமும் பிரகாசிக்கின்றது என்ற போதிலும், அடிப்படையில் அந்த ஆன்மா பார்ப்பதும் இல்லை, பார்க்கப்படுவதும் இல்லை.

அதாவது, "**சத்**" என்ற ஆன்மா "**நான்**" என்று எப்போதும் கூறாது. அவ்வாறே, "**ஜடம்**" என்ற உலகமும் தன்னை "**நான்**" என்று என்றுமே அறிவிக்காது.

அப்படியானால், "**நான்**" என்று கூறுவதும், '**நான் யார்**?' என்றும் அறிவது எது?

ஆன்மாவின் "**சத்சித்**" அம்சமும், அதன் பிரதிபிம்பமான புத்தியின் விருத்தியில் உண்டாகும் "**அறிகிறேன்**" என்ற அகங்காரமும் ஒன்றிணையும்போது, இவைகளுக்கு இடையில் தோன்றும் மனதில் மட்டுமே, ஒருவன் "**நான் அறிகின்றேன்**" என்று செயல்படுகிறான்.

இவ்வாறு '**சித்**'தையும், '**ஜடத்**'தையும் (அறிவு - அறியாமை) இணைத்து உருவாகும் சீவனை (மனதை) "**சித்ஜடக் கிரந்தி**" என்று கூறுப்படுகின்றது.

ஆன்மா (அக அறிவு) மனித புத்தியில் பிரதிபலிக்கும் போது அதன் "**சத்** - **சித்**" சொரூபம் புத்திக்கே உள்ளதாகத் தோன்றுகின்றது. அந்த புத்தியையே "**நான்**" என்று ஒருவன் நினைத்துக் கொள்ளும்போது மட்டுமே, அவனுக்கு **அகந்தை** உண்டாகிறது.

அப்போதுள்ள அந்த நிலையில்தான் அவன் '**நான் வேறு, நான் காணும் உலகம் வேறு**!' என்று எண்ணுகிறான்.

அதனால், உலகத்தில் உள்ளதை **உள்ளபடி உணராமல்**, ஒவ்வொருவனும் தனக்கே உரிய தன் எண்ணங்களுக்கு ஏற்ற உலகத்தை உருவாக்கிக் கொள்கிறான்.

அதன் காரணமாகத்தான் அவனவன் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களுக்கு ஏற்ப, இந்த உலகம் ஒருவனுக்கு சந்தோஷமாகவும், மற்றொருவனுக்கு துக்கமாகவும் உள்ளது.

ஆனால், ஆன்ம ஞான விசாரத்தினால் அஞ்ஞானம் அழிந்த சீவனுக்கு (மனதிற்கு), **ஜீவ பாவம்** அழிந்து **ஆன்ம சொரூபம்** ஒன்றே விளங்குவதால், அந்த மனம் மட்டுமே பூரண ஆனந்தத்தை அடைகிறது.

அந்த நிலையை அனுபவத்தில் உணர்வது ஒன்றே, இங்கு உடல் எடுத்துப்பிறந்த பல்வேறு சீவர்களின் அடிப்படை ஆசை என்பதினால், அதை நோக்கி பயணித்த சீவனின் (மனதின்) அறிவுப் பரிமாணத்தின் படிநிலைகளில் பகுத்தறிவு கொண்டதாக உயரக்கூடிய உன்னத மனிதப்பிறவி மட்டுமே தனக்குக் கிடைத்துள்ள மகத்தான இந்த வாழ்க்கைப் பயணத்தின் **இறுதிநிலை** என்ன? என்பதையும் அறிய முடியும்.

आत्मनो विक्रिया नास्ति बुद्धेर्बोधो न जात्विति ।
जीवः सर्वमलं ज्ञात्वा ज्ञाता द्रष्टेति मुह्यति ॥ २६॥

ஆத்மனோ விக்ரியா நாஸ்தி புத்தேர்போதோ ந ஜாத்விதி |
ஜீவஹ சர்வமலம் ஞாத்வா ஞாதா த்ரஷ்டேதி முஹ்யதி ||

என்றும் விகாரம் இலது ஆன்மா புத்தியும்
என்றும் அறிவின்றியதே என்றாலும் – ஒன்றிய
சீவனே எல்லாம் தெரிவான் செய்வான் காண்பான்
பாவத்தான் மாமோகி பார். – **ஸ்ரீ ரமணர்**

(ஆன்மாவோ எப்போதும், எந்தவிதமான விகாரமும் இல்லாது இருக்கிறது. புத்திக்கோ என்றைக்குமே தானாக உள்ள அறிவு என்பது கிடையாது. அப்படி இருந்தும் “**நான்**” என்னும் பாவத்துடன் ஒன்றுபட்ட சீவனே எல்லாவற்றையும் ‘**நான் தெரிந்து கொள்கிறேன்**’, ‘**நான் செய்கிறேன்**’, ‘**நான் பார்க்கிறேன்**’ என்ற பாவத்தினால் மிகுந்த மோகமடைகிறான் என்பதைத் தெரிந்துக் கொள்.)

ஆன்மாவுக்கு “**இருப்பு**” என்ற ஒரு தன்மை தவிர **பார்ப்பது, கேட்பது, செய்வது** போன்ற குணங்கள் இல்லாததால் அது எந்த விகாரங்களையும் அடைவதில்லை. புத்தியும், தனக்குத்தானே ஊற்றெடுக்கும், அறிவற்ற ஜடப்பொருள் ஆதலால், அதுவும் தானாகவே எதையும் அறிவதில்லை.

ஆன்மாவின் ஒரே குணமாகிய ஞானத்தை சீவன் புத்தியிடம் இருப்பதாகப் பாவித்து “**தான் இதை அறிகிறேன்**”, “**அதை அறிகிறேன்**” என்று கருதும்போது, அங்கு “**சித்**” ஆகிய அறிவு அம்சமும், “**ஜடம்**” ஆகிய **இது - அது** அம்சமும் கலந்தே வருகின்றன என்பதை அறியாது இருக்கிறான்.

அறிவாகிய “**சித்**” அம்சம், மற்றும் “**நான்**” எனும் இருப்பாகிய “**சத்**” அம்சம் இவைகளை அறியாது, “**நான்**” என்பதை உடலளவோடு குறுக்கும்போது மட்டுமே சீவனும் தெரிகிறது, உலகமும் தெரிகிறது. அதனாலேயே நமது விழிப்பு நிலையில் இவைகள் இரண்டையும் அனுபவிக்கிறோம். ஆழ்ந்த உறக்க நிலையில் அவைகள் காணப்படாது, உறக்க அனுபவம் மட்டுமே எஞ்சி நிற்கிறது.

**புத்தி** எனப்படுவது ஆன்மாவின் சந்நிதானத்தில் உருவாகும் அந்தக்கரண விருத்தியாகும். ஒருவன் “**அதை - இதைப் பார்த்தேன்**” என்று கூறும்போது பேரறிவாகிய “**சித்**” அம்சம் ஒரு சிற்றறிவாகக் குறுகி விடுகிறது. ‘**ஜடம்**’ எப்போதும் ஜடமாகவே இருக்கும். அதை உணர்வதற்கு **அறிவு** தேவை.

அந்தக்கரண விருத்தி இடையில் புதிதாக உண்டாவதால் ஒருவன் “**நான் அறிகிறேன்**” என்று தவறாக எண்ணிக் கொண்டு, அதற்குக் காரணமான பேரறிவை உணராது, சிற்றறிவைத் தான் கொண்டுள்ளதாக மயங்குகிறான்.

ஒரு பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டில் உள்ள இரும்பு ஜடமே ஆயினும், அது நெருப்பிலிருந்து உஷ்ணத்தைப் பெற்றதால், அது நெருப்பைப் போன்றே உஷ்ணத்தைப் பெற்று எவராலும் தொட முடியாது இருக்கிறது. அந்த நிலையில், அங்கு நெருப்பையும், இரும்பையும் பிரித்துப் பார்க்க முடியுமா? அல்லது குறடால் பிடித்துக் கொண்டிருப்பது **இரும்புதான், நெருப்பு இல்லை!** என்று கூற முடியுமா?



ஆனாலும், பின்பு அதைக் குளிர வைத்துவிட்டால், அந்த இரும்பு தனது ஜட நிலைக்கே மீண்டும் திரும்ப வந்து விடும். அதுப்போன்று, சீவன் (மனம்) தனது “**இருப்பு**” எனும் தன்மை ஆன்மாவிலிருந்து பெறப்பட்டது என்பதையும், அது ஒன்றே அறிவுமயம் என்ற உண்மையையும் அறியாதவரை, தானே நெருப்பு என்று ஓர் இரும்புத் துண்டு தன்னைப்பற்றி தவறாக நினைத்துக்கொள்வது போல, சீவனும் தன்னைப்பற்றி **அறிவு (ஆன்மா)** என்று மோகம் கொள்கிறது.

रज्जुसर्पवदात्मानं जीवं ज्ञात्वा भयं वहेत् ।
नाहं जीवः परात्मेति ज्ञातं चेन्निर्भयो भवेत् ॥ २७॥

ரஜ்ஜுசர்ப்பவதாத்மானம் ஜீவம் ஞாத்வா பயம் வஹேத் |
நாஹம் ஜீவஹ பராத்மேதி ஞாதம் சேன்நிற்பயோ பவேத் ||

தன்னைத்தான் சீவன் எனத் தாம்பிலே பாம்பு போல்
உன்னியே அச்சம் உறுகின்றான் – தன்னைத்தான்
சீவன் அலன் யான் பரமான்மா என்று தேர்ந்ததனால் ஆவன்
அஞ்சானாய் அவன். – **ஸ்ரீ ரமணர்**

(கயிற்றை ஒருவன் பாம்பாக எண்ணுவதுப் போன்று, எங்கும் பரவியுள்ள ஆன்ம வடிவான தன்னை தனித்தே விடப்பட்ட **சீவன்** என எண்ணி எதற்கெடுத்தாலும் பயப்படுகிறான். எப்போது அவன் தான் சீவனல்ல, **பரமாத்ம சொரூபமே** என்று அறிந்து தெளிகிறானோ, அப்போதே அவன் அனைத்து பயமும் நீங்கியவனாக ஆகிறான்.)

ஒருவனுக்கு பயம் என்பது எப்போது வருகிறது?

தனக்கு ஒரு முடிவு உண்டு அல்லது தனக்கு மரணம் வருகின்றது என்று என்னும்போது பயம் வருகின்றது. அல்லது பிறரால், பிறவற்றால் தனக்கு தீமை உண்டாகலாம் என என்னும்போதும் பயம் வருகின்றது.

எதற்கும் ஒரு தொடக்கம் இருப்பதுப் போன்று, அதற்கு ஒரு முடிவும் உண்டு என்பதை ஒருவன் உணர்கின்ற பொழுது மட்டுமே, அவனுக்கு இந்த பிரபஞ்சம் என்ற சக்கரத்தில் எல்லாமே சுற்றிக் கொண்டுள்ளன என்று அறிய முடிகின்றது. அவ்வாறே, இந்த உடலுக்கு **பிறப்பு** என்ற ஒரு **தொடக்கம்** உண்டு என்றால், அதே உடலுக்கு **இறப்பு** என்ற அதன் **முடிவும்** உண்டு என்பதையும் அவனால் ஏற்க முடிகின்றது.

அதாவது, ஒருவன் தன்னைத் தனது உடலோடு அடையாளப் படுத்திக்கொண்டு, '**நான் இன்னார்**', '**இந்த ஜாதி**', '**இந்த மொழி**' என்றெல்லாம் ஏற்றி வைத்துக் கொண்டுள்ளவரை எல்லாமே இவனுக்கு வேறாக மட்டுமே இருக்கும். அத்துடன் அவைகளினால் அவனுக்கு ஆபத்து உள்ளது போன்ற ஒரு தோற்ற மாயத்தை உண்டாக்கி, அவைகளால் அவனுக்கு பயத்தையும் உண்டாக்கும்.

எவன் ஒருவன் எதையெல்லாம் எனது, என்னுடையது என்ற அடையாளங்களை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவன் அவைகளினால் இன்ப, துன்பங்களை அடைகின்றான். ஏன்? எனில், அந்த அளவுக்கு அவைகளின்மீது, அவன் அதீத அபிமானம் கொண்டுள்ளான்.

உருவத்தில் வருகின்றவைகள் எல்லாம் உண்மையில் வந்து போகின்றவைகள் என்றும், அவைகள் எல்லாம் ஒரு நாள் இங்கு இல்லாமல் போய்விடும் என்றும், அவைகள் எல்லாம் மனம் கற்பித்துக் கொண்ட **தோற்ற மாயை** என்றும்

அறிகின்றபொழுது மட்டும்தான், அவனது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் எழுச்சியில் உண்டான உடல் அபிமானத்தை உதர முயற்சிக்கின்றான்.

அதன்காரணமாக, '**இன்று இருப்பது**! **நாளை இல்லை**!' என்ற புரிதலும், அத்துடன் வந்து போகின்ற இந்த உடல்களின் **பிறப்பு - இறப்பு** பற்றியும், அந்த உடல்களுக்கு ஆதாரமாக ஆன்மா ஒன்று உள்ளதைப் பற்றியும் அறிய ஆர்வம் கொள்கிறான்.

அனைத்து உடல்களுக்கு உள்ளேயும் அறிவாக ஆன்மா இருந்துக்கொண்டு, அவைகளை எல்லாம் பிரகாசிக்க வைக்கிறது என்ற அறிவு அவனுக்கு வந்ததின் விளைவாக, "**நான்**", "**எனது**", என்ற அனைத்து அபிமானத்தையும் இழக்க விரும்புகின்றான்.

அப்படிப்பட்டவனுக்கே ஆன்மா ஒன்று மட்டுமே இருக்கிறது. அதன் அறிவுப் பிரகாசத்தின் விளைவாக வந்து போகின்ற உடல்கள் எல்லாம் மனதின் வாயிலாக மட்டுமே ஜொலிக்கின்றது. அதன் உண்மைத் தன்மையை உணர்ந்துக் கொண்டதினால், உடல்களின் **பிறப்பு - இறப்பு** பற்றிய பயம் இல்லாமல் போகின்றது.

மேலும், தன் உடலைப்போன்றே, மற்ற உடல்களும் அந்த ஆன்மாவின் சந்நிதானத்தில் உள்ளதினால், அவைகள்

வந்து, போவது என்பது விழிப்பு நிலையில் மட்டுமே உள்ளது என்பதும், அதுவே, கனவில் நம் மனம் வேறோர் உலகத்தைப் படைத்துக் கொள்கிறது என்பதும், அதுவே, ஆழ்ந்த உறக்கதில் எந்த உலகமும் இல்லாமல் போகின்றது என்பதும் புரிய வரும்போது, இந்த வந்து போகின்ற உடல்களினால் ஒருவனுக்கு தீங்கு உண்டாவது என்பதும், அவனது மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களினால் விளைந்த விதி வழி வாழ முயற்சிக்கின்ற மனிதனின் **மதி மயக்கம்** என்றும் புரிகின்றது.

இந்த புரிதலின் மூலம், தன்னையன்றி, தனக்கு ஒரு தீங்கும் உண்டாகாது என்பதினால், பிறரால் எப்படி தீங்கு வரும்? என்பதை அறிகின்ற பொழுது, அவனைப் பொருத்தவரை **தீது** என்பதும் இல்லாது போய் விடுகின்றது.

அதனால், ஒருவனுக்கு "**நான்**" எனும் **உணர்வு** என்பது, அழியப்போகும் இந்த உடல் சார்ந்து உண்டாவதல்ல. அது என்றும் அழியாத ஆன்மாவைச் சார்ந்தே உண்டாகிறது.

இதை அறியாமல், ஒருவன் அனைத்தையும் தன் உடல் சார்ந்த உணர்வாக எண்ணிக் கொள்வதினால், அவனுக்கு அந்த உடலின் **பிறப்பு - இறப்பு** குறித்த பயம் உண்டாகிறது.

ஆனால், இருப்பது ஆன்மா மட்டுமன்றி, வேறு எவருமே கிடையாது! என்பதில், ஒருவனுக்கு விவேகம்

உண்டாகி விட்டால், அவனுக்கு உள்ளத்தில் பயம் உண்டாவது கிடையாது. ஆக, இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிக் கற்பனை செய்துக் கொள்கிற மனதின் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களினால் வருவதுதான் இந்தப் பயஉணர்வு.

மேலும், இவ்வுலக வாழ்க்கையில் நமக்குத் தோன்றும் பலவிதமான எண்ணங்களின் ஒட்டுமொத்த தொகுப்பைத்தான் நாம் நமது "**மனம்**" என்றும் கூறுகிறோம்.

எனவே, ஒவ்வொருவரின் எண்ணங்களுக்கு ஏற்பவே, அவரவர்களுக்கு மனம் அமைகிறது. அதற்கு ஏற்ப அவர்கள் காணும் உலகமும், வாழ்க்கையும் அமைகிறது.

ஆக, இந்த உலகம் என்பது எல்லோருக்கும் ஒன்று போல கிடையாது. அவரவர்களின் ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களுக்கு ஏற்ப இந்த உலகம் விரிகின்றது. அதுவும் அவர்களின் மனதில் மட்டுமே அது நிகழ்கின்றது. ஆம்! ஆழ்ந்த உறக்கத்தில் இந்த உலகம் அவனிடம் இருப்பதில்லை.

ஆக, உள்ளதை உள்ளதாகப் பார்ப்பவனுக்குத்தான் இந்த உண்மை புலப்படும். எனவே, இல்லாத ஒன்று இருப்பதாக ஏன் தோன்றுகிறது?

இதற்கு விடை தேடுவோர், தனது **நனவு - கனவு** அனுபவங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டியது அவசியம் ஆகின்றது.




அதாவது, நனவுலகத்தில் காண்பதின் சாயல்களையும், அதன் பல்வேறு கலவைகளையும்தான், ஒருவன் தன்னுடைய கனவுலகிலும் காண்கிறான்.

முதலில், தன்னைப்போலவே ஒருவனை தன் கனவில் உருவாக்குவதில் தொடங்கி, அதன்பின் மற்ற சம்பவங்களும் அங்கு நிகழ்கின்றன. அவைகள் எதுவுமே உண்மை அல்ல! என்பது, அவனுக்கு விழிப்புவந்த பின்புதானே தெளிவாகிறது?

ஆனால், அவன் கனவு காணும்வரை அவைகள் எல்லாமே உண்மை போலத்தானே தெரிந்தது?

‘**கனவு நான்**’ என்ற ஒன்று இருக்கும்வரை, அவனது கனவில் வரும் காட்சிகள் அனைத்தும் உண்மை போலத் தெரிகிறது. ஆனால், அவைகள் உண்மையல்ல! என்று அவன் தெரிந்துக் கொள்வதற்கு, அவனுக்கு ‘**நனவு நான்**’ என்ற ஒன்றும் தேவைப்படுகின்றது.

அதுப்போன்று, **உள்ளதை உள்ளபடி உணர்வதற்கு** நனவு - நானின் உண்மை சொரூபம் தெரிய வேண்டும்.

அதுவரை “**நான்**” என்பதை எப்படிப் புரிந்துக்கொண்டு உள்ளோமோ? அப்படித்தான் மற்ற எதனையும் நாம் புரிந்துக் கொண்டிருக்க முடியும். ஆக, அது உண்மையில் உள்ளதா? அல்லது இருப்பதாக நாம் கற்பித்துக் கொண்டுள்ளோமா? என்பதும் நமக்குத் தெரியாது.

இருளில் சுருண்டு கிடக்கும் கயிறு ஒன்றை ஒருவன் மங்கிய ஒளியில் பார்க்கும்போது, அவன் எப்போதோ முன்பு பார்த்த பாம்பின் சாயலை அதில் பார்த்து கயிற்றை பாம்பு என நினைத்து பயம் கொள்கிறான்.

தேவையான ஒளி அதன்மேல் பட்டதும், உண்மையை உணர்ந்து, தான் பார்த்தது பாம்பல்ல! அது வெறும் கயிறு! என்று தெளிகிறான்.

அதுப்போல, எங்கும் பரவியுள்ள **ஆன்ம சொரூபம்** என்று ஒருவன் தன்னை உணராது, தான் தற்போது காணும் உடல்தான் "**நான்**" என்று நினைப்பவன், தன்னை அந்த உடலளவில் குறுக்கிக் கொள்வதால், அவனுக்கு "**தான் - பிறர்**" என்ற பாவனைகள் வருகின்றது.

அதுதவிர, மற்றவர்கள் தன்னைவிட வேறானவர்கள் என்ற எண்ணமும் வருவதால், அவர்களிடம் ஓர் அச்சமும் வருகின்றது. அந்த அச்சம் அகல்வதற்கு அவன் தன்னைப்பற்றி நன்கு அறிவதுதான் ஒரே வழி.

அதாவது, இருள் போய், ஒளி வந்ததும், அதுவரை இருந்த பாம்பு, இல்லாது போய், அங்கு இருப்பது கயிறு மட்டுமே என்பதுப் போல, ஒருவனிடம் உள்ள அறியாமை இருள் போய், அவனிடம் '**அறிவு**' என்ற ஒளி வந்ததும், இருப்பது '**தான் மட்டுமே**' என்று தன் இருப்பை உள்ளபடி உணரும் நிலை உருவாகிறது.

அப்போது மட்டும்தான் அவனுக்கு தன்னைப்பற்றி அறிவதும், அந்த அறிவுக்கு ஆதாரமான ஆன்மாவே அனைத்திலும் அறிவு மயமாய் இருப்பதும் அறிய முடிகின்றது.

தன்னைப் போன்றே தான்காணும் அனைத்திலும், அந்த அறிவு இருக்கின்றது என்பதை உணர்பவனுக்கு எதைக் கண்டு அச்சம் வரும்?

आत्मावभासयत्येको बुद्ध्यादीनीन्द्रियाण्यपि ।
दीपो घटादिवत्स्वात्मा जडैस्तैर्नावभास्यते ॥ २८॥

ஆத்மாவபாசயத்யேகோ புத்தயாதீநீன்த்ரயாண்யபி |
தீபோ கடாதிவத்ச்வாத்மா ஜடைச்தைநார்வபாச்யதே ||

ஒரு பொருளாம் ஆன்மா ஒளிர்க்கும் மதிமுன்
கருவிகளைத் தீபம் கடாதி – பொருவ
ஒளியில் அவற்றால் ஒருபோதும் ஆன்மா
ஒளிர்க்கப்படாது என்று உணர். – **ஸ்ரீ ரமணர்**

(சட்டி, பானை, குடம் போன்ற ஜடப்பொருட்கள் எங்கிருக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கு விளக்கு அல்லது சூரிய ஒளி தேவைப்படுவதுப் போல, ஏக வடிவாய் இருக்கும் ஆன்மாதான் மனம், புத்தி, இந்திரியங்கள் முதலானவற்றைப் பிரகாசிக்கச் செய்கின்றது. ஆக, தேஜோ மயமான ஆன்மா ஒருபோதும் புறபொருட்களின் ஒளியினால் பிரகாசிப்பதில்லை என்பதை உணர்ந்துக் கொள்.)

நமது கண்களைக் கொண்டு, நமக்குப் புறத்தில் உள்ள அனைத்தையும் பார்க்கிறோம். ஆனால் அந்தக் கண்களால் நமது கண்ணையே பார்க்க முடிகிறதா? இல்லை அல்லவா…?

அதற்கு, ஒரு கண்ணாடியோ அல்லது பளபளக்கும் தரைத்தளமோ இல்லையென்றால், நம் கண்களை நாமே பார்க்க முடியாது.

அதுப்போன்று, நம் **மனம், புத்தி** இவைகளின் துணைக் கொண்டு பார்க்கும் நமக்கு, அதற்கு வேண்டிய புறக் கருவிகளாகிய புலன்கள் நம்மிடம் இருப்பதினால்தான் நாம் எல்லாவற்றையும் அறிகிறோம்.

அதேசமயம், நம்மிடம் உள்ள புறக்கருவிகள் நன்றாக இருந்தும், அந்த புலன்கள் அறிந்துக் கொள்ளக்கூடிய அகக் கருவிகளாகிய **மனமும், புத்தியும்** சரியாக இல்லையென்றால், நம்மால் எதையும் ஒழுங்காக அறிந்துக் கொள்ள முடியாது. அதனால்தான், மன வளர்ச்சிக் குன்றிய, புத்தி சுவாதீனமற்ற குழந்தைகள் எதையும் ஒழுங்காகத் தெரிந்துக் கொள்வதில்லை.

இதிலிருந்து, நம் புறக்கருவிகள் (புறக்கரணங்கள்) நன்றாக இருந்தும், நம் அகக் கருவிகள் (அகக்கரணங்கள்) நன்றாக இல்லையெனில், நம்மால் எதையுமே சரியாக அறிய முடியாது. அதிலே, புறக் கருவியாகிய கண்கள் என்பது, ஒரு ஸ்தூலக் கருவி மட்டுமே. அதாவது, மற்றவர்களால் பார்க்க முடிகின்ற புலன். அதுவே, மனம், புத்தி முதலியன நமது நுண்ணிய அந்தக்கரணங்களாகிய அகக்கருவி. இதை மற்றவர்களால் சாதாரண கண்களால் பார்க்க முடியாது.

ஆனால், அந்த அகக் கருவியாக மனம் என்பது, ஏற்றி வைக்கப்படுகின்ற ஏராளமான எண்ணங்களின் அடிப்படையில் அனைத்தையும் தன்னுடைய மனக் கண்ணால் பார்க்கிறது. ஆக, அந்த கண்ணுக்கு எதிராக இருப்பவற்றையும், அல்லது இல்லாதவற்றையும் அறியக் கூடிய அதி சூக்ஷ்மமான நமது அந்தக்கரண கருவியாகிய மனம் மற்றும் புத்தி எதைக் கொண்டு எல்லாவற்றையும் அறிகிறதோ? அதுவே, ஆன்மா.

அதாவது, குடம், பானை, சட்டி போன்ற ஜடப் பொருட்களாகிய சாதனங்கள் இருளில் இருந்தால், அவைகள் எங்கே இருக்கின்றன? என்று பார்ப்பதற்கு ஒரு விளக்கு தேவைப்படுகின்றது. ஆனாலும் அந்த விளக்கைக் கொண்டு சூரியனைப் பார்க்க முடியுமா? அல்லது பிரகாசிக்கச் செய்ய முடியுமா? என்றால், அது சாத்தியம் ஆகாது.

அதாவது, பிரகாசமான சூரியனின் முன்பு, மற்ற ஜடப் பொருட்களைக் காட்டும் விளக்கு ஒரு ஜடம் என்பதுப் போல, நமது நுண்ணிய புத்தியினால், புறக் கருவிகளாகிய புலன்களின் மூலம் அறியப்படுபவைகள் அனைத்தும், அந்த புத்தியையே ஒளிர்விக்கும் சைதன்யமாகிய ஆன்மா முன்பு, நமது புத்தியும் ஜடம் என்பதாகத்தான் ஆகிறது.

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்னி |
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி || (கட உபநிஷதம்)

அங்கே, சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் என எதுவுமே தானாக ஒளிர்வதில்லை, மின்னல் ஒளிர்வதில்லை. அப்படியிருக்க, இந்த அக்கினி மட்டும் ஆன்மா இல்லாமல் எப்படி ஒளிர முடியும்?

ஒளிர்கின்ற ஆன்மாவை (அறிவை) அனுசரித்தே மற்ற அனைத்தும் (புத்தியால்) பிரகாசிக்கின்றன. அதாவது, அந்த ஆன்மாவின் அறிவு ஒளியினால் மட்டுமே அனைத்தும் ஒளிர்கின்றன என்பதை, இந்த கடஉபநிஷத மந்திரம் விளக்குகின்றது. ஆக, அந்த அறிவு ஒளியாகிய ஆன்மாவை அகத்தில் அறிவதற்காகத்தான் புறத்திலே தீபம் ஏற்றி வழிபாடு செய்யும் முறை கொண்டு வரப்பட்டது.

ஆனால், அதன் உண்மை தாத்பரியம் என்னவென்று தெரியாமல், இன்றைய சமூகம் மனம் போன போக்கிலே, மூட பக்தியிலே சிக்கிக்கொண்டு, அகம் என்ற சந்நிதானத்தில் அந்த ஆன்ம சைதன்யத்தை அறியாமல், புறத்திலே உள்ள சந்நிதானத்தில் **அது வேண்டும், இது வேண்டும்** என்று வழிபாடு செய்துக் கொண்டுள்ளனர்.

அதுவும் இன்றைய சபரிமலைக் கோவிலுக்கு போகின்ற மக்கள் கூட்டம் எதை நோக்கி அப்படிச் செல்கிறது என்பதை எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. அவ்வளவு மூடத்தனம், மூடபக்தி புகுத்தப்பட்டுள்ளது. ஆனால், அதே சபரிமலை சந்நிதானத்தின் முன்புற வாசலின் மேற்புறம் “**தத்வமஸி**” **(நீ அதுவாகவே இருக்கிறாய்!)** என்ற வாக்கியம் எழுதப்பட்டிருப்பதை எத்தனைப் பேர்கள் படிக்கின்றார்கள்?

எண்ணிப்பாருங்கள்! புத்தி சக்தி எப்படி பிரகாசிக்கிறது? என்று எண்ணிப்பாருங்கள். ஆக, தன்னை அறியத்தான் ஆறாம் அறிவாகிய பிரத்யேக **புத்திசக்தி** மனிதனிடம் மட்டுமே உள்ளது. ஆனால், அந்த புத்தி சக்தியை உபயோகப்படுத்தி தன்(இறைவ)னை அறியாமல், புத்தி சக்தி குறைவாக உள்ள மிருகங்களைவிட கீழான நிலைக்கு இன்றைய மனிதர்கள் சென்று கொண்டுள்ளார்கள் என்றே கூறப்பட வேண்டும்.

அதுவும், “**சத்**”, “**சித்**” ஆக இருக்கின்ற அறிவு மயமான **ஆன்மா** ஒன்றினால்தான், அந்த புத்தியும் **அறிவொளி** பெற்று, அந்தக் கரணங்களையும் ஒளிர்விக்கச் செய்து, அவைகளின் வாயிலாக **பார்ப்பது, கேட்பது** முதலான செயல்களில் ஈடுபடச் செய்கிறது என்பதையும் அறியாமல் இருக்கிறார்கள்.

ஆக, புத்தி என்ற அகக் கரணமாகிய நமது நுண்ணியக் கருவிகூட, ஆன்மாவின் முன் ஜடம் ஆகிறது என்பதைக் குறிப்பிடும் முகமாகத்தான் “**புத்தி முதலான**” எனப்பொருள் தரும் வகையில், “**புத்தயாதி**” என்ற சொற்றொடர் இந்த செய்யுளில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

நமது **அக-புற கருவிகள்** அனைத்துமே, ஆன்மாவினால் ஒளி பெறப்பட்டு இயங்குகின்றனவே தவிர, அவைகள் ஒருபோதும் ஆன்மாவை ஒளிர்விக்க இயலாது என்பதை உணர வேண்டும்.

स्वबोधे नान्यबोधेच्छा बोधरूपतयात्मनः ।
न दीपस्यान्यदीपेच्छा यथा स्वात्मप्रकाशने ॥ २९॥

ஸ்வபோதே நான்யபோதேச்சா போதரூபதயாத்மானஹ |
ந தீபஸ்யான்யதீபேச்சா யதா ஸ்வாத்மபிரகாஷனே ||

விளக்கின் உருவை விளக்கிட வேறு
விளக்கை விரும்பா விதம்போல் – விளங்கும்
அறிவுருவாம் ஆன்மா அறிந்திடத் தன்னைப்
பிரிதறிவு வேண்டப் பெறாது. – **ஸ்ரீ ரமணர்**

(பிரகாசமாக எரிந்துக் கொண்டிருக்கும் ஒரு விளக்கின் உருவத்தைக் காட்டுவதற்கு இன்னொரு விளக்கு தேவை இல்லாததுப் போல, அறிவு சொரூபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவை அறிவதற்கு, வேறொரு அறிவின் துணை அவசியமில்லை.)

ஆன்மாவே நமது அந்தக் கரணங்களை ஒளிர்விக்கச் செய்கின்றன என்றால், அவைகளைக் கொண்டு ஆன்மாவை அறிய முடியாது என்பது தெளிவாகிறது. ஆன்மா சுயம் பிரகாச சூரியன் போல தானும் ஒளிர்கின்றது, தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் ஒளிர்விக்கின்றது. விளக்கு ஒன்று இருக்கிறது என்பதை அறிவதற்கு வேறு ஒரு விளக்கின் துணை தேவை இல்லாததன் காரணம், அந்த விளக்கிற்கே சுயமாக ஒளிரும் தன்மை இருப்பதால்தானே?

ஆன்மாவும் அதுப்போல சுயம்பிரகாசமாக இருப்பதால், அதன் பிரகாசம் பிரதிபிம்பித்து அந்தக்கரணங்களான **மனம் - புத்தி** முதலியவைகளை ஒளிர்விக்கிறது, அத்துடன் தானும் பேரறிவுப் பிரகாசமாக ஒளிர்கிறது. அப்படிப்பட்ட ஆன்மாவை அறிய வேறு ஒரு அறிவின் துணை தேவையில்லை.

இவ்வுலகில் எதை ஒன்றைப் பார்ப்பதற்கும் ஒருவனுக்கு கண்கள் தேவைப்படுகின்றது. அந்தக்கண்கள் எந்த ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவனது மனம் அதில் இலயிக்கவில்லை என்றால், அவனுக்கு கண்கள் இருந்தும் ஒன்றும் தெரியப் போவதில்லை.

அதுதவிர, அவனுக்கு அந்தப் புறக் கண்களினால் ஒன்றைப் பார்க்கும்போது, அந்த நேரத்தில் சூரியனோ, சந்திரனோ, நக்ஷத்திரமோ அல்லது ஒரு விளக்கோ இவைகளில் ஏதேனும் ஒன்று தரும் ஒளியின் வெளிச்சமும் அவசியம் இருக்க வேண்டும். அப்போது மட்டும்தான் அந்த பொருளைத் தெளிவாக அவனால் பார்க்க முடியும்.

அவ்வாறு அவன் புறக் கண்களைக் கொண்டு, எதை எதைக் கண்டு கொண்டானோ, அவைகளை எல்லாம் அவனது மனம் என்ற அகக்கண் மூலம் தன் சித்தத்தில் சேகரித்து வைத்துக் கொள்வதின் வாயிலாக, **‘இது, இது இன்னது’** என்ற புத்தியும் அவனுக்கு உண்டாகி விடுகின்றது. அவ்வாறு ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் அவனிடம் உண்டான புத்தி சக்தியைக் கொண்டு, அவன் தன் கண்களை

மூடிக் கொண்டால்கூட, அந்தப் பொருளைப் பற்றிய அறிவு அவனது அகக்கண் ஆகிய புத்தியினால் இப்போது உணரவும் முடியும்.

ஆக, கண்கள் என்பது புறத்திலே காணப்படுகின்ற ஒரு ஸ்தூலக் கருவியாக இருப்பதுப் போல, **மனம் - புத்தி** இவைகள் எல்லாம் சூக்ஷ்மமான நுண்ணிய அகக் கருவிகளாக அமைகின்றன. புறத்திலே காணப்படுகின்ற ஸ்தூலக் கருவிகளான **கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல்** போன்றவைகளை, சூக்ஷ்மமான நுண்ணிய அகக்கருவிகளான **மனம் - புத்தி** போன்ற அந்தக்கரணங்கள் இயக்குகின்றன அல்லது துணை செய்கின்றன.

அந்த அகக்கரணங்களாகிய **மனம் - புத்தி** போன்ற நுண்ணிய கருவிகள் பிரகாசிக்காத ஆழ்ந்த உறக்கத்தில், அவனிடம் உள்ள ஸ்தூலக் கருவிகளான கண்கள், காதுகள் போன்றவைகளும் பிரகாசிக்காது. ஆக அவைகள் அவனிடம் இருந்தும் பயனில்லாமல் போகின்றன. அதாவது, ஒவ்வொரு ஸ்தூலக் கருவிக்குப் பின்புலமாக **மனம் - புத்தி** ஆகிய சூக்ஷ்ம கருவிகள் அடிப்படையாக அமைகின்றன.

அதுவே, ஒருவனது ஆழ்ந்த உறக்கத்தில் "**நான்**" எனும் உணர்வு அவனிடம் இல்லாதபோது, அவனது நுண்ணிய கருவிகளான மனமும் - புத்தியும்கூட இல்லாது போகின்றன. ஆக, அந்த "**நான்**" எனும் உணர்வே அனைத்திற்கும் '**ஒளி**' தருவதாகக் கூறலாம்.

இதனையே அன்று **பகவான் ஸ்ரீஆதிசங்கரர்** தமது "**ஏக ஸ்லோகி**" எனும் படைப்பில் குரு - சிஷ்யன் உரையாடலாக கூறியவற்றை, இன்று **பகவான் ஸ்ரீரமணர்** தமது "**உள்ளது நாற்பது - அனுபந்தம்**" எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

"**ஒளி தனில் ஒளியும் நீ**" என குரு; அகம் அதே.

"**எல்லா ஒளிகளிலும் ஒளியாவது நீ**" என குரு உபதேசிக்க "**நான் அதுவே**" என்கிறான் சீடன். அந்த "**நான்**" என்பது "**எப்போதும் அறிவோடு கூடிய தன்மயமாக இருக்கும்**" அது, ஆன்மாவிலிருந்து பெறப்பட்ட அதி உன்னத உணர்வு என்பதால், அந்த சுயம்பிரகாச உணர்வாகிய பேரறிவை அறிவதற்கு, வேறு எந்த அறிவின் துணையும் அவசியம் இல்லை. வேறு எந்த அறிவும், அந்தப் பேரறிவுக்கு ஒளி தருவதாகவும் இல்லை! என்பதே இங்கு விளக்கப்பட்டுள்ளது.

அதனாலேயே, எவரும் "**நான் இருக்கிறேனா?**" என்று தன்னைப் பற்றி மற்றவர்களிடம் கேட்பதில்லை. தான் இருக்கிறேன் என்ற தன் சுயத்தை (அறிவை) அடிப்படையாகக் கொண்டே அனைவரும் மற்ற விஷயங்களை அறிகின்றனர், இதையே, "**எதை அறிந்துக் கொண்டால், வேறு எதையும் அறியத்தேவை இல்லையோ!, அதை அறிவதே அறிவு!**" என்று கூறப்படுகின்றது.

निषिध्य निखिलोपाधीन्नेति नेतीति वाक्यतः ।
विद्यादैक्यं महावाक्यैर्जीवात्मपरमात्मनोः ॥ ३०॥

நிஷித்ய நிகிலோபாதீன்னேதி நேதீதி வாக்யாதஹ |
வித்யாதைக்யம் மகாவாக்யைர்ஜீவாத்மாபரமாத்மனோஹ ||

நேதி நேதி வாக்கினால் நீக்கி உபாதி எலாம்
மீதியாம் சீவான்மா மீதிலா – ஆதியாம்
அப்பரமான்மாக்களின் ஐக்கிய மாவாக்கியங்கள்
செப்புவது ஓர்ந்து தெளி – **ஸ்ரீ ரமணர்**

(இந்தத் தேகம் நானல்ல, இந்திரியங்கள் நானல்ல என்று பார்க்கும் அனைத்து உபாதிகளையும் "**இதுவல்ல, இதுவல்ல**" என்று கூறும் வேதாந்த வாக்கின்படி, அவைகளை நீக்கி விட்டு கவனித்தாயானால், எஞ்சியுள்ள சீவான்மாவும், ஆதிபரம் பொருளாகிய பரமான்மாவும் ஒன்றே! எனக்கூறும் வேத மகாவாக்கியங்களின் உண்மையை உணர்ந்துக் கொண்டு தெளிவு பெறுவாயாக.)

நம்மிடம் இருப்பதை கொண்டுதான், அவைகளிடம் காணப்படுகின்ற அதன் உண்மை இயல்பை அறிய முடியும். அதனால், நமக்கு நன்கு தெரிகின்ற வஸ்துக்களை ஆராய்ந்து அவைகளின் உண்மையைத் தெரிந்துக் கொள்ளும் வழிதான் "**நேதி - நேதி**" என்று கூறப்படும் ஆராய்ச்சி முறை ஆகும்.

இது வேதாந்த விசாரத்தில் ஈடுபடும் சாதகனுக்கு, விவேகத்தை அடையும் வழிமுறையை கற்றுக் கொடுக்கும் விஷேசமான வழிமுறையாகும். அதாவது, "**நேதி - நேதி**" என்றால், அதன் பொருள் "**இதுவல்ல - இதுவல்ல**" என்பதாகும்.

உதாரணமாக, நாம் அனுதினமும் நம்மிடம் உள்ள ஒரு இரு சக்கர வாகனத்தை ஓட்டுகிறோம், ஆனால், நாமும், அந்த வாகனமும் வேறு, வேறு என்பதில், நமக்கு எந்த சந்தேகமும் இருக்காது. ஏனெனில், நாமும், அந்த வண்டியும் வேறு, வேறாக இருப்பதினால்தான், நாம் கடக்க முடியாத அதிக தூரத்தைக்கூட அந்த வாகனத்தின் உதவியால் எளிதாக கடந்து விடுகிறோம். ஆக, நாம் அந்த வாகனமல்ல என்பதில் நம்மிடம் எந்த சந்தேகமும் இல்லை அல்லவா?

அதுப்போன்றுதான் சாஸ்திரம் நமக்கும், நம்மிடம் ஏற்றி வைக்கப்பட்ட அறியாமைகளையும் வேறு, வேறு என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அதுதான் **நேதி - நேதி** வழிமுறை ஆகும். அதாவது, நமக்கு இந்த பரு உடல் உள்ளது. ஆனால் நாம் அந்த உடல் அல்ல!. அதுப்போன்று நமக்கு மனம், புத்தி போன்றவைகளான நுண்ணிய உடலும் இருக்கின்றது. ஆனால் அவைகளும் நாம் அல்ல!. இந்த பரு உடலும், அதற்கு ஆதாரமான நுண்ணிய உடல்களும் உண்டாவதற்கான காரணம் இன்னொரு காரண உடலும் உள்ளது. அதுவும் நாம் அல்ல!

ஆக, இந்த கண்களுக்குத் தெரிகின்ற நம் உடலும், நம்மிடம் உள்ள கண்களுக்குத் தெரியாத உடல்களும் நாமாக

இருந்தால், நமக்கு உடல் நிலை சரியில்லாத. போதும், மன நிலை சரியில்லாத போதும் என்ன கூறுகிறோம். என்னுடைய உடல் சரியில்லை!. என்னுடைய மனம் சரியில்லை! என்று அல்லவா கூறுகிறோம்? அப்படியானால், "**இங்கு நான் யார்**?" என்பதைத்தான் நாம் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும்.

நம்மிடம் உள்ள புலன்களைக் கொண்டு, நமக்குத் தெரிகின்ற அனைத்தையும் நாம் **பார்க்கிறோம், கேட்கிறோம், உணர்கிறோம்** என்றாலும், அவைகள் எதுவும் நாம் அல்ல! என்பதில் நமக்கு சந்தேகம் இல்லை என்பதினால், அவைகளை நமக்கு வேறாக அறிந்துக் கொண்டு, அவைகளில் இருந்து நான் தனியானவன் என்று நீக்குவதுதான் நம்மை நாம் அறியும் முறை. இந்த வழிமுறைதான் **நேதி - நேதி** வழிமுறை ஆகும்.

இதிலே, நாம் அறிந்துக்கொண்ட அனைத்தையும் நீக்கிவிட்டு எஞ்சி இருப்பது யார்? என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் மட்டுமே, அவைகளைப் பார்க்கும் ஒருவன் இருக்கிறான் என்றும், அவசியம் **அவன் யார்?** என்று அறிவதில்தான் இங்கு "**நான் யார்**?" என்றும் அறிய முடியும்.

அந்தக்கேள்வியை மிக நுண்ணியதாக அணுகினால் மட்டுமே, அப்படிக் கேட்பதற்கும், உணர்வதற்கும் ஒருவன் இருந்தாக வேண்டும் அல்லவா? அப்படி **இருப்பது ஒன்றே!** எங்கும், எப்போதுமுள்ள **பரமான்மா** என்கின்றன வேதத்தின் மகா வாக்கியங்கள்.

அந்தவகையிலே, "**அதுவாக நீ இருக்கிறாய்**" என்று சாம **வேதத்தில்** உபதேச வாக்கியமாகவும், "**உணர்வே பிரம்மம்**" *என்று **ரிக் வேதத்தில்** இலக்கண வாக்கியமாகவும்,* "**இந்த ஆத்மன் பிரம்மம்**" *என்று **அதர்வண வேதத்தில்** யுக்தியினால் நிர்ணயிக்கப்படும் சாக்ஷாத்கார வாக்கியமாகவும்,* "**நான் பிரம்மாயிருக்கிறேன்**" *என்று **யஜுர் வேதத்தில்** அனுபவ வாக்கியமாகவும் அவைகள் கூறப்பட்டுள்ளன.*

அப்படிப்பட்ட பரமான்மாவும், **நேதி - நேதி** என்று அனைத்தையும் நீக்கிய பிறகு, மிஞ்சியுள்ள சீவான்மாவும் வேறு, வேறு அல்ல! என்று ஆராய்ந்து தெளிவதே இங்கு கூறப்பட்டுள்ளது. உண்மையாக இருக்கும் தன்னைவிட்டு, விட்டு இல்லாத பலவற்றைப் பிடித்துக்கொண்டு, பலவிதமான உபாதிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சீவன், எப்போது அனைத்து உபாதிகளையும் நீக்கி விட்டு, **தனது சுய சொரூபத்தைப்** பார்க்க முயல்கிறானோ, அப்போதுதான் அவனுக்கு **சுயம்பிரகாசமான ஞானம்** கிட்டுகிறது.

அதுவரை, அந்த ஆன்மா சுயமாகப் பிரகாசித்தாலும், மற்றவைகள் அதை மறைப்பதால், ஆன்மாவின் அற்புதத்தை ஒருவன் உணர முடியாது.

மாறாக **புத்தி, மனம்** போன்ற அந்தக்கரணங்களின் அறிவார்த்தமான இயல்புகளே ஆன்மாவின் இயல்புகள் எனத் தவறாகவும் அவன் புரிந்துகொள்ள நேரிடும்.

आविद्यकं शरीरादि दृश्यं बुद्बुदवत्क्षरम् ।
एतद्विलक्षणं विद्यादहं ब्रह्मेति निर्मलम् ॥ ३१॥

ஆவித்யகம் ஷரீராதி த்ருஷ்யம் புத்புதவத்க்ஷ்ரம் |
ஏதத்விலக்ஷணம் வித்யாதஹம் ப்ரஹ்மேதி நிர்மலம் ||

அவித்தையால் ஆனவை ஆக முதற் காணும்
இவை குமிழி போல அழிவெய்தும் – இவற்றின்
அயலாம் அமல அகம் பிரம்மமாம் என்று
அயராமல் என்றும் அறி – **ஸ்ரீ ரமணர்**

(மாயை எனும் அறியாமையினால் உண்டான உடல், அதன் கரணங்கள் முதலாகக் காணப்படும் அவைகள் யாவும் நீர்க்குமிழிகள் போன்று அழிந்து விடும். இவைகளிலிருந்து வேறுபட்ட நிர்மலமான பிரம்மமாம் "**நான்**" என சிறிதும் சோர்வடையாமல் எப்போதும் அறிந்துக் கொள்வாய்.)

இல்லாததை இருப்பது போலக் காட்டுவது மாயை. அதாவது, கயிறு ஒன்று பாதையில் கிடக்கின்றது. அதை மங்கிய வெளிச்சத்தில் பார்த்தவன் பாம்பு என்று பதறுவதுதான் மாயை. அதாவது, கயிறு பாம்பாகத் தோன்றுவதால் பாம்புதான் மாயை. ஆனால், அங்கு இருப்பது கயிறுதான்.

அதுப்போல, இருப்பது ஒன்றேயாகிய "**இருப்பு**" மட்டும்தான். ஆனால், அந்த இருப்பு எனும் தன்மையுள்ள

‘**சத்**’ என்ற ஆன்மா, தன்னிடமுள்ள ‘**சித்**’ ஆகிய அறிவில், பிரதி பிம்பித்துக்கொண்ட உபாதிகளாகிய உடல்களில் தொடங்கி, அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி என்று இல்லாத பல வஸ்துக்களாக இந்த ‘**சத்**’தும், ‘**சித்**’தும் சேர்ந்துக்கொண்டு அளிக்கின்ற ‘**ஆனந்தம்**’ என்பதுதான் “**சச்சிதானந்தம்**” என்ற இருப்பின் (ப்ரம்மத்தின்) சக்தியாகிய சாயை (நிழல்) எனும் ‘**மாயை**’ எனப்படுகின்றது.



அதாவது, சிவத்தின் சாயலாகிய சக்தியையே மாயை என்பதினால், அவைகள் யாவும் ‘**மித்யா**’ எனப்படும். மித்யா என்றால், இருப்பதுப்போல காணப்படும் ஆனால், உண்மையில் அது இல்லை.

**ப்ரம்மம் (சிவம்)** = அறிவு*,

**மாயை (சக்தி)** = மனம்*

பொதுவாக, சக்தி (மாயை) என்பது வந்து, போகிறது என்பதால், அந்த சக்தியானது ஒரு நிலையிலிருந்து, மற்றொரு நிலைக்கு மாறிக் கொண்டே இருக்கும்.

அது எப்படியெனில், நீரிலிருந்து வந்த நீர்க்குமிழி போன்று, ஒருவிநாடி தோன்றி, மறுவிநாடி மறையும் தன்மை உடையவை. அதாவது, தோற்றத்தில் இருப்பதுப்போன்று இருந்து, இறுதியில் இல்லாமல் போகின்றது. ஆக, அது ஒரு பரிமாணத்திலிருந்து, மற்றொரு பரிமாணத்திற்கு என மாறிக் கொண்டே இருப்பதினால், அதை '**மாயை**' என்கிறோம்.

உதாரணம், **கானல்நீர், நீர்க்குமிழி** போன்றவைகளைக் கூறலாம். அவ்வாறு, தோன்றிமறையும் அழியக்கூடிய அனைத்தும் அழியாத சேதனப்பொருளான ஆன்மாவை உணர முடியாது.

எனவே, உள்ள ஒரே பொருளான ஆன்மாவை, அது உள்ளபடி உணர்வதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது.

அது எப்படியெனில், மங்கிய ஒளியில் கயிற்றை பாம்பு என்று பார்த்துக் கொண்டிருக்கும்வரை, அவனது அந்தப் பிரமை அகலாது. ஆகவே, பார்க்கப்படுவது எது? என்று

அறியும் ஆவல் அவனுக்கு உண்டாக வேண்டும். அதன் உண்மையை அறிய அதற்குத் தேவையான ஒளியும் அந்த இடத்தில் இருக்க வேண்டும். அத்துடன், அந்த ஒளியும் சரியானகோணத்தில் அதன்மீது விழவேண்டும். அப்போதுதான் அதன் உண்மை அவனுக்கு தெரிய வரும்.

அதுப்போன்று, அரிதான மானிடப்பிறவி மூலம் கிடைத்துள்ள ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைக் கொண்டு, முதலில் தனக்கு கிடைத்துள்ள **அழியும் - அழியாத** பொருட்களின் தன்மைகளை ஒருவன் அறிய வேண்டும்.

அதிலே, இந்த **உடல், மனம், புத்தி** இவைகள் எல்லாம் ஒருநாள் அழியக்கூடியன என்றால், அவனது தினசரி அனுபவங்களிலே அவைகள் அவனிடம் இருந்து எப்போது இல்லாமல் அழிகின்றன? என்று விசாரம் செய்துப்பார்க்க வேண்டும்.

அப்படியவைகள் அழிந்துப்போவது என்பது, அவனது ஆழ்ந்த உறக்கத்திலே நிகழ்வதையும், அதற்கு அடுத்ததாக, அவனது நெருங்கிய உறவுகள் இல்லாமல் இறந்துப் போவதும் விழிப்பு நிலையில் நிகழ்வதையும் கண்டு, அவ்வாறு வந்து, போகின்ற அந்த **உடலா நான்?** அல்லது **மனமா நான்?, புத்தியா நான்?** என விசாரித்துப் பார்க்க வேண்டும்.

அதே உடலும், உறவுகளும் கனவு நிலையிலே, வேறு ஒரு உலகத்திலே உள்ளதையும், அந்த கனவு கலைந்ததும், அவைகள் இல்லாமல் போவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதிலே, ஆழ்ந்த உறக்கத்திலே இல்லாது போன '**நான்**' உறக்கம் கலைந்து, விழிப்பு வந்ததும், மீண்டும் உள்ளதைப் பார்க்கின்ற போது, அந்த அனுபவம் போன்றுதானே '**மரணம்**' என்ற அனுபவம் உள்ளது.

அப்படியானால், மரணத்தில் '**நான்**' இல்லாது போய் விடுவேனா? இந்த மரணம் என்பது எனக்கா? இல்லை! இந்த உடலுக்கா? இதிலே "**நான் யார்?**" என்று தன்னுடைய தன்மையை தன் அனுபவங்கள் கொண்டே அறிய முயற்சிக்க வேண்டும்.

அழியும் பலவும் நமக்கு இருந்தாலும், இப்படிக்கேட்டு அதை அறிய முயற்சிப்பவன் யார்? என மனம் சிறிதும் தளராது தனது முயற்சியைத் தொடர வேண்டும்.

பொதுவாக, இந்த உலக வழக்கம் என்னவென்றால், அழியும் பொருட்களின் மேல் ஆசை வைப்பதுதான். அதேசமயம், அழியாதப் பொருள் எது? என்பதை அறிந்துக் கொள்ளக்கூடிய ஆர்வம் இல்லாததுதான்.

அந்த மாயையிலிருந்து விடுபட்டு, மீண்டும் அந்தப் பிரமை (மாயை) சாதகனை பிடித்து ஆட்கொள்ளாமல் இருக்க, அழியும் பொருட்கள் மேல் நிராசையும், அழியாத நிர்மலமான பிரம்மம் ஒன்றே, '**நான்**' என்றும், எந்த நினைப்பும் இல்லாமல் இருப்பதே தனது இயல்பு என்பதை, இயன்றவரை முயற்சிக்க வேண்டும்.

அத்தகைய திட ஞானம் அறிவாக அவனிடம் மாறி, அனுபவமாக ஆகும் வரை, அவன் சிறிதும் சோர்வடையாமல் இருந்தால் மட்டுமே, '**உள்ளதை உள்ளபடி**' உணர முடியும் என்று இங்கு கூறப்பட்டிருக்கிறது.

देहान्यत्वान्न मे जन्मजराकार्श्यलयादयः ।
शब्दादिविषयैः सङ्गो निरिन्द्रियतया न च ॥ ३२॥

தேஹான்யத்வான்ன மே ஜன்மஜராகார்ஷ்யலயாதயஹ |
ஷப்தாதிவிஷ்யைஹ சங்கே நிரிந்த்ரியதயா ந ச ||

உடலுக்கு வேறு எனக்கு உண்டாதல் மூத்தல்
ஒடு குன்றல் சாவு முதல் ஒன்றா – படர்ந்த
ஒலி முற்புலன்களோடு ஒன்றால் எனக்கு இன்றே
அலன் பொறிகள் யான் ஆதலால் – **ஸ்ரீ ரமணர்**

(நனவில் இருக்கும் ஸ்தூல உடல், கனவில் வரும் சூக்ஷ்ம உடல், ஆழ்ந்த உறக்கத்தை அனுபவிக்கும் காரண உடல், இம்மூன்று உடல்களிலிருந்தும் நான் வேறுபட்டவன். அதனால், எனக்கு பிறப்பு, முதுமை, உடல் இளைத்தல், இறப்பு முதலான விகாரங்கள் பொருந்தாது. எங்கும் படரக்கூடிய ஒலி முதலான இந்திரிய விஷயங்களும் எனக்குப் பொருந்தாது. நான் இந்திரியங்கள் இல்லாததால் அவைகள் எனக்கு இல்லை.)

வேதாந்த விஷயங்களின் உண்மைகளை மகா வாக்கியங்கள் துணைக்கொண்டு, தக்க சத்குரு முகமாக தன்னை பற்றி கேட்டறிந்த பின்பு, சாதகன் என்ன செய்ய வேண்டும்? என்ற வழிமுறை பற்றி இங்கு கூறப்படுகிறது.

அந்த சுயம்பிரகாச நிலையில், தன் சுயத்தில் தன்னில் தானாய் என்றென்றும் நிலைத்திருக்கும் **திடஞானம்** ஒருவனுக்கு உண்டாவது என்பது உடனடியாக நிகழக்கூடியது அல்ல. ஏனெனில், அத்தகைய சாதகனின் மனம் ஏற்கனவே ஏற்றி வைத்துக்கொண்ட விசயசுகங்களில் சிக்கிக்கொண்டிருப்பதினால், அவ்வளவு எளிதாக அதிலிருந்து அவனால் விடுபட முடியாது.

அதனால், முதலில், அந்த சாதகன் **எது நித்யம்? எது அநித்யம்?** என்பதில் விசாரத்தை மேற்கொண்டு, விவேகத்தை அடைதல் வேண்டும். அவ்வாறு விவேகத்தை அடைதல் என்பதற்கு, அவன் செய்ய வேண்டிய சாதனை என்னவெனில், ஆத்ம சாக்ஷாத்காரத்தில் இடைவிடாது இருக்கின்ற தக்க சத்குருவின் சந்நிதியின் முன்பு நின்று, அவனது அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கம் பெற முயற்சிக்க வேண்டும்.

அதற்காக, அவன் அடிக்கடி அவரை நாடிச்சென்று, அவரது உபதேசத்தை உள் வாங்க வேண்டும். அதன்மூலம் அவன் அறியாமையில் ஏற்றி வைத்துக்கொண்ட ஏராளமான எண்ணங்களில் இருந்து விடுபட்டு, நித்ய, அநித்ய விவேகம் அடைந்து, நிலையான தன் உண்மை சொருபம் இதுவென அறிந்து, "**அதுவே நான்**", அத்தகைய **நான் ஒருவனே!** என்றென்றும் நித்யமானவன், அதுவே, "**சத்யம்**" என்றும், மற்றவைகள் எல்லாம் தன்மீது ஏற்றி வைக்கப்பட்ட '**மித்யா**' என்றும், வேதமகாவாக்கியத்தின் உண்மைப்பொருள் உணர்ந்து, "**பிரம்மம் சத்யம், ஜகத் மித்யா**" என்பதில் திடமாக நிற்கவும் முடியும்.

எது நித்தியமோ அதை மட்டும் பற்றிக்கொண்டு, அநித்தியமானவைகளை அகற்றுவதில் முதல் படியாக உடல் பற்றிய உண்மைகளை இங்கு அறிகிறோம்.

நம்மை யாராவது சுட்டிக் காட்டும்போதோ, அல்லது ஆழ்ந்த தூக்கத்தின் பின்போ, நாம் முதலில் காண்பதும், உணர்வதும் நமது இந்த ஸ்தூல உடலைத்தான். அதற்கே **பிறப்பு, வளர்ச்சி, இறப்பு** முதலான பருவங்கள் இருக்கின்றன. அதுப்போன்று, நமது கனவில் நாம் உண்டாக்கும் ஒரு சூக்கும உடலுக்கும் வெவ்வேறு பருவங்கள் இருப்பது போலத்தான் கனவில் தெரிகிறது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் காரண உடலைப்பற்றி நாம் நன்கு அறியா விட்டாலும், நமது அனுபவத்தின் படி அதுவும் தினம் தினம் வந்து போவது போலத்தான் அவைகளை நாம் அறிகிறோம். அதாவது ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம உடல்கள் அந்தக் காரண உடலில்தான் தினந்தோறும் அடங்கி, அதன்பின் எழுகிறது. அவ்வாறு, இந்த உடல்கள் அந்த காரண உடலில் அடங்க முடியாது போனால், ஒரு சில நாட்களுக்குள்ளேயே ஸ்தூல உடலும் இங்கு இல்லாது மறைந்து விடும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

ஆக, இவைகள் எல்லாவற்றிற்குமே ஒரு தொடக்கமும், வளர்ச்சியும், முடிவும் இருப்பது நன்கு தெரிகிறது. இவைகள் அனைத்திற்கும் மூல காரணமாக இருப்பதும், இவைகள்

அல்லாது, இவைகள் அனைத்திற்கும் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் "**நான்**" இவைகளில் இருந்து வேறுபட்டவன்.

நமது இந்த ஸ்தூல உடல் நமக்குத் தெரிந்த பின்தான் இந்த ஸ்தூல உலகமே நமக்குத் தெரிய வருகிறது. அதே சமயம் இந்த உலகத்தை நாம் நமது சூக்ஷ்ம ஐம்புலன்களால் அறிகிறோம். அந்த ஐம்புலன்களும் செயல்பட அதனதற்கு வேண்டிய ஸ்தூலக் கருவிகளும் நம்மிடம் இருக்கின்றன. அவைகளும் நமது இந்த ஸ்தூல உடலின் அங்கங்களே.

ஆனால், உடலே நாம் அல்ல என்கிறபோது, அந்தக் கருவிகளோ, அல்லது அவைகளை இயக்கும் நுண்புலன்களோ நாமாக எப்படி இருக்க முடியும்? அதனால், அவைகள் நாம் அல்ல!. அப்படியென்றால், நாமாக நம்மை எப்போது உணர்கிறோமே, அந்த "**நான்**" யார்? என்று கேட்டு, அதைப்பற்றி சதா சர்வ காலமும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதனை பகவான் ஸ்ரீரமணர் அழகாக தேஹம் (தேகம்), நாஹம் (ந அஹம்), கோஹம் (கோ அஹம்?), சோஹம் (சிவோ அஹம்) என்ற நான்கு சொற்களைக் கொண்டு "**உள்ளது நாற்பது - அனுபந்தம்**" பாடல் ஒன்றில் எடுத்து விளக்குவார்:

தேஹம் கடம் நிகர் ஜடம், இதற்கு அஹம் எனும் திகழ்வு இலதால் நாஹம்; சடலம் இல் துயிலினில் தினம் உறும் நமது இயலால் கோஹம் கரன் எவண் உளன்? உணர்ந்து உளர் உளக்குகை உள்ளே சோஹம் புரண அருணகிரி சிவவிபு சுயம் ஒளிர்வான்.

இந்த '**நான்**' என்று கிளம்புகிறவன் யார்?

எங்கு இருக்கிறான்? என்று ஆராய்ந்து உணர்ந்து இருப்பவர்களின் **இதய குகைக்குள்ளே**, தானே தானாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் சிவமயமான அருணாசலன் சுயமாக **தானே பிரகாசிப்பான்** என்று இங்கு அவர் கூறுகிறார். அதுப்போல, பகவான் ஸ்ரீஆதிசங்கரர் அவர்களும் இதனையே "**மனோ புத்தி அஹங்கார சித்தானி நாஹம்**" என்று ஆரம்பித்து "**சிவானந்த ரூபஹ, சிவோஹம் சிவோஹம்**" என்று முடியும் "**நிர்வாண ஷடகம்**" அல்லது "**ஆத்ம ஷடகம்**" என்று கூறப்படுகிற அருமையான ஆறு ஸ்லோகத் தொகுப்பில் இதை வலியுறுத்துகிறார்.

ஆக, சாதகனின் சாதனை தவம் எல்லாம் தனக்கு வெளியில் உள்ள விஷயங்கள் அனைத்தும் நிரந்தரமற்றது என்பதாலும், அவைகளைக் காணும் தானே அவைகளைவிட மிக முக்கியம் என்பதாலும், அந்த விஷய, சுகங்களில் மனத்தை செலுத்தாது, அவைகளினால், கவர்ந்து ஆட்கொள்ள இடம் கொடுக்காது, எப்போதும் தானாக தன்சுயத்தில் இருக்க முயற்சி செய்து கொண்டிருப்பதே ஆகும்.

अमनस्त्वान्न मे दुःखरागद्वेषभयादयः ।
अप्राणो ह्यमनाः शुभ्र इत्यादि श्रुतिशासनात् ॥ ३३॥

அமன்ச்த்வாத்ர மே துக்கராகத்வேஷபயாதயஹ |
அப்ராணோ ஹ்யமனாஹா ஷுப்ர இத்யாதி ஷ்ருதிஸாஸநாத் ||

மனம் அலன் ஆதலால் மன்னு துயர் ஆசை
சினம் அச்சம் ஆதி எனைச் சேரா – இனமாக
அப்பிராணன் மனமில்லான் சுத்தன் என்று மறை
செப்புகின்றதன்றோ தெளி – **ஸ்ரீ ரமணர்**

(நான் எண்ணங்களின் தொகுப்பான மனம் அல்ல! என்பதால், மனத்தினால் அடையப்பெறும் துயரம், ஆசை, கோபம், அச்சம் முதலானவைகள் என்னைச் சேராத இனங்களாகும். ஆன்மாவாகிய நான் அந்த இனத்தைச் சேர்ந்த பிராணனோ, மனமோ இல்லாத மிகவும் தூய்மையானவன் என்று வேத வாக்கியங்கள் சொல்வதை நன்கு உணர்ந்து தெளிவு பெறுவாயாக.)

“எண்ணங்களே மனம் யாவினும் நானெனும் எண்ணமே மூலமாம் உந்தீபற; யானாம் மனம் எனல் உந்தீபற”

என்று பகவான் ஸ்ரீரமணர் தமது **“உபதேச உந்தியார்”** எனும் படைப்பில் கூறுவது என்னவெனில், “எண்ணங்கள் அனைத்திலும் **‘நான்’** என்று தன்னை அபிமானிக்கும்

எண்ணமே “**மனம்**” என்றும், அதுவே, மற்ற எண்ணங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானதும் என்கிறார்.”

அதாவது, அபிமானிக்கும் “**நான்**”, மற்றும் அனைத்து எண்ணங்களின் மூலமாகிய “**நான்**”. இதற்கு எல்லாவித ஆசைகளும், துயரங்களும் உண்டு.

ஆனால், இங்கு மேலே இந்த செய்யுளில் பகவான் ஶ்ரீஆதிசங்கரர் கூறும் “**நான்**” என்பது, ‘**சத்**’ என்ற இருப்பாகிய ஆன்மாவே என்றும், அது தன்னில் தானாய் ஸ்புரணமாகிக் கொண்டுள்ள “**நான்**” எனும் உணர்வாதலால், அதற்கு எந்தவித விகாரங்களும் கிடையாது.

அது பூரண ‘**சித்**’ என்ற அறிவாகவே உள்ளதினால், அதற்கு மனத்தினால் அடையப்பெறும் துயரம், ஆசை, கோபம், அச்சம் முதலானவைகள் சேராது.

ஆனால், மனம் எப்போதும் எதையாவது எண்ணிக் கொண்டு இருப்பதுதான் இன்றைய வாழ்க்கை என்று ஆகிவிட்டது. அந்த எண்ணப்படி தன்னிலும் வேறு என்று ஒன்றைப் பிரித்துப் பார்ப்பதுதான் அதிலே முதல் படி.

இது முதலில் “**நான்**” எனத் தொடங்கி, பிறகு, அது, அவன், அவள் என ஆரம்பித்து, **நான்** - **நீ** என்ற

பாவனையால், **எனது - உனது** என்ற வேற்றுமைகள் வளர ஆரம்பிக்கின்றன.

அதனால், ஒரு பொருளை "**தனது**" என்று அடைய விரும்புவதுதான் **ஆசை.** அது கிடைக்காதோ அல்லது தன்னிடம் தங்காது போய்விட்டால் வருவதுதான் **துக்கம்**.

அது தனக்குக் கிடைத்தும், அது ஒருவேளை தன்னை விட்டுப் பிறரிடம் போய்விடுமோ? என எண்ணுவது **அச்சம்.**

அதை தன்னிடமிருந்து பிறர் அதை எடுத்துக்கொண்டு விட்டால் வருவது **கோபம்.** தன்னிடமே அது இருக்கவேண்டும் என்று எண்ணுவது **பற்று.** மற்றவர்கள் அதைப் பெற்றுவிட்டால் அவரிடம் நமக்கு வருவது **வெறுப்பு.** இப்படியான வித விதமான உணர்ச்சிகளுக்குக் காரணம் நம் எண்ணங்கள்தான்.

அத்தகைய எண்ணங்களின் தொகுப்பே மனம். அந்த மனமே தன்னை '**நான்**' என்று அபிமானிக்கிறது. அந்த மனம் போன்ற வர்க்கத்தைச் சேர்ந்ததே பிராணன் எனும் சூக்ஷ்ம சக்தியும் ஆகும். இந்த பிராணனும், மனமும் கண்களுக்கு புலப்படா விட்டாலும், இந்த ஸ்தூல உடல் எனும் கண்களுக்குத் தெரிகின்ற பரு உடலைக் கொண்டு, தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்கின்றன. இதிலே, இவைகள் அனைத்துமே ஜடம்தான்.

அதேசமயம், பிராணன், மனம் எனும் சூக்ஷ்ம தேக வர்க்கங்கள் ஆன்மாவின் அறிவுப் பிரகாசத்தினால், தங்களை வெளிப்படுத்திக்கொண்டு, அவைகளே பிரகாசிப்பதுப் போன்று காட்டிக் கொள்கின்றன. அதனால், அவைகளும் தள்ளப்பட வேண்டியவைகளே என்கிறார்.

ஆனால், மற்ற விஷயங்களுடன் தொடர்பு கொள்ளாது எப்போது ஒருவன் “**நான்**” என்று தன்னிருப்பை மட்டும் உணர்ந்து, தன்னில் தானாய், தன் சொரூபத்திலேயே இன்புற்று இருப்பானோ, அப்போது அவனுக்கு மற்ற விஷயங்களில் நாட்டம் இருப்பது இல்லை. ஆக, அவைகள் வந்தாலும், போனாலும் அதனால் அவனுக்கு இன்பமும் - துன்பமும் உண்டாவது இல்லை,

அவனது பார்வையில் இந்த உலகம் இருந்தாலும், இதில் மற்றவர்கள் அவனுக்குத் தெரிந்தாலும், அவைகள் எல்லாம் அவனைப் பொருத்தவரை, அந்த பேரறிவின் அறிவுப் பிரகாசத்தில் பிரதிபிம்பிக்கின்ற மனோ பிம்பங்கள் என்றும், அவையவைகள் ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களின் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, இருமைகளினால், அவைகளின் மன அழுக்களைப் பொருத்து, ஒன்றுக்கொண்று அறிவில் மாறுபட்டு பிரகாசிக்கின்றன என்றும் அவனுக்குத் தெரியும்.

பொதுவாக, மனத்தூய்மை என்பது, என்னவெனில். **நன்மை - தீமை, விருப்பு - வெறுப்பு, உயர்வு - தாழ்வு** போன்ற இருமைகள் இல்லாமல் இருப்பதே ஆகும்.

ஆன்ம ஞானம் என்பது, ஒவ்வொருவருடைய தனி அனுபவம் என்றாலும், அது எந்தத் தனி மனிதருடைய சொந்தச் சொத்து அல்ல. ஆக, சொத்து என்று வந்துவிட்டாலே, அதற்கு சொந்தக்காரன் என்ற நிலையில், **எனது - உனது** என்ற இருமைகளும் வந்து விடும்.

எனவே, ஞானம் தொன்றுதொட்டு இருக்கும் அதீத அனுபவம் என்பதாலேயே அதன் துவக்கத்தை வேதத்தினின்று காணலாம் என்பதை உணர்த்தவே பகவான் ஸ்ரீசங்கரர் இங்கு வேத வாக்கியங்களைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

அதனால், முந்தைய ஸ்லோகத்தில் ஸ்தூலமான பொறி, புலன்களைக் களையச் சொன்னதுப்போன்று, இங்கு **பிராணன், மனம்** ஆகிய எந்தவித சூக்ஷ்ம விகாரங்களும் இல்லாது தூய்மையாய் இருப்பதே, அந்த "**நான்**" எனும் உணர்வு என்று வேத வாக்கியங்கள் கூறுவதால், அதனையே எப்போதும் நினைத்து, அதையே தனது தாரக மந்திரமாக்கி, அதனையே தியானித்து, அதன் கருத்தை நன்கு உணர்ந்து தெளிவாய் என்று கூறப்படுகிறது.

निर्गुणो निष्क्रियो नित्यो निर्विकल्पो निरंजनः ।
निर्विकारो निराकारो नित्यमुक्तोऽस्मि निर्मलः ॥ ३४॥

நிர்குணோ நிஷ்க்ரியோ நித்யோ நிர்விகல்போ நிரஞ்சனஹ |
நிர்விகாரோ நிராகாரோ நித்யமுக்தோஸ்மி நிர்மலஹ ||

நிர்க்குணன் நிரஞ்சனன் நித்தன் நிராகாரன்
நிர்விகாரன் சுத்தன் நிட்கிரியன் – நிர்விகற்பன்
நித்த முக்தன் முன் நிகழ்த்திடப்பட்டவை
அத்தனையும் நான் என்று அறி – **ஸ்ரீ ரமணர்**

(குணங்களற்றவன், செயலற்றவன், பற்றற்றவன், என்றும் உள்ளோன், உருவமற்றவன், மாறுபாடு இல்லாதவன், பரிசுத்தமானவன், செய்ய வேண்டும் எனும் சிந்தனை இல்லாதவன், எப்போதும் விடுபட்டவன் இப்படியாகக் கூறப்பட்டவைகள் அனைத்தும் என்னைப் பற்றியே என்று அறிந்து கொள்.)

இதற்கு முன்னர் கண்ட ஒரு செய்யுளில் “**அதுவல்ல**”, “**அதுவல்ல**” என்ற பொருள்படும் “**நேதி**”, “**நேதி**” என்ற முறைப் பற்றி கூறப்பட்டது. இங்கும், அதுப்போன்ற எதிர்மறையான சொற்றொடர்கள் பலவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு கூற வருவதை நேர்மறைச் சொற்றாடல்களாக நேரடியாகக் கூற முடியாதா? ஏன் எதிர்மறை சொற்றாடல்களாக

அல்ல! அற்றது போன்று கூற வேண்டும் என்ற சந்தேகம் எல்லோருக்கும் வரலாம். முதலில் அதைப்பற்றி பார்ப்போம்.

நம்மைப் பொருத்தவரை நமது மனம் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில், அனைத்துமே தனக்கு சாதகமான நேர்மறை விசயங்கள் மட்டுமே நடைபெற வேண்டும் என்று கருதுகிறோம். எல்லாவற்றிலுமே **முடியும், நடக்கும், அது வேண்டும், இது வேண்டும்** என்று மட்டுமே எதிர்ப்பார்க்கிறோம். ஆனால், முடியாது, நடக்காது, வேண்டாம் என்று கூற விரும்புவதில்லை.

இதற்குக்காரணம், நம்மால், வெற்றி என்பது மட்டுமே சரி! என்றும், தோல்வி என்பது சரியல்ல! என்றும் மனதில் எண்ணமாக ஏற்றி வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் காரணமாக, நம்மால் எதிர்மறை சிந்தனைகளை மறுக்க வேண்டிய கட்டாயம் உண்டாகி விடுகின்றது.

மேலும் தோல்வி வந்தவுடன் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாமல் போகின்றது. அதன்காரணமாக, மன உளைச்சல், கோபம், பொறாமை போன்ற குணங்களால் ஆளப்படுகின்றோம்.

எனவே, இத்தகைய இருமைகளால் சூழப்பட்ட நமது அன்றாட வாழ்வில் அனுதினமும் நாம் காண்பது எல்லாமே மெய்யானது என்று மட்டுமே எண்ணுகிறோம். அத்துடன்,

அந்த உணர்வை நம் எண்ணங்களாலும், செய்கைகளாலும் மேலும் நாம் வலுப்படுத்திக் கொள்கிறோம்.

ஆக, “**கண்டதே காட்சி!, கொண்டதே கோலம்**!” என்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தனைக்கும் நமது கனவில் வரும் அனுபவங்கள் அத்தனையும், தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட நம்முடைய விழிப்பு நிலையில் மாயமாய் மறைந்து, கரைந்து போகின்றன என்பது நமக்கு நன்றாகவே தெரியும்.

அப்படித் தெரிந்துக் கொண்டாலும், அந்த நிகழ்வுகள் வாயிலாக, நமக்கு ஏதேனும் படிப்பினை கிடைத்ததா? என்றால், அந்த கற்பனையான கனவுக் காட்சிகள், கனவு காண்கின்றவரை, நம் விழிப்பு நிலையில் நடக்கின்ற நிகழ்வுகள் போன்றே அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருந்தன.

ஆனால், கனவு கலைந்ததும் அந்த காட்சிகள் காணவில்லையே! அவைகள் அனைத்தும் மாயமாய் மறைந்து விட்டனவே? ஏன்? என்று என்றாவது நாம் யோசித்துப் பார்த்திருக்கிறோமா?

இது இப்படியிருக்க, நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில் வழக்கமாக வருகின்ற “**நான்**” என்ற உணர்வு கூட இல்லாமல், நம்மையே நாம் இழந்து, அத்துடன் நாம் சாதாரணமாகக் காணும் இந்த உலகத்தையும் இழந்து போனாலும், மீண்டும்

நனவு நிலை திரும்பும்போது, நமது முந்தைய **கனவு - உறக்க நிலை அனுபவங்கள்** எதையுமே ஒரு பொருட்டாகக் கூட கருதாது, நம் அன்றாடக் கடமையைச் செய்ய நாம் ஆர்வம் கொள்கிறோம்.

ஆக, அது அப்படித்தான் என்ற மனநிலையில், மிக சாதாரணமாக இந்த உலக வழக்கில் உற்சாகமாக ஈடுபடுகிறோமே தவிர, ஒரு நாளும் அது **ஏன்?, எப்படி?** என்ற கேள்விகளை நம் மனதில் நாம் எழுப்புவதில்லை.

அதனால்தான், நாம் இருமைகளில் சிக்கிக் கொண்டு இருக்கின்றோம். வெற்றியை மட்டும் விரும்புகின்றோம், தோல்வியை ஏற்க மறுக்கின்றோம். அதனால், **வெற்றி - தோல்வி** என்ற இருமைகளைக் கடந்து, நம்முடைய இயல்பான ஒருமையில் **சம நிலையில்** இருக்க முடியாமல் போகின்றது.

.

அத்தகைய மன நிலையில் உள்ள நம்முடைய இந்த இயல்பான உலகப் பார்வைக்கும், கயிற்றை பாம்பாகக் கருதுகின்ற பார்வைக்கும், எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

ஆகவே, அறியாமையில் அப்படியிருக்கும் ஒருவனுக்கு "**அது பாம்பு அல்ல**" என்றுதானே முதலில் ஆரம்பிக்க முடியும்? இல்லாவிட்டால், அவன் பார்ப்பதை பாம்பாகத்தான் பார்த்துக் கொண்டே இருப்பான். ஆகவே, அதிலிருந்து அவனது

கவனத்தைத் திருப்ப "**அது பாம்பு அல்ல**" என்றுதான் முதலில் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

அதுப்போல, ஆன்ம ஞான விசயத்திலும் "**நீ பார்க்கும் ஒன்று அதுவல்ல**" என்ற எதிர்மறையாகவே ஆரம்பிக்கிறது. உலகில் நாம் எதை எடுத்துக்கொண்டாலும், அதனைச் சில குணங்களோடுதான் பார்க்கிறோம். அதுதான் நாம் வழக்கமாகக் கையாளும் வழி.

அதனாலேயே, **நல்லது - கெட்டது, நண்பன் - எதிரி, பாவம் - புண்ணியம், மேலானது - கீழானது** என்ற இருமைகள் புகுந்து விடுகின்றன.

இந்த பாகுபாடுகள் கொண்ட இருமைகள் இல்லாமல், ஒன்று மட்டுமே இருக்க முடியும் என்பதை, நம்மால் அறிவு பூர்வமாகக்கூட ஏற்க முடிவதில்லை. அப்படியே இருந்தாலும், அது கிடைப்பதோ, அல்லது அதைக் காணுவதோ மிகவும் அரிது! என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட ஒன்று இருப்பதால்தான் நாமே இருக்கிறோம் என்றும், நாம் இருப்பதினால்தான் இந்த உலகம் இருக்கின்றது என்றும் சீடனுக்கு உணர்த்துவது சத்குருவின் கடமையாகிறது.

அதனால், அனைவருக்குமே நன்கு தெரிந்தவைகளில் ஆரம்பித்து, "**அதுவல்ல**! - **அதுவல்ல**!" என்று அவர் சீடனுக்கு உபதேசம் செய்கிறார். அதனாலேயே எதிர்மறை விளக்கங்கள்

இங்கு காணப்படுகின்றன. ஒருவனை வாழ்த்தும்போது நல்ல குணங்களான “**பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்**” என வாழ்த்துவோம்.

ஏன் எனில், ஒருவனிடம் காணப்படுகின்ற குணங்கள் அவனது புத்தியைச் சார்ந்தவை என்பதினால், அவனுக்கு நல்ல குணங்கள் இருக்க வேண்டுமானால், அவனது சிந்தனைகள் நல்லதாக அமைய வேண்டும். நல்ல சிந்தனைகள் வேண்டுமானால், அவனது எண்ணங்கள் நல்லதாக உதிக்க வேண்டும். நல்ல எண்ணங்கள் உதிக்க வேண்டுமானால், அவனது மனம் தூய்மையானதாக இருக்க வேண்டும். மனம் தூய்மையானதாக இருக்க வேண்டுமானால், அவனது புத்தி உள் வாங்குகின்ற விசய, சுகங்களிலே விவேகம் இருக்க வேண்டும்.



அத்தகைய விவேகிக்கு மட்டுமே எண்ணங்களிலே ஏற்றத்தாழ்வுகள் என்ற இருமைகள் இல்லாத சமத்துவ நிலையில் சத்தியத்தை சார வேண்டும் என்ற எண்ணம் எழும். அத்தகைய சத்தியசீலனுக்கே **சத்வகுணம்** மேலோங்குகின்றது. அத்தகைய சத்வகுணங்கள் சாதகனின் வாழ்வில் பெரும்பங்கு வகித்து, அவனை மென்மேலும், நன்மையை நோக்கி நடக்க வைக்கின்றது.

[எனவே, **தன்னை முக்தன் என கருதுபவன் முக்தன். பக்தன் என கருதுபவன் பக்தன். ஆக, உன்னுடைய மதி எதுவோ, உன் கதி அதுவே!** என்கின்றது அஷ்டாவக்ரகீதை.]

ஆக, ஒரு முற்றிய ஆன்மஞான சாதகனுக்கு "**அந்தக் குணங்கள்**" யாருக்கு? என்றும் சிந்திக்க வேண்டிவரும்.

அப்போது, புத்தியைச் சார்ந்த, குணங்கள் எதுவும் இல்லாத, ஆன்மாவாகிய "**நான்**" புத்தியல்ல! என்பதை அறிந்தவனுக்கு "**நான் நிர்க்குணன்**" (குணங்களற்றவன்) என்ற நிலை தெரிய வரும். அவ்வாறே, '**நான் மனமல்ல**!' என்பதால், அந்தப் பற்றுக்களினால் வரும் அழுக்குகள் ஏதும் இல்லாத **நிரஞ்சனன்.**

காலத்தை எவ்வளவு நீட்டினாலும், குறுக்கினாலும் நான் எப்போதும் உள்ளவன் என்பதால் நான் **நித்தன்.** உருவம் என்று ஒன்று இருந்தால், அது இருக்கும் இடம் என்றும், இல்லாத

இடம் என்றும் கூறவேண்டி வரும். ஆனால் எனக்கோ எங்கு இருந்தாலும் “**நான்**” என்ற உணர்வு இருப்பதால் நான் **நிராகாரன்** (உருவமற்றவன்).

உடல் என்ற உருவத்திற்குத்தான் இளமை, முதுமை போன்ற நிலைகள் ஏற்படுவதால் உடல் விதவிதமான மாறு பாடுகளை அடைகின்றன. “**நான்**” என்ற உணர்விற்கு இந்த மாறுபாடுகள் ஏதும் இல்லாததால் நான் **நிர்விகாரன்** (மாறுபாடு இல்லாதவன்). உருவம் என்று ஏதும் இல்லாத உணர்வாகிய நான் என்பதால் உருவத்தை ஒட்டும் தூசுகள் ஏதும் இல்லாத **பரிசுத்தன்.** ஏதும் செய்துகொண்டே இருக்க வேண்டும் என்ற சிந்தனை இல்லாததால், நான் **சங்கல்பம், விகல்பம்** அற்றவன்.

அப்படியே ஏதேனும் செய்தால் “**நான் செய்கிறேன்**” என்ற சிந்தனை இல்லாததால் நான் **நிட்கிரியன்**. பந்தம் என்ற ஒன்று இல்லாததால் அதிலிருந்தும் விடுதலை என்றும் இல்லாது போகிறது.

எனக்கு பந்தம் ஏதும் இல்லாததால் நான் **நித்ய முக்தன்.** இப்படியாகக் கூறப்பட்ட அனைத்தும் நானே என்பதை தீர உன்னுள் விசாரித்து “**நான்தான் அது**” என்று அறிவாயாக!.

अहमाकाशवत्सर्वं बहिरन्तर्गतोऽच्युतः ।
सदा सर्वसमः सिद्धो निःसङ्गो निर्मलोऽचलः ॥ ३५॥

அஹமாகாஷவத்சர்வ பஹிரந்தர்கதோச்யுதஹ |
சதா சர்வசமஹ சித்தோ நிஹிசங்கோ நிர்மலோச்சலஹ ||

ஆகாயம் போல அகிலத்தின் உள் வெளியான்
சாகாதான் சர்வசமன் சித்தன் – தேகாதி
யாவற்றும் பற்று அற்றான் என்றும் அமலன் சலியான் ஆவன் நான்
என்றே அறி – **ஸ்ரீ ரமணர்**

(ஆகாயத்தைப் போல அனைத்துப் பொருட்களிலும் உள்ளும், புறமும் வியாபித்துள்ளவன், மரணமில்லாதவன், எங்கும் சமமாயிருப்பவன், எப்போதும் உள்ள சித்தன்.

ஸ்தூல - சூக்கும - காரண என்ற மூன்று தேகங்களிலும் பற்றில்லாதவன், என்றும் அழுக்கற்றவன், சலனமற்றவன் ஆக நான் இருப்பவன் என்று நன்கு அறிவாயாக.)

இதற்கு முந்தைய செய்யுளில் எதிர்மறையான சொற்றொடர்கள் கொண்டு, ஆன்மாவைப்பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. அடுத்து, இங்கு “**ஆகாயம் போல**” என்று நேர்மறையாகத் தொடங்கி, தேக அபிமானமற்ற, மும்மலங்கள் இல்லாத ஆன்மாவின் **சொரூப லக்ஷணம்** மிகத் துல்லியமாக விளக்கப்படுகிறது.

இருமைகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, இங்கும் எதிர்மறை வார்த்தைகள் தவிர்க்கப்படவில்லை என்பதையும் காணலாம்.

ஆகாயம் என்பதை நாம் சாதாரணமாக பார்க்கின்ற நீல நிறத்தில் காணப்படுகின்ற வானம் (sky) என்று குறுகிய அளவில் கொள்ளாது, எல்லையற்ற, அகண்ட வெட்டவெளி (space) என்பதாக விரிந்த அளவில் பொருள் கொண்டால் மட்டுமே இங்கு கூறவருகின்ற விசயம் நன்கு புரியவரும்.

பொதுவாக, ஒரு காலியாக, ஜடமாகவுள்ள பானைக்குள் என்ன இருக்கிறது? என்று கேட்டால், ஒன்றுமில்லை! என்றுதான் கூறுவோம்.

ஆனால், அந்த பானையில் ஒன்றுமே இல்லையா? என்றால், அந்த பானைக்குள்ளே திட, திரவ நிலையில் ஒன்றுமே இல்லையென்றாலும், நம் சாதாரண கண்களுக்குத் தெரிகின்ற பஞ்ச பூதங்களில் **மண், நீர், நெருப்பு** தவிர்த்து, கண்களுக்குப் புலப்படாத **காற்று** மற்றும் **ஆகாயம்** அதனுள் இருக்கத்தான் செய்கின்றது.

அவைகள், நம்முடைய கண்களுக்கு புலப்படவில்லை என்பதினால், அந்த பானையில் ஒன்றுமில்லை! என்று ஒரே வார்த்தையில் பதில் கூறிவிடுகின்றோம்.

ஆனால், நம் புலன்களுக்கு புலப்படாத இன்னும் எத்தனை, எத்தனையோ திரவியங்கள் இந்த பிரபஞ்சத்தில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அதற்கேற்ற புலன்கள் நம்மிடம் இல்லாததினால், நம்மால் அவைகளை அறிய முடிவதில்லை.

அதேசமயம், இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட எந்த ஒருபொருளும் பஞ்சபூதங்களின் கலவையாகவே காணப்படும். அத்துடன் அந்த பொருளுக்கு என ஒரு குணம் இருக்கும்.

எந்த ஒரு பொருளில் குணமும், செயலும் பிரிக்க முடியாமல் இருக்கிறதோ அந்தப் பொருளை நாம் "**திரவ்யம்**" என்று கூறுகிறோம்.

உதாரணமாக, ஒருவன் நல்லவனாக இருக்கிறான். அதனால், அவன் தான தர்மங்களை செய்கிறான். இதிலே, நல்லவன் என்பது குணம், தான தர்மங்கள், செய்வது என்பது செயல் (கர்மம்).

ஒருவன் நல்லவனாக இருப்பதும், தான தர்மங்களைச் செய்வதும் பிரிக்க இயலாமல் அவனிடம் இருக்கிறது. அந்த குணமும், செயலும் பிரிக்க முடியாமல் இருப்பதை, "**திரவ்யம்**" என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

அத்தகைய திரவியங்களான ஐந்து பூதங்களில் முதல் பூதம் என்பது, **ஆகாயம்** ஆகும். அந்த ஆகாய பூதத்தில் இருந்துதான் மற்ற நான்கு பூதங்களும் உண்டாயின.

தஸ்மாத்வா ஏதஸ்மா தாத்மனே அகாஸ: சம்பூத:
அகாஸாத் வாயு: வாயோ–ரக்னி: அக்னே–ராப: அத்ப்ப்ய ப்ர்த்வி |

என பஞ்சபூதங்களின் தோற்றங்களைப் பற்றி தைத்திரீய உபநிடதம் மிகத் தெளிவாக விளக்குகின்றது.

'***தத: ஆகாச: ஸம்பூத:***' என்கின்றது தத்வபோதம்.

அது ஆகாசம், அதனிடமிருந்து மற்ற பூதங்கள் உண்டாயின என்கின்றது இந்த மந்திரம்.

பூமி (மண்) முதலான ஐந்து திரவ்யங்களுக்கு "**பஞ்ச மஹாபூதங்கள்**" என்று பெயர்.

பஞ்சமஹாபூதம் என்று குறிப்பிடும் பொழுது **ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பிருத்வி** என்ற வரிசையிலேயே நாம் குறிப்பிட வேண்டும்.

சிருஷ்டியானது சூன்யத்தில் தொடங்கி ஜடப்பொருளில் முடிவுறுவதால், இந்த வரிசைக்கிரமமானது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும்படியாக இருக்கிறது.

பூதம் என்ற சொல் “**பூ**” என்ற வார்த்தையிலிருந்து உருவானது. பூ என்ற சொல்லிற்கு உருவானது அல்லது புலன்களால் அறியக்கூடியது என்று பொருள். பூதம் என்பது நிலைத்திருப்பது, இது நித்யமானது, நுண்ணியது.

உதாரணமாக ஒரு கல்லை பூமியால் ஏற்படுத்தப்பட்டது என்று கூறினால், அந்த கல்லில் பூமியின் தன்மை ஐம்பது சதவீதம் காணப்படும். ஆனால் மற்ற பூதங்களின் தன்மையும் அதனுடன் அமைந்திருக்கும்.

இது மூலிகைகளுக்கும் பொருந்தும்.

பஞ்ச மஹாபூதங்கள் பஞ்ச தன்மாத்திரையிலிருந்து உருவாகின்றன.

**சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்** என்பவை பஞ்ச தன்மாத்திரைகளாகும்.

எப்போதும் இருப்பது, “**இருப்பு**” ஒன்றேயாதலால், ‘**அதனிடமிருந்து**’ முதலில் **சப்த** தன்மாத்திரை தோன்றியது.

**சப்த (கேட்டல்)** தன்மாத்திரையிலிருந்து **ஆகாச** தத்துவமும், ஸ்பரிச தன்மாத்திரையும் தோன்றின.

**ஸ்பரிச (தொடுதல்)** தன்மாத்திரையிலிருந்து **வாயு** தத்துவமும், ரூப தன்மாத்திரையும் தோன்றின.

**ரூப (பார்த்தல்)** தன்மாத்திரையிலிருந்து **அக்னி** தத்துவமும் ரஸ தன்மாத்திரையும் தோன்றின.

**ரஸ (ருஷித்தல்)** தன்மாத்திரையிலிருந்து **ஜல** தத்துவமும் கந்த தன்மாத்திரையும் தோன்றின.

**கந்த (நுகர்தல்)** தன்மாத்திரையிலிருந்து **பிருத்வி** தத்துவம் தோன்றியது.

இதுவே, தோற்றத்தின் வரிசைக் கிரமம்.

இந்த ஐந்து பூதங்களாலேயே பிரபஞ்சமும், உலகமும், '**நாம்**', நம் புலன்கள் உட்பட, எல்லா வஸ்துக்களும் உருவாகின என்பது வேதாந்தத்தின் பார்வை.

ஆக, அப்படிப் படைக்கப்பட்ட மண் பானைக்கு உள்ளும், புறமும் ஆகாயம் இருப்பு கொண்டுள்ளதை நம்மால் நன்கு உணர்ந்துக் கொள்ள முடிகின்றது.

எனவே, அந்தப் பானை அங்கு இருந்தாலும், இல்லா விட்டாலும் **ஆகாயம்** என்பது எப்போதும் இருக்கின்றது என்பதினால், அந்தப் பானை ஜடமாக அந்த இடத்தை அடைத்துக் கொண்டிருந்தாலும், அல்லது அந்தப் பானை உடைந்து, மண்ணாக ஆக்கப்பட்டாலும், அந்த மண் இருக்கும் இடம்கூட, அந்த ஆகாயத்துக்கு உரித்தானது என்பதினால்,

அத்தனைக்கும் இருக்க இடம் கொடுப்பது ஆகாயம் மட்டுமே ஆகும்.

ஆக, அந்த ஆகாயத்தை எந்தப் பொருளின் உள்ளும் புறமும் வியாபித்துள்ளது என்று கூறுவதுதானே பொருத்தமாக இருக்கும். அதாவது, இருப்பது **ஆகாயம்** ஒன்று மட்டும்தான், மற்றதெல்லாம் வந்து போவது என்றுதான் ஆகிறது.

அந்த ஆகாயம் இந்த ஓரிடத்தில் தொடங்கி அந்த இடத்தில் முடிகிறது என்று கூற முடியாது என்பதினால், அதற்குப் பிறப்பு இல்லை, அப்படிப் பிறக்காத ஒன்றிற்கு மரணம் என்பதும் இல்லை.

எனவே, எங்கும் நிறைந்த ஆகாயம் என்று கூறிய பிறகு, அதற்கு **கீழ்** என்றோ? **மேல்** என்றோ? ஒரு வார்த்தை வருணனை இருக்க முடியுமா?

அவ்வாறே, திடமாக இல்லாமல், இலேசான வாயுவாக நுண்ணியதாக காற்று போல, ஒரு பொருள் இருந்தால்கூட, அதுவும் இவ்வளவு உயரம் வரைதான் வியாபித்து இருக்க முடியும் என்றும், அதற்கு மேல் அதுவும் இருக்க முடியாது என்றும் கூறலாம்.

ஆனால், அந்த பரந்த வெட்ட வெளியோ எங்கும் வியாபித்து, சரி சமமாகப்பரவி, விரிந்து இருப்பதால், அதற்கு **கீழ் - மேல்** போன்ற இருமைகள் இருக்க முடியாது.

விஞ்ஞானிகள் கூட இல்லாத ஒரு பொருளை இங்கு உருவாக்கும் போது, அதனைச் செய்வதற்கு என்று, சில வரைமுறைகள் வகுத்து இருப்பார்கள். அந்த வரைமுறைகளும் கூட பலரும் பாடுபட்டுப் பல தோல்விகளைச் சந்தித்தபின்தான் கண்டறியப்பட்டதாக இருக்கும்.

அதேசமயம், அந்த ஒரு பொருளை செய்வதற்கு அவர்களுடைய **மனம்** ஓர் ஈடுபாடுடன் கூடியதாக இருந்தாக வேண்டும்.

அந்த மனதையே, '**சித்தம்**' என்கிறார்கள்.


அந்த சித்தம் வருவதற்கும், வளர்வதற்கும் முன்பே அவனுக்கு **இருப்பு** என்பது இருந்தாக வேண்டும். அந்த இருப்பு ஒன்றுமட்டுமே என்றுமுள்ளது என்றும், அதுவே, "**சித்தன்**" என்றும் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

"**சித்தர்கள்**" என்று நாம் புரிந்து வைத்துக் கொண்டுள்ள தவறான புரிதல்கள் மூலம், அவர் அதைச் செய்வார், இவர் இதைச் செய்வார் என்று அவர்களது சித்தாடல்களை (Magic) பார்த்து, அவர்களை **சித்தர்கள்** என்று கூறுவதுப் போன்று,

இங்கு கூறவருகின்ற சித்தன் என்ற சொற்றாடலை சேர்த்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

அதாவது, சித்தர்கள் காட்டும் சித்து விளையாட்டு எல்லாமே அவர்களது **மனம்** என்ற கருவியைக்கொண்டே செய்யப்படுவது.

ஆனால், ஆன்மாவின் அதீத உச்சநிலை என்பது மனம், குணம், திடம் என எதுவுமே இல்லாத **நிர்குணம், நிர்மலம், நிரஞ்சனம்** என்ற பேரானந்த பேரறறிவு என ஏற்கனவே பார்த்துள்ளோம்.



அதையே, பகவான் ஸ்ரீரமணர் தமது ஒரு பாட்டில் பின்வருமாறு பாடுகின்றார்.

**“சித்தத்தின் சார்பு இன்றி சித்தியாச் சித்திகளில் சித்தம் தோய்வார், எங்கண் சித்தக் கலக்கம் தீர் முக்தி சுகம் தோய்வார் மொழி”**

அதாவது, இதன் பொருள் சித்தம் என்ற ஒன்று அழிந்தால்தான் முக்தி சுகம் எனும்போது, அந்த சித்தத்தைக் கொண்டு செய்யப்படும் சித்திகள் மூலம், எந்த சுகத்தை அடைய முடியும்? என்று கேட்கிறார்.

ஆதலால், என்றுமுள்ள சித்தன் எனக்கூறப்படுவது மனமாகிய சித்தம் அழிந்து, அறிவு தெளிந்த மகான்களின் முக்தி நிலையைக் குறித்துக் கூறப்படும் சொல் ஆகும்.

அதாவது, சித்தமழிந்து, சிவமயமாய் நம்மை நாம் உணர்ந்து, நம் சுய சொரூபத்தில் இருப்பு கொள்கின்ற ஆனந்த அனுபூதியே ‘**சித்தன்**’ என்று அறியப்பட வேண்டும்.

அதைவிடுத்து, மனதை மயக்கும் மாய விளையாட்டு காட்டுபவர்களையும், மதிமயக்கம் உண்டாக்குகின்ற கள் குடிப்பவர்களையும், கஞ்சா அடிப்பவர்களையும், அழுக்கு ஆடை அல்லது காவி உடை அணிபவர்களையும், ஜடாமுடி விடுபவர்களையும் எல்லாம் பார்த்து சித்தர்கள் என்று கூறுவது நம்முடைய சிறுமதியை மட்டுமே சுட்டிக் காட்டுகின்றது.

எனவே, இதுப்போன்ற விபரீத எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல், எழுகின்ற எண்ணங்களின் தரத்தைக் கொண்டு, அந்த மனதில் உள்ள அசுத்தங்களை (மலங்களை) போக்கும் மகத்தான வழியை அறியப் பாருங்கள். அது ஒன்றே நம் அறியாமையைப் போக்கும் அருமருந்தாகும்.

அதாவது, நமது அன்றாட **நனவு - கனவு - உறக்கம்** போன்ற அனுபவங்களில் வந்து போகும் **ஸ்தூல - நுண்ணிய - காரண** உடல்களுக்கு ஏற்றாற்போல, விதவிதமான மலங்கள் இருக்கின்றன.

ஸ்தூல உடலுக்கு வியர்வை, சிறுநீர், கபம் போன்ற கழிவுகளான மலங்கள் உள்ளன. அவைகள் அவ்வப்போது அகன்றால்தான் நமது ஸ்தூல உடலும் நோயின்றி இவ்வுலகில் இனிதாக இருக்க முடியும்.

அவைகள் போன்றே, கனவில் நாம் நுண்ணிய உடலை அடைவதன் காரணமே, நமது **ஆசை, பொறாமை, பழி வாங்கும் எண்ணம், துயரம்** போன்ற மலங்கள்தான்.

அவைகள் எதுவும் இல்லாது போனால், எந்தக் கனவும் இல்லாது ஒருவன் அமைதியாகத் தூங்க முடியும். அத்துடன் ஆழ்ந்த உறக்கத்தில் வரும் காரண உடலின் மலமோ, '**நான் இருக்கிறேன்**' என்றுகூட தன்னைப்பற்றி அறிய முடியாத அவல

நிலையில் "**அவித்தை**" எனப்படும் அறியாமை நிலையில் உள்ளது.

இப்படி தேகங்கள் **ஸ்தூல, சூக்கும, காரண** என பல வந்து போனாலும், இவைகள் எதையுமே பற்றிக்கொள்ளாது, இவைகள் எதனாலும் பாதிக்கப்படாது, நிர்மலமாய் இருப்பவன் எவனோ அவனே "**ஆன்மா**" என்று வர்ணிக்கப்படுகிறது.

ஸ்தூல வடிவில் கல் போன்று ஜடப்பொருளாக இருந்தால், அதுவும் இப்போது ஓரிடம், பிறகு வேறிடம் என்று இடம் விட்டு இடம் மாறுகின்ற அசைவுகள் இருக்கும்.

நுண்ணிய வடிவில் மனம் போல இருந்தாலோ, ஏதாவது செய்து கொண்டிருக்க வேண்டும் என்றோ? அல்லது செய்ய முடியவில்லை என்றோ?, அல்லது அது அப்படி இருக்க வேண்டும், இது இப்படி இருக்கக் கூடாது என்று, விதவிதமான வகைகளில் எதையாவது சலித்துக் கொண்டு இருக்கும். அது நிச்சலத் தன்மை கொண்டுள்ளது.

ஆக, ஸ்தூல, சூக்கும வடிவில் உள்ள உடலும், மனமும் அந்த ஆன்மா ஆகிவிடாது.

ஆனால், ஆகாசமோ ஜடமாக இல்லாது எங்கும் பரவியுள்ளதால், அதற்கு ஓர் இடைவெளியும் இல்லை. எனவே, அது அசைவதற்கு இடம் ஏதுமில்லை. அதனால்,

அதனிடம் சலனம் ஏதுமில்லை. மேலும், அது எதனுடனும் சம்பந்தப்படுவதும் இல்லை. அதனால், அதன்மீது எந்த அசுத்தங்களும் (மலங்களும்) ஒட்டுவதில்லை. எனவே, அந்த ஆகாசத்தை மட்டும்தான் "**நிர்மலம்**" என்கிறோம்.

அந்த ஆகாசமே **ஆன்மா.** அதுவே **பேரறிவு,**

அதுவே, **வெட்டவெளி.** அதுவே **அறிவுஒளி.**

அது வருவதும் இல்லை! போவதும் இல்லை.

வந்து, போகின்றவைகளெல்லாம் இந்த பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டான **உடல்கள்** என்ற பருப்பொருட்களே ஆகும்.

எனவே, நிலையானதாகவும், எல்லையற்றதாகவும், அசைவற்றதாகவும், மலங்கலற்றதாகவும் இருக்கின்ற '**இருப்பு**' எதுவோ, அதுவே '**ஆன்மா**' ஆகும்.

அந்த ஆன்மாவே "**நான்**" என்று தெளிவாக அறிந்துக் கொள்வாயாக! என்று இங்கு கூறப்பட்டுள்ளது.

नित्यशुद्धविमुक्तैकमखण्डानन्दमद्वयम् ।
सत्यं ज्ञानमनन्तं यत्परं ब्रह्माहमेव तत् ॥ ३६॥

நித்யஶுத்தவிமுக்தைகமகண்டானந்தமத்வயம் |
சத்யம் ஞானமனந்தம் யத்பரம் ப்ரஹ்மாஹமேவ தத் ||

எது நித்தம் சுத்தம் எது முக்தம் ஏகம்
எது அகண்ட இன்பு இரண்டல்லது – எது சத்து
சித்து அனந்தம் ஆகும் திகழ் அப்பரப் பிரம
வத்து யானேயா மதி – **ஸ்ரீ ரமணர்**

(எந்தப் பொருள் என்றும் உள்ளதாயும், எப்போதும் பரிசுத்தமாய் இருப்பதாயும், எந்தப் பந்தமும் இல்லாததாயும், இரண்டற்ற ஒன்றேயாக இருப்பதாயும் உள்ள பொருள் உண்மையாயும், அறிவு மயமாயும், இடையறாத இன்ப வடிவானதாயும், முடிவில்லாது விளங்குகிறதோ அந்தப் பரப்பிரம்மமே நான் என்பதை உணர்வாயாக.)

தொடர்ந்து மூன்றாவதாக உள்ள இந்த செய்யுளிலும், ஆன்மாவின் லக்ஷணங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

வருவது, போவது என்றில்லாமல் என்றும் இயல்பாய் உள்ளதால், அது **நித்தம்** எனப்படுகிறது. எந்த விதமான மலங்களும் அதற்கு இல்லாமையால் அது **பரிசுத்தம்** எனப்படுகிறது. மேலும், அதற்கு வேறாக மற்றவைகள் எதுவும்

இல்லாததால், அது பற்றுவதற்கு ஏதும் இல்லாததால், எந்தப் பந்தமும் இல்லாமல் இருப்பதினால் **முக்தம்** என்றும், ஆக அது ஒன்று மட்டுமே இருப்பதினால் **ஏகம்** என்றும் கூறப்படுகின்றது.

தனக்கு வேறாக, இன்னொன்று இருந்தால்தான் அதன் வாயிலாக, இன்பமோ, துன்பமோ உண்டாக முடியும். ஆனால், இருப்பது, '**சத்**' ஆகிய அது மட்டுமே என்பதினால், உள்ள பொருளான அது ஒன்றே இருப்பதால் அதைத் தவிர வேறு இருக்கிறது என்று சொல்வதற்கு ஏதுமில்லை என்பதால், அது ஒன்றே உண்மையாக இருப்பதாகும்.

அத்துடன், அது எந்தவிதமான எதிர்ப்பார்ப்புகளையும் எதிர்நோக்குவதில்லை. எதிர்ப்பார்ப்புகளினால், வரக்கூடிய மாறுபாடான நிகழ்வுகளுக்கும் நிச்சயமாக அதனிடம் இடம் இல்லை.

மேலும், இருப்பது என்று மட்டும் இல்லாது, தான் இருப்பதை உணர்ந்துக் கொண்டும் இருப்பதால் அது ஒன்றே '**சித்**' ஆகிய **சுத்த அறிவு** என்பதாகவும் இருக்கின்றது.

ஆக, தான்மட்டும் இருப்பதால், தன்னில் தானாய் இன்புற்று தனியனாய் இருக்கும் அதற்கு, வேண்டுவது ஏதும் இல்லையாதலால், அது எப்போதும் ஆனந்த வடிவாகவே இருக்கிறது.

எனவே, உலகில் உள்ள அனைத்திற்கும், அவைகள் இருக்கின்றனவா? இல்லையா? என்று கூறுவதற்கு **சாட்சியும், நிரூபணமும்** தேவைப்படுகின்றது. அனால், தன்னை அறிவதற்கு மட்டும்தான் "**நான் இருக்கிறேனா**?" என்ற சந்தேகம் எப்போதும் எவருக்கும் வருவதில்லை. அதனாலேயே, தன்னைப் பற்றிய சந்தேகம் ஒருவருக்கும் ஒருபோதும் வருவதில்லை.

அவரவர் புத்தியின் மூலம் வரும் தன்னைப் பற்றிய அந்த சிற்றறிவு கூட, அந்தப் பேரறிவு இருப்பதால் இருக்கிறது என்பதை, அவரவர்கள் சுயமாய் உணர்ந்தே தெரிந்துக் கொள்ள முடியும்.

அதாவது, சிற்றறிவு என்பது முகம் பார்க்கும் கண்ணாடியில் பிரதிபலிக்கும் நம் மறு உருவம் அல்லது நம் நிழல் போலாகும். நாம் வேண்டுமானால், அவைகளைப் பார்க்கலாம், பிடிக்கலாம், இரசிக்கலாம். ஆனால், அந்த பிரதிபிம்பமோ, அல்லது நிழலோ நம்மைப் பிடிப்பது எப்படி?

அதுப்போன்று, பேரறிவைப்பற்றி, சிற்றறிவு எப்படி அறிய முடியும்?

ஆகவே, நம் புற அறிவால் அதனை அறியும் முயற்சியை விட்டுவிட்டு, அதுவாக நாம் இருப்பதால் மட்டுமே அந்தப் பேரறிவை உணர்ந்துக் கொள்ள முடியும்.

“**நான் இருக்கிறேன்**” என்ற உணர்வுக்கு ஒரு தொடக்கம் இல்லாததால், அதற்கு ஒரு முடிவும் கிடையாது. ஆக, அந்த உணர்வுகூட, என்றுமே முடிவு என்றில்லாத அந்தப் பேரறிவின் இயல்பினால் ஒருவனுக்கு இருப்பதே ஆகும்.

இப்படியாக, மேலேகூறப்பட்ட அனைத்து இயல்புகளும் ஆன்மாவினுடையதாக உணர்ந்துக் கொள். அது ஒன்றே, “**நான்**”, “**நான்**” என்ற உணர்வாக நம்மிடம் உள்ளது.

எனவே, அறியாமையில், இந்த உடலை ‘**நான்**’ என்று பிடித்துக் கொள்வதும், மனதை ‘**நான்**’ என்று நினைத்துக் கொள்வதும், நம் உண்மை இயல்பை நாம் உணர தடையாக உள்ளது.



एवं निरन्तराभ्यस्ता ब्रह्मैवास्मीति वासना ।
हरत्यविद्याविक्षेपान् रोगानिव रसायनम् ॥ ३७॥

ஏவம் நிரந்தராப்யஸ்தா ப்ரஹ்மைவாஸ்மீதி |
ஹரத்யவித்யாவிக்ஷேபான் ரோகாநிவ ரசாயனம் ||

நிரந்தரம் இவ்வாறு நிகழ்த்தப்படும் அப்
பிரமமே யான் ஆவன் என்னும் – உறுதி
அழிக்கும் அறியாமை அலைவுகளை நோய்கள்
ஒழிக்கும் இரசாயனம் ஒத்து – **ஸ்ரீ ரமணர்**

(அந்தப் பிரம்மமே நான் என்ற பாவத்துடன் சதா சர்வ காலமும் தியானிக்கத் தேவையான, விசாரத்தின் விளைவாகப் பிறக்கும் உறுதியானது, தீர்க்க முடியாது என நினைக்கப்படும் நோய்களையும் தீர்க்கும் மாமருந்தாகிய இரசாயனக்கலவை போன்று, அஞ்ஞானத்தினால் ஏற்படும் மனக் குழப்பங்களை எல்லாம் அழித்து விடும்.)

ஒரு மனிதன் பெற வேண்டியதிலேயே பெறுதற்கரிய பேறு! ஒன்று உண்டென்றால், அது ஆன்மாவை உணர்ந்து, அதுவாகவே "**நான் இருக்கிறேன்**" என்பதே ஆகும். இதுத்தவிர ஒருவன் எத்தனை விதமான செல்வங்களைப் பெற்றிருந்தாலும், அத்தனையும் ஒருநாள் அவனைவிட்டு இல்லாமல் போய்விடும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

ஆனால், என்றும் அழியாத செல்வம் உண்டென்றால், அது தன்னையறியும் “**ஆன்ம ஞானம்**” என்ற தலையாய செல்வம் என்றே கூறப்பட வேண்டும். அந்த செல்வத்தை அடையும் அற்புத வழிமுறை இங்கே கூறப்பட்டிருக்கிறது.

இதுவரை, ஆன்மாவின் இலக்ஷணங்களைப் பற்றி விரிவாகப் பார்த்தோம். இனி, அந்த ஆன்மாவை உணரும் உன்னதமான நேர்வழி விளக்கப்படுகிறது. எதை அடைந்தாலும், அந்த ஒன்றை மட்டும் அடைய முடியாமல் தடைகள் வருகின்றனவோ, அந்த தடைகளாக நாம் நம் மனதில் ஏற்றி வைத்துக் கொண்டுள்ள அறியாமைகள் என்ற அனேக அவநம்பிக்கைகள் ஆகிய, ‘**அது முடியுமா?, முடியாதா?**’ போன்றதில் தொடங்கி அடுக்கடுக்காக வருகின்ற எண்ணற்ற மனக் குழப்பங்கள்தான் எனலாம்.

இந்த ஆன்ம ஞான விசயத்திலும், அனைவருக்கும் அதே பிரச்சினைதான் உள்ளது. ஆன்ம ஞானம் அடைகிறேன், ஆன்மாவைத் தேடுகிறேன் என்பதும்கூட, மற்ற உலகியல் பிரச்சினைகள் போன்றதுதானா? என்ற சந்தேகம் எல்லாம் எல்லோருக்கும் எழுகின்றது.

இதன்காரணமாக, எல்லோருமே அவரவர்கள் ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களுக்கு ஏற்ப, **இதுதான் சரி! அது சரியல்ல!** போன்ற சச்சரவுகளில் ஈடுபடுகின்றனரே தவிர, புற அறிவினால் அடையப்பட்ட அத்தனை விசயங்களும், இந்த மனமும், உடலும் சரியாக உள்ளவரை மட்டுமே இருக்கும்

என்றும், அவைகள் நலிவடையும்போது, ஒருவன் **எத்தனை செல்வங்கள் சேர்த்து வைத்தாலும், அவைகள் அத்தனையும் அவனுக்கு உபயோகப்படாது!** என்பதை, விவேகி மட்டுமே அறிகிறான்.

விவேகமற்றவன் மற்றவர்களின் மரணத்தில் மனமும், உடலும் அவர்களுக்கு உதவாமல் அழிவதைப் பார்த்தும்கூட, பயனற்ற எதை, எதையோதேடி, அங்குமிங்கும் அலைவதை வாடிக்கையாகவே வைத்துள்ளான். அதை, விவேகமுள்ளவன் வெறும் வேடிக்கையாகவே பார்க்கிறான்.



பொதுவாக, அவரவர்கள் அறிந்துக்கொண்ட அத்தனை விசயங்களும், புற அறிவினால் அலசி ஆராயப்பட்டவைகள் என்பதினால், அதை அவர்களது சொந்த அனுபவத்தில் காண முயற்சிப்பதன் மூலம் மட்டுமே, அவர்களிடமுள்ள அறியாமை

இருள் அகலுமே தவிர, அதற்கு மாறாக, அவர்கள் எத்தனை பயிற்சிகள், முயற்சிகள் மேற்கொண்டாலும், அது ஆன்மாவை அனுபவமாக பிரகாசிக்க வைக்க உதவாது.

ஆக, வெளி உலகைக்காணும் கருவிகளான மனமும், புத்தியும் அவனுக்கு புறத்தில் இயங்கும் வரை, அவனது ஆன்மாவைத் தேடும் முயற்சியும், ஞானத்தை அடையும் ஆர்வமும் மற்ற உலகியல் பிரச்சினைகள் போன்றே, மேலும் பல குழப்பங்களைத் தருவதாகவே இருக்கின்றது. ஆக, பகவான் ஸ்ரீஆதிசங்கரர் இதுவரை இந்த நூலில் கூறியதிலிருந்து, நாம் அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டிய அரிதான உண்மை என்னவெனில், ஆரம்பம் முதல் இதுவரை உள்ள அனைத்து விசயங்களும், ஒருவனது புத்தியைப் பிரகாசிக்க வைக்கும் ஆன்மாவின் அறிவொளிப் பற்றியே அடிக்கடி கூறப்பட்டது.

அறியாமை மனம், அறிவுள்ள புத்தியாகப் பிரகாசிக்க ஆன்மவொளி மட்டுமே அவசியமாகின்றது, என்பதை அறிந்து, என்றுமே அணையாத அந்த ஆன்ம தீபம் எங்குள்ளது? அதை தரிசனம் செய்வது எப்படி? என கேள்விகள் கேட்கும் சாதகனுக்கே, சரியான வழி இங்கு காட்டப்படுகின்றது.

பொதுவாக, புறத்திலே ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்கள் மூலம், ஆன்ம ஞானத்தை நோக்கி ஆர்வமுடன் வருகின்ற சாதகனுக்கு **“நான் யார்?”** என்று கேட்கப்படும் கேள்வியும், அவனிடமிருந்து தொடக்கத்தில் அறிவார்த்தமாகக்

கேட்கப்படும் கேள்விதான் என்றாலும், அதற்கான பதிலையும், புறத்திலே அறிவார்த்தமாக புத்தியின் துணையுடன் அறிய முயற்சித்தால், அவன் ஒருநாளும் ஆன்மாவை உணரமுடியாது.

ஆக, அந்த சாதகனின் சாதனையென்பது, சதா சர்வ காலமும், ஆன்ம தீபத்தின் பிரகாசத்தில் வீற்றிருக்கின்ற தக்க சத்குருவை அடைந்து, தனக்குள்ள அறியாமை இருளை அகற்றிக் கொண்டால் மட்டுமே அவன் அந்த அதிஅற்புத செல்வத்தை அடைகிறான்.

அதற்காக, அந்த சாதகன் சத்குருவின் சந்நிதியில் சரணடைந்து, தன் சந்தேகங்களை எல்லாம் அவரிடம் கேள்விகளாகக்கேட்டு, அதற்கான தக்க பதில்களை தவறாமல், அவரிடம் அறிவுரைகளாகப் பெற்று, அதன் வாயிலாக, அறிவுப்பூர்வமாகக் கேள்விகளைக் கேட்டவனும், அவனால் கேட்கப்பட்ட கேள்விகளும் ஆகிய இருமைகள் மறைந்து, இருப்பது ஒன்றேயாகிய தன்னுடைய **இருப்பு** என்பதை உறுதியாக உணர்ந்து, அவனை அவனுக்குக் காட்டிக் கொடுத்த மிக உயரிய விசார முறை ஒன்று மட்டுமே, அவனது அனைத்து அறியாமைகளைப்போக்கும் **'அருமருந்து'** எனலாம்.

அவ்வாறு, ஒருவன் தக்க சத்குருவின் மூலம் தனது இருப்பை உணரும்போது, அதுவரை **"தான் அறியவில்லை"** என்ற அவனது அஞ்ஞானங்கள் அனைத்தும், அவரது அறிவுரைகளாகிய அருமருந்தால், அடியோடு அழிந்து விடும்.

அதாவது, ஒரு நோயாளிக்கு தீராது என நினைத்த நோய்க்கு அருமருந்து ஒன்று கிடைத்து, அதன் வாயிலாக அந்த நோய்த் தீர்ந்து விட்டதுப் போல, சாதகனின் அனைத்து சந்தேகங்களுக்கும், சத்குருவின் மூலம் தெளிவு பிறந்து விட்டால், ஒன்றேயான சத்தை மறைத்து நின்ற, அவனது அறியாமைகள் அகன்று, இறுதியில் இருப்பது, சித்தாகிய சுத்த அறிவு அவனிடம் பிரகாசிக்கத் தொடங்கும். அதனால், அந்த "**சுத்த அறிவே நான்**" என உணர்ந்த, ஆனந்த அனுபவத்தில் அவன் அனுதினமும் திளைக்க முடியும்.



அதன் பின்புதான், "**இந்த பிரபஞ்சத்தில் நான் இருப்பதுப் போன்று, பிரபஞ்சமும் என்னுள் இருக்கின்றது**" என்ற அகண்ட அறிவு அவனுக்கு வெளிப்பட்டு, அத்தனைக்கும் சாக்ஷியாக "**நான் இருக்கிறேன்**" என்ற தன்னுணர்வில் தன்மயமாக, அந்த "**பிரம்மமே நான்**" என அவனால் நிலைத்து நிற்கவும் முடியும்.

विविक्तदेश आसीनो विरागो विजितेन्द्रियः ।
भावयेदेकमात्मानं तमनन्तमनन्यधीः ॥ ३८॥

விவிக்ததேஷா ஆஸினோ விராகோ விஜிதேந்த்ரியஹ |
பாவயேதேகமாத்மானம் தமனந்தமன்யதீஹ் ||

ஏகாந்த தேசத்து இருந்து ஆசையின்றி வெளி
போகாது வென்று பொறிகளை – ஏகமாய்
அந்தமில் ஆன்மாவை அன்னியமில் புந்தியனாய்ச்
சிந்திக்க வேண்டும் தெரி – **ஸ்ரீ ரமணர்**

(தனிமையாக ஒரிடத்தில் இருந்துக்கொண்டு, ஆசைகள் அற்றவனாய், வெளி விஷயங்களை நோக்கிப் போகும் ஐம்புலன்களை வென்றவனாய், ஒன்றேயாகிய தன் சுத்த அறிவிற்கு வேறாக, மற்றொன்று இல்லை என்ற ஒருமித்த மனதைக் கொண்டவனாய் சிந்தித்து இருப்பாயாக.)

மனமும், புத்தியும் இயங்கும் போதுதான் நான் யார்? நம்மாலாவது என்னென்ன?, நம் வாழ்வின் பொருள் என்ன? என்றெல்லாம் நம்மைப் பற்றி யோசிக்க வரும்.

அவ்வாறு யோசிக்கும்போது, அனைவருக்கும் தன் கண் முன்னே தெரியும் இந்த உலகமும், அதில் தான் ஒரு அங்கம் என்ற அபிமானமும், இந்த உலகத்தில் தான் செய்யவேண்டியது என்ன? என்றபடிதான் எண்ணங்கள் எழும். ஆனால், இதில்

ஒரு சிலருக்கே, அப்படி யோசிப்பவன் யார்? என்ற எண்ணம் வரும்.

அத்தகைய ஒரு சிலருக்கு தன்னைப்பற்றியும், தனக்கு அயலாக உள்ள இந்த உலகத்தைப் பற்றியும், தனக்கு எழும் எண்ணங்களைப் பற்றியும், விசாரணை செய்யும் விவேகம் வரும். அவர்கள் மட்டும்தான் மனதையும், மனதில் எழும் என்ணங்களையும், உடலையும், உடலால் நடைபெறுகின்ற செயல்களையும் செய்பவன் யார்? அவ்வாறு இயக்குபவன் யார்? இயங்குபவன் யார்? என்ற கேள்விகளைக் கேட்கத் தொடங்குவார்கள்.

அந்த ஆழமான அர்த்தமுள்ள கேள்விகளால், அவர்கள் அதன் விடைகளைக் கண்டுகொள்ள ஆர்வம் கொள்வார்கள். அதன்காரணமாக, ஆன்மீக நூல்கள், ஆலய தரிசனங்கள், சாதுக்களின் தொடர்புகள் என, தன் சந்தேகங்களைக் களைய கடினமான முயற்சிகளை எல்லாம் மேற்கொள்வார்கள்.

அதன் முதல்படியாக, தன்னை ஆட்கொண்டிருந்த இந்த உலக வாசனைகளை விட்டு, விலகுவது எப்படி? என யோசிக்கத் தொடங்குவார்கள். அதற்காக அவர்கள் உறவுகளை விட்டு, தனிமையை நாடத் தொடங்குவார்கள். ஆனால், அவர்கள் அறிந்து வைத்துக் கொண்டதுப் போன்று, தனிமை என்பது எல்லாவற்றையும் துறந்துவிட்டு, காட்டிற்குச் சென்றுவிடுவது அல்ல. தேவையற்ற பேச்சுக்களை குறைத்து தன் இருப்பிடத்திலேயே தனிமையில் அமர்ந்துக் கொண்டு,

தன் மனதில் எழும் எண்ணங்களை எல்லாம் கவனித்து, அதில் தன் அறியாமைகளை அறிய முயற்சித்து, அவைகளை யெல்லாம் அகற்ற வேண்டும். இல்லையென்றால், அவனது மனம் மீண்டும் பழையபடி, இந்த உலகத்தைத்தான் உற்சாகமாகக் கவனிக்க விரும்பும்.

அவ்வாறு தனிமையில் இருக்கும் அவன் அதுவரை தன்னை வெளியே இழுத்து அலைபாயக் காரணமாகத் தன்னுள் இயங்கிக்கொண்டிருந்த மனதையும், அந்த மனதில் எழும் எண்ணங்களையும், அந்த எண்ணங்களால் உண்டான செயல்களையும் என எல்லாவற்றையும் ஆராய்ந்து, அதற்குக் காரணமான தனது ஐம்புலன்களையும் அடக்கி, அவைகளால் புற விசயங்களில் ஈர்க்கப்பட்ட விஷய, சுகங்களில் மீதுள்ள ஆசைகளையும், அதன் குணங்களையும் தவிர்த்து, அவைகள் மறுபடி மேல் எழுந்து வராதவாறு, தனது உள்முக நாட்டத்தை உறுதியாக்கிக் கொள்ள வேண்டும்.

இப்படியாக, உறுதி உண்டாகும்வரை, பழகப் பழக, அவன் தன் எண்ணங்களை மறுசீரமைத்து, மனத்தூய்மைக்கான மகத்தான பயிற்சியாக அது மாறும். அவ்வாறு மனதில் மாசுக்கள் என்ற அழுக்குகள் நீங்கியதும், அவனது மனம் ஒருமித்த சிந்தனையில், அந்த ஏக அறிவை அறிய ஆர்வம் கொள்ளும்.

அத்தகைய உறுதி அவனுக்கு வரவில்லை என்றால், அவன் தனித்திருந்தும் பயன் இல்லாமல், மனத்தின் கண்

மாசுகள் நீங்காமல், எழுகின்ற எண்ணங்களின் வாசனைகளால், செயல்கள் பல செய்து, மனதாலும், உடலாலும் இந்த உலக விஷயங்களில் நாட்டம் ஏற்படும்.

அதுவே, ஒருமித்த மனநிலையில், ஒரே சிந்தனையுடன் அந்த அறிவை அறிய ஆர்வம் வந்து விட்டால், அவனுக்கு மட்டும்தான் “**தானன்றி யாருண்டு?**” என்ற ‘**தன்னுணர்வு**’ பிரகாசிக்கத் தொடங்கும். அந்த தன்னுணர்வுக்குப் பின்பே மற்றெல்லாவற்றையும் உள்ளடக்கிய உலகம், தன்னுள்ளேதான் இருக்கின்றது. ஆனால், அவைகளெல்லாம் நான் இருப்பதினால்தான் இருக்கிறது என்ற “**தன்னிருப்பு**” தன்னிடம் உள்ளதை அவனால் உணர முடியும்.

அதன்காரணமாக, அவனுக்கு மற்ற சீவராசிகளும் தன்னைப்போலவே உள்ளதை, உணரக்கூடிய உன்னத வாய்ப்பு உண்டாகின்றது. அவனுக்கு மட்டும்தான், நான் மட்டுமின்றி, இந்த பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒன்றேயான அறிவு (ஆன்மா), தனக்கு அன்னியமில்லாத அனைத்திலும், அவைகளின் மனோவிகாரங்களுக்கு ஏற்ப பிரகாசிக்கின்றது என்பதை உணர முடியும்.

ஆக, மனம், புத்தி போன்றவைகளால் உந்தப்பட்டு, உண்மையான தேடுதலுக்கு, ஆழமாக உட்படுகின்ற உறுதியான சாதகனுக்கு மட்டுமே, சித்த மலம் நீங்கி, சகலமும் சித்திக்கும் ஒன்றேயான ஆன்மா உள்ளத்தில் உணரப்படும்.

आत्मन्येवाखिलं दृश्यं प्रविलाप्य धिया सुधीः ।
भावयेदेकमात्मानं निर्मलाकाशवत्सदा ॥ ३९॥

ஆத்மன்யேவாகிலம் த்ருஷ்யம் பிரவிலாப்ய தியா சுதிஹி |
பாவயேதேகமாத்மானம் நிர்மலாகாஷவத்சதா ||

புத்திமான் காணும் பொருள் எவையும் ஆன்மாவில்
புத்தியால் ஒன்றல் புரிவித்தே – சுத்தமாம்
விண்ணென ஒன்றாய் விளங்கிடும் ஆன்மாவை
எண்ணுக எப்போதுமே – **ஸ்ரீ ரமணர்**

(ஆன்மா ஒன்றுமட்டுமே அனைத்துமாக இருக்கின்றது என்பதை ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் என்ற முறையில், கேட்டல், சிந்தித்தல், அதில் நிலைப்பெறுதல் முதலான வழிகளின் மூலம் கற்றுணர்ந்து, தெளிந்த புத்தியை உடையவன், தான் ஆன்மாவாகவே இருப்பதால், தான் காணும் அனைத்தையுமே அந்த ஆன்மாவின் பிரதிபலிப்பாக தனது புத்தி மூலம் அறிகிறான். எப்படி ஆகாயமானது, எதனுடனும் ஒட்டாமல், எந்தவிதமான குணங்களும் இல்லாமல், நிர்மலமாக எங்கும், எதிலும் பரந்து விரிந்து காணப்படுகிறதோ? அதுப்போன்று, அந்த ஆன்ம ஒளிப்பிரகாசம் அனைத்திலும் பட்டு, அதனதன் தன்மைக்கு ஏற்ப பிரதிபிம்பிக்கின்றது பிரகாசிக்கின்றது என்பதை எப்போதும் எண்ணுவாயாக.)

இந்த உலகியல் வாழ்க்கையில் நம்மை நமக்குத் தெரிந்தவர்கள் யாராவது அவதூறாகப் பேசினால், அதைப் பொருட்படுத்தினால் மட்டுமே அது நம்மை பாதிக்கும்.

அதுவே, அந்தப் பழிச்சொல்லை நாம் ஒரு பொருட்டாக மதிக்காமல், என்னைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று எடுத்துக் கொண்டு எப்பொழுதும் போன்று நாம் அவர்களிடம் அன்பாக இருந்தால், அவர்கள் நிலை என்னவாகும்?

அவ்வாறு பேசியவர்கள் தங்களை நினைத்து வெட்கப் படும் நிலையில், தங்கள் தவறை உணர்ந்து, நம்மைப் பற்றிக் குறை கூறுவது நின்றுபோய்விடும் அல்லவா?

அதுப்போன்று, நாமும் ஒரு பொருளைப் பார்க்கிறோம். நம்மைப் பொருத்தவரை அது இருப்பது என்பது நாம் பார்ப்பதால்தான் இருக்கிறது என்றாலும், அந்த பொருளைப் பற்றிய முழுமையான புரிதல் நமக்கு இல்லை என்பதினால், அதன் குண, பேதங்களை அறியாமல், அதைப்பற்றிக் கருத்து கூறுவது என்பது, நம்முடைய அறியாமையைக் காட்டிவிடும்.

அவ்வாறு, நான் இந்த பரு உடல் மட்டுமில்லை, அதனிலும் நுண்ணியதான சூக்குமமாகிய **மனம்,** அந்த மனதைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் **புத்தி,** அந்த புத்தியின் துணைக்கொண்டு, நன்மை, தீமைகளை பகுத்தறிந்துக் கொண்ட

**சித்தம்,** அந்த சித்தத்தின் மூலம் '**இது, இது இன்னதுதான்**' என்று அறிகின்ற **அஹங்காரம்** ஆகிய இவைகள் அனைத்துமே நம்மிடம் இருந்தாலும், நாம் உண்மையில் நம்மை நாமே அறிய முடியாதவாறு உள்ள நிலையில்தான் இருக்கிறோம்.

அவ்வாறே, நமக்குத் தெரிந்த மற்ற சீவராசிகளும் இதுபோன்ற அறியாமை நிலைகளில் உள்ளதாலும், நமக்கும், அதற்க்கும் உள்ள வித்தியாசம் என்பது, நம்மிடம் மட்டுமே உள்ள நன்மை, தீமைகளைப் பற்றி பகுத்தறியும் பிரத்யேக அறிவு காணப்படுவதால், கேட்டவைகளைப் பற்றி அப்படியே ஏற்காமல், அவைகளைப் பற்றி சரியான முறையில் சிந்தித்து, சிந்தித்தவைகளை நெறிப்படுத்தி, அதிலே உறுதியாக நிற்பது ஒன்றுமட்டுமே அதைப்பற்றி நாம் முழுமையாக அறிந்துக் கொண்டதற்கு சமம்.

இவ்வாறே, நாம் நம்மைப் பற்றி நன்கு அறிய இப்படியாகக் கேட்டு, சிந்தித்து அதனால் தெளிவு பெற்ற புத்தியுடன் இருக்கும்போது, நம் ஒவ்வொருவரையும் முதலாகக் கொண்டே, மற்றது எதுவும் அமைகிறது என்பதும் விளங்கும்.

அவ்வாறு அனைத்தையும் அறியும் அறிவாகிய ஆன்மா, நம்முடைய புத்தியில் பிரகாசிப்பதினாலேயே, நம்மால் எல்லாவற்றையும் சிந்தித்து அறிய முடிகின்றது என்பதினால், அனைத்தையும் உள்ளடக்கிய அந்த அறிவாகிய ஆன்மாவாகவே நான் இருக்கிறேன் என்றால் நாம் பார்ப்பது, கேட்பது என எல்லாமே அந்த ஆன்மாவைத் தவிர வேறு

எதுவாக இருக்க முடியும்? என்று கேட்பதுதானே சரியாக இருக்கும்.

இந்த வாதம் எல்லோருக்குமே பொருந்தும்.

ஆக, ஆன்மாவைத் தவிர வேறு எதுவும் இல்லை! என்று, இவ்வாறாக உணர்வதை பரந்து, விரிந்த ஆகாயத்திற்கு ஒப்பாக **பகவான் ஸ்ரீசங்கரர்** இங்கு விவரிக்கிறார்.



மாசுக்கள் என்ற அழுக்குகள் எதுவும் இல்லாதது ஆகாயம். மேலும், பூமியில் உள்ள மாசுகள் எதுவும் அந்த ஆகாயத்தைப் பாதிக்காது.

அதுப்போன்று, ஆகாயம் போலவே, ஆன்மாவும் அனைத்திலும் அகன்று, பரந்து, விரிந்து இருப்பது மட்டுமன்றி, நம்மிடமும் இருப்பதினாலே, நம் மனதின் ஆசைகள், எண்ணங்கள் என எதனாலும் அந்த ஆன்மா பாதிக்காது.

எனவே, எங்குதான் ஆகாயம் இல்லை, அதுப்போன்று, எங்குதான் ஆன்மா இல்லை! என்பதை புத்தியளவில் நாம் அறிவது போதாது. அது, நம் உள்ளத்தளவில் உறைந்து நிற்பதற்கு, அந்த ஆன்மாவைப் பற்றி அவசியம் அறிந்துக் கொண்டு, அதன் சொரூபமாகவே எப்போதும் ஒன்றி இருப்பது ஒன்றே, மனம் அமைதியில், அசுத்தமாகாமல் இருப்பதற்கான இன்றியமையாத வழி எனப்படுகின்றது.

அதனால், எப்பொழுதும் பிரகாசமாக எறிந்துக் கொண்டிருக்கின்ற தீபத்தின் திரியானது கரி பிடித்துவிட்டால், அந்த தீபம் பிரகாசம் குன்றி காணப்படும். அந்த நிலையில் அந்த திரியைத் தூண்டும் தூண்டுகோள் எவ்வாறு அவசியமோ, அதுப்போன்று, மற்றவர்களால் ஏற்றி வைக்கப்படுகின்ற எண்ணங்களினால், மனதில் சாதனைகள் தளர்ந்து, மனமும், புத்தியும் வெளியுலகை நோக்கிச் செல்ல முனைகிறதோ? அப்போதைக்கு, அப்போதே அதனைத் தடுத்து, அந்த மனதிற்கு மகத்தான சத்குருவின் உபதேசத்தை உட்செலுத்தி, மீண்டும் தன் சொரூபத்திற்கு திரும்புதல் மிகவும் அவசியம் ஆகிறது.

रूपवर्णादिकं सर्वं विहाय परमार्थवित् ।
परिपूर्णचिदानन्दस्वरूपेणावतिष्ठते ॥ ४०॥

ரூபவர்ணாதிகம் சர்வ விஹாய பரமார்தவித் |
பரிபூர்ணசிதானந்தஸ்வரூபேணாவதிஷ்டதே ||

உள்ளது உணர்ந்தோன் உருவம் வருணம் முதல்
உள்ள மயல்கள் ஒருங்கு ஒழித்து – உள்ளம்
திகழ் பரிபூன்ற சிதானந்தம் தானாத்
திகழ்ந்திடுவன் நாளும் தெளி – **ஸ்ரீ ரமணர்**

(உள்ள பொருளான ஆன்மாவை உணர்ந்தவனாக, தான் காணும் பொருட்களின் உருவம், நிறம் முதலாக பலவிதமான வேற்றுமைகளை முழுவதுமாக அகற்றிவிட்டு, அவைகளின் உள்ளத்தில் பரிபூரணமாய் நிறைந்து ஒளிர்கின்ற ஞானானந்தமே, தன்னுள்ளும் எப்போதும் ஒளிர்கின்றதென்று தெளிவாய்.)

ஒரு பொருளைப் பார்க்கும்போது நமக்கு அதன் உருவம், நிறம் போன்ற தன்மைகள்தான் முதலில் தெரியும். அதேபோல ஓர் ஆளைச் சந்திக்கும்போது நமக்கு அவரது நிறம், உருவம் தவிர நம் மனதளவில் அவருடைய வேறு பல குணங்கள், செய்கைகள் என்று ஞாபகத்திற்கு வரும்.

இதுதான் உலகியல் நியதி.

எப்படி ஒரு பொருளைக் காண்பதைவிட ஓர் ஆளை சந்திக்கும்போது, வெறும் ஜட சம்பந்தமானவைகள் தவிர பல நுண்ணியத் தன்மைகள் புலனாகிறதோ, அதுபோல மேலும் நுண்ணியதான பார்க்கப்பட்டதின் உண்மைத் தன்மை என்று ஒன்று இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும் என்று பலருக்கும் தோன்றுவதில்லை.

அதன்காரணம் என்னவென்றால், எவரும் தனது உண்மைத் தன்மையை அறியாமல் இருப்பதே. நம்மை எப்படிப் பார்க்கிறோமோ அதேபோல மற்றவரையும் பார்க்கும் வழக்கம்தான் நம்மில் ஓங்கியிருக்கிறது.

உருவம், நிறம் போன்ற தன்மைகள் எல்லாம் ஒன்றை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் குணங்கள். பார்த்தவுடன் முதலில் அப்படித் தெரியும். வேற்றுமைகளைப் பார்த்துக் கொண்டே இருப்பவனுக்கு அவை மட்டும்தான் தெரியும்.

எப்படி ஒருவனைப் பார்க்கும்போது அவனுக்கும் நமக்கும் இருக்கும் வேற்றுமைகளைப் பாராட்டாது, நாம் அவனையும் நம்மைப்போல மனிதன் என்ற ஒற்றுமையைப் பார்ப்பது உலகியல் வழக்கப்படி முன்னதைவிட உயர்ந்ததோ, அதேபோல ஆன்மீகத்திலும் நாம் பார்க்கும் பொருளின் வேற்றுமைகளை நீக்கிவிட்டு அவைகளின் உண்மைத் தன்மையை அறிய முயற்சிக்கவேண்டும்.

நாம் காண்பதெல்லாம் எப்போதும் நமக்குச் சரிவரத் தெரிவதில்லை. அவையெல்லாமே நம் நம்பிக்கைக்குத் தகுந்தபடியும், சில சமயம் நம் விருப்பு-வெறுப்புகளுக்கு ஏற்றவாறும் இருப்பதைத்தான் பார்க்கிறோம்.

ஆனாலும் ஒன்றின் தன்மைகளைப் பற்றி அறியும் முன்பாக, நாம் காண்பது முதலில் அங்கு இருக்கிறது என்பது உண்மைதானே? அதைக் காண்பதற்கும் முன்னால் நாம் இருக்கிறோம் என்பதும் உண்மைதானே?

ஆக காணப்படும் ஒன்று எப்படி இருக்கிறதோ, அதேபோல காணும் ஒன்றாகிய நாமும் இருக்கிறோம் என்பதை யார் மறுக்க முடியும்?

அப்படிக் காண்பவன் தன்னை அறிவதுபோல, காணப்படும் அதுவும் தன்னை அறிந்திருக்கலாம் என்று சொல்வதும் சரிதானே?

இப்படி இருப்பதும், அறிவதுமாய் உள்ள அந்த நிலை எவர்க்கும் பொதுவானதே. அந்த நிலையிலேயே நிற்பவனுக்கு எந்தவிதமான வேற்றுமைகளும் தெரியாது. அப்போது அவன் சதாசர்வ காலமும் ஆனந்தமாகவே இருப்பான். அந்த நிலையிலிருந்து வழுவியிருப்பவனுக்கு மட்டுமே வேற்று மைகளும், அதனால் வரும் இன்ப - துன்பங்களும் வரும்.

ज्ञातृज्ञानज्ञेयभेदः परे नात्मनि विद्यते ।
चिदानन्दैकरूपत्वाद्दीप्यते स्वयमेव तत् ॥ ४१॥

ஞாத்ருஞானஞேயபேதஹ பரே நாத்மனி வித்யதே |
சிதானந்தைகரூபத்வாத்திப்யதே ஸ்வயமேவ தத் ||

அறிவான் அறிவோடு அறிபடுவ பேதம்
உறு பரமான்மாவில் உறாதே – அறிவின்
புருவாய் ஒன்றாய் அஃது உறுவதனால் தன்
உருவாலே தான் ஒளிரும் ஓர் – **ஸ்ரீ ரமணர்**

(அறிபவன், அறிவு, அறியப்படுவது என்ற முப்புடிகளான வேற்றுமைகள், இருக்கும் ஒன்றேயான ஆத்மா விற்குப் பொருந்தாது. ஆன்மா அறிவுமயமாய், ஆனந்த வடிவாய், ஒரே பொருளாக இருக்கும் தன்மையதால் தானே தானே ஒளிரும் என்று உணர்ந்துகொள்.)

நாம் ஒன்றைத் தெரிந்து கொண்டிருக்கிறோம் என்றால் தெரிந்துகொண்டுள்ள அந்தப் பொருளையும், நம்மையும் தவிர, நமக்கு அதைப் பற்றியுள்ள அறிவு என்று உலகியலில் மூன்றையும் பிரித்துச் சொல்வது வழக்கம்.

அதாவது அறிவு என்பது நம்மையும் அந்தப் பொருளையும் இணைக்கும் ஓர் உறவு என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆத்மாவைப் பற்றிச் சொல்லும்போதும் அத்தகைய பிரிவுகள் உண்டா? என்ற சந்தேகத்திற்குப்பதில் சொல்வதுப் போல அமைந்திருக்கிறது இந்த ஸ்லோகம்.

இன்பம் - துன்பம், நல்லது - கெட்டது என்பன போன்ற குணங்கள் என்று வந்தால் இருமைகள் வந்துவிடும் என்று முன்பே பார்த்தோம்.

அதைப் போல அறிவு என்ற ஒன்று வந்துவிட்டால் முப்புடிகள் உண்டு என்று இங்கே பார்க்கிறோம். அதனால் ஆன்மாவைப் பற்றிய அறிவு வரும்போதும் இத்தகைய வர்ணனை உண்டா என்ற சந்தேகம் வருவது ஒப்புக்கொள்ளக் கூடியதே.

முப்புடிகளாகிய வேற்றுமைகள் வருவது புறநோக்கு இருக்கும்போது தான். அப்போதுதான் பார்ப்பவன் என்ற ஒரு தனியன் உண்டு. ஆன்மாவைப் பற்றி நாம் குறிப்பிடும்போது அங்கு ஆன்மாவைப் பார்ப்பவன் என்ற ஒரு தனியன் கிடையாது. அப்படியிருந்தால் பார்க்கும் நான், பார்க்கப்படும் ஆன்மாவாகிய நான் என்ற இரு **“நான்”**கள் அல்லவா இருக்கவேண்டும்.

**“நான்”** என்ற நமது உணர்வு எப்போதும் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே உள்ளதால், அது என்றும் ஒன்றானதாகவே இருக்கும். அங்கு இரு **“நான்”**கள்

இல்லாததால் முப்புடிகளான வேற்றுமைகள் ஆன்மாவிற்குப் பொருந்தாது.

ஆனால் ஒருவன் ஆன்மாவைப் பற்றிப் பேசும்போது, அப்படிப் பேசுபவன் "**நான்**" என்று எண்ணுபவன் ஆதலால் ஆன்மா ஒரு பேசப்படும் பொருளாகி வேற்றுமைகள் தெரியும். அந்த வேற்றுமைகள் "**தான்**" என்று உணரப்படும் ஆன்மாவிற்குப் பொருந்தாது.

அந்த ஆன்மா ஒன்றாய் மட்டும் அல்லாது தன்னையே உணர்ந்து கொள்ளும் அறிவுமயமாயும் இருப்பதால்தான், "**நான்**" என்று சாதாரணமாக நம்மை நினைத்துக்கொண்டு செயலாற்றும் போது நமக்கு உள்ள புத்தியும் அந்த அறிவின் பிரதிபலிப்பாய் விருத்தியாகிறது.

ஆன்மாவோ அறிவுமயமாய் மட்டும் இல்லாமல், எப்போதும் ஆனந்தமாயும் உள்ளது. அப்படி அது இருப்பதற்குக் காரணம், அது தன்னில் தானே ஒளிர்வதால் மட்டுமே. அதனால் ஒருவன் தான் காணும் வேற்றுமைகள் அனைத்தையும் களைந்து அந்த ஆன்மாவின் இருப்பிலே தனியனாய் இருந்தால் அறிவதற்கு என்று வேறு எதுவும் இருக்காது.

ஆனந்தம் என்பதும் அவனுக்கு வெளியில் இருந்து வரவேண்டும் என்ற அவசியமும் இருக்காது.

एवमात्मारणौ ध्यानमथने सततं कृते ।
उदितावगतिर्ज्वाला सर्वाज्ञानेन्धनं दहेत् ॥ ४२॥

ஏவமாத்மரநௌ த்யானமதேனே சததம் க்ருதே |
உதிதாவகதிர்ஜ்வாலா சர்வஞானேன்தனம் தஹேத் ||

**ஆன்மாவெனும் அவ்வரணியில் இவ்வித**
**ஆன்மத் தியான அகமதனம் – தான் முயன்று**
**சந்ததம் செய்தலால் சார் ஞானத் தீ மடமை**
**இந்தனம் எல்லாம் எரிக்குமே – ஸ்ரீ ரமணர்**

(உள்முகப்பார்வை கொண்ட ஜீவான்மாவெனும் அரணிக் கட்டையில் இப்படியாக ஆன்மத் தியானம் என்ற உள்முகக் கடைதலை ஒருவன் இடைவிடா முயற்சியோடு எப்போதும் செய்துவர, அதிலிருந்து கிளம்பும் ஞானம் எனும் தீ அறியாமை என்ற விறகுக்கட்டைகளை எல்லாம் ஒன்றுவிடாமல் எரித்துவிடும்.)

ஆன்மா எத்தகையது என்றும் ஆன்மத் தியானம் எத்தகைய பாவனையுடன் செய்யப்பட வேண்டும் என்றும் இதற்குமுன் மேலே படித்த ஸ்லோகங்களில் விளக்க ப்பட்டிருந்தன.

இரண்டு அரணிக் கட்டைகளை ஒன்றின்மேல் ஒன்று வைத்து, இடைவிடாது வெகு வேகமாகக் கடைந்து

அதிலிருந்து வரும் தீப்பொறிகளில் நார்களை வைத்து, யஞ்ய வேள்விகளுக்குத் தேவையான அக்னியை வளர்ப்பார்கள்.

அதைப்போல ஆன்ம சாதகனும் தன் மனமாகிய கருவியைக்கொண்டு, அதனை வெளியுலகில் உலவ விடாது உள்முகமாக்கி, இடைவிடாத முயற்சியினால் ஆன்மாவைப் பற்றிய தியானத்தைப் பழகவேண்டும்.

தொடக்கத்தில் வெளியுலக விஷயங்களை விடுவதிலும், தான் உடலையும், மனத்தையும் கடந்த ஆன்மா என்று பாவிப்பதிலும் தடைகள் பல வரக்கூடும்.

அவையெல்லாமே அவரவருடைய பழைய வாசனைகளினால் வரும் தடங்கல்களே.

அதனால்தான் இடைவிடாது தொடரும் பயிற்சியும், எடுத்துக்கொண்டுள்ள நோக்கத்தில் வைராக்கியமும் அவசியம் ஆகின்றன.

எப்படி அரணிக் கட்டைகளை மிருதுவாக உராசு வதாலும், தொடர்ந்து கடையாமல் விட்டுவிட்டுச் செய்வதாலும் தீப்பொறிகளை உண்டாக்குவதில் பயனிருக்காதோ, அதேபோல ஆன்ம சாதகனின் தொடர் முயற்சியும், மனோபலமும் இல்லாவிட்டால் அவனுக்குத் தேவையான பலன்கள் கிடைக்காது.

மனத்தை அரணிக் கட்டையாகவும், இடைவிடாத ஆன்மத் தியானத்தை கடைவதற்கு உண்டான மற்றொரு கட்டையாகவும், அதனால் வரும் ஆத்மாகார மனோ விருத்தியை கடைவதால் கிளம்பும் தீப்பொறியாகவும் இங்கு உருவகப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆத்மாகார மனோ விருத்தி பரவி கொழுந்துவிட்டு எரியும் ஞானத் தீயை கிளப்பி, இறுதியில் ஆன்மா வேறு தான் வேறு என்ற பாவனையை அழிக்கும்.

இப்படியாக முயற்சியும், பாவனையும் சரிவர அமைந்துவர சாதகனுக்கு அதனால் வரும் ஞானம், தீயானது தன்னைச் சூழ்ந்திருக்கும் கட்டைகளை ஒன்றுவிடாமல் பொசுக்கி சாம்பலாக்கி விடுவதைப்போல, அதுவரை தன்னைப் பற்றி அவன் அறியாதிருந்தது என்று அவன் எண்ணிய நிலையை தவிடுபொடியாக்கி அவனது என்றும் உள்ள உண்மையான நிலையை அனுபவிக்க வைக்கும்.

ஆன்மா இருப்பதும் அல்லாது அறிவுமயமாயும், ஆனந்தமாயும் இருப்பதை அவனுள் காட்டுவதோடு அல்லாமல், அவனது வெளியுலகமும் அதே அறிவோடும், ஆனந்தமாயும் இருப்பதை உணர்த்தும்.

எல்லாம் ஒன்றே என்றால் இருமைகள் எப்படி அமையும்?

अरुणेनेव बोधेन पूर्वं सन्तमसे हृते ।
तत आविर्भवेदात्मा स्वयमेवांशुमानिव ॥ ४३॥

அருணேனேவ போதேன பூர்வ சந்தமசே ஹ்ருதே |
தத் ஆவிர்பவேதாத்மா ஸ்வயமேவாம்ஷுமானிவ ||

அருணனாலே அல்லகலுதல் போல் முன்
மருவு அறிவால் அம்மடமை – இரியவே
பொங்கும் ஆன்மா பரிபூரணமாகவே
பொங்கும் ஆதித்தனைப் போல். – **ஸ்ரீ ரமணர்**

(அருணன் இயக்கும் சூரிய ரதம் புறப்பட்டதும் இருள் தானே அகன்று விடுவது போல அதற்கு முன்பு இருந்த மடமையான அஞ்ஞானம் விலகி, ஒளி வீசும் சூரியனைப்போல பரிபூரணமான ஆன்மா தானாகவே பொங்கி ஒளிரும்.)

யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல அருணோதயம் என்பது விடியற்காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்பாக வரும் வெளிச்சத்தைக் குறிப்பிடுவது. அதை அருணன் சூரியனின் ரதத்தை ஓட்டிக்கொண்டு வருவதாகக் கற்பனையில் கண்டிருக்கின்றனர்.

சூரியன் வருவதற்கு முன்பாகவே அவனது வரவைக் கட்டியம் கூறுவதுபோல வரும் வெளிச்சத்தினால் இரவு முழுதும் கவிந்திருந்த இருள் சிறிது சிறிதாக அகன்றுகொண்டு

இருக்கும். இந்த இயற்கைச் சூழலை உவமையாக எடுத்துக் கொண்டு, சாதகனின் தீவிர சாதனையால் அடையப்பெறும் விருத்தி ஞானத்தால் ஆன்மாவைப் பற்றிய அறியாமை அகலும் நிலையோடு சங்கரர் ஒப்பிடுகிறார்.

முதலில் கிளம்பும் தீப்பொறி அதனைச் சுற்றி இருக்கும் அனைத்தையும் சுட்டு எரிக்க முடியாது. அது சுற்றி இருப்பதைப் பற்றிக் கொண்டு கொழுந்துவிட்டு எரியும் போதுதான் அதற்கு வலிமை கூடும். அதுப்போன்று, இங்கும் விருத்தி ஞானம் கிளம்பியதும் அது சொரூப ஞானமாகி அனுபவத்தில் கொண்டு செல்லுமுன் உள்ள நிலை பற்றி கூறப்பட்டிருக்கிறது.

முன்பே நாம் பார்த்த மாதிரி அறியாமை என்ற ஒரு நிலைக்கு **இருப்பு** என்பது தனியே கிடையாது. ஆன்மாவைப் பற்றிய அறிவு இல்லாமையே அறியாமை.

அப்படி ஆன்மாவை மறைத்துக் கொண்டிருக்கும் நமது வாசனைகளாகிய திரைகள் ஒவ்வொன்றாக அகலும் நிலைதான் இங்கு குறிப்பிடப்படும். அருணோதய நிகழ்ச்சிகள். வாசனைகள் முற்றும் அகலவே, திடீரென்று கண்ணைக் கூசும் அளவு ஒளி மிகுந்த சூரியன் உதிப்பதுபோன்று ஆன்மா தானே ஒளிர்ந்து, அதுவரை இடைவிடாத தியானத்தால் சாதகன் முயன்று அடைந்த விருத்தி ஞானத்தையும் அழித்து, அவன் தானே தானாக இருக்கும் சொரூப ஞானத்தை அளிக்கும்.

அந்த நிலை ஓர் அறிவுபூர்வமான நிலையாக இல்லாது ஓர் அனுபவ நிலையாதலால், அதை அனுபவிப்பவனுக்கு தான் வேறு, தான் காணும் காட்சி வேறு என்று இல்லாத பரிபூரண ஞானம் கிட்டுகிறது.

ராம ராஜ்ஜியத்தில் எவரும் உண்மையைத் தவிர வேறு எதுவும் பேசியதில்லை என்பதால் அங்கிருந்தோருக்கு உண்மை என்றால் என்ன என்றும் தெரியாது என்பதைப் போல, அனைத்தையும் உள்ளடக்கும் ஆன்மாவிலேயே லயித்துள்ளவனுக்கு எல்லாமே ஆன்மாதான்.

அதனால் அனுபவிப்பவன் என்றும் தனியாக ஒருவன் அங்கு கிடையாது. எல்லாம் ஒன்றே, அதுவே அறிவு, அதுவே அன்பு, அதுவே ஆனந்தம் என்பதால், அது மட்டுமே இருக்கிறது என்பதுதான் உண்மை. அதுவே, இப்போதும் எவரும் உள்ள நிலை என்பதும் உண்மை.

அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதைத்தான் ஆன்றோர்கள் கூறுகின்றார்கள் “**இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே**” என்று.

ஆம், உண்மையாக ஆன்மீகம் புரிந்தவர்கள் அனைவரும் எப்போதும் ஞானத் தங்கம்தான்.

आत्मा तु सततं प्राप्तोऽप्यप्राप्तवदविद्यया ।
तन्नाशे प्राप्तवद्भाति स्वकण्ठाभरणं यथा ॥ ४४॥

ஆத்மா து சததம் ப்ராப் தோப்யப்ராப்தவதவித்யயா |
தன்னாஷே ப்ராப்தவத்பாதி ஸ்வகண்டாபரணம் யதா ||

ஆன்மா எப்போதும் அடைந்துளதே ஆனாலும்
தான் மடமையால் அடையாதாய் அமரும் – மால் மடிய எய்தப்
பெற்றார் போல் இலகும் தன் கண்ட அணி
எய்தப் பெற்றார் போலவே – **ஸ்ரீ ரமணர்**

(ஆன்மாவானது எப்போதும் நம்மால் அடையப்பட்டதே ஆனாலும், நமது அஞ்ஞானத்தினால் நாம் அதை அடையவில்லை என்று தோன்றும். தன் கழுத்திலே இருக்கும் நகையொன்று தொலைந்து போய்விட்டதே என்று எண்ணித் தேடுபவன், அது தன் கழுத்திலேயே இருப்பதைக் கண்டதுப் போல, அஞ்ஞானம் அழிந்தவனுக்கு ஆன்மா புதிதாக அடையப்பட்டது போலப் பிரகாசிக்கிறது.)

எண்ணங்களே மனம் என்பார் பகவான் ஸ்ரீ ரமணர்.

மனம் என்று ஒன்று வந்துவிட்டால் அது நம்மைப் படுத்தும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

இருப்பதை இல்லாததாகக் காட்டும், இல்லாததை இருப்பதாகவும் காட்டும். நமக்கு வேண்டியது என்றால், அது நல்லதல்ல என்று எல்லோரும் சொன்னாலும், அதை எப்பாடுபட்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், பெற்றதை வைத்துக்கொண்டு ஆளுமை செலுத்தவும் தோன்றும்.

நமக்கு வேண்டாதது என்றால், அது கிடைப்பது நல்லது என்றாலும், அதுவே நம் வீட்டு வாயிற்கதவைத் தட்டிக் கொண்டு தானே உள்ளே புக நினைத்தாலும், நம் முகத்தை வேறு பக்கம் திருப்பி அது இல்லாதது போல நடிக்கும்.

இன்று ஒன்றைத் தேடி அலையும் மனது, நாளை காரணம் ஏதும் அறியாமலேயே அதை வெறுத்து ஒதுக்கும். இவையாவும் மனத்தின் குணங்கள்.

தன்னிடம் என்ன இருக்கிறது என்பதைக்கூட அறிய முடியாதபடி தடுப்பதும் அந்த மாதிரியான மனத்தின் திருவிளையாடல்களில் ஒன்றுதான். தன்னிடம் ஆயிரமாயிரம் செல்வம் இருக்கலாம். ஆனால் தான் ஓர் ஏழை என்று மனது நினைத்தால் அவன் ஏழைதான்.

இருக்கும் செல்வமெல்லாம் அவன் கண்ணுக்குத் தெரியாது. அதேபோல விலை மதிக்க முடியாத பொக்கிஷம் ஒன்று தன்னிடம் இருக்கிறது என்பதையும் அறிய முடியாது தடுப்பதும் அந்த மனம்தான்.

அதனால் ஒருவன் தான் போட்டுக் கொண்டிருக்கும் நகை காணாது போய் விட்டதே என்று நினைத்தால், அது அவன் மேல் இருந்தும் அது காணாமல் போன நகைதான். அப்போது அவன் எங்கெங்கு சாதாரணமாக நினைத்துக்கூடப் பார்க்கமாட்டோனோ, அங்கு கூட புகுந்து அவன் தவறவிட்டு விட்டதாக நினைத்த நகையைத் தேடி அலைவான். அப்போது அவனுக்கு எல்லாமே போய்விட்டதாகவும் தோன்றும்.

ஆனால் அவன் காதிலோ, கழுத்திலோ அந்த நகையைப் பார்த்த வேறொருவன், அவன் தேடுவதை விசாரித்து, அவன் தேடும் நகை அவனிடமே இருக்கிறது என்றும் சொல்லி, அவனது கையைக் கொண்டோ அல்லது ஒரு கண்ணாடி கொண்டோ அவன் தேடுவதைக் காட்டுவான் என்றால், அப்போது அவன் மனம் மகிழ்ச்சியில் கூத்தாடும்.

நகையோ தொலையவில்லை ஆனால் அது தொலைந்து விட்டதே என்று வருத்தப்படுவதும் கிடைத்து விட்டதாக மகிழ்வதுமான இந்த உவமையை எடுத்துக்கொண்டு, ஆன்மாவைத் தேடி அலையும் சாதகனின் மனநிலையை பகவான் **ஸ்ரீசங்கரர்** இங்கு விவரிக்கிறார்.

நகை தொலைந்ததும், திரும்பக் கிடைத்ததுமான இரண்டு நிகழ்வுகளும் உண்மையல்ல. ஆனாலும் அவை நடந்தது போல நினைப்பது மனத்தின் லீலைகள். இல்லையென்றால் முதலில் துக்கமும், பின்பு களிப்பதும்

நடக்குமா? ஆக இறுதியில் தொலைந்தது மனத்தின் காட்சிகளே.

சாதகனின் பயிற்சிகளும், முயற்சிகளும் அதே போல இல்லாத நினைப்புகளை அகற்றுவதற்கே என்று இங்கு காட்டுகிறார். ஒருவன் பலவிதமாகத் தோன்றும் உலகக் காட்சிகளைப் பார்த்து அவைகளில் உள்ள வேற்றுமைகளை எண்ணி, எல்லாவற்றிற்கும் மூல காரணமாக இருக்கும் ஆன்மா ஒன்றினைத் தேடி அலைகிறான்.

எப்போது எல்லாவற்றையும் உள்ளடக்கும் ஒன்று என்று ஆத்மாவைப் பற்றி நினைத்து அந்த ஆன்ம பாவனையில் மூழ்கிறானோ, அப்படி நினைப்பவனும் மூழ்குபவனும் அந்த ஆன்மா இல்லாது வேறு எதுவாக இருக்க முடியும்? என்று முதலில் அவனுக்குத் தோன்றுவதில்லை. அதனால் அவன் வந்த வழியே திரும்பிச் செல்லுமாறு அவனுக்கு வழி காட்டப்படுகிறது.

அதனாலேயே எல்லாவற்றிலும் காணப்படுகின்ற வேற்றுமைகளைக் களைவதே அவன் செய்ய வேண்டிய முதல் வேலை என்று அறிவுறுத்தப்படுகிறது.

அதை அவன் செய்யவில்லை என்றால், மறுபடியும் அவன் வேற்றுமைகளையே பார்த்துக் கொண்டிருப்பான் என்றும் கூறப்படுகிறது. அதன் பின்பே, அவனையும்

அடக்கும் ஒரே பொருளான ஆன்மாவைத் தியானிக்கச் சொல்லி அவனுக்கு வழி காட்டப்படுகிறது.

இப்படியாக அவனது மனத்தின் வாசனைகள் ஒவ்வொன்றாகப் போவதற்கு உதவப்படுகிறது. அப்படி வாசனைகள் அகல, அகல அவனுக்குத் தான் தானாக இருக்கும் உண்மையான நிலை காட்டப்படுகிறது. உள்ள நிலை எவருக்கும் பொதுவானதே என்றுணர்ந்த அவன் தான் முன்பும் அப்படியே இருந்ததையும் அறிகிறான்.

நகை தொலையவில்லை, அது இருந்த இடத்திலேயே இருக்கிறது என்பதை அறிந்தவன் போல, சாதகனும் தான் ஆன்மாவன்றி வேறு எதுவாகவும் இருப்பதில்லை என்று உணர்கிறான்.

அவன் ஆன்மாகவாகவே இருந்துகொண்டு, ஆன்மாவைத் தேடி முயன்று ஆன்மாவை அடைந்து விட்டதாக எண்ணுகிறான்.

உண்மையில் ஆன்மா அப்படியேதான் இருக்கிறது. மாற்றங்கள் எல்லாம் தான் ஆன்மா இல்லை என்று அஞ்ஞானத்தினால் எண்ணிய இவனுக்குத்தான். அஞ்ஞானம் அகல ஞானம் புதிதாக வந்திருக்கிறது என்று சொல்வதை விட, தான் எப்போதும் அப்படியே இருக்கிறோம் என்றுணர்ந்ததால், தானாக வரவழைத்த அஞ்ஞானம் தொலைந்தது என்று சொல்வதுதானே பொருத்தமாக இருக்கிறது?

स्थाणौ पुरुषवद्भ्रान्त्या कृता ब्रह्मणि जीवता ।
जीवस्य तात्त्विके रूपे तस्मिन्दृष्टे निवर्तते ॥ ४५॥

ஸ்தாநௌ புருஷவத்ப்ரான்த்யா க்ருதா ஜீவதா |
ஜீவஸ்ய தாத்விகே ரூபே தச்மின்த்ருஷ்டே நிர்வததே ||

பிரமத்தில் சீவன் பிராந்தியால் கட்டை
புருடன்போல் கற்பிதன் பொய்யாம் – உருவத்தின்
தத்துவம் யாது என்று உணரின் அவ்வுருவம்
வத்து ஆகாது மதி – **ஸ்ரீ ரமணர்**

(இருட்டில் இருக்கும் மரக்கட்டை ஒன்று மனிதனாகத் தோன்றுவது போல, மனப்பிராந்தியால் பிரம்மத்தில் ஜீவன் கற்பிக்கப்படுகிறான். கற்பனையில் உருவான இந்தப் பொய்யாகிய உருவத்தின் உண்மை எதுவெனத் தான் உணரும்போது அந்தக் கற்பனையுருவம் பொருளற்றது என்று அறிவாய்.)

அந்தி சாய்ந்ததும் இருள் பரவத் தொடங்கும்போது, நிலவு மற்றும் விளக்குகள் தரும் ஒளி தவிர, பொதுவாக எங்குமே இருள் கவிந்திருக்கும்.

அத்தகைய சூழலில் ஒரு மரக்கட்டையைப் பார்த்துவிட்டு ஏதோ ஓர் ஆள் நிற்பதுபோலத் தோன்றினால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

நம் மன நிலைக்குத் தகுந்தவாறு அந்த ஆள் திருடனோ வேறு யாரோ?

ஒரு மனிதன் நிற்கும்போது எப்படி இருப்பான் என்று நமக்குத் தெரிந்த உருவகத்தை நாம் அந்த மரக்கட்டை மேல் ஏற்றிப் பார்க்கும் நம் பார்வைதான் அதுவே தவிர, உண்மையில் அங்கு ஒருவன் இல்லை, இருப்பது மரக்கட்டைதான்.

இந்த உவமையை எடுத்துக்கொண்டு சங்கரர் இருக்கும் பிரம்மத்தின் மேல் இல்லாத ஜீவனை ஏற்றிப் பார்ப்பதை விளக்குகிறார்.

இருளில் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு போனால் அது யார் அல்லது என்ன என்று தெரிந்துவிடும்.

இருள்தான் நமது அறியாமை. அங்கு ஆன்ம அறிவு என்னும் விளக்கை ஏற்றினால் நாம் காண்பதன் உண்மை என்ன என்று தெரிந்துவிடும்.

எவரும் தாம் இருப்பதை அறிந்துள்ளனர். அதேபோல தன் விழிப்பு நிலையில் தம் புலன்கள் மூலம் உலகம் இருப்பதையும் அறிகின்றனர்.

இரண்டும் தனக்கு உண்மையாகத் தோன்றுவதால், மனிதர்களில் பலரும் அதற்கு மேல் தனது அனுபவங்களைப் பற்றி மேலும் சிந்திப்பதில்லை.

வெகு சிலரே தாம் காண்பது, அனுபவிப்பது என்பது எல்லாம் தனது கனவு மற்றும் உறக்க நிலைகளில் அதேபோல ஏன் தோன்றுவதில்லை என்பதைப் பற்றி யோசிக்கின்றனர்.

மற்றவரெல்லாம் காணப்படுவதுதான் உண்மை என்றும், தானும் உலகமும் இருப்பதால் அவைகள்தான் அந்த உண்மையின் அங்கங்கள் என்று நிச்சயித்து விடுகின்றனர்.

அதற்கும்மேல் சிந்திக்கும் சிலருக்குத்தான் சீவராசிகளின் படைப்பில் காணப்படும் வேற்றுமைகள் உண்மையல்ல, அந்த வேற்றுமைகளைக் கடந்து அனைத்து சீவராசிகளுக்கும் அடிப்படையான மூலகாரணம் ஒன்று உண்டு என்று தெளிகின்றனர். தங்கள் வளர்ப்புச் சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் அந்த மூலத்தை வெவ்வேறு வடிவில் குறிப்பிடுகின்றனர்.

அனைத்தையும் கடந்தும் அதே சமயம் அனைத்தின் உள்ளும் இருப்பதால் அதைக் கடவுள் என்று சொல்லி சிலர் அதை வணங்குகின்றனர். அனைவரிடமும் இருப்பது ஒன்றே, அதுவே பலப்பலவாகக் காணப்படுகிறது என்று சிலர் அந்த இருப்பை ஆன்மா என்று சொல்கின்றனர்.

ஒன்றாய் இருப்பது பரமாத்மா என்றும், தனித்தனியாய் காணப்படுவது ஜீவாத்மா என்றும் கூறி, தனி என்று கூறினாலும் அந்தப் பரம்பொருள் இருப்பதால்தான் ஜீவன் இருக்கிறது என்று விளக்குகின்றனர்.

இந்த விளக்கங்களைச் சரியாக அறிந்திடாதவர்கள், காணப்படும் ஜீவன்தான் இருக்கும் ஒன்றே என்று கட்டையில் காணப்படும் மனிதனைப்போல ஜீவனை பரத்தின் மேல் ஏற்றிக் காண்கின்றனர்.

இப்படி அவர்கள் தவறாக அறிந்துள்ளதைப் புரியும் காலம் அவர்களுக்கு வரும்போது, தான் கண்டது கற்பனையே என்றும், உண்மையில் உள்ளது பரம்பொருளான ஆத்மா ஒன்றே என்றும் அறிகின்றனர்.



तत्त्वस्वरूपानुभवादुत्पन्नं ज्ञानमंजसा ।
अहं ममेति चाज्ञानं बाधते दिग्भ्रमादिवत् ॥ ४६॥

தத்வரூபானுபவாதுத்பன்னம் ஞானமஞ்சஸா |
அஹம் மமேதி சாஞானம் பாததே திக் ப்ரமாதிவத் ||

தத்துவ சொரூப அனுபூதியால் தானுதி
உத்தம ஞானம் உடனே அம் – மித்தையாம்
நான் எனது அஞ்ஞானம் நசிப்பிக்கும் திக்பிரமை
பானு உதயத்து எனவே பார். – **ஸ்ரீ ரமணர்**

(இருட்டில் திசைகளை அறியமுடியாத பிரமை சூரியன் உதித்தவுடன் நீங்குவதுபோல, இல்லாத ஒன்றான 'நான்' என்ற அகங்காரத்தையும் 'எனது' என்ற மமகாரத்தையும், உள்ள ஒன்றேயான பிரும்ம சொரூப அனுபவத்தில் தனக்குத் தானே உதிக்கும் ஞானம் அழித்துவிடும்.)

ஒரு புதிய இடத்திற்குச் சென்றால், எவருக்கும் சாதாரணமாகவே எந்தப் பக்கம் எந்தத் திசை இருக்கிறது என்பதில் குழப்பம் ஏற்படும். அதுவும் அப்போது இருட்டு என்றால் குழப்பம் வருவதற்கு வேறு காரணம் கேட்கவே வேண்டாம்.

அப்போது வேறொருவர் சொல்லி நமக்குத் திசைகளைப் புரியவைக்கலாம். ஆனால் சூரியன் உதித்து விட்டால், அது

கிழக்குத் திசை என்பதால், வேறு எவருடைய துணையும் இல்லாமல் குழப்பம் தனக்குத் தானே தீர்ந்துவிடும்.

அதைப்போல தன் சொரூப ஞானம் வந்ததும் சீவனுக்கு தன்னையும் உலகையும் பற்றிய குழப்பம் நீங்கிவிடும். ஜீவன் எனத் தன்னைப் பாவிக்கும் ஒருவன், இப்பரந்த உலகத்தில் தான் மற்ற எல்லோரையும் போல இன்னுமொருவன் என்றே நினைக்கிறான்.

"**நான் என்று ஒருவன்**" என்ற அந்த எண்ணத்தில் இருக்கும் அவனுக்கு, "**தனக்கு**" என்று சில பொருட்களும் சில மனிதர்களும் இருப்பதாகவும் எண்ணங்கள் வளர்கின்றன. இந்த எண்ணம் அவனுக்கு எப்படி வந்தது என்று கேட்டால் அவனுக்கே அது புரியாது.

அவனைப் போலவே மற்றவர்களும் "**தான் - தனது**" என்று இருப்பதால் அவனுக்கு தனக்கு உள்ள அந்த எண்ணத்தைப் பற்றிய சந்தேகமும் வருவதில்லை. இதற்கெல்லாம் காரணம் அவனது உண்மை நிலையை அவன் அறியாமல் இருப்பதே. இந்த அறியாமைதான் அவனது இருள். வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் அவனுக்கு தனது நிலையைப் பற்றி சிந்திக்க வேண்டிய கட்டாயம் வரும்போது, அவனை அதிலிருந்து மீட்பதற்குத்தேவையான சூழ்நிலைகளும் அமைகின்றன. அப்போது அவனுக்குப் பொதுவாக இரண்டு வழிகளே இருக்கின்றன என்று பகவான் **ஸ்ரீரமணர்** கூறுவார்.

ஒன்று அவன் தன்னை யார் என்று கேட்டு தன் உண்மை சொரூபம் தெரிந்துகொள்வதற்கு ஞான விசாரம் செய்து தெளிவடைவது. மற்றொன்று தேர்ந்த குருவிடம் தனக்கு வழி காட்டுமாறு வேண்டி அவரைத் தஞ்சம் அடைவது. அப்படி அடைக்கலம் வேண்டிச் சென்றவனின் மனத்தை குரு நிர்மூலம் ஆக்கி அவனது உண்மை சொரூபத்தை அவனுக்குக் காட்டுவார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் அதுப்போலச்சொல்லி, நரேந்திரர் எப்படி தனது அகங்காரத்தை பூதாகாரமாக்கி பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் தனதாக்கிக் கொண்டார் என்றும், நாக மகாஷயர் எப்படி தனது அகங்காரத்தைச் சுருக்கி தன்னை ஒன்றும் இல்லாமல் செய்துகொண்டார் என்றும் சொல்வார்.

முன்னது விசாரம் செய்து பிரபஞ்சத்தில் உள்ள எல்லாமே தான் என்று உணர்வது, பின்னது குருவே எல்லாம் என்று அடிபணிந்து தன்னை ஒன்றும் இல்லாமல் ஆக்கிக்கொள்வது. இந்த இரண்டு வழிகளில் தனக்கு ஒத்துக்கொள்ளும் வழி ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் முன்னேறி தனது உண்மை சொரூபத்தை அறிபவனுக்கு, உதிக்கும் சூரியன் முன் இருள் ஓடிப்போய் திசைகள் தானே விளங்குவது போல, அதுவரை அவனை ஆட்கொண்டிருந்த அறியாமை தானே விலகும். எல்லாம் அப்போது ஒன்றே என்று தெரியவருவதால் “**நான் - எனக்கு**” என்ற எண்ணங்களும் அங்கு நிலைப்பதில்லை.

सम्यग्विज्ञानवान् योगी स्वात्मन्येवाखिलं जगत् ।
एकं च सर्वमात्मानमीक्षते ज्ञानचक्षुषा ॥ ४७॥

சம்யாக்விஞ்ஞானவான் யோகீ ஸ்வாத்மன்யேவாகிலம் ஜகத் |
ஏகம் ச சர்வமாத்மானமீக்ஷதே ஞானசக்ஷுஷா ||

நன்று தனை அறி விஞ்ஞானியாம் யோகியும்
ஒன்றும் எலாம் தன்னில் உறுவதை – ஒன்றான
தான் எல்லாமாய் உளதைத் தன் ஞானக் கண்ணினால் தான்
காண்பான் என்றே தரி. – **ஸ்ரீ ரமணர்**

(தன்னை நன்கு அறிந்த விஞ்ஞானியான யோகி தன்னுடன் ஒன்றி இணைந்து உலகில் காணப்படும் எல்லாம் தன்னில் இருப்பதையும், ஒன்றேயான ஆன்மாவாகும் தானே எல்லாமாய் இருப்பதையும் தனது ஞானக் கண்ணினால் காண்பான் என்பதை உறுதியாக அறிந்துகொள்.)

இங்கு விஞ்ஞானி என்ற சொல் அனுபவத்தில் காண்பவன் என்ற பொருளைக் குறிக்கிறது.

எப்போது ஒருவன் ஆன்ம விசாரம் செய்து அனுபவத்தில் தன்னைத்தான் நன்கு உணர்கிறானோ அப்போதே அவன் யோகியாகிறான்.

அவனுக்குத் தான் காணும் உலகில் உள்ள எல்லாமுமே, தான் காண்பதால், தன்னுள்ளே இருப்பதாகவும் தெரிகிறது.

தன்னிருப்பைச் சார்ந்தே அனைத்தும் காணப்படுவதால் காணப்படும் அனைத்தும் தன்னைப் போலவே ஆன்ம மயமாய் இருப்பதாகவும் உணர்கிறான்.

இதுதான் யோகம் என்பதன் பொருளாகும்.

சாதாரணமாக ஒருவன் காண்பது என்றால் அங்கு காண்பவன் - காணப்படுவது - காட்சி என்ற முப்புடிகள் வருகின்றன.

அது ஒருவனது ஊனக் கண்ணால் காணும் காட்சி.

ஒரு யோகியானவன் எல்லாம் ஒன்றே என்று காண்பது அவனது ஞானக்கண் காட்சி.

ஒரு யோகிக்கு அந்த சாதாரண ஊனக்கண் காட்சி கிடையாதா என்று கேட்டால் உண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் அப்படி அவன் பார்க்கும்போது பார்க்கப்படும் பொருளும் ஆன்மாவாகவே அவனுக்குத் தெரியும்.

அதாவது முற்றும் உணர்ந்த யோகிக்கும் உலகம் உண்டு, ஆனால் அது ஆன்ம வடிவாய்த் தெரியும். அதனாலேயே அவனைப் பொருத்தவரை எல்லோருமே ஞானம் அடைந்தவர்கள்தான், சிலர் அதை அறிந்தவர்கள், வேறு சிலர் அதை அறியாதவர்கள்.

சாதாரணப் பார்வையில் எல்லோரும் வேற்றுமையைக் காண்கின்றனர். ஆனால், யோகியோ அனைத்திலும் ஒற்றுமையைக் காண்கிறான்.

இந்த இரண்டையும் சம்ஸ்க்ருதத்தில் முறையே "**பேத திருஷ்டி**" என்றும் "**அபேத திருஷ்டி**" என்றும் கூறுவார்கள்.

இங்கு இந்த சித்தர் பாடலை நினைவு கூறுவது நல்லது:

"கண்ணும் தானே, காணும் பொருளும் தானே, பேணும் அறமும் தானே, பேசா அனுபூதியும் தானே, எல்லாம் தானே, யாதும் அல்லாதானே".

அதாவது எதுவும் இல்லாதான் யாதுமாகி நிற்கின்றான்.

आत्मैवेदं जगत्सर्वमात्मनोऽन्यन्न विद्यते ।
मृदो यद्वद्घटादीनि स्वात्मानं सर्वमीक्षते ॥ ४८॥

**ஆத்மைவேதம் ஜகத்சர்வ மாத்மனோன்யன்ன வித்யதே |**
**ம்ருதோ யத்வத்கடாதீனி ஸ்வாத்மானம் சர்வமீக்ஷதே ||**

**ஆன்மாவே இவ்வுலகு எல்லாமாகும் அற்பமும்**
**ஆன்மாவுக்கு அந்நியமாய் இல்லை – ஆன்மாவாய்க்**
**காண்பன் எல்லாமும் கடாதிகள் மண்ணின் வேறாய்க்**
**காண்பதும் உண்டோ கழறு. – ஸ்ரீ ரமணர்**

(காணப்படுகிற இவ்வுலகில் இருப்பது எல்லாம் ஆன்மாவே ஆகும். எந்தச் சிறிய பொருளை எடுத்துக்கொண்டாலும் அது ஆன்மாவுக்கு அந்நியமானதாக இல்லை. எல்லாவற்றையும் ஆன்மாவாகக் காண்பவன் சட்டி, பானை முதலானவைகளை அவைகள் தயாரிக்கப்படும் மண்ணிலிருந்து வேறானதாகக் காணமுடியுமோ, சொல்!)

இருப்பது ஒன்றே என்று சொன்னபின், எல்லாமும் ஆன்மாவே என்று சொல்வதில் உள்ள “**எல்லாம்**” என்றால் என்ன அர்த்தம்?

அது ஆன்மாவை உணராதவனுக்கு விளக்குவதற்காகச் சொல்லப்படும் அலங்காரச் சொல்தான்.

காணப்படும் சிறு துரும்பு கூட ஆன்மா வடிவம்தான்.

அது தன்னை அறிந்ததாக இருந்தால் அதுவும் நம்மைப் போல ஆன்மாதான். தன்னை அறியாததாக அது இருந்தாலோ, அதன் இருப்பதைத் தெரிந்துகொள்வதும் ஆன்மாவாகிய ஒருவனால்தான் என்பதால், அதன் இருப்பே ஆன்மாவால்தான் என்றும் சொல்லப்படுகிறது.

ஆக இவ்வுலகில் காணப்படுகிற எல்லாமும் ஆன்மாவே என்று ஆகிறது. எப்பொருள் ஆனாலும் அதன் மெய்ப்பொருள் காணவேண்டும். இல்லையென்றால் நாம் காண்பதின் நாமத்தையும் ரூபத்தையும் பார்த்து அவைகள் ஒவ்வொரு பொருளுக்கும் வேறாக இருப்பதால் அந்த வேற்றுமைகளைப் பார்த்து ரசித்துக்கொண்டே இருப்போம்.

ஒரு கட்டத்தில் அவைகளே உண்மை என்று நினைத்து, அதில் நமது மனமும் லயித்து, அதற்குண்டான உணர்வுகளையும் உள்ளத்தே தோற்றுவிக்கும்.

அதனால்தான் நாம் ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் திரைப்படத்தின் நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு நமக்கு சிரிப்பும் அழுகையும் வருவதோடு, கல்மனம் படைத்த கதாபாத்திரங்களிடம் நமக்கு கோபமோ, வெறுப்போ வருகிறது.

அவையெல்லாம் **நாம - ரூபங்களை** உண்மையென நம்புவதால் வரும் விளைவுகள்தான். இதேபோல உலகின் நிகழ்வுகளையும் உண்மையென நம்புவோரிடம் அதேபோன்ற சலனங்கள் அல்லாது வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

ஆனால் அனைத்தையும் ஆன்மாவாகக் காண்போன், அதாவது எதனையும் ஆன்மாவுக்கு அன்னியமாகக் காணாதவன், எந்தப் பொருளைப் பார்த்தாலும் அதன் மெய்ப்பொருளை மட்டுமே கவனிப்பான்.

சட்டி, பானை என்று விதவிதமான பெயரும் உருவமும் கொண்ட பொருட்களை அவன் பார்க்கும்போது அவை அனைத்துக்கும் மூல காரணமான மண் ஒன்றுதான் என்பது அவனுக்குத் தெரியும்.

அதேபோல விதவிதமான ஆபரணங்களைப் பார்க்கும் அவனுக்கு அவை அனைத்துக்கும் மதிப்பு அளிக்கும் பொன் ஒன்றுதான் என அவன் பார்வையில் பதியும்.

அந்தப் பார்வைதான் உள்ள பொருளை உள்ளதாகப் பார்க்கும் பார்வை. அதனால் தன்னை உணர்ந்து அனுபவிக்கும் ஞானிக்கு ஆன்மா ஒன்றைத் தவிர வேறு எதுவும் புலப்படாது. இருக்கும் அந்த ஒன்றே பலவாகத் தெரிவதாகவும் அவன் தெளிவான்.

जीवन्मुक्तस्तु तद्विद्वान्पूर्वोपाधिगुणांस्त्यजेत् ।
सच्चिदानन्दरूपत्वात् भवेद्भ्रमरकीटवत् ॥ ४९॥

ஜீவன்முக்தஸ்துதத்வித்வான்பூர்வாபாதிகுணான்ச்த்யஜேத் |
சச்சிதானந்தரூபத்வாத் பவேத்ப்ரமரகீடவத் ||

சீவன் முக்தன் வித்வான் தேரு அதன் முன் தன்னை
மேவும் உபாதி குணம் விட்டு உடனே – மேவுவான்
தன்னுரு சத்சித்தின்பை தான்கீடம் வண்டின் உருத்
தன்னையுறல் போலத் தரி. – **ஸ்ரீ ரமணர்**

(தனது உண்மை சொரூபத்தை உணர்ந்து ஜீவன்முக்தனான சிறப்பை அடைந்தவன், தனக்கு முன்பு இருந்த உடல், மனம், புத்தி போன்ற உபாதிகளையும், சத்வ - ரஜோ - தமோ குணங்களையும் நீக்கிவிட்டுத் தன் சொரூபமான சத் - சித் - ஆனந்த நிலையை அடைகிறான். வண்டினால் கொட்டப்பட்ட புழு வண்டாகவே ஆவதுபோல உனது உண்மை நிலையில் நீ இருப்பாய்.)

தூலமான நம் உடலும், நுண்ணியதான நம் மனம், புத்தி போன்றவைகளும் நமது பாவனைகளாலும், எண்ணங்களாலும், செயல்களாலும் நாமே வரவழைத்துக் கொண்டதுதான். சக்கர வியூகத்தில் ஒருவன் நுழைவதும், அதே கவனத்துடன் அந்தப் பாதையிலேயே அவனால் திரும்பி வெளியே வருவதும் இயலும். நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகின்றாய்

என்பதால் "**பிரம்மத்தை நினைத்து தியானிப்பவன் பிரம்மமாகவே ஆகின்றான்**" என்றாகிறது.

வண்டு தன்னைக் கொட்டுமே என்று வண்டைப் பற்றியே நினைத்துக்கொண்டு இருப்பதால், வண்டு கொட்டுவதால் மட்டும் அன்றி புழு தன் சிந்தனையினாலும் வண்டாகவே ஆகின்றது என்பது இங்கு சொல்லப்பட்டுள்ள உவமை.

அதேப்போல, ஒருவன் தன் மனம், புத்தி இவைகளின் துணைகொண்டு மற்றவர்களிடமிருந்து தன்னைத் தனித்தே காட்டும் தன் உடலை ஒரு பொருட்டாக நினைக்காது, சதாசர்வ காலமும் ஆன்மாவைப் பற்றியே சிந்தித்து, அதையே தியானித்து, அந்தப் பாவனையில் விடாப்பிடியாய் இருந்தால், வண்டால் பலமுறை கொட்டப்பட்ட புழு அதையே நினைத்து தானும் வண்டாகவே ஆவதுபோல அவனும் தன் ஆன்ம சொரூபத்தை உணர்வான்.

அந்த நிலையை ஒருவன் அடைவது என்பது அவனது வாழ்நாளின் இறுதியிலோ அல்லது இனி வரப்போகும் பிறவியிலோ என்பது அவசியமில்லை. இந்தப் பிறவியிலேயே அவனது உயிர் இருக்கும்போதே அது முடியும் என்பதைக் கோடிட்டுக்காட்ட அவனை "**ஜீவன் முக்தன்**" ஆகிறான் என்று குறிப்பிடுகிறார்.

ஸ்ரீரமணர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், பெரியவா ஸ்ரீ சந்திரசேகர சுவாமிகள் என்ற சங்கராச்சாரியார் போன்றவர்கள் நாம் நன்கு அறிந்த ஜீவன் முக்தர்கள் ஆவார்கள். ஒருவன் படிக்கும்போது அதை ஞாபகத்தில் இருத்திக்கொள்ள திரும்பத் திரும்பப் படிப்பதும், படித்ததைச் சொல்லிப் பார்ப்பதும், படித்ததைச் சிந்தித்துப் பார்ப்பதும் போன்ற உலகியல் முறைகள்தான் ஆன்மீகச் சாதனையிலும் முன்னேறுவதற்குமான வழிகள்.

முன்னது வெளிப்பார்வை கொண்டு செய்யப்படுவது, பின்னது உள்முகப் பார்வைக்கொண்டு பின்பற்றப்படுவது. முதலில் அதிரடியாகக் காணப்படும் உடலைப் பொருட் படுத்தாது இருப்பது. ஸ்ரீரமணர் போன்ற மகரிஷிகள் அறுவை சிகிச்சைக்கு முன் “மயக்க மருந்து அவசியமில்லை, இந்த உடல் கட்டை போன்றதே, அதைத் தாராளமாகக் கத்தி கொண்டு கீறலாம்” என்று சொல்லலாம், எல்லா சாதகர்களுக்கும் அது முடியுமா என்று கேட்பது நியாயம்தான். அது எல்லோருக்கும் சாத்தியமில்லை. அடாது மழை பெய்தாலும் விடாது தன் கடமையைச் செய்துமுடிக்கிறான் அல்லவா, அதுபோன்ற மனநிலை சாதகனுக்கு முதலில் இருந்தால் அது போதும். பழகப் பழக தனக்கு உடல் இருப்பதும் தெரியாமல் போகும்.

அறுவை சிகிச்சை முடிந்ததும், **“தங்களுக்கு வலியே இல்லையா?”** என்று கேட்ட தொண்டருக்கு **“அதற்கென்ன, வலி இல்லாமல் போகுமா, அது பாட்டுக்கு இருக்கிறது”** என்றாராம் ஸ்ரீரமணர். அத்தகைய பொருட்படுத்தாத மனோநிலை

வேண்டும். அது மனத்தால் உடலைக் கட்டுப்படுத்துவது. அதேப்போல எது வேண்டுமோ அதைப்பற்றி மட்டும் நினைப்பது என்று புத்தியால் அலைபாயும் மனத்தையும், ஆன்மாவைப் பற்றிய ஒரே ஒரு சிந்தனையால் மட்டுமே கூர்மையான புத்தியையும் கட்டுப்படுத்துவது என்பது படிப்படியாகச் செய்யப்பட வேண்டியது.

எவ்வளவுக்கு எவ்வளவு நமது சிந்தனைகள் ஆழமாகப் பாய்ந்து நமக்குள்ளே வாசனைகளைத் தோற்றுவித்துள்ளதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவைகளை விடுவிக்க நமது பயிற்சிகளும், முயற்சிகளும் தேவைப்படும். சக்கர வியூகத்தில் முதல் நிலையிலேயே இருப்பவர்கள் கூடிய விரைவில் வெளியே வரமுடியும். மிகவும் ஆழ்ந்து உள்ளே போனவர்களுக்கு அதற்கு வேண்டிய காலம் தேவைப்படும்.

எதிலும் போலவே இதிலும் விடாமுயற்சி வேண்டும். இறுதியில் தன்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் உபாதிகள் அகல, நல்லது - கெட்டது - தேர்ந்தது போன்ற விதவிதமாக எதனையும் அலசிக் காணும் குணங்களும் நம்மை விட்டொழிய, ஆன்மாவைப் பற்றிய சிந்தனை ஒன்றினால் மட்டுமே ஆன்மாவாகவே அமர்ந்திருக்கும் நமது இயல்பான நிலை நமக்கு வந்தடையும்.

ஆனாலும் அது நமக்கு புதியதாக வந்துள்ள நிலை அல்ல என்பதை அதை அனுபவிக்கும் ஆன்றோர்கள் நமக்குக் காட்டி அருளுகின்றனர்.

तीर्त्वा मोहार्णवं हत्वा रागद्वेषादिराक्षसान् ।
योगी शान्तिसमायुक्त आत्मारामो विराजते ॥ ५०॥

தீர்த்வா மோஹார்ணவம் ஹத்வா ராகத்வேஷாதிராக்ஷசான் |
யோகீ ஷாந்திசமாயுக்த ஆத்மாராமோ விராஜதே ||

மோகக் கடல் கடந்து மூளாசை கோபமுதல்
ஆகும் அரக்கர் அறக்கொன்று – யோகி
அமைதியொடு கூடி ஆன்மாவின் இன்பத்து
அமைந்து ஒளிர்வன் என்றே அறி – **ஸ்ரீ ரமணர்**

(மோகம் எனும் கடலைத் தாண்டிவந்து மூண்டு எழுகின்ற ஆசை, கோபம் முதலான அரக்கர்களை முற்றிலுமாக அழித்து, யோகியானவன் அமைதியுடன் ஆன்மாவிடத்தில் ஒன்றி ஆனந்தத்தை அடைந்தவனாகி ஒளி வீசுபவனாய் இருப்பான் என்பதைத் தெரிந்துக்கொள்.)

இந்த ஸ்லோகத்தில் "**ஆத்மா ராம**:" என்ற சொற்றொடர் 'ஆன்மாவில் திளைத்து இன்புற்று' என்ற பொருளில் வருகிறது.

ஆனாலும் "**ராம**:" என்று வந்திருப்பதால் இந்த ஸ்லோகம் "**அத்யாத்ம ராமாயண**" முறையில் இராமாயண நிகழ்வுகளையே சுருக்கமாகக் குறிப்பிடுவதாக பெரியோர்களால் கூறப்படுவதும் உண்டு.



இராமன் சீதையை இழந்து தவிப்பது போல ஜீவனும் சாந்தியை இழந்து தவிக்கிறான் என்ற உருவகம் இங்கு காணப்படுகிறது. அதன்படி **விருப்பு - வெறுப்பு** எனும் வாசனைகளாகிய அரக்கர்களினால் மோகம் எனும் கடலின் நடுவில் சாந்தி எனும் சீதை சிறை வைக்கப்படுகிறாள். அப்போது தொலைந்து போன சீதையின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்த **ஆஞ்சநேயர்** போல, **குரு** வடிவில் ஒருவர் **அமைதியை** அடைவதற்கு உரிய வழியைக் காட்டுகிறார்.

அந்த வழிகாட்டுதலின் படி, ஜீவனாகிய இராமன் தியானப் பயிற்சிகள் என்ற பாலத்தின் துணையினால் மோகம் எனும் அஞ்ஞானக் கடலைத் தாண்டி வந்து, சிறை வைக்கப்பட்டுள்ள அமைதி எனும் சீதையை ஆன்ம விசாரம்

எனும் ராம பாணத்தினால் வாசனைகளாம் அரக்கர்களிடமிருந்து தப்பிக்க வைத்து, அமைதியுடன் தன் இயல்பான இடமான அயோத்தியை அடைந்து ஆனந்தமாய் இருந்தான் என்று பொருள் கூறுவர்.

முந்தைய மற்றும் இந்த ஸ்லோகம் உள்பட இன்னும் இரண்டு ஸ்லோகங்களிலும் ஜீவன் முக்தனின் லக்ஷணம் விவரமாக விளக்கப்படுகிறது. வெளியுலக விஷயங்களில் ஆசைகளை வளர்த்துக்கொண்டு, அதனால் பெருகி வரும் வினைக்கடலில் மூழ்கியுள்ள ஜீவன், தன் மன அமைதியை இழக்கிறான். ஆனாலும் அவன் என்றோ செய்த நல்வினைப் பயனாய், அவனுக்கு வழிகாட்ட ஒரு குரு அமைகிறார்.

அவர் சொல்படி அவன் முயற்சிகள் எடுக்க, அவனது மனம் ஆன்மாவுடன் ஒன்றுபடுவதே யோகம் எனப்படுகிறது.

அப்படிப் பண்பட்ட மனம் வெறும் மனோலயத்தோடு நிற்காது, ஆன்ம விசாரத்தினால் “**மனம் என ஒரு பொருளில்லை**” என்று ரமணர் சொல்வதுப் போல மனோ நாசமாகி, ஆன்மானுபவத்திலே திளைத்து ஆனந்தமயமாய் இருப்பதே முக்தி எனப்படுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுப்போல, ஆத்மானந்தமாய் இருப்பவன் ஆன்மாவின் தன்மையால் எப்போதும் ஒளி வீசிக்கொண்டு பிரகாசமாய் இருப்பான்.

बाह्यानित्यसुखासक्तिं हित्वात्मसुखनिर्वृतः ।
घटस्थदीपवत्स्वस्थः स्वान्तरेव प्रकाशते ॥ ५१॥

பாஹ்யாநித்யசுகாசகிதம் ஹித்வாத்மசுகநிர்வ்ருதஹ |
கடஸ்ததீபவத்ஸ்வஸ்தம் ஸ்வாந்தரேவ பிரகாஷதே ||

அனித்த வெளி இன்பிச்சை அற்றானாய் ஆன்மா
தன் இன்பில் திருத்தி தனையுற்று – அனிசமும்
தன்னொளியால் குடந்தன்னுள் விளக்கெனத்
தன்னுளே தான் ஒளிர்வன்தான் – **ஸ்ரீ ரமணர்**

(தனக்கு வெளியே உள்ள பொருட்களினால் வரும் நிலையற்ற இன்பங்களில் ஆசை இல்லாதவனாய், ஆன்மானுபவத்தினால் வரும் இன்பம் ஒன்றிலேயே திருப்தி அடைபவனாய் இருந்து, குடத்துக்குள் இருக்கும் விளக்கைப் போல, அவன் எப்போதும் தனக்குள்ளே தானாய்ப் பிரகாசிப்பவன்.)

மனிதர்கள் அனுபவிக்கும் சுகங்களிலேயே உயர்வானது அரச போகம் என்னும் மனித ஆனந்தம் என்றும், அதையும் விட உயர்ந்ததாக கந்தர்வ ஆனந்தம், அதற்கும் மேலாக தேவ ஆனந்தம் என்றும் படிப்படியாக வந்து இறுதியில் பிரும்ம ஆனந்தம் என்று சொல்லப்படுகிறது.

ஆனாலும் இந்தப் பிரம்மானந்தமோ பரமானந்தக் கடலின் ஒரு துளிக்கு மட்டுமே சமம் என்றும், ஆத்மனை உணர்ந்தவனின் ஆனந்தம் அந்தக் கடலுக்கே சமம் என்றும், அதனை எல்லாவற்றிலும் உயர்ந்ததாக உபநிஷத்துக்கள் சொல்கின்றன.

இதுதான் மனிதனின் வெளிப்பார்வையால் அடையப்பெறும் உலக விஷய இன்பத்திற்கும், உள்முகப் பார்வையால் அடையப்பெறும் ஆன்ம ஞானத்தால் வரும் ஆனந்தத்திற்கும் உள்ள மாபெரும் வித்தியாசம்.

அப்படி வெளியுலக விஷயங்களில் மூழ்குவது என்பது ஒரு திரைப்படம் பார்ப்பது போலத்தான். திரையில் காட்சிகள் நகர்ந்து கொண்டே இருக்கும்வரைதான் ஒருவனுக்கு அதில் ஈடுபாடு உண்டு. அதனால் இன்பமும் வரும், துன்பமும் வரும்.

அதேப்போல ஒரு விஷயம் இல்லாவிட்டால் இன்னொரு விஷயத்தைப் பிடித்துக்கொண்டு மனிதன் தன் வெளிப் பார்வையை வளர்த்துக்கொண்டே போவான். அதனால் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்பதையே வாழ்க்கையின் போக்கு என்று சொல்லி, அதை அனுபவிப்பதே வாழ்வின் இலக்கு என்றுதான் பலரும் நினைத்து வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்.

பார்க்கப்படுவதில் வெண்திரை இல்லாவிட்டால், மற்றெதுவும் இருந்தும், அங்கு காணப்பட்ட காட்சி இல்லை என்ற உண்மையை உணர்ந்தவனே ஞானி.

வெறும் காட்சியை மட்டும் கண்டு களித்துக் கொண்டிருப்பவன் அஞ்ஞானி. அப்படிப்பட்ட ஞானியின் ஆனந்தத்தை பார்ப்பவர்கள் உணரமுடியாது.

ஏனென்றால் அது குடத்துக்குள் இடப்பட்ட விளக்கு போல ஆடாது, அசையாது ஒளி விட்டுக்கொண்டு இருக்கும்.

அது பார்ப்பவர்களுக்குத் தெரியாது. அவனைத் தெரிந்துக் கொண்டு இருப்பவர்களுக்கு அது புரியலாம்.

அவனால் அந்த ஆனந்த நிலையைப் பற்றி ஓரளவுக்கு கூறமுடிந்தாலும், அதன் முழு பரிமாணத்தையும் விளக்க முடியாது. அவனது வாழ்க்கை முறை, செய்கைகள், மற்றும் பேச்சுக்கள் மூலமே அதை மற்றவர்கள் புரிந்துக் கொள்ள முடியும்.

उपाधिस्थोऽपि तद्धर्मैरलिप्तो व्योमवन्मुनिः ।
सर्वविन्मूढवत्तिष्ठेदसक्तो वायुवच्चरेत् ॥ ५२॥

உபாதிஸ்தோபி தத்தர்மைரலிப்தோ வ்யோமவன்முனிஹி |
சர்வவின்மூடவதிஷ்டேதஸ்கதோ வாயுவச்சரேத் ||

உபாதி உற்றானேனும் ஒட்டா விண்போல அவ்
வுபாதி தர்மங்களோடு ஒட்டான் – உபாதியிலான்
முற்றறிவன் ஏனும் முனி மூடன் என வாயுபோல்
பற்றற்றுச் சஞ்சரிப்பான் – **ஸ்ரீ ரமணர்**

(ஞானி உபாதிகளுடன் இருந்தாலும், ஆகாயம் எதனாலும் பாதிக்கப்படாது இருப்பது போல, ஞானியும் உபாதியின் தன்மைகளோடு ஒட்டாமல் இருப்பான். அவன் உபாதிகள் இல்லாதிருந்தால், முற்றும் உணர்ந்த முனிவனாயினும் மூடனைப் போலவும், காற்றைப் போலவும் எதனிலும் பற்றில்லாமல் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருப்பான்.)

ஆத்ம ஞானம் அடைந்தவன் எப்போதும் ஆனந்தமாய் இருப்பான் என்றும், அது பொருட்களின் சேர்க்கையால் ஒருவனுக்கு சாதாரணமாக வரும் இன்பம் என்பதிலும் வேறானது என்றும் முன்பு நாம் பார்த்தோம்.

மற்றவர்களைப் போலவே ஞானியும் இந்த உலக வாழ்க்கையில் இயல்பாக ஈடுபடுவதைப் பார்க்கிறோமே, அப்படியென்றால், அவனுக்கும் மனம், புத்தி போன்றவைகள் எவருக்கும் இருப்பது போலத்தானா? என்ற சந்தேகத்திற்கு இந்த ஸ்லோகத்தில் பதில் கொடுக்கிறார் ஸ்ரீசங்கரர்.

இவ்வுலகில் பிறந்துவிட்டான் என்பதால் ஞானிக்கும் மற்றவர்களைப் போலவே உடல் இருக்கிறது என்பது தவிர, மற்றவர்களைப் போலவே மனமும், புத்தியும் இயங்குகிறது.

ஆனாலும் மற்றவர்கள் மனமும் புத்தியுமே தான் என்று தன்னைப் பற்றிக் கருதுவது போல ஞானி தன்னை அவ்வாறு குறுக்கிக் கொள்ளமாட்டான்.

மேலும் அவனுடைய உடல் என்பதுகூட மற்றவர்கள் பார்வைக்கு இருந்தாலும், அவனைப் பொருத்தவரை அவன் தன்னை உடல் என்றும் கருதமாட்டான்.

அதனால் அவனது உடலுக்கு ஏதும் நேர்ந்தாலும் ஏதோ வேறு ஒரு பொருளுக்கு அது நடப்பது போலவே அவனுக்கு உணர்வு இருக்கும். அதைப்போலவே அவனது மனமும், புத்தியும் இயங்கும்.

குழந்தைகள் எப்படி வெகுளித்தனமாகப் பேசி எல்லோரையும் மகிழ்விக்கின்றனரோ, அதே போல ஞானியின்

பேச்சும் செயல்களும் இருந்தாலும், அவனது பேச்சு மற்றும் செய்கைகளில் ஒரு முதிர்ச்சியும் இருக்கும்.

ஆனாலும் குழந்தைகள் எப்படி தனது செயல்களின் விளைவுகளால் பாதிக்கப்படுவதில்லையோ, அதே போன்ற மனநிலைதான் ஞானிக்கும் இருக்கும். அவனுக்கு இருப்பதெல்லாம் தனது இருப்பு என்ற உணர்வு ஒன்று மட்டுமே. மற்றதையெல்லாம் அவன் ஒரு சாட்சியாக மட்டுமே எவருக்கோ நடப்பது போலப் பார்த்துக் கொண்டிருப்பான்.

முன்பு வேறொரு ஸ்லோகத்தில் நாம் பார்த்தது போல, எப்படி எல்லாவற்றிலும் ஆகாயம் பரவி விரிந்து இருந்தாலும் அதில் இருக்கும் பொருட்களின் குணத்தால் பாதிக்கப்படுவது இல்லையோ, அதேபோல ஞானி உபாதிகளுடன் இருந்தாலும் அவைகளின் குணத் தன்மைகளால் அவன் சிறிதும் பாதிக்கப்படுவதில்லை.

பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாயத்திலே, மற்ற நான்கு பூதங்களான மண், நீர், நெருப்பு, வாயு இருந்தாலும் எப்படி ஆகாயம் பாதிக்கப்படுவது இல்லையோ, அதேபோல ஞானியும் உபாதிகள் இருந்தாலும் அவைகளால் பாதிக்கப்படுவது இல்லை.

அவனுக்கு உபாதிகள் இருப்பதுபோல நமக்குத் தெரிகிறது என்பதுதான் வெளியே புலப்படாத ஓர் உண்மை.

உபாதிகள் இன்று ஞானிக்கு இருப்பதுபோலத் தோன்றினாலும் அவை நாளை தினமும் இருக்கும் என்றும் சொல்ல முடியாது.

ஒரேயடியாக ஞானிக்கு எப்போதுமே உபாதிகள் இல்லாமலும் போகலாம். அப்படி இருந்தால் அவன் காற்று எங்கும் பரவி, விரிந்து இருப்பதுபோல எந்த இடத்திலும் நில்லாமல் அலைந்து கொண்டிருப்பான்.

அதனையே, “**சித்தம் போக்கு, சிவம் போக்கு**” என்று கூறுவார்கள். அதாவது அந்த நிமிடத்தில் அவர்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதன்படி நடப்பார்கள் என்பதுதான் அதில் நாம் காணவேண்டியது.

குண விசேஷங்கள் ஏதும் அவனுக்கு அப்போது வெளிப்படையாகவும் இல்லாதபடியால் அவனது செய்கையும் புரியாத புதிராக இருக்கும். கிட்டத்தட்ட அவனது செய்கைகள் எல்லாம் ஒரு பைத்தியக்காரனுடையது போலவே இருக்கும்.

ஆனானப்பட்ட சிவபெருமானையே “**பித்தா**” என்று அழைக்கும்போது ஞானிகள் மட்டும் வேறு எவ்வாறு இருக்கலாம் என்று எதிர்பார்க்க முடியும்?

ஞானிக்கு பிராரப்தம் எனச் சொல்லப்படும் ஊழ்வினை மீதம் உள்ளதால் மட்டுமே அவன் உடல் எடுத்து

வந்திருக்கிறான் என்று அவனைப் பார்ப்பவர்க்குக் காரணம் சொல்லப்படும்.

அதனால், நம்மைப் பொருத்தவரை, நாம் ஞானியைப் பார்க்கும் கொடுப்பினை நமக்கு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளலாம்.

ஆனால் ஞானியைப் பொருத்தவரை பிராரப்தம் மட்டும் அல்ல, சஞ்சிதம், ஆகாமியம் என்று சொல்லப்படும் மூவினையும் அவனை ஒட்டாது.

இதனையே, பகவான் ஸ்ரீரமணர் “மூன்று மனைவியுள்ள ஒருவன் இறந்துவிட்டால், பர்த்தா இழந்த மூவருமே விதவைகள் ஆவதுப்போன்று, கர்த்தா போன ஞானிக்கு மூவினையும் கழன்று விடும்” என்பார்.

उपाधिविलयाद्विष्णौ निर्विशेषं विशेन्मुनिः ।
जले जलं वियद्व्योम्नि तेजस्तेजसि वा यथा ॥ ५३॥

உபாதிவிலயாத்விஷ்ணௌ நிர்விஷேஷம் விஷோன்முனிஹி |
ஜலே ஜலம் வியத்வ்யோமின் தேஜஸ்தேஜஸி வா யதா ||

உபாதி நாசத்தால் உறுவான் முனிவன்
உபாதியில் விஷ்ணுவின் உள்ளே – அபேதமே
தோயத்தில் தோயமும் தூவிண்ணிலே விண்ணும்
தீயில் தீயும் போலத் தேர் – **ஸ்ரீ ரமணர்**

(நீரில் நீரும், தூய்மையான ஆகாயத்தில் ஆகாயமும், தீயில் தீயும் கலப்பது போல, தூலமாகிய உடல் நீங்கும்போது, மீதமுள்ள நுண்ணியதான மனம், புத்தி இவைகளும் நீங்கி ஞானியானவன் உபாதியற்ற, எங்கும் நிறைந்த பிரம்மத்தில் கலந்து இரண்டற்ற நிலையை அடைவான்.)

முந்தைய ஸ்லோகங்களில் விவரிக்கப்பட்ட ஒரு ஜீவன்முக்தன் விதேக முக்தன் ஆகும்போது நடப்பது பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு சாதகன் ஆன்ம ஞானம் பெற்று ஜீவன்முக்தன் ஆகும்போது, பரமாத்மாவிலிருந்து அவனை அதுவரை பிரித்து அறியக் காரணமாயிருந்த அவனுடைய அவித்தையான காரண சரீரம் நாசமடைகிறது.

அவனுக்கு இவ்வுலகில் இருக்கும் பிராரப்தம் எனும் ஊழ் இருக்கும் வரை, மற்றவர்களைப் பொருத்தவரை தூலமாகிய அவனது உடலும், நுண்ணியதான அவனது மனமும், புத்தியும் எல்லோருக்கும் இருப்பது போலவே இயங்குகிறது.

ஆனால் அவனது உடல் மரிக்கும்போது (விதேகம் அடையும்போது) அந்தத் தூலம் மட்டுமன்றி, நுண்ணிய சரீரங்களும் நாசமடைகின்றனஎன்று நமது சாத்திரங்கள் கூறுகின்றன. ஆக அவித்தையான அஞ்ஞானம் அழிவதுதான் முக்கியமே தவிர, மற்ற சரீரங்கள் இருப்பதும் இல்லாததும் ஒரு பொருட்டல்ல.

அப்படி ஞானம் அடைந்தவர்கள் உலகில் சஞ்சரித்து வருவது, மற்றவர்கள் ஞானம் பெறுவதற்கு கிடைத்துள்ள ஒரு நல்ல வாய்ப்பே. அப்படி விதேக முக்தியின் போது நடப்பதை இங்கு மூன்று உவமைகளைக் கூறி விளக்குகிறார்.

ஒரு குடத்தில் நீர் இருக்கிறது, அதை ஒரு குவளையில் மொண்டு எடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது குடத்து நீரும், குவளை நீரும் அவை இருக்கும் இடத்தால் வேறு வேறாக குறிப்பிடப்படுகின்றன.

அந்த இரண்டையும் ஒன்றாகக் கலந்தால் அவை இரண்டையும் எப்படி வித்தியாசப்படுத்த முடியும்?

அதேப்போல ஒரு காலி குடத்திலும் ஆகாயம் இருக்கிறது, வெளியேயும் ஆகாயம் இருக்கிறது. அப்போது குடத்தின் உள்ளே வெளியே என்று ஆகாயத்தைப் பிரித்துச் சொல்ல முடியும். குடத்தை உடைத்து விட்டால் உள்ளே இருந்த ஆகாயம் வெளியே கலந்துவிட்டது என்றா சொல்வது?

அது போன்றே எரியும் அக்னிப் பிழம்பிலிருந்து ஒரு கனலை எடுத்தால் அவை இரண்டையும் வெவ்வேறாகக் குறிப்பிடுவோம். மறுபடியும் அந்தக்கனலை எடுத்த இடத்திலேயே போட்டுவிட்டால் அவை இரண்டையும் எப்படி வித்தியாசப் படுத்திக் கூற முடியும்?

அப்படியாக பரம்பொருளையும், சீவனையும் பிரித்து வைத்த உபாதிகள் நீங்கியதும், சீவன் எங்கும் பரவி விரிந்துள்ள பரமனிடம் கலந்து ஒன்றாகிவிடுகிறான் என்று சொல்லப்படுகிறது. இதையும் நாம் யோசித்துப் பார்த்தோமானால், உண்மை வேறாக இருப்பது நமக்கு விளங்கும். ஆக குடம் இருப்பதால் ஆகாயம் பிளவுபட்டது போலத் தோன்றுவது நமது பிரமையே.



குடத்துக்குள் இருந்த ஆகாயம்தான், குடம் இருந்த போதும் இல்லாத போதும் எப்போதும் அங்கேயே இருந்திருக்கிறது.

ஆகாயம் அப்படி பிளவுபடாது இருப்பது போல, பரம்பொருள் என்றும் சீவன் என்றும் வெவ்வேறாகத் தோன்றுவதும் இடையில் வந்த உபாதிகளால் வந்துள்ள ஒரு பிரமையே.

அதனாலேயே உபாதிகள் நீங்கியதும் சீவன் தான் பரம்பொருள் அன்றி வேறில்லை என்பதை உணர்வதே முக்தி, அல்லது அதுவரை அவனைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்த பிரமையிலிருந்து விடுதலை, எனப்படுகிறது.

அது உயிர் உள்ளபோதே நடந்தால் அவன் ‘**ஜீவன் முக்தன்**’ எனப்படுகிறான்.

அப்படியும் அவனது முன்வினைப் பயனால் ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம உடல்கள் இயங்கிக் கொண்டிருந்தால், அவனது உயிர் பிரியும்போது அவைகளும் மறைகின்றன.

அப்போது தனியே இருந்தது போலக் காணப்பட்ட சீவன் எல்லா உடல்களையும் இழந்ததால், பரம்பொருளில் ஒன்றாகி இழந்தது போல இருந்த நிலையிலிருந்து மீள்கிறான். அதனாலேயே அதனை யோகம் என்றும் சொல்கின்றனர்.

यल्लाभान्नापरो लाभो यत्सुखान्नापरं सुखम् ।
यज्ज्ञानान्नापरं ज्ञानं तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ५४॥

யல்லாபான்னாபரோ லாபோ யத்சுகான்னாபரம் சுகம் |
யஜ்ஞானான்னாபரம் ஞானம் தத்ப்ரஹ்மேத்யவதாரயேத் ||

எவ்வடைவில் பிறிதேதும் அடைதற்கின்றோ
எவ்வன்பினில் பிறிது இன்பு இன்றோ – எவ்வறிவு
தன்னில் பிரிதறிவுதான் இன்றாமோ அது
தன்னைப் பிரமமெனச் சார் – **ஸ்ரீ ரமணர்**

(எதை அடைந்தபின் வேறு எதையும் அடைய வேண்டியது இல்லையோ, எந்த இன்பத்தை விட வேறு உயர்ந்த இன்பம் இல்லையோ, எந்த அறிவைக் காட்டிலும் சிறந்தது எனப்படும் வேறு உயர்ந்த அறிவு இல்லையோ, அந்தப் பொருள்தான் பிரம்மம் என்று உறுதியுடன் அடைவாய்.)

இதற்கு முந்தைய ஸ்லோகங்களில் ஜீவன் முக்தனின் லக்ஷணங்கள் விவரிக்கப்பட்டன. இனி வரும் ஸ்லோகங்களில் பிரம்ம சொரூபத்தின் லக்ஷணங்களும், அதனால் வரும் ஆனந்த நிலையும் விளக்கப்படும். முன்பு வேறொரு சமயத்தில் நாம் பார்த்தது போல, இங்கும் நேர்மறையாய் இல்லாது எதிர்மறையில் விளக்கங்கள் வருகின்றன.

அதற்குக்காரணம், நம் வாழ்க்கையில் சாதாரணமாக நமக்கு வரும் அனுபவங்களே. தினப்படி நடக்கும் நமது செயல்களைக்கூர்ந்து கவனித்தோமானால், அதுப்புரியும்.

நாம் எப்போதுமே இருப்பதை வைத்துக்கொண்டு மகிழ்வுடன் இருப்பதில்லை. அதற்கும் மேல் ஏதாவது கிடைத்தால், அதனால் மேலும் இன்பம் பெறலாமோ என்றபடி தான் நமது செயல்கள் அமைகின்றன.

அதனால் நமக்கு இறுதி நிலை என்ற ஒன்றை விளக்கும் போது, அது ஒன்றுதான் இறுதி, அதற்கு மேல் பெறுவதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லித்தானே முடிக்க முடியும். அதனாலேயே இங்கு சொல்லப்பட்டிருக்கும் எல்லாமே அப்படி எதிர்மறை விளக்கங்கள் கொண்டு சொல்லப் பட்டிருக்கின்றன.

“**பழகிப் போனால் எல்லாம் புளிக்கும்**” என்ற சொல் வழக்கு ஒன்று உண்டு. அதன்படி எது நம்மிடம் இருக்கிறதோ அதை நாம் மிகவும் பொருட்படுத்துவது இல்லை என்றாகிறது.

உலகியல் நியதிப்படி எதை எடுத்துக்கொண்டாலும் நிலைமை அப்படித்தான் ஆகிவிடுகிறது இன்று ஒன்று கிடைத்து விட்டால், நாளை அதையும் விட சிறப்பானது எது என்றுதான் நாம் தேடுகிறோம், அல்லது உருவாக்க முயற்சிக்கிறோம். அதனால் எதையும் அதைவிடச் சிறந்தது

ஒன்று இருக்க வேண்டும் என்ற மனநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். அப்படி இருந்தும் மிகவும் சிறப்பான ஒன்று நம்மிடம் சதா சர்வ காலமும் இருப்பதை அறியாமல் இருப்பதுவும் நமது தலையாய குணங்களில் ஒன்றே.

அதனால் எவராவது நம்மிடம் இருக்கும் சிறப்பானதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதையும் விட சிறப்பானது ஒன்று இருக்கலாமோ என்ற சந்தேகம் நமக்கு வரத்தான் செய்யும்.

ஒருவனின் வெளியுலகப் பார்வையில் தென்படும் எல்லாமே இந்த நியதியால்தான் கட்டுப்பட்டு இருக்கிறது. மனிதர்களில் பலருக்குமே ஒன்று கிடைத்து விட்டதால் வரும் மகிழ்ச்சியை, அது கிடைக்கப் போகிறது என்ற எண்ணமே கூட தந்துவிடும்.

அதாவது தூலத்தை விட அதன் தொடர்பான நுண்ணிய அறிவே நாம் வலைபோட்டுத் தேடும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்றுதான் அதைப் புரிந்துக்கொள்ள வேண்டும் முதலில் வாழ்வதற்கு உண்டான பொருட்களையும், அவைகளைப் பெற்றுத் தரும் செல்வத்தையும், பின்பு அவை மேலும் கிடைப்பதற்கான வழிமுறைகளையும் தேடுவோம்.

அவை எல்லாமே கிடைத்ததும் அவைகளைப் பாதுகாக்கும் அறிவையும் தேடுவோம்.

இப்படியாக தூலத்திலிருந்து நுண்ணிய பொருட்களில் கவனம் சென்று கொண்டிருப்பதே நமது வாழ்க்கைமுறை என்றாகிவிட்டது. இறுதியில் எதுவும் பெறக்கூடிய அறிவினைத் தேடுவோம்.

அத்தகைய அறிவிலும் சிறந்த அறிவு எது என்பதும் நாம் தேடிக்கொண்டிருக்கும் நமது பழக்கங்களில் ஒன்றுதான். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாது உலகியல் பொருட்களும், இன்பங்களும்தான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று பலரும் அத்துடன் நின்று விடுகின்றனர்.

அப்படி இல்லாத சிலருக்கு அவர்களின் அறிவைப் பற்றிய தேடல் தீவிரமாகும் போதுதான் ஞான வேட்கை தொடங்குகிறது.

அந்த நிலைக்கு வந்துள்ள ஒருவனுக்கு ஆன்மா பற்றிச் சொல்லி, அதை வெளியே தேட முடியாது, உண்முகப் பார்வையால் மட்டுமே அறியமுடியும் என்று சொல்லி அதன் தன்மைகளைப் பற்றி குரு விளக்கும் போது அதன் மகிமையை இவ்வாறு உணர்த்துகிறார்.

நீ எப்போதும் ஒன்றைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறாய். அது உன்னிடமே உள்ளது. அதைத் தேடி நீ அதை அடைந்துவிட்டால், அதனிலும் சிறப்பானது என்று எதுவும் கிடையாது.

அத்தகைய உன்னதமான ஒன்று உனக்குக் கிடைத்துவிட்டால், இனி நீ வெளியே தேடி அலையும் வேலையே உனக்கு இல்லை.

நீ அப்படி அலைந்ததன் நோக்கமே அதனால் உனக்கு கிடைக்கும் இன்பமே, இதுவரை நீ பெற்றதெல்லாம் சிறிது இன்பத்தைக் கொடுத்து அப்புறம் துன்பத்தைக் கொடுத்தது, அல்லது அந்த இன்பமே காலப்போக்கில் இல்லாது போயிற்று.

ஆனால் நீ தேடிக்கொண்டிருக்கும் இது மட்டும் உனக்குக் கிடைத்து விட்டால் உனக்கு எப்போதும் ஆனந்தமே கிட்டும். அதனால் உனக்கு சலிப்பு ஏற்படாது, அதற்கும் மேலான ஆனந்தம் தரும் பொருள் என்று உலகில் வேறு எதுவுமே கிடையாது என்றெல்லாம் கூறி சத்குரு வழி காட்டுதலைத் தொடங்குவார்.

அவருடைய வழிகாட்டுதல் படி செல்லும் ஒருவன் “இறுதியில் எதை அடைந்தால் அது ஆனந்தம் மட்டுமன்றி, அதுவே அறிவின் ஊற்றாய்த் திகழ்ந்து, அதற்கும் மேலே பெறுவதற்கு ஒன்றுமில்லை என்று காட்டுமோ அதனை அடைவான். அதுவே பிரம்மம், அதை நீ உறுதியாக அடைவாய்” என்று சத்குருவாக பகவான் ஸ்ரீ சங்கரர் இங்கு கூறுகிறார்.

यद्दृष्ट्वा नापरं दृश्यं यद्भूत्वा न पुनर्भवः ।
यज्ज्ञात्वा नापरं ज्ञेयं तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ५५॥

யத்த்ருஷ்ட்வா நாபரம் த்ருஷ்யம் யத்பூத்வா ந புனர்பவஹ |
யஜ்ஞாத்வா நாபரம் ஞேயம் தத்ப்ரஹ்மேத்யவதாரயேத் ||

எதுகாணக் காண்டற்கு எதுவுமே இன்றோ
எதுவான பின் சன்மமின்றோ – எதுவறிந்த
பின் அறியத்தக்க பிறிதோர் பொருள் இன்றோ
அன்னதுதான் பிரமமாம். – **ஸ்ரீ ரமணர்**

(எதைத் தனது உண்மையான உருவமாகக் கண்டவனுக்கு அதன் பின் காண்பதற்கு என்று வேறு எதுவுமே இல்லையோ, எந்த உருவமாகவே தான் ஆகிவிட்டால் அதன் பின் பிறவி எனும் சம்சார பந்தம் ஒருவனுக்கு இல்லையோ, எதைத் தெரிந்துகொண்டால் அதற்கும் மேல் தெரிவதற்கு என்று ஒரு பொருளும் இல்லையோ, அதுதான் பிரம்மம் என்பது.)

மலையுச்சில் உள்ள ஊற்றிலிருந்து பெருகி வரும் நீர், அது ஓடி வரும் வழியில் சேரும் மற்ற நீரோடைகளுடன் கலந்து ஓர் ஆறாகப் பெருகி, இறுதியில் கடலோடு கலக்கிறது.



அதன் பின் அந்த நீருக்கு எப்படி தனியாக ஓர் அடையாளம் கிடையாதோ, அதே போன்று ஆத்ம சாதகன் இறுதியில் ஆத்ம சாட்சாத்காரம் அடைந்தபின் அவனுக்கு இருப்பது எல்லாமே இருக்கும் ஒன்றேயான ஆன்மாதான்.

அவன் பார்ப்பதெல்லாம் அந்த ஆன்மக் கடலின் அம்சங்கள் தான். சரி, வேறு ஏதேனும் இருக்கிறதா என்று எதையாவது கேட்டு அறியலாம் என்றால், அங்கு வேறு என்ற ஒன்று இருந்தால் தானே கேட்கவோ, அறியவோ முடியும்?

அதுவும் முடியாது என்றால் தன் மனம், புத்தி இவைகள்மூலம் கற்பனை செய்து எதையாவது உருவாக்கலாம் என்றால், அங்கு அத்தகைய உபாதிகள் இருந்தால்தானே எதுவும் செய்ய முடியும்?

அந்த நிலை அடைந்தவன் இருக்கும் நிலைதான் பிரம்மம் என்று சொல்லப்படுகிறது.

இதுதான் முடிவில் அடையப்போவது என்றால் அதை ஏன் இப்போதே நாம் அடைந்துவிட்டதாக பாவனை செய்துகொள்ளக் கூடாது என்ற எண்ணத்தில்தான், சாதகனை "**ஆன்மா ஒன்றே இருப்பது**" என்ற பாவனையில் இருக்கச் சொல்லி, அங்கு கேட்பதற்கு ஒன்றுமில்லை, அனுபவித்துப் பார்ப்பதற்குத்தான் இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்களோ?

எதைப்பற்றியும் கேள்வி கேட்கும் மனோ பாவம் உலகியலுக்குத் தேவையாக இருக்கலாம். ஏனென்றால் உலகம் என்று வந்துவிட்டாலே "**நான்** - **நீ**" யும், பகுத்தறிதலும் வந்து விடுகிறதே! அதற்குக் கேள்விகள் தேவைப்படுகின்றன.

ஏற்றத்தாழ்வுகள் உள்ள இந்த உலகிலும் தராதரம் பார்த்துத்தான் கேள்விகளும் கேட்க முடிகிறது. ஏனென்றால் அங்கு பதிலும் கிடைக்கலாம், அடி உதையும் கிடைக்கலாம் அல்லவா?

அது தவிர பாரமார்த்திகமாகவே பார்த்தாலும், முடிவில் அடைவது என்றும் ஒன்றில்லை, அது ஒன்றுதான் எப்போதும் இருப்பது என்றும், அதற்குத் தொடக்கம் என்று எதுவும்

கிடையாது என்பதையும் அனுபவிப்பவர்தானே சாதகனுக்கு வழி காட்டும் சத்குரு.

அவர் சொல்வதற்கு மேல் ஒன்றுமில்லை என்று நம்பும் சாதகனுக்கு கூடிய விரைவில் எல்லாம் தெரியவரும்.

ஆனால் இந்த நேரான, எளிமையான வழி தவறி பலப்பல தத்துவங்களையும், அவை தரும் புத்தகங்களையும் அறிந்த கற்றோருக்கு அவையனைத்தையும் நீக்குவது என்பதுவும் இன்னுமொரு தடையை விலக்குவதாக அமைகிறது.

அதனாலேயே பகவான் ஸ்ரீரமணர் கூறுவார்:

"**கற்றும் அடங்காரில் கல்லாதாரே உய்ந்தார்**". அதன்படி கேள்விகள் கேட்கும்போதும் ஒரு தன்னடக்கம் வேண்டும் என்றாகிறது.

இல்லையேல் கேள்விகள் கேட்பவர் தனக்குத் தெரிந்ததை வெளியே காட்டிக்கொள்ளும் வகையில் அமைந்து விடும்.

நாம் காணும்போது பல வகையான பொருட்களும், அவைகளின் குணங்களும் தெரிவதால் நமது நிலைக்கு ஏற்ப அத்தகைய பொருட்களோடு ஓர் உறவை ஏற்படுத்திக்கொண்டு

அதனால் இன்பமோ, துன்பமோ அடைவதுதான் உலகில் உள்ள எவரும் வாழும் முறை.

ஆனால் மகிழ்ச்சியோடு இருப்பதுதான் எவருக்கும் விருப்பமானது என்பதை நன்கு உணர்ந்த சாதகன், குரு காட்டிய வழியில் சென்று எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பதைத் தன்னுள் உணர்ந்தபின் அதற்கு மேல் தெரிவதற்கு ஒன்றுமில்லை என்பதில் தெளிவு பெறுகிறான்.

அது மட்டும் அல்லாது, அறியாதிருந்தேன் என்று இருந்த தனது முந்தைய நிலையிலும் இப்போது இருப்பது போல தான் எப்போதும் அப்படியே இருந்ததையும் உணர்கிறான்.

அதற்கும் மேல் தான் அடைவதற்கு வேறு என்று ஒன்றுமில்லை என்று தெளிந்து, அந்த நிலையிலிருந்து சிறிதும் வழுவாது நிற்பவனை பிரம்மத்தை உணர்ந்த ஞானி என்பார்கள்.

அதற்கும் மேல் ஒன்றுமில்லை என்பதால் அவன் மீண்டும் பிறந்து உழல மேலும் பிறவிகள் கிடையாது என்பதும் உறுதி.

तिर्यगूर्ध्वमधः पूर्णं सच्चिदानन्दमद्वयम् ।
अनन्तं नित्यमेकं यत्तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ५६॥

திர்யகூர்த்வம்தஹ பூர்ண சச்சிதானந்தமத்வயம் |
அனந்தம் நித்யமேகம் யத்தத்ப்ரஹ்மேத்யவதாரயேத் ||

எதுகுறுக்கு மேல்கீழாம் எங்கும் நிறைவாகும்
எது சச்சித்து இன்பு இரண்டல்ல – எது அனந்தம்
நித்தமாய் ஒன்றாய் நிகழ்வது எதுவாகும் அவ்
வத்து பிரமம் மதி. – **ஸ்ரீ ரமணர்**

(எந்தப் பொருளை குறுக்காகவோ, மேலோ, கீழோ எப்படிப் பார்த்தாலும் எங்கும் நிறைந்திருக்கிறதோ, எது சத்சிதானந்த சொரூபமாயும், இரண்டற்றதாகவும், எது முடிவில்லாததாயும், அழிவற்று எப்போதும் உள்ளதாயும், எது தானே ஒன்றாய் இருந்து விளங்குமோ, அந்தப் பொருளையே பிரம்மம் என்று உணர்வாய்.)

உலகில் உள்ள பலவிதமான பொருட்களை விளக்குவதற்கு, நமக்கு நன்கு அறிமுகமான பொருட்களில் அதைப் போல உள்ள வேறு எதையாவது சொல்லியோ, காட்டியோ அது அப்படிப்பட்டது என்பார்கள்.

நாம் அதிகம் பார்த்திராத வரிக்குதிரையை விளக்கிச் சொல்வதற்கு ஒரு குதிரையைக் காட்டி அது முழுவதும்

கருப்பு நிறமாக இருந்து அதன் மேல் வெள்ளை வரிகள் இருந்தால் எப்படியிருக்கும் என்று சொல்லலாம். ஆனால் பிரம்மம் என்பது இப்படித்தான் இருக்கும் என்று விளக்கிச் சொல்வதற்கு காட்டக்கூடிய பொருள் என்று உலகில் எதுவும் இல்லை. ஏனென்றால் காண்பது அதுவே என்பதால் காணும் அதையே எப்படிக் காட்டுவது?

"**அதுவாக இரு அப்போது தெரியும்**" என்றுதானே சொல்ல முடியும்?

அப்படியாக அனைத்துப் பொருளின் ஆதாரமாக இருக்கும் அதை முதலில் ஊகத்தினால் மட்டுமே அறிய முடியும்; அல்லது பாவத்தினால் (Attitude) மட்டுமே இருக்க முடியும்.

பின்பு அதை உணர்ந்தே அறிய முடியும். தான் உடல் என்ற அறியாமையில் உழல்வதால், தன் கண்ணுக்கு முன் உள்ளது மட்டுமே இருப்பதாக மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது.

அதனால் எவருமே தான் ஒருவனாயும், முதலாவ தாகவும் இருப்பதை விட்டுவிட்டு தான் பார்க்கும் உலகத்தை மட்டும் எப்போதும் இருப்பதாகப் பார்க்கிறார்கள்.

அவர்களது பார்வையை சரி செய்தால் மட்டுமே உள்ளதை உள்ளபடி பார்க்க இயலும்.

ஆக பிரம்மத்தைக் காட்டி விளக்குவதற்கு வேறு பொருள் இல்லையாதலால், எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் அதனுடைய தனித் தன்மையைக் கொடுக்கும் ஐந்து அம்சங்களான சத்து, சித்து, ஆனந்தம், நாமம், ரூபம் இவைகளைக் கொண்டு பிரம்மம் விளக்கப்பட வேண்டியிருக்கிறது.

இந்த ஐந்து அம்சங்களில் பிரம்மத்திற்கு முதல் மூன்றான **சத் - சித் - ஆனந்தம்** அம்சங்கள் மட்டுமே உண்டு.

அதற்கு மற்ற இரண்டு அம்சங்களான நாமமும், ரூபமும் கிடையாது. உலகில் காணப்படும் மற்ற எல்லா பொருட்களுக்கும் **நாமமும், ரூபமும்** உண்டு.

அவைகள் எவற்றிற்குமே பிரத்தியேகமாக முதல் மூன்று அம்சங்கள் கிடையாது.

அந்தப் பொருட்கள் இருப்பது (சத்) போலவும், அவைகளை அறியமுடியும் அல்லது அவைகளுக்கு அறிவு (சித்) உண்டு என்பது போலவும், அவை ஆனந்தம் தருகிறது என்பது போலவும் காணப்படுவது அவைகளுடன்

சைதன்யமாகிய பிரம்மம் சேர்வதால்தான். அப்படி பிரம்மத்தின் சேர்க்கை இருப்பதால் மட்டுமே அவை உணரப்படுகின்றன.

அப்படி இல்லாது போனால், அவை **மாயை** எனப்படும்.

அதனால் உலகம் இருக்கிறதா என்றால், பிரம்மத்தின் சேர்க்கையால் இருக்கிறது என்றும் பிரம்மம் இல்லாத உலகம் மாயை என்றும் சொல்லப்படும். அதனால்தான் உலகம் தெரியாத நமது ஆழ்ந்த உறக்கத்திலும் அந்தப் பிரம்மமாக நாம் இருக்கிறோம்.

ஆனால் நமது அவித்தையாகிய அஞ்ஞானத்தால் நாம் அதை உணர்வதில்லை. அப்படி நாம் உணராவிட்டாலும் அதன் தன்மைகளால் அது, தான் இருப்பதையும், அறிவாகவும் ஆனந்தமாகவும் உள்ளதை நம்மை "**ஆனந்தமாகத் தூங்கினோம்**" என்று அப்போது உணர்ந்ததைப் பின்பும் கூற வைக்கிறது.

உறக்கத்தால் நாம் பெறும் அந்த ஆனந்த நிலை கூட அவ்வப்போது நமக்கு கிடைக்காது போனால் நம் கதி அதோகதி தான். ஆனால் அதை நாம் ஒரு பொருட்டாகக் கூட மதிக்காது, நனவு உலகம் ஒன்றையே பெரிதாக மதித்து, மேலும் மேலும் அதைப் பிடித்துக்கொண்டு அதில் ஆழ்ந்து மூழ்கிப் போகிறோம்.

அந்தப் பிரம்மமாகிய ஒன்று இல்லாது போனால் எதுவும் இல்லை என்பதால் நாமும் இல்லை என்றுதானே ஆகிறது. உடல் என்பது உலகத்தில் உலவுவதால் அதற்கும் மற்றப் பொருட்களைப் போலவே பிந்தைய இரண்டு அம்சங்கள்தான் உண்டு. அத்துடன் பிரம்மம் சேர்வதால்தான் நாம் நாமாக இருக்கிறோம்.

அந்த பிரம்மம் ஒன்று மட்டும்தான் தானே தானாக இருக்க முடியும். அதை விடுத்து இரண்டாவது என்பது கிடையாது.



அது எப்போதும் இருந்தாக வேண்டும் என்பதால் அது அழிவற்றது. அது ஒன்றே அனைத்துக்கும் அறிவையும், ஆனந்தத்தையும் கொடுப்பதால், அதுவே அறிவாயும், ஆனந்தமாயும் இருக்கிறது. அதனால் அதுவே **சத்சிதானந்தம்** எனப்படுகிறது.

अतद्व्यावृत्तिरूपेण वेदान्तैर्लक्ष्यतेऽद्वयम् । var ऽव्ययम्
अखण्डानन्दमेकं यत्तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ५७॥

அதத்வ்யாவ்ருத்திரூபேண வேதாந்தைர்லக்ஷ்யதேத்வயம் |
அகண்டானந்தமேகம் யத்தத்ப்ரஹ்மேத்யவதாரயேத் ||

ஏது அழிவில்லாதது எதை அன்றென்று
அன்றென்றே வேத முடிவு விளக்கிடும் – யாதொன்று
அகண்ட இன்பாகி அமரும் அது தானே
திகழும் பிரமம் தெளி – **ஸ்ரீ ரமணர்**

(வேதங்களின் முடிவில் உள்ள உபநிஷத்துகள், இருப்பது போலத் தெரிவதையெல்லாம் இதுவல்ல, இதுவல்ல என்று மறுதலித்து எதை விளக்குகின்றனவோ, எது அழிவில்லாததாயும், இடைவிடாத இன்பம் தருவதாயும், எப்போதும் ஒன்றாய் இருப்பதாகுமோ அது தானே பிரம்ம சொரூபமாய் விளங்கும் என்று தெளிவாய்.)

வேதங்களின் தொடக்க பாகத்தை கர்மகாண்டம் என்றும், அதன் இறுதிப் பகுதியான உபநிஷத்தை ஞான காண்டம் என்றும் சொல்லப்படுவது உண்டு.

ஞானம் என்பது **அறிவு** சம்பந்தம் கொண்டது.

ஆனால் இங்கு கூறப்படும் அறிவோ அறியும் தனக்கு வெளியே உள்ள பொருட்களைப் பற்றிய அறிவு அல்ல.

இது தன்னைப் பற்றிய அறிவே. தன்னைப் பற்றித் தானே அறியும் அறிவு இது என்பதால் அறியும் அறிவு என்று ஒன்றும், அறியப்படும் அறிவு என்று மற்றொன்றும் இருப்பதற்கு அங்கு இரு அறிவுகள் இல்லை.

அதனால் அதை இப்படிப்பட்டது, அப்படிப்பட்டது என்று விளக்க முடியாது. அதை விளக்குவதற்கு ஒரே வழி சாதகன் அறிந்துள்ள அனைத்தையும் சொல்லி, இதுவல்ல அதுவல்ல என்றுதான் விளக்க முடியும்.

உடலாலும், உள்ளத்தாலும் காண்பது அனைத்தையும் அவை தானல்ல என்று விட்டுவிடச் சொல்லி, அவைகள் காணப்படுவதால் அவைகளைக் காண்பவன் யார் எனும் கருத்தில் சாதகன் "**தான் யார்**" என்பதை அலச வேண்டும்.

அது எப்படி முடியும் என்று கேட்டால், ஆரம்பத்தில் அதைத் தன் உடலிலும் நுண்ணியதான மனம், புத்தி போன்ற நம் கருவிகளை வைத்துக்கொண்டுதான் விசாரத்தைத் தொடங்க முடியும்.

“**நான் யார்?**” என்ற அந்தக்கேள்வியும் ஓர் எண்ணமேயாதலால், அது கேட்கப்படும்போது இயங்குவது மனம்தான். அதனை அலசி அதற்கு விடை காணத் துடிப்பது நமது புத்திதான்.

மனம், புத்தி இவ்விரண்டும் ஸ்தூல, நுண்ணிய, காரண என்று பல பொருட்களை ஒவ்வொன்றாகப் பற்றிக்கொண்டு நம் கேள்விக்கு விடை தேட முயற்சிக்கும்.

அப்படித் தெரியவரும் பொருட்கள் எல்லாம் நம்மிலும் வேறு என்பதால் அவை நாம் அல்ல! என்ற முடிவுக்கு வருவோம். இறுதியில் கேட்கும் மனமும், விடை காண முயலும் புத்தியும் நம் கருவிகளாக இருப்பதால் அவைகளும் நாம் அல்ல! என்ற ஒரு தெளிவும் பிறக்கும்.

அதன்பின் அத்தகைய கருவிகளும் தானாக இயங்குவதில்லை, ஆனாலும் அவை இயங்கின என்பதாலும், கேட்பவன் இன்னும் இருக்கிறான் என்ற நிலை உணரப்படும்.

மனம், புத்தி இவைகளின் எல்லை உணரப்படும்போது அவைகள் தானே அடங்கி, இருக்கும் ஒன்றேயான பிரம்மம் தானே விளங்கும். மனம், புத்தி இவைகளுக்கும் அப்பால் உள்ளது “**நான்**” என்னும் இறுதித் தெளிவான பிரம்மமாய் இருப்பதையே சச்சிதானந்த நிலை என்பார்கள்.

அது இருப்பாகிய “**சத்**” தாகவும், இருக்கிறேன் என்று உணரும் அறிவாகிய “**சித்**” தாகவும், எப்போதும் அது தானே ஆனந்தமாய் இருப்பதாலும், நாம் உலகில் காண்பது, அனுபவிப்பது அனைத்தும் இதனிலிருந்து வரும் குணங்களே என்றும் அறியப்படும்.

அது இல்லை என்றால் எதுவும் இல்லை என்பது ஒன்றே உண்மை. அதை அனுபவித்தே உணர முடியும். எனவே, சொற்கள் கொண்டு இதற்கும் மேல் விளக்க இயலாது. இவ்வுலகில் உள்ள பொருட்களைப் பற்றி விளக்கும் சொற்களே ஓரளவுக்குத்தான் அதைச் செய்ய முடிகிறது.

உதாரணமாகத் **தேன், வெல்லம், சர்க்கரை** என்ற மூன்று பொருட்களின் தன்மையை விளக்கும்போது, அவைகள் இனிப்பாக இருக்கும் என்றுதான் கூறமுடியும். ஒவ்வொன்றின் வெவ்வேறு விதமான இனிப்புத் தன்மையை எந்தச் சொல் கொண்டு விளக்க முடியும்?

ஆகவே, அதைத் தனித்தனியே வாயில் சுவைத்து அனுபவித்துத்தானே உணர முடியும்?

இவைகளே இப்படி என்றால் எல்லாவற்றையும் கடந்த, ஆனாலும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய பிரம்மத்தை எப்படி விவரிப்பது?

அதனாலேயே கண்டவர் விண்டதில்லை.

இப்படியாக மேலே நாம் கண்ட நான்கு ஸ்லோகங்களிலும் “**யத் தத் ப்ரஹ்மேதி அவதாரயேத்**” என்று சொல்லி “**இதுதான் பிரம்மம் என்று உறுதியாக அறிந்துகொள்**” என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இப்படியாக நான்கு முறை சொல்லப்பட்டுள்ளதை “**சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்**” என்பதன் எதிர்மறையாகக் “**கூறியது கூறல்**” என்ற முறைப்படி வருவதாகக் கூறுவார்கள்.

அதனால், இதற்குமேல் பிரம்மத்தைப் பற்றிக் கூறுவதற்கும் ஒன்றுமில்லை என்றும் ஆகிறது.

अखण्डानन्दरूपस्य तस्यानन्दलवाश्रिताः ।
ब्रह्माद्यास्तारतम्येन भवन्त्यानन्दिनोऽखिलाः ॥ ५८॥

அகண்டானந்தரூபஸ்ய தச்யானந்தலவாஸ்ரிதாஹா |
ப்ரஹ்மாத்யாஸ்தாரதம்யேன பவன்த்யானந்திநோகிலா ||

அகண்ட சுகமய ஆன்மாவில் அற்ப
சுகத்தை அடுத்தே சுரராய்த் – திகழும்
பிரமாதி ஏனோர் பிறங்குவர் இன்புற்றுத்
தராதரமாகத் தரி – **ஸ்ரீ ரமணர்**

(எங்கும் பரவி, எப்போதும் ஆனந்தமயமாய் இருக்கும் ஆன்மாவின் சுகத்தில் இருந்து, தேவர்களாக விளங்கும் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் முதலானோர் அவரவர் தகுதிக்கு ஏற்ப சொற்பமான சுகத்தையே பெற்று உயர்வும், பெருமையும் அடைந்தவர்கள் என்பதை திடமாக அறிவாய்.)

ஆன்மா ஆனந்தமயமானது என்றால் எவ்வளவு என்று கோடி காட்டுவதற்காக இங்கு ஒரு ஒப்புமை சொல்லப் பட்டிருக்கிறது.

ஆன்மாவின் ஆனந்தத்தை ஒரு கடல் என்று சொல்லி, அதில் ஒரு துளிதான் மிக ஆனந்தமாய் இருக்கும் பிரம்மாவிற்கே கிடைக்கிறது என்று சொல்லப்பட்டு ஆன்மாவின் ஆனந்தத்தை விவரிக்கிறார். ஒன்று பெரியது என்று காட்டுவதற்கு பக்கத்தில் ஒரு சிறு கோடு போடப்படும் “**இரு கோடுகள்**” தத்துவம்தான் இங்கு கையாளப்பட்டிருக்கிறது.

ஆனால் இங்கு ஒன்று மிகச் சிறியதாவும், மற்றொன்று மிகப் பெரியதாகவும் இருக்கிறது. தைத்திரீய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளபடி, ஒரு நல்ல இளமையுடன் இருக்கும் பலசாலி மற்றும் அறிவாளி ஏகச் சக்கிராதிபதியாக இருக்கும்போது அனுபவிக்கும் ஆனந்தமே மனிதனின் ஆனந்தம் என்று வரையறுக்கப்படுகிறது.

அதாவது மற்ற மனிதர்களின் ஆனந்தம் எதுவுமே ஒரு பொருட்டாக மதிக்கப்படவில்லை. அந்த மனிதனில் தொடங்கி பிரம்மா வரை கூறப்பட்டு, அந்த பிரம்மா அனுபவிப்பதே ஆத்மானந்தத்தின் ஒரு துளி என்றும், மற்றவர்கள் அவரவர் தகுதிக்கு ஏற்ப ஆனந்தம் கிடைத்தும், அவர்கள் எல்லோருமே உயர்வாய் இருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அவர்களே அப்படியிருந்தால் பரப்பிரம்மத்தை உணர்ந்து, அந்த ஆன்மானுபவத்தை அடைபவன் கடலளவு ஆனந்தம் அனுபவிப்பவன் என்பதால், அவன் இன்னும் எவ்வளவு பாக்யவான் என்றும் காட்டப்பட்டிருக்கிறது.

அதாவது, மிக உயர்ந்த நிலையில் இருக்கும் நான்கு தலை கொண்ட பிரம்மாவின் சுகமே சொற்பம் என்பதால் இவ்வுலக சுகத்தை நாடுவதில் ஒருவனுக்கு என்ன லாபம் இருக்கிறது?

இப்படிக்கூறி சாதகனின் மனத்தை இவ்வுலக இன்பங்களிலிருந்து திருப்பிவிட்டு, அவனுக்கு ஆனந்தக் கடலைக்காட்டி, அவன் ஆன்ம விசாரத்தில் ஈடுபடுவதே மிகப்பெரும் நன்மை பயக்கும் வழி என்று இங்கு காட்டப்படுகிறது.

तद्युक्तमखिलं वस्तु व्यवहारस्तदन्वितः ।
तस्मात्सर्वगतं ब्रह्म क्षीरे सर्पिरिवाखिले ॥ ५९॥

தத்யுக்தமகிலம் வஸ்து வ்யவகாரச்ததன்விதஹ |
தச்மாத்சர்வகதம் ப்ரஹ்மா க்ஷீரே சர்பிரிவாகிலே ||

அதனிடத்துள்ளது அகிலமும் செய்கை
அதை அடுத்துள்ளதேயாகும் – அதனால்
பரவிடும் எல்லாம் பரம்பொருள் பாலில்
விரவிடு நெய் போலவே – **ஸ்ரீ ரமணர்**

(எல்லாப் பொருட்களும் பிரம்மத்தினிடமே இருக்கின்றன. அதனால் எல்லாச் செய்கைகளும் அதை அனுசரித்தே நடக்கின்றன. பால் முழுவதும் நெய் பரவி இருப்பது போல, பிரம்மம் எங்கும் பரவி வியாபித்து இருக்கின்றது.)

முன்பே நாம் பார்த்த மாதிரி எந்தப் பொருளுக்கும் ஐந்து குணங்கள் உண்டு.

அவைகளில் முதல் மூன்றான அஸ்தி (சத்), பாதி (சித்), ப்ரியம் (ஆனந்தம்) பிரம்மத்தின் சொரூபம் என்றும், கடைசியான நாமம், ரூபம் இரண்டும் மாயையின் குணங்கள் என்றும் சொல்லப்படும்.

**எங்கு நாமரூபங்கள் தோன்றுகின்றனவோ அங்கு உலகம் தெரிகிறது என்று பொருள்.**

இவ்வுலகில் உள்ள பொருட்கள் எதற்கும் முதல் மூன்று குணங்கள் கிடையாது.

ஆனாலும் அவைகளுக்கும் அந்தக் குணங்கள் இருப்பது போலத் தோன்றுவது, அந்தப் பொருட்களுடன் இருக்கும் பிரம்மத்தின் தொடர்பால் மட்டுமே. ஒரு பொருளை வாங்கி வந்தோம், அல்லது ஒரு வேலையைச் செய்து முடித்து விட்டோம் என்றால் நமக்கு வரும் ஆனந்தம் அந்தச் செயலால் வருவது என்றுதான் நம்மில் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை அதுவல்ல.

அந்தச் செயலை செய்வதற்கு முன் நமக்கு இருந்த மன ஓட்டங்களும், கவலைகளும் செயல் முடிந்ததும் தீர்ந்து விட்டதால், நாம் நமது இயல்பான ஆன்ம நிலைக்கு ஒரு க்ஷணமேனும் திரும்புகிறோம்.

ஆக எப்போதும் அறிவுடன் இருக்கும் ஆன்மாவின் ஆனந்த இயல்பையே நாம் அப்போது உணர்கிறோம். அது அப்படியே நீடிக்காமல் இருப்பதன் காரணம் முன்பு கலைந்து போன கவலைகளின் இடத்தில், நாம் ஏற்கனவே சேர்த்து வைத்திருக்கும் வாசனையால், வேறு ஒரு கவலை குடி புகுந்து விடுகிறது. இப்படியே நம் வாழ்க்கை தொடர்கிறது.

ஒரு குறுகிய இடைவெளியிலேயே நமக்கு அப்படிப் பட்ட ஆனந்தம் கிடைக்கிறது என்றால் அதை நீட்டி எப்போதும் அதில் நிலைத்து நிற்க வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதுதான் இங்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம்.

அதற்கு நமது எண்ணங்கள், செயல்கள் அனைத்துமே பழைய வாசனைகளைத் தீர்க்கும் முகமாகவும், புதிய வாசனைகள் எதையும் சேர்க்காமல் இருப்பதாகவும் அமைய வேண்டும். அப்படிச் செய்து வரும்போது உள்ள ஒன்றான ஆன்மா தானே தானே ஒளிர்விட்டு விளங்கும்.

**நாமம், ரூபம்** மட்டுமே உள்ளதால் இவ்வுலகப் பொருட்கள், செய்கைகள் எல்லாமே **மாயை** என்றாகின்றன. அவைகளும் அந்தப் பிரம்மத்தின் சந்நிதானத்தில்தான் இருக்கின்றன, நடக்கின்றன. அதைத்தான் நமது அவ்வப் போதைய ஆனந்த நிலை காட்டுகிறது. அப்படி எல்லாமே பிணைந்து இருப்பதை நாம் எளிதாகக் காண இயலாது.

எப்படி பாலில் இருக்கும் நெய்யைக் காண முதலில் பாலைத் தயிராக்கி, அதில் நீர் கலந்து மோராக்கி, அதைக் கடைந்து, வெண்ணையைத் திரட்டி, பின்பு அதை உருக்கி நெய்யை அடைகிறோமோ, அதேபோல தொடரும் நம் ஆன்ம விசாரம் எனும் பெருமுயற்சியால் பிரம்மம் எதிலும் இருப்பதை உணரலாம்.

अनण्वस्थूलमह्रस्वमदीर्घमजमव्ययम् ।
अरूपगुणवर्णाख्यं तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ६०॥

அனண்வஸ்தூலமஹ்ரஸ்வ மதீர்தமஜமவ்யயம் |
அரூபகுணவர்ணாக்யம் தத்ப்ரஹ்மோத்யவதாரயேத் ||

பருமையும் நுண்மையும் உற்பத்தி விநாசம்
குறுகலும் நீட்சியும் கூடாது – உருவம்
குணம் குலம் நாமமும் கொள்ளாமல் உள்ளது
உணர்க பிரம்மம் என்று உற்று – **ஸ்ரீ ரமணர்**

(எது ஸ்தூலமாகவோ, நுண்ணியதாகவோ இல்லாது, உற்பத்தி, நாசம் என்ற நிலைகளும் இல்லாது, சுருங்கி குறுகிய தாகவோ, நீண்டதாகவோ இல்லாது, உருவம், குணம், குலம், பெயர் என்று ஏதும் இல்லாது இருக்கிறதோ, அதைக் கூர்த்த மதியால் உணர்ந்து பிரம்மம் என்று அறியவேண்டும்.)

தூலமாக எது இருக்கிறதோ அதற்கு **"நாம-ரூப"** என்னும் நியதிப்படி பெயரும், உருவமும் இருக்கும்.

அது நீண்டதாகவோ, குட்டையாகவோ, ஏதோ ஒரு பரிமாண அளவுடன் இருக்கும்.

தூல உருவைத் தவிர அந்தப் பொருளுக்கு நுண்ணிய குணங்களும் இருந்தால், அதைப் போன்ற பல உருவங்கள் ஒரு சூழ்நிலையில் ஒன்றாய் இருக்கும்போது, அந்த ஒட்டு மொத்த சேர்க்கைக்கும் சில குணங்கள் ஏற்பட்டு ஒரு குலம் உருவாகிறது.

தனித்தனியான பெயர்கள்போல, அந்தச் சேர்க்கைக்கும் ஒரு பெயர், குணம் எல்லாம் உருவாகிறது. ஒரு நிலையில் அவை இல்லாதும் போகலாம். அப்படி நேர்ந்தால் எப்படி முன்பு இருந்ததோ அப்படியே அவை மறுபடியும் உற்பத்தியும் ஆகலாம். இவையெல்லாமே உலகில் உள்ள எந்தப் பொருட் களுக்கும் பொருந்திய விவரங்களே.

இந்த விவரங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த வைகள் ஆகையால், ஆன்ம சாதகன் பிரம்மத்தையும் அதே பரிமாணங்களுடன் பார்க்கலாம் என்பதால் அவை அனைத் தையும் சொல்லி, பிரம்மம் அத்தகையது அல்ல என்று முன்பு போல் எதிர்மறையாக உணர்த்தப்படுகிறது.

அதாவது உலகில் உள்ளவைகள் எல்லாம் மேலே சொல்லப்பட்டுள்ளபடிதான் இருக்கின்றன. அதனால் உலகம் தெரியும்வரை பிரம்மமும் தெரியாது என்றும் உணர்த்தப் படுகிறது. அப்படியானால் அனைத்திலும் பிரம்மம் வியாபித் திருக்கிறது என்றால் என்ன பொருள்?

பிரம்மத்தை விட்டுவிட்டு உலகத்திற்குத் தனியானதொரு இருப்பு உள்ளது என்பதுதான் தவறு என்று அதன் பொருள். ஒரு கல்லில் மிகவும் தத்ரூபமாகச் செதுக்கப் பட்டிருக்கும் நாய் ஒன்றைப் பார்த்துவிட்டு அது நாயே என்று நினைப்பது தவறுதானே?

அது நாய் என்றே நினைத்துக்கொண்டு இருந்தால் அந்தக் கல் தெரியாதல்லவா?

அதேபோல்தான் இதுவும்.

ஒரு விளக்கம் கொடுப்பதற்காகத் தரப்பட்ட உவமை தானே தவிர, இது முழு உண்மையையும் தரவில்லை. ஏனென்றால் உலகியற்படி கல் என்றும் நாய் என்றும் இரண்டு பொருட்கள் உள்ளன.

ஆனால் உலகம் - பிரம்மம் இவைகளில் இருப்பது பிரம்மம் ஒன்றே. காணப்படுவதாகத் தோற்றம் அளிப்பது உலகம். ஒரு திரைப்படக் காட்சியை நாம் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அந்தக் காட்சியை உண்மை என நம்புவது போலத்தான் இவ்வுலகக் காட்சிகளும் இருக்கின்றன.

முன்பு பட்டியலிட்டுச் சொல்லப்பட்ட தூல பரிமாணங்கள் இல்லாததால், நம் புலன்கள் ஐந்தாலும் அந்த

பிரம்மத்தை அறியமுடியாது. அதற்கு அந்த நுண்ணிய பரிமாணங்களும் இல்லாததால் அதை மனம் - புத்தி கொண்டும் அறிய முடியாது.

*அதனால் இருக்கும்* **பிரம்மத்தை அறிவதற்கு அது எப்படி இருக்கிறதோ, அப்படி இருந்து மட்டுமே அறிய முடியும்.**

இப்படியாக அறிவதற்கு முயலும்போது, அதை அறிய முடியாது வருகின்ற தடைகளை நமது கூரிய மதியால் உணர்ந்து அவைகள் ஒவ்வொன்றும் கிளம்பியதுமே அவைகளை விலக்க வேண்டும்.

அதாவது இருப்பது நான், இடையில் வந்திருப்பது எண்ணங்களும், அதைத் தொடர்ந்து வரும் செயல்களுமே, அவை நானல்ல என்று ஒதுக்கப்பட வேண்டும்.

அப்படிப் பழகப் பழகத் தடைகள் குறைந்தும், வலுவிழந்தும் செல்லச் செல்ல, நமது இருப்பாகிய நிலை வலுவடையும். அதை நாம் இயல்பாக அடையவேண்டும்.

ஆக ஆன்ம விசாரம் என்பது சதா சர்வ காலமும் விழிப்புடன் இருந்து, இறுதியில் தன்னை முற்றிலுமாக உணர்வது.

यद्भासा भास्यतेऽर्कादि भास्यैर्यत्तु न भास्यते ।
येन सर्वमिदं भाति तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ६१॥

யத்பாஸா பாச்யதேர்காதி பாஸ்யைர்யத்து ந பாஸ்யதே |
யேன சர்வமிதம் பாதி தத்ப்ரஹ்மோத்யவதாரயேத் ||

எதன் ஒளியினால் ஒளிருமே இரவி யாதி
எதனை அவை ஒளிர்க்க வேலாது – எதனாலே
இந்த உலகெல்லாம் இலகும் அதுதானே
அந்தப் பிரமம் அறி – **ஸ்ரீ ரமணர்**

(எது தரும் ஒளியால் சூரியன் முதற்கொண்டு அனைத்தும் பிரகாசமாக இருக்கின்றனவோ, எதனை அவைகள் எதுவும் ஒளிரச் செய்ய முடியாதோ, எதன் ஒளியால் இந்த உலகமெல்லாம் பிரகாசமாய் இருக்கிறதோ, அந்தப் பொருளே பிரம்மம் என்று அறிவாய்.)

நாம் காணும் ஒளி என்று தொடங்கி நம்மைக் காண வைக்கும் ஒளியைப் பற்றிய மிகவும் ஆழ்ந்த கருத்துக்கள் உடைய இந்த ஸ்லோகத்தை நாம் நன்கு புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். உலகத்தை நாம் காண்பது ஏதேனும் ஒரு ஒளியைக் கொண்டே நடக்கிறது.

பகல் நேரம் என்றால், அது சூரிய ஒளியாகவும், இரவு நேரம் என்றால் சந்திரன், நக்ஷத்திரம் அல்லது ஒரு விளக்கின் துணை கொண்டோ நாம் எதனையும் காண்கிறோம்.

நமக்குப் பார்ப்பதற்குக் கண்கள் இருந்து, நமது அந்தக்கரணங்களும் நம்முடன் ஒத்துழைப்பதனால் ஒன்றை நாம் காண முடிகிறது என்றாலும், ஒளி இல்லையேல் நம்மால் எதையும் பார்த்து அறிய முடியாது.

இந்தத் தத்துவத்தைத்தான் நாம் கோவிலில் சென்று இறைவனை வணங்கும்போது, நமக்குத் தீபம் அல்லது கற்பூரம் ஆரத்திக் காட்டி, பின்வரும் **உபநிஷத** ஸ்லோகத்தையும் கூறி, நமது உண்மையை நமக்கு நினைவூட்டுகின்றனர்:

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
ந இமா வித்யுதோ பாந்தி: குதோயம் அக்னி:
தமேவ பாந்தம் அநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி | (கடோபநிஷதம் 2 - 2 -10)

**<u>பொருள்:</u>**

அங்கே சூரியன் ஒளிர்வதில்லை, சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஒளிர்வதில்லை, மின்னல் ஒளிர்வதில்லை. அப்படி இருக்க இந்த அக்னி மட்டும் எப்படி ஒளிர முடியும்?

ஒளிர்கின்ற ஆன்மாவை அனுசரித்தே மற்ற அனைத்தும் ஒளிர்கின்றன. அனைத்தும் அதன் ஒளியால் ஒளிர்கின்றன. என்பது இந்த மந்திரம் கூற வருகின்ற கருத்து.

ஆக, நாம் ஏதோ கோவிலுக்குச் சென்றோம், அங்கு கிடைத்த தரிசனத்தை ரசித்தோம், பிரசாதத்தைப் பெற்று மகிழ்ந்தோம், வீடு திரும்பினோம் என்று நமது தினசரி நடவடிக்கைகளில் அதையும் பத்தோடு பதினொன்றாக சேர்த்து விட்டு வெறுமனே இருந்து விடக் கூடாது.

கோவிலின் தத்துவார்த்த அமைப்புகளைப் பற்றியும், அங்கு வாழ்க்கைக்கு உதவும் தத்துவங்களை உணர நடக்கும் கிரியைகளின் அர்த்தங்களையும் நன்கு மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஆரத்தியின் விசேஷம் என்னவென்றால்,

ஐயா, நீ பார்த்துக்கொண்டிருப்பது சூரிய ஒளியில்லை, சந்திர, நக்ஷத்திர, மின்னலின் ஒளியுமில்லை. நீ பார்ப்பது ஒரு அக்னித் துண்டத்தின் ஒளிதான்.

அது தானாகவே ஒளிர்கின்றது என்று நீ நினைத்துக் கொண்டிருந்தால் அதுவும் உண்மையில்லை.

நீ பார்ப்பதனால் அது அங்கு அப்படி இருக்கிறது.

பார்த்துக்கொண்டிருக்கும் நீ வெறும் உடலா?

நீ இருப்பதாக நினைக்கும் இந்த உலகம் உண்மையா?

உடல் உணர்வு இல்லாது நீ ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது எங்கே இருந்தது உலகம்?

அதனால் உன் உடல் இல்லாது உன் உலகமும் இல்லை. உனக்கு உடல் உணர்வு வரும்போது, நீ வெறும் ஸ்தூலமாகிய உடல்தானா?

அப்போது சூட்சமமான மனம், புத்தி, மற்றும் அவைகளிலும் அதிசூட்சமமான '**நான்**' எனும் எண்ணமாகிய அகங்காரம் இவைகள் இல்லையா?

ஆக, அவைகள் இல்லாமல் உடல் எங்கே இருக்கிறது?

அப்போது அந்த **நான்** என்னும் அதிசூட்சமமான எண்ணம் வருவதற்கு முன்பேயே, நீ உன்னை '**நான்**' என்று உணர்வது இல்லையா?

அந்த உணர்வே பிரம்மம், ‘**அதுவே நீ**’. நீ அதுவாக இருப்பதாலேயே எதனையும் காண முடிகிறது. அந்த “**உனது உள்ளொளியை வேறெதுவும் ஒளிர்விக்க முடியாது**” என்ற உண்மையை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

ஆரத்தியைப் பார்க்கும் நம்மில் எத்தனை பேர் இந்தக் கருத்தை உணர்கின்றோம்?

இந்த **சத் - சித் - ஆனந்த** மய உண்மையை விடுத்து, அதனை நமக்குக் காட்ட வந்துள்ள மாயையாகிய நாம - ரூபத்தில் அல்லவா மயங்கி நிற்கின்றோம்?

இதையேதான் பகவான் ஸ்ரீரமணர் “காணும் தனை விட்டுத் தான் கடவுளைக் காணல், காணும் மனோமயமாம் காட்சி, தனைக் காணும் அவன்தான் கடவுள் கண்டானாம்” என்று கூறினார்.

“**கண்டதே காட்சி, கொண்டதே கோலம்**” என்று சதா சர்வ காலமும் நாம் நமது இருப்பை விடுத்து இல்லாததில் மயங்குவதாலேயே, அந்தப் பேருண்மையை நமக்கு அவ்வப்போது நினைவூட்டுவதற்கு என்றே நமது முன்னோர்கள் கோவில்கள், குளங்கள், தீர்த்த யாத்திரை, மூர்த்தி தரிசனம், கிரியைகள், சரியைகள் என்று பலவற்றையும் உருவாக்கி, போற்றி, வளர்த்து வழிகாட்டிச் சென்றிருக்கின்றனர்.

இவைகளின் உண்மையைச் சரிவரப் புரிந்து கொள்ளாது, கோவில்களை வைத்துக்கொண்டு அறமில்லாச் செயல்களில் ஈடுபடுபவர்களைப் பற்றி என்ன கூறுவது?

உலகத்தையே ஒளிர்விக்கும் சூரியனின் சக்தி அணு நிலை மாற்றங்களால் ஒளியும், உஷ்ணமுமாக வெளிப் படுகின்றன என்று அறிவது உலகியல் அறிவு.

ஆனால், அதைக் கண்டு பிடிப்பவனும், அந்த ஒளியையும் உஷ்ணத்தையும் அனுபவிப்பனுமான **தான் இல்லாது, அவை இல்லை!** என்று உணர்வது பேரறிவு.

தனது ஒளியினாலேயே அந்தப் புற ஒளி உணரப் படுகிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

சூரியன் உலகையே ஒளிர்விக்கலாம், ஆனால் அது என்னை ஒளிர்விப்பதில்லை, மாறாக எனது ஒளியால் சூரியனின் ஒளி உணரப்பட்டது என்பதையே இந்தச் செய்யுள் நினைவூட்டுகிறது.

स्वयमन्तर्बहिर्व्याप्य भासयन्नखिलं जगत् ।
ब्रह्म प्रकाशते वह्निप्रतप्तायसपिण्डवत् ॥ ६२॥

ஸ்வயமந்தர்பஹிர்வ்யாப்ய பாஸயன்னாகிலம் ஜகத் |
ப்ரம்ம பிரகாஷதே வஹ்நிப்ரதப்தாய ஸபிண்டவத் ||

ஒளிர்த்து உலகமெல்லாம் தான் உள்வெளி வியாபித்து ஒளிர்ந்திடும்
அப்பிரமம் ஓர்வாய் – ஒளிரும்
நெருப்பினில் காய்ந்து அங்கி நேர் ஒளிரும்
அந்த இருப்புண்டையைப் போலவே – ஸ்ரீரமணர்

(நன்கு காய்ந்து எரியும் அக்னியில் இடப்பட்டுள்ள ஓர் இரும்புக் குண்டு, அக்னியைப் போலவே பிரகாசிக்கும். அவ்வாறு ஒளி விடும் குண்டைப் போலவே உலகில் உள்ள அனைத்தையும் பிரம்மம் பிரகாசிக்கச் செய்து, அவை அனைத்தின் உள்ளும், புறமும் வியாபித்துத் தானும் ஒளிர்விடும் என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்.)

முந்தைய ஸ்லோகத்தில் நாம் பார்த்த சூரியன், சந்திரன் முதலானவைகளினின்று புறப்படும் கிரணங்கள் எதன் மேல் விழுந்து தொடர்பு கொள்கின்றனவோ அவைகளை மட்டுமே பிரகாசிக்க வைக்கின்றன.

அதைப்போல பிரம்மமும் தன்னுடன் தொடர்பு கொண்டவற்றை மட்டும்தானே பிரகாசிக்க வைக்கும், எப்படி

எல்லாவற்றையும் ஒளிர்விக்கும் என்று தோன்றக்கூடிய கேள்விக்குத்தான் இந்த ஸ்லோகம் அனைவர்க்கும் எளிதில் விளங்கக்கூடிய ஓர் எடுத்துக்காட்டு மூலம் பதில் அளிக்கிறது.

கொழுந்து விட்டு எரிகின்ற அக்னிப் பிழம்பில் போடப்பட்டுள்ள ஓர் இரும்புக் குண்டுதான் அந்த உதாரணம்.

அந்தக் குண்டிற்குச் சாதாரணமாக ஓர் உருவம் உண்டு, கருமையான நிறமும் உண்டு. அக்னிக்கோ உருவம் கிடையாது. உஷ்ணமும், நிறமும் உண்டு. அக்னியில் இடப்பட்ட குண்டு சிவப்போ, மஞ்சளோ நிறம் எடுத்துக்கொண்டு, தொடவும் முடியாதபடி தகிக்கிறது.

அதனால் அந்த இரும்பை அக்னி என்றா சொல்ல முடியும்? ஆனாலும் நாம் பேசும்போது இரும்பு சுடுகிறது என்கிறோம். அதற்குச் சுடும் தன்மை அக்னியால் வந்ததுதானே? சுடுகிறது என்பதால் அக்னி உருண்டை வடிவம் கொண்டுவிட்டது என்றா சொல்லமுடியும்? அந்த வடிவம் இரும்பினால் வந்ததுதானே?

அதாவது அக்னியின் உஷ்ணம், மற்றும் நிறம் ஆகிய தன்மைகள் இரும்புக் குண்டின் உள்ளும், புறமும் படர்ந்து, குண்டின் உருவத்தையும் கொண்டுள்ளது.

அதேப்போல, பிரம்மமும் அனைத்துப் பொருட்களின் உள்ளும், புறமும் வியாபித்துத் தனது சத்-சித்-ஆனந்தம் முதலான தன்மைகளை அந்தப் பொருட்களின் மேல் ஏற்றிக் காட்டுகிறது. ஆக உலகியல் பொருட்கள் அனைத்திற்குமே இருப்பு என்ற நிலையோ (சத்), தாம் இருக்கிறோம் என்ற அறிவோ (சித்), தனது இருப்பையே அறிவதால் உள்ள ஆனந்தமோ தன்னளவில் எதுவுமே கிடையாது.

அவையெல்லாமே பார்ப்பவனின் தன்மைகளால் வியாபிக்கப்பட்டு, அத்தன்மைகள் அந்தப் பொருட்களுக்கு இருப்பன போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. அதனாலேயே ஒரு பொருளின் உள்ளும், அதைக் கடந்தும் பரவியிருக்கும் அந்த உண்மையைக் “**கடவுள்**” என்று உருவகப்படுத்தி நாம் தொழுகிறோம்.

அதன் பொருளே சகல சீவராசிகளும் “**அதுவே**” என்பதும், உலகியலில் அதை அறிந்தோர், அறியாதோர், உணர்ந்தோர், உணராதோர் என்ற பாகுபாடுகள் இருக்கலாமே தவிர, வேறெந்தப் பாகுபாடுகளும் இருக்கின்றன என்பது உண்மைக்குப் புறம்பான கூற்றே ஆகும்.

இந்த உண்மையை ஆராய்ந்து அறிந்துகொள் என்று சொல்லி, பிரம்மத்தின் சொரூப லக்ஷணம் 54-வது ஸ்லோகத்தில் தொடங்கி இந்த 62-வது ஸ்லோகம் வரை விவரமாக விளக்கப்பட்டுள்ளது.

जगद्विलक्षणं ब्रह्म ब्रह्मणोऽन्यन्न किंचन ।
ब्रह्मान्यद्भाति चेन्मिथ्या यथा मरुमरीचिका ॥ ६३॥

ஜகத்விலக்ஷணம் ப்ரஹ்ம ப்ரஹ்மணோன்யன்ன கிஞ்சன |
ப்ரஹ்மான்யத்பாதி சேன்மித்யா யதா மருமரிசிகா ||

பிரமம் உலகில் பிறிதாகும் அந்தப்
பிரமத்தணுவில் பிறிதாய்ப் – பிரமத்திற்கு
அன்னியம் ஏதும் அவிர்ந்தால் அது மித்தை
உன்னுக கானல் நீர் ஒத்து – **ஸ்ரீரமணர்**

(அறியும் பிரம்மம் அறியப்படும் உலகத்திற்கு மாறான இயல்பு உடையது. பிரம்மத்திற்கு அப்பாற்பட்டு வேறெந்தப் பொருளும் இல்லை. பிரம்மத்திற்கு அன்னியமாக வேறெதுவும் தோன்றினால், அது உண்மையில் இல்லாததாயினும் காட்சிக்குத் தோன்றும் கானல் நீர் போன்றதொரு பொய்த் தோற்றம் ஆகும்.)

எங்கும் எப்போதும் இருப்பது பிரம்மம் என்றால், காணப்படும் உலகப் பொருட்களைக் கொண்டே பிரம்மத்தை அறியலாகாதா என்ற சந்தேகக் கேள்விக்குப் பதில் அளிப்பது போல இந்தச் செய்யுள் விளக்கம் கொடுக்கிறது.

அனைத்தும் பிரம்மமே என்றாலும், உலகின் இயல்பும், பிரம்மத்தின் இயல்பும் வெவ்வேறானது.

உலகம் நிலையற்றது. வரும், போகும் இயல்புடையது. அதனால்தான் நமது விழிப்பு நிலையில் காணப்படும் உலகம் ஆழ்ந்த உறக்கத்தில் அறியப்படுவதில்லை. நமது கனவிலோ நாம் வேறோர் உலகத்தையே உருவாக்கிக் கொள்கிறோம். உலகின் நிலை இப்படி இருக்க, பிரம்மமோ எப்போதும் உள்ளது, நிலையானது.

உலகம் ஓர் அறிவற்ற ஜடம். பிரம்மமோ அறிவு மயமானது. உலகம் துன்ப மயமானது. பிரம்மமோ ஆனந்த மயமானது. அதனால் உலகம் பிரம்மம் அல்ல. நாம் முன்பு கண்டது போல அனலில் இட்ட ஓர் இரும்புக் குண்டு அனலின் தன்மையை எடுத்துக்கொள்வதுப் போல, உலகில் உள்ள அனைத்துப் பொருட்களின் உள்ளும், புறமும் பிரம்மம் வியாபித்து இருப்பதால், அவைகள் பிரம்மத்தின் தன்மைகளை எடுத்துக்கொள்கின்றன.

இப்படியாக பிரம்மத்திற்கு அப்பாற்பட்டு எந்தப் பொருளும் இல்லை என்பதால், பிரம்மத்தை விடுத்து உலகத்தின் உண்மையை அறியமுடியாது. அதனால் உலகில் உள்ளவைகளைக் கொண்டு பிரம்மத்தை அறியமுடியாது. மேலும் பிரம்மத்திற்கு அன்னியமாக உலகம் இருப்பதாகத் தோன்றினால், அது இருப்பது போலத் தோன்றும் கானல் நீர் போன்றதொரு பொய்க் காட்சியே. உண்மையை அறியாதவனுக்கு இல்லாத கானல் நீர் இருப்பதாகத்தான் தோன்றும். உண்மையை அறிய முயற்சிப்பவனுக்கே அது, **மாயை** என விளங்கும்.

दृश्यते श्रूयते यद्यद्ब्रह्मणोऽन्यन्न तद्भवेत् ।
तत्त्वज्ञानाच्च तद्ब्रह्म सच्चिदानन्दमद्वयम् ॥ ६४॥

த்ருஷ்யதே ஸ்ரூயதே யத்யத்ப்ரஹ்மணோன்யன்ன தத்பவேத் |
தத்வஞானாச்ச தத்பிரம்மா சச்சிதானந்தமத்வயம் ||

எதுவெது காணவும் கேட்கவும் ஏயும்
அது பிரமத்து அன்னியம் ஆகாது – அதுவுமே
தத்துவ ஞானத்தினால் சச்சிதானந்தமாம்
அத்துவிதப் பிரமமாம் – **ஸ்ரீ ரமணர்**

(எவையெவை காணும்படியாகவும், கேட்கும்படியாகவும் இருக்கின்றனவோ அவை எதுவுமே பிரம்மத்திற்கு அன்னியமானது அல்ல. தத்துவ ஞானம் கொண்டு பார்க்கும்போது அவை அனைத்துமே **சத் - சித் - ஆனந்த** சொரூபம் ஆகும். அதுவே இரண்டற்ற பரம்பொருளாகவும் ஒளிர்வது தெரியும்.)

“**அதுவே நீ**” என்ற பொருள் கொண்ட “**தத் த்வம்**” என்ற சொல் இருப்பவற்றுள்ளேயே உள்ள பேருண்மையைக் குறிப்பிடுவதால், தத்துவம் என்ற சொல் உண்மையை நாடுவதையே சுட்டிக் காட்டுகிறது.

அதனால் எது உண்மை, எது மாயை என்று அறிய விரும்பும் சாதகன் முதலில் அறிந்துகொள்வது அவன் கண் முன்னே இருப்பதையும், செவி வழியே கேட்பதையும் தான்.

கண்ணால் பார்க்கப்படுவது ஓர் உருவமே, காதால் கேட்கப்படுவது ஒரு நாதமே.

அவ்விரண்டிற்கும் பொருள் இருக்கும் அல்லவா?

அதை நாடுவதுதான் உண்மையை அறிவது. அவ்வாறு உண்மையை நாடும் சாதகன் ஒரு தத்துவவாதி ஆகிறான். அந்தத் தத்துவ ஞான வழியில் பார்க்கும் சாதகனுக்குக் காண்பதிலும், கேட்பதிலும் உள்ள பொருள்தான் மிக முக்கியமாகப்படுகிறது. எந்தக் காட்சியிலும் ஒன்று காணப்பட்டு அது ஒரு பொருளை உணர்த்துகிறது. அதேபோல எந்தக் கேள்வியிலும் கேட்கப்படும் சொல் ஒரு பொருளை அறிவிக்கிறது.

ஆக வெறுமே காணப்படுவதையும், கேட்கப் படுவதையும் மட்டுமே எடுத்துக்கொண்டால் அது காட்சிக்கும், கேள்விக்கும் உரிய மாயை என்றாகி, அவை உணர்த்தும் பொருளே உண்மை என்றும் ஆகிறது. ஒரு பொருளை உணர்த்தாத வரையில் காட்சியும், கேள்வியும் இருந்தாலும் பயனில்லாது போகிறது.

அந்தப் பொருளை உணர்பவன் காணப்படும் காட்சிக்கும், கேட்கப்படும் ஒலிக்கும் வேறு என்றாலும், உண்மைப் பொருளை உணர்த்துவதற்கு அவைகள் தேவை என்பதால் காணப்படும் உருவங்களும், கேட்கப்படும் நாதமும் உணர்பவனைப் போலவே பிரம்மத்திற்கு அந்நியமான வைகளாகக் கருதப்படுவதில்லை. இருந்தாலும் தன்னளவில் அவைகளைப் பிரம்மம் என்று கருத முடியாது.

ஏனென்றால், காண்பதும், கேட்பதும் ஒருவனது இந்திரியங்களால் எனும்போது, எப்படி இந்திரியங்களே பிரம்மம் ஆவதில்லையோ?, அதுப்போன்று, காட்சியும், கேள்வியும் பிரம்மம் ஆவதில்லை. பிரம்மத்தின் சந்நிதானத்தில் அவைகள் விளங்குவதால் அவை பிரம்மத்திற்கு அந்நியமானவை அல்ல. அதனால் உலகம் பிரம்மத்திற்கு அந்நியமானது அல்ல! என்றாலும், பிரம்மமே உலகமாக ஆகிறது என்று கொள்வது தவறு.

உணர்பவன் பொருளை உணரவில்லை என்றால், உருவங்களும் நாதங்களும் எதற்கும் பயனில்லாது போகின்றன. இவ்வாறு உணர்பவனின் பிரம்ம நிலையில் அனைத்துமே அதன் தன்மைகளான **சத் - சித் - ஆனந்த** சொரூபங்களாகவே விளங்குகின்றன. அந்த நிலையில் **காண்பவன் - காணப்படுவது - காட்சி** என்று எதனையும் பிரித்து அறிய முடியாது எல்லாம் ஏக சொரூபமாகவே விளங்கும். காணும் தனது சொரூபமே காட்சியாகி நிற்பதை உணர்வதே அறிய வேண்டியவற்றுள் எல்லாம் உயர்வான பேரறிவாகும்.

सर्वगं सच्चिदात्मानं ज्ञानचक्षुर्निरीक्षते ।
अज्ञानचक्षुर्नेक्षेत भास्वन्तं भानुमन्धवत् ॥ ६५॥

சர்வகம் சச்சிதாத்மனம் ஞானசக்ஷுர்நிரீக்ஷதே |
அஞ்ஞானசக்ஷுர்நேக்ஷேத பாஸ்வந்தம் பானுமந்தவத் ||

சருவத்தும் சார்ந்த தாம் சச்சிதானந்தப்
பிரமத்தை ஞானக்கண் பெற்றான் – தரிசிப்பான்
ஞானக்கண்ணில்லாதான் நண்ணானே காட்சி ஒளிர்
பானுவை அந்தன் போலப் பார் – **ஸ்ரீ ரமணர்**

(எங்கும் நிறைந்து வியாபித்துள்ள **சத்-சித்-ஆனந்தமே** உருவாயுள்ள பிரம்மத்தை ஞானக் கண் கொண்டவனே தரிசிக்க முடியும். அவ்வாறு ஞானக் கண் இல்லாதவன், அதி பிரகாசத்துடன் கூடிய சூரியனை ஒரு குருடன் பார்க்க முடியாதது போல, அதை அணுகவே இயலாது.)

பிரம்மம் எங்கும், என்றும் இருந்து, எதிலும் வியாபித்துள்ளது என்றால் அது இங்கு, இப்போது தெரிய வேண்டுமே என்று கேட்போர்க்கு இந்த ஸ்லோகம் பதில் அளிக்கிறது.

ஆதி காலத்தில் நாம் கண்ணால் பார்ப்பதுவும், காதால் கேட்பதுவும் வெவ்வேறு வழிமுறைகளால் என்று நினைத்திருந்தோம்.

ஆனால் அவை மட்டுமல்லாது வேறு பல வகைத் தகவல்களும், வெவ்வேறு அலைக் கற்றைகளால் வந்தடைகின்றன என்பதை வளர்ந்து வந்த விஞ்ஞானம் நமக்குக் கற்பித்தது.

எந்த அலை வரிசையில் ஒன்று வருகிறதோ அதை அறிந்துகொள்ள அதற்கேற்ற கருவி நம்மிடம் இருக்க வேண்டும். ஒளியைப் பார்ப்பதற்கு நமக்குக் கண்ணும், ஒலியைக் கேட்பதற்கு நமக்குக் காதும் என்று இருவேறு கருவிகள் இருக்கின்றன.

அதேப்போல நாம் கேட்கும் வானொலி மூலம் வரும் பேச்சுக்களும், பாட்டுக்களும் வெவ்வேறு அலை வரிசைகளில் வருகின்றன. அதனாலேயே அவ்வாறு வரும் வானொலி விவரங்களை நாம் கேட்க நம் தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ள ஒரு ரேடியோ தேவைப்படுகிறது.

அது போல பிரம்மத்தை உணர்வதற்கும் அதற்கு உரிய சாதனம் நமக்குத் தேவைப்படுகிறது. நமது ஊனக் கண்ணால் நமக்கு முன் உள்ளதைத்தான் பார்க்க முடியும். அதனால் கூட நம் முகத்தையே நாம் பார்க்க முடியாது;

அதன் அமைப்பு அப்படி. **ஞானம் எனப்படுவது நமது உள்ளார்ந்த நிலையைப் பற்றிய அறிவு.**

அதை உணர்வதற்கு அதற்கேற்ற கருவியான ஞானக்கண் வேண்டும். அந்தக் கண்ணைப் பெறுவதற்குத்தான் முன்பே சொல்லப்பட்டுள்ள **சிரவணம், மனனம், நிதித்யாசனம்** போன்ற வழிமுறைகள் தேவை.

சூரியன் என்னதான் பிரகாசமாக இருந்தாலும், **ஊனக்கண் (குருடன்)** இல்லாதவன் அதைப் பார்க்க இயலாது.

அதேப்போல, ஞான சூரியனான பிரம்மம் என்னதான் பிரகாசமாக இருந்து, சர்வ வியாபியாக இருந்தும் அதை உணரக்கூடிய **ஞானக்கண்** இல்லாதவன் எங்கும், எப்போதும் நிறைந்த, **சத் - சித் - ஆனந்தம்** என்ற தன்மைகளைக் கொண்ட பிரம்மத்தை அறிய முடியாது.

இங்கு கண் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அதைப் புலன்களின் பிரதிநிதியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

உலகில் உள்ளவைகளை நமக்கு அறிவிக்கும் புலன்கள் எதையும் கொண்டு நம்மால் பிரம்மத்தை உணர முடியாது என்பதே இங்கு சொல்ல வந்த கருத்து.

श्रवणादिभिरुद्दीप्तज्ञानाग्निपरितापितः ।
जीवः सर्वमलान्मुक्तः स्वर्णवद्द्योतते स्वयम् ॥ ६६॥

ஸ்ரவணாதிபிருத்தீப்த ஞானாக்னிபரிதாபிதஹ |
ஜீவஹ சர்வமலான்முக்தஹ ச்வர்ணவத்யோததே ஸ்வயம் ||

சிரணவம் ஆதிகளால் தேசுறு ஞான
எரியினில் காய்ச்சி எடுக்கச் – சருவ
மலமும்போய்ச் சீவன் மறுவில் பொன்போல்
நிர்மலனாகித் தான் ஒளிர்வான் – **ஸ்ரீ ரமணர்**

(கேட்டல், சிந்தித்தல், தெளிதல் போன்ற வழிகளில் பிரகாசமடைந்த மனதை கொழுந்து விட்டெரியும் ஞான அக்னியில் புடம் போட்டு எல்லா மாசுகளும் நீக்கப்பட்ட ஜீவன், நெருப்பினில் புடம் போட்டு மாற்று ஏறிய தங்கத்தைப் போல ஜொலிக்கின்றான்.)

சிரவணமாகிய ஒன்றைப் பற்றிக் கேட்டல், மனனம் ஆகிய கேட்டதைப் பற்றி அசை போட்டுப் பார்த்துச் சிந்தித்தல், நிதித்யாசனம் ஆகிய சிந்தித்ததைப் பற்றி நன்கு அறிந்தோரிடம் மேலும் கேட்டுத் தெளிதலும், அதன்படி பயிற்சிகள் மேற்கொள்ளுதலுமான வழிகளைப் பின்பற்றி, கேட்டறிந்த விவரங்களில் நன்கு தெளிந்த மனதை முதலில் சாதகன் அடையவேண்டும்.

அப்போது மனமும் இருக்கும், மனத்தால் உருவாகும் எண்ணங்களும் இருக்கும். அவைகள் ராஜஸ அல்லது சாத்விக குணங்களோடு இருக்கும். அந்த அளவில் இயக்கங்களும் தொடரும்.

அப்போது தனக்கு நேரும் பல வகையான அனுபவங்களையும் எடை போட்டு, அவை அனைத்தையும் தத்துவ ரீதியில் *"அவை யாருக்கு நேர்கின்றன? அவை ஏன் தனது விழிப்பு நிலையில் மட்டும் காணப்படுகின்றன? அவை காணப்படாத ஆழ்ந்த உறக்கத்திலும் தான் இல்லையா? அப்படி இருப்பதால்தானே இப்போதும் தான் இருக்கிறோம்?"*

என்பன போன்ற கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டு தனது ஞான வேள்வியைத் தொடங்க வேண்டும்.

அவ்வாறு பல காலம் நீண்டு தொடரும் வேள்வியின் ஞான அக்னியில் நம்மை மறைக்கும் திரைகள் ஒவ்வொன்றாக விலக, நமது உண்மை நிலையை மறைத்த மாசுகள் அனைத்தும் நீங்கும்.

அந்த நிலையை அடைந்தவன் நெருப்பினில் புடம் போட்டு மாசு, மறுக்களாகிய மலங்கள் நீக்கப்பட்டு மாற்று கூட்டப்பட்ட, தங்கத்தைப் போல ஒளிர்வான்.

தங்கத்திற்குத் தானாகவே ஒளி வீசும் தன்மை உண்டு.

மேலும், அதனுடன் மற்ற மாசுக்கள் சேர்வதால் தங்கம் தனது இயல்பான ஒளியை இழப்பதைத் தவிர வேறு எந்த விதத்திலும் பாதிப்பு அடைவதில்லை.

மாசு, மறுக்கள் நீக்கப்பட்ட தங்கம் தனது இயல்பு நிலைக்குத் திரும்பி மீண்டும் முன் போல் ஒளிரும். அதுப்போன்று, ஜீவனது எந்த வித ஆசை, கோப தாபங்கள் போன்ற மலங்களால் ஆன்மா பாதிக்கப்படுவதில்லை.

ஜீவனது மலங்கள் நீங்க நீங்க ஆன்மாவின் வீச்சு அதிகமாகி அதன் இயல்பான ஒளிரும் நிலைக்குத் திரும்புகிறதே தவிர, எந்தப் பயிற்சிகளாலும் ஆன்மா புதிதாக எந்த நிலையையும் அடைவதில்லை.

விசாரம், பயிற்சிகள் அனைத்துமே ஜீவனின் கர்ம வினைப் பயனாய் அடையப்பெற்ற மலங்களை அகற்றுவதற்கு மட்டுமே. மேகங்கள் விலகிய சூரியன் ஒளிர்வது போல, சூழ்ந்திருந்த மலங்கள் விலகிய ஆன்மா பிரகாசமாக ஒளிரும்.

हृदाकाशोदितो ह्यात्मा बोधभानुस्तमोऽपहृत् ।
सर्वव्यापी सर्वधारी भाति भासयतेऽखिलम् ॥ ६७॥

ஹ்ருதாகாஷோதிதோ ஹ்யாத்மா போதமானுஸ்தமோபஹ்ருத் |
சர்வவ்யாபி சர்வதாரி பாதி பாஸ்யதேகிலம் ||

இதயவெளி தோன்றி இருளையழி ஞான
உதயரவி ஆன்மா ஒளிரும் – நிதமுமே
எல்லாவற்றும் பரவி எல்லாமும் தாங்கி நின்(று)
றெல்லாம் ஒளிர்விக்கும் எண் – **ஸ்ரீ ரமணர்**

(அஞ்ஞான இருளை அழித்து ஞானோதயமாகிய ஆத்மா என்னும் சூரியன் உதிப்பதும், மறைவதும் என்றில்லாது எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அது எல்லாப் பொருட்களிலும் வியாபித்து, எல்லாவற்றிற்கும் ஆதாரமாக நின்று, எல்லாவற்றையும் தனது ஒளியினால் ஒளிர்விக்கச் செய்யும் என்று எண்ணுவாய்.)

நமது ஊனக்கண்ணைப் பொருத்தவரை நாம் காண்பனவற்றுள் சூரியன் ஒன்றே தானே ஒளிர்வதாகவும், அதிலும் மிகப் பிரகாசமானதாகவும் இருப்பதால், தானே தானே இருக்கும் ஆன்மாவிற்கு அதை ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

நமது உண்மை நிலையைப் பற்றி குரு மூலமோ, வேறு வழிகளிலோ அறிந்த ஒருவன் அதை உணர்ந்துகொள்ள, சாதாரணமாக வெளியுலகை நோக்கியுள்ள தனது பார்வையை சத்குர் உபதேசத்தால், தன் சொரூபத்தை சதா தியானம் செய்து, அதனால் இடைவிடாது எப்போதும் இருக்கும் உள்ளொளியை அனுபவத்தில் உணர்வதே **ஆன்ம போதம்** எனப்படுகிறது.

சூரியன் உதித்ததும் வேறு எந்த முயற்சியும் இல்லாது இருள் தானே அகலுவது போல ஆன்மாவைப் பற்றிய ஞானம் பிறந்ததும் நம் உண்மை நிலை பற்றி நமக்கு முன்பு இருந்த அறியாமையும் தானே விலகுகிறது.

ஆனால் சூரியனோ காலத்திற்குக் கட்டுப்பட்டு காலையில் உதிப்பதும், மாலையில் மறைவதுமாக இருக்க, அனைத்தையும் ஒளிர்விக்கும் ஆன்மாவைப் பற்றிய போதமோ எப்போது உதிக்கிறதோ அதன்பின் அதற்கு அழிவோ, மறைவோ இல்லாது எப்போதும் நின்று நிலைத்து நிற்கிறது.

எப்படி சூரியனின் ஒளியில் நாம் உலகில் உள்ள அனைத்தையும் பார்க்கிறோமோ, அதே போல ஆன்மா தரும் ஒளியினாலேயே நமது அனுபவங்கள் எல்லாமே நிகழ்கின்றன.

ஆன்மாவின் தன்மைகளே உலகில் உள்ள பொருட்கள் எல்லாவற்றிலும் வியாபித்து நமக்கு வெவ்வேறு அனுபவங்களைத் தருகின்றன. ஆனால் அதை அறியாத போது நாம் அவைகள் எல்லாம் அந்தந்தப் பொருட்களின் தன்மைகள் என்று தவறாக எண்ணுகிறோம். அந்த அறியாமையைப் போக்குவதே ஆன்ம போதம்.

அதனால் ஆன்மாவே தனது ஒளியால் அனைத்துப் பொருட்களையும் காட்டுவதோடு அல்லாமல், அனைத்திற்கும் ஆதாரமாகவும் அமைகிறது. அது இல்லாமல் அனுபவிப்பவன் இல்லை என்பதாலும், அனுபவிப்பவன் இல்லாமல் அனுபவிக்கப்படும் எதுவும் இல்லை என்பதாலும், அதுவே அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கிறது.

दिग्देशकालाद्यनपेक्ष्य सर्वगं
शीतादिहृन्नित्यसुखं निरंजनम् ।
यः स्वात्मतीर्थं भजते विनिष्क्रियः
स सर्ववित्सर्वगतोऽमृतो भवेत् ॥ ६८॥

திக்தேஷகாலாத்யநபேக்ஷ்ய சர்வகம்
ஷீதாதிஹ்ருன்னித்யசுகம் நிரஞ்சனம் |
யஹ ஸ்வாத்மதீர்த்த பஜதே விநிஷ்கியஹ
ஸ சர்வவித்சர்வகதோம்ருதோ பவேத் ||

(பஃறொடை வெண்பா)

திக்கு இடம் காலம் முதல் தேடாமல் என்றும் எத்
திக்கும் ஆர்ந்தே குளிர்முன் தீர்ப்பதாய் – எக் களங்கும் அற்ற
நித்யானந்த ஆன்ம தீர்த்தத்துள் தோய்வுற்றவன் யார் செய்கை
ஒன்று இன்றி – மற்றவன் யாவும் அறிந்தோனாய் எங்கும் நிறைந்து ஆர்
அமிர்தன் ஆவன் எனவே அறி. – **ஸ்ரீரமணர்**

(திசை, தேசம், காலம் முதலியவற்றைத் தேடி அலையாமல், எப்போதும், எந்தத் திசைகளிலும் நீக்கமற நிறைந்து குளிர், வெப்பம் போன்றவைகளை நீக்க வல்லதாய், எந்த விதக் களங்கமும் இல்லாது, எப்போதும் ஆனந்த வடிவமே கொண்ட தனது ஆத்ம சொரூப புனித ஊற்றுக்குள்ளேயே மூழ்கித் தோய்ந்திருப்பவன் எவனோ, அவனே மேலும் செய்வதற்கு ஏதுமின்றி, எல்லாவற்றையும் அறிந்தவனாய், எங்கும் நிறைந்து ஒளிர்பவனாய், மரணமில்லாதவனாய் ஆகிறான் என்பதை அறிந்து கொள்.)

நிறைவாக வரும் இந்த ஸ்லோகம் ஆன்ம போதம் என்ற இந்த நூலின் சாராம்சத்தைக் கொடுக்கிறது. ஆன்ம ஞானம் பெறுவதற்கு உரியவர்கள் எவர்? என்று முதல் ஸ்லோகத்தில் கூறப்பட்டிருந்ததுபோல, இந்த இறுதி ஸ்லோகத்தில் அதை அடைவது எப்படி? என்றும், அதைப் பெறுவதினால் என்ன பயன்? என்பது பற்றியும் சுருக்கமாகச் கூறப்பட்டிருக்கிறது.

நாம் நம்மை முதலில் ஸ்தூலமான உடல் அளவில் குறுக்கிக் கொள்வதால் நமது வாழும் காலம், நாமிருக்கும் திசை மற்றும் தேசம் என்ற அளவிலும் கட்டுப்படுவதாக எண்ணுகிறோம். அதனாலேயே காலம் கடந்து எப்போதும், என்றும் இருக்கக் கூடிய, மற்றும் இடத்தால் கட்டுப்படாது எங்கும் இருக்கும் ஒரு பொருளைத் தேடி அலையும் போது அந்தத் தன்மைகளைக் கொண்டவனாக இறைவனை முன்னிறுத்தி அவனைச் சரணடைகிறோம்.

அப்போதும் நமது குறுக்கும் தன்மைகள் நம்மை விட்டகலாததால் இறைவன் இப்படி இருப்பானா அல்லது அப்படியிருப்பானா, இங்கிருப்பவனா இல்லை அங்கிருப்பவனா என்ற ஐயங்கள் நம்மை விடுவதில்லை. அதற்காகப் பல உருவங்களை உண்டாக்கி வைத்து விட்டு, அவைகளை வழிபடுவதற்கு அவைகள் இருக்கும் இடத்தை நாடிச் செல்கிறோம். அதனாலேயே தல யாத்திரை, மூர்த்தி தரிசனம் எல்லாம் விசேஷமாகக் கருதப்படுகிறது.

அதேப்போல, கால அளவில் இப்போது வழிபட்டால் நல்லது, அப்போது வழிபட்டால் நல்லது என்றும் கருதி நல்ல நேரங்களும் பார்த்துச் செல்கிறோம்.

நமது தினப்படி பழக்க வழக்கத்தில் நீராடிவிட்டு வரும் போது, நமது உடல் அழுக்குகள் களையப்பட்டு அதனால் ஒரு புத்துணர்ச்சி வருவதை நாம் உணர்வதால், அதே போன்று இயற்கையாகவே அமைந்துள்ள ஆறுகளின் தன்மைகளையும், ஓடும் திசைகளையும் பொறுத்து அவைகளில் நீராடினால் நுண்ணியதாக நம்மிடம் வளர்ந்துள்ள நமது மாசுகளும் கழுவப்பட்டு நாமும் புனிதமாகலாம் என்று கருதுவதால் அவைகளை நோக்கிப் பயணிக்கிறோம்.

அதிலும் சில விசேஷமான இடங்களில் இருக்கும் ஊற்றுகள், குளங்களிலும், அவை போன்ற இடங்களில் இருந்து புறப்பட்டோ அல்லது அவ்விடங்களைத் தொட்டுச் சென்றுகொண்டோ இருக்கும் ஆறுகளிலும் நீராடுவதை புனிதமாகக் கருதுகிறோம். இவைகளை தீர்த்த யாத்திரை என்கிறோம்.

இப்படியாக மூர்த்தி தரிசனம், தீர்த்த யாத்திரை செய்வதெல்லாம் நமது மலங்களை நீக்கி இறைவன் சந்நிதானத்தில் நம்மைப் புனிதமாக்கிக் கொள்ளவே என்ற கருத்து நமக்கு இருந்தாலும், அப்படிச் செய்யும் நாம் யார் என்ற எண்ணம் ஒரு சிலருக்கே தோன்றுகிறது.

மூர்த்திகளும், தீர்த்தங்களும் உலகில் இருப்பவை போன்று நாமும் உலகில் இருப்பதாக எண்ணும் வரை அவையெல்லாமே சரியான வழிபாட்டு முறைகளே. எல்லாம் இறைவனால் இயக்கப்படுகிறது என்ற எண்ணம் இருக்கும்போதும், ஒரு சிலருக்கே அந்த இறை சக்தி இல்லாது நாமே எப்படி இயங்க முடியும் என்று தோன்றுகிறது.

அப்படித் தோன்றுபவர்களிலும் வெகு சிலரே "**நான் யார்?**" என்று தன்னைப் பற்றியே கேள்வி கேட்டுத் தனது பார்வையை உலகில் வெளி முகமாக விடாது, காணும் தான் யார்? என்பதை அறிந்துக் கொள்ளத் தனது கவனத்தை உள்முகமாகத் திருப்பி, தன்னையே, தன் சொரூபத்தையே தியானித்து, உள்ளொளி பெறுவதே **ஆன்ம போதம்** என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக எந்தத் திசையில், எந்த இடத்தில் என்ன இருக்கிறது, அதை எந்தக் காலத்தில் தரிசிப்பது என்று இங்கும் அங்கும் அலையாமல், அவை அனைத்தையுமே காணும் அல்லது காணப்போகும் தன்னைப் பற்றி விசாரம் செய்ய வேண்டும் என்று இங்கு கூறப்பட்டிருக்கிறது.

அப்படிச் செய்தால் குளிரோ, வெப்பமோ எதுவானாலும் அங்கும் இருந்து, எந்த விதக் குற்றம், குறைகளையும் தனது தன்மைகளாய்க் கொள்ளாது, எப்போதும் ஆனந்தம் ஒன்றையே தனது இயல்பாய்க் கொண்டுள்ள ஆன்ம சைதன்யமாகிய தனது சொரூபத்திலேயே திளைத்து, அங்கு

ஊறும் ஆனந்தப் புனித நீரில் மூழ்கி எக்காலத்தும் இன்புறும் ஒருவனே உலகில் வாழ்ந்த பயனை அடைந்தவன் ஆவான். அந்த நிலையை அவன் அடையும்வரை அவனிடம் இருமைகளும் இருக்கும், அதனால் வரும் வறுமைகளும் இருக்கும். ஆனால் ஆன்ம சாகரத்தில் மூழ்கி முத்தை அடைந்தவனுக்கு அதற்கும் மேல் செய்வதற்கு என்று ஏதும் இருக்காது, அவன் சத்தே உருவாகியுள்ள ஆன்மாவோடு ஒன்றி இருப்பதால், இருக்கும் அனைத்தும் அவனுக்கு அதுவாகவே தோன்றும், எந்தவித வேற்றுமைகளும் தெரியாது.

அவன் சித்தே வடிவான ஆன்மாவாய் இருப்பதால் அறிவு மயமாகவே இருப்பான், அவன் மேலும் அறிவதற்கு ஒன்றும் இருக்காது.தனது பேரறிவு எனும் ஒளியால் தானும் பிரகாசித்துக்கொண்டு, அனைத்தையும் ஒளிர்வித்துக்கொண்டும் இருப்பான். அவ்வாறு, அவன் ஆனந்த வடிவேயான ஆன்மாவாக ஒன்றியுள்ளதால், இப்போது உண்டு, அப்புறம் இல்லை என்ற குணங்களைக் கொண்ட இன்ப-துன்பங்களைக் கடந்து, எப்போதும் ஆனந்தமாகவே இருப்பான்.

என்றும், எங்குமுள்ள ஆன்மாவாய் ஆனதால், அவன் நித்தியன். இனி பிறப்பு, இறப்பு எனும் கால அளவைகள் இல்லாதவன் என்பதினால், அவன் மரணமில்லா ஆனந்தப் பெரு நிலையில் நிலைத்து நிற்பான்.

**நிறைவு.**

# ஆன்மபோதம்



ஒருவன் ஆத்மஞானத்தை அடைய வேண்டுமென்றால், அதற்கு வேதங்கள்தான் பிரமாணமாக, இறுதி நிலையில் இருக்கிறதென அறிந்துக்கொண்டு, அதற்கான சாஸ்திரங்களான "பிரஸ்தானத் த்ரயம்" எனும், பகவத்கீதை, பிரம்மசூத்திரம், மற்றும் உபநிஷதங்கள் ஆகிய, இவைகள் மூன்றும் உண்மை ஆத்ம சாதகனான முமுக்ஷுவுக்கு வழி காட்டக்கூடிய மிக உயரிய உன்னதமான நூல்கள் என எல்லா ஆன்றோர்களும் பரிந்துரைக்கிறார்கள்.